# பகுதி III

# பகுதி III

## 2006 ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும், சுற்றிக்கைகளும், பணிப்புரைகளும், அறிவித்தல்களும்

**வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | வங்கிகளின் காலாண்டு நிதிக்கூற்றுக்களை பத்திரிகைகளில் வெளியிடுதல் | 02/04/003/0401/001 | (i) |
| 2. | கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை வங்கிகள் சமர்ப்பித்தல் | | (ii) |
| 3. | வங்கிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை பத்திரிகைகளில் வெளியிடுதல் | 02/04/003/0401/001 | (iii) |
| 4. | அரச சார்பற்ற அமைப்புக்களினூடாகவும் அரசசார்பற்ற அமைப்புக்கள அல்லாதவையினூடாகவும் பெறப்பட்ட சுனாமிக்குப் பின்னைய பணவனுப்பல்களை மத்திய வங்கிக்கு அறிக்கையிடல் | 02/19/4011/0072/001 | (iv) |
| 5. | வங்கிகளின் போதுமானதற்ற/ பிழையான வெளிப்படுத்தல்களைக் கொண்ட பத்திரிகைக் கூற்றுக்கள் | 02/04/003/0401/001 | (vii) |
| 6. | வங்கிகளினது முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் பகுப்பாய்வு, மதிப்பீடு மற்றும் தொழிற்பாடு என்பனவற்றிற்கான முன்மதியுடைய விதிகளின் மீதான பணிப்புரை | | (viii) |
| 7. | வங்கிகளினது முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் பகுப்பாய்வு, மதிப்பீடு மற்றும் தொழிற்பாடு என்பனவற்றிற்கான முன்மதியுடைய விதிகளின் மீதான பணிப்புரை | | (xi) |
| 8. | சந்தை இடர்நேர்வுகளுக்காக மூலதனக் கட்டணமொன்றினைக் கணிப்பதன் மீதான தீர்மானம் | | (xiii) |
| 9. | சந்தை இடர்நேர்வுகளுக்காக மூலதனக் கட்டணமொன்றினைக் கணிப்பதன் மீதான தீர்மானம் | | (xiv) |
| 10. | சமகாலத்தில் பாசல் I மற்றும் பாசல் II இனை கணித்தல் | | (xxvi) |
| 11. | ஈட்டப்படாத வருமானத்தினை நேர்மாற்றுதலும் முற்பணத்தினை செயற்படாததாக பகுப்பாய்வு செய்தலும் | 02/04/003/0401/001 | (li) |
| 12. | கைவிடப்பட்ட சொத்துக்கள் மீதான வங்கித்தொழில் சட்டத்தின் பகுதி IXஇன் (பிரிவுகள் 72 இலிருந்து 76 வரை) ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் | 02/17/402/0079/001 | (lii) |
| 13. | வங்கித்தொழில் நிலையங்களை பகுப்பாய்வு செய்தல் | 02/08/005/0002/002 | (lviii) |
| 14. | உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் அரச சார்பற்ற அமைப்புக்களின் கணக்குகள் | | (lix) |
| 15. | பாசல் IIஇன் கீழ் மூலதனப் போதுமையைக் கணிப்பதன் மீதான வரைவு வழிகாட்டல்கள் | | (lxii) |
| 16. | இலத்திரனியல் அட்டைகளைப் பயன்படுத்தி மோசடியிலீடுபடுவதனைத் தடுத்தல் | | (lxv) |
| 17. | உரிமம் பெற்ற வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் அரச சார்பற்ற அமைப்புக்களின் கணக்குகள் | | (lxvii) |
| 18. | வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறைகளினது வரிக் கொடுப்பனவுகள் | | (lxvii) |
| 19. | தனியொரு கடன்பாட்டாளர் வரையறை - கூட்டு மொத்த வெளிப்படுத்துகை வரையறைக்கு இணங்கியொழுகுதல் | | (lxviii) |
| 20. | தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையினை அடிப்படையாகக் கொண்ட புதிய வெப்தளத்தினை நடைமுறைப்படுத்தல் | | (lxviii) |
| 21. | தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையினை அடிப்படையாகக் கொண்ட புதிய வெப்தளத்தினை நடைமுறைப்படுத்தல | | (lxxiv) |
| 22. | 2005ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க பணிப்புரையினால் திருத்தப்பட்டவாறான 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தனியொரு கடன்பாட்டாளர் வரையறை | 02/01/001/0018/001 | (lxxviii) |
| 23. | ஏற்றுக் கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான இறக்குமதிகள் | | (lxxix) |
| 24. | தீர்மானத்திற்கான திருத்தங்களும் மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவதன் மீதான அறிவித்தலும் | | (lxxx) |
| 25. | மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவதன் மீதான பணிப்புரைக்கான திருத்தங்கள் | | (lxxx) |
| 26. | முற்பணங்களுக்காக பொது ஒதுக்கமொன்றைப் பேணுவதற்கான தேவைப்பாடு | | (lxxxi) |
| 27. | முற்பணங்களுக்காக பொது ஒதுக்கமொன்றைப் பேணுவதற்கான தேவைப்பாடு | | (lxxxii) |
| 28. | தீர்மானத்திற்கான திருத்தங்களும் மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவதன் மீதான அறிவித்தலும் | | (lxxxiii) |
| 29. | மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவதன் மீதான பணிப்புரைக்கான திருத்தங்கள் | 02/17/800/0002/001 | (lxxxiii) |
| 30. | உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு | 02/17/800/0002/001 | (lxxxiv) |
| 31. | உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு | | (lxxxiv) |

## உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்


| | | | |
|---|---|---|---|
| | | 35/01/005/0010/02 | (lxxxv) |
| 32. | நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் | | |
| 33. | இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் பத்திரங்களற்ற வடிவத்தில் | 35/01/005/0011/01 | (lxxxvi) |
| | மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதன் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 35/01/005/0006/10 | (xci) |
| 34. | இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் | 35/01/005/0010/03 | (xcii) |
| 35. | நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் | 35/01/005/0010/04 | (xcii) |
| 36. | நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் | 35/01/005/0010/05 | (xciii) |
| 37. | நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள் | 35/01/005/0006/11 | (xcvii) |
| 38. | நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி | | |


## செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்


| | | | |
|---|---|---|---|
| 39. | சரக்குகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மற்றும் உள்நாட்டு வான் வழிக்கட்டணம்/ உள்நாட்டு தரையிறங்கும் கட்டணங்கள்/ பொருள் கப்பலேற்றுபவர்களின் பற்றுச் சீட்டுக்களை வழங்குதல் | 06/07/01/2006 | (xcvii) |
| 40. | வெளிநாட்டுச் செலாவணியினை விற்றலும் கொள்வனவு செய்தலும் - படிவம் 1 மற்றும் படிவம் 2 இனை சமர்ப்பித்தல் | 06/07/02/2006 | (xcix) |
| 41. | சரக்குகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மற்றும் உள்நாட்டு வான் வழிக்கட்டணம்/ உள்நாட்டு | 06/07/03/2006 | (c) |
| | தரையிறங்கும் கட்டணங்கள்/ பொருள் கப்பலேற்றுபவர்களின் பற்றுச் சீட்டுக்களை வழங்குதல் | 06/07/04/2006 | (ci) |
| 42. | பயன்படுத்தப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழ் | 06/07/05/2006 | (cii) |
| 43. | பயன்படுத்தப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழ் | 06/07/06/2006 | (cii) |
| 44. | பயன்படுத்தப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழ் | இல. 1469/25 | (ciii) |
| 45. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - அதி விசேஷமானது | | |
| 46. | வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் | 06/04/07/2006 | (civ) |
| | செய்யப்படும் முதலீடு | 06/04/08/2006 | (cvi) |
| 47. | தொழில்சார் நிபுணத்துவப் பணிகளை வழங்குபவர்களுக்கான வெளிநாட்டு நாணயக்கணக்கு | 06/04/10/2006 | (cviii) |
| 48. | உள்ளீடுகளின் நிரம்பலர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு | 06/07/11/2006 | (cix) |
| 49. | பயன்படுத்தப்பட்ட ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கான ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழ் | | |


## பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்


| | | | |
|---|---|---|---|
| 50. | இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வம் மீதான வர்த்தக வங்கிகளுக்கான பணிப்புரைகள் | 33/03/0011/0035/001 | (cx) |


## கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்


| | | | |
|---|---|---|---|
| 51. | லங்கா செட்டில் முறைக்கு புதிய பங்கேற்பாளரை நியமித்தல் - கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் வரையறுக்கப்பட்ட மத்திய வைப்பகமுறை (தனியார்) - ஆர்ரிஜிஎஸ்/01/2006 | | (cxiii) |
| 52. | லங்கா செட்டில் முறைக்கு ஒரு பங்கேற்பாளராக வரையறுக்கப்பட்ட ஐசிஐசிஐ வங்கியை | 34/07/029/0001/001 | (cxiv) |
| | நியமித்தல் - ஆர்ரிஜிஎஸ்/03/2006 | | (cxv) |
| 53. | தடங்கலற்ற வியாபாரத்தினை திட்டமிடுவது பற்றிய வழிகாட்டல்கள் | | |
| 54. | லங்கா செட்டில் முறை ஒழுங்கு விதிகளுக்கான திருத்தம் - 2003 ஓகத்து (திருத்தப்பட்டவாறு) லங்கா செட்டில் முறையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை - ஆர்ரிஜிஎஸ்/08/2006 | 34/07/029/0001/001 | (cxxiii) |
| 55. | லங்கா செட்டில் முறையில் பங்கேற்பாளர்களிடையேயான கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிற்கான நியம நேரங்கள் - ஆர்ரிஜிஎஸ்/10/2006 | 34/07/029/0001/001 | (cxxv) |
| 56. | லங்கா செட்டில் முறையின் பங்கேற்பாளராக ஸ்டான்டாட் சார்டட் வங்கி (பாகித்தான்) லிமிடெட்டினை நியமித்தல் - ஆர்ரிஜிஎஸ்/11/2006 | 34/07/029/0001/001 | (cxxvi) |


## பொதுப்படுகடன் திணைக்களம்


| | | | |
|---|---|---|---|
| 57. | மத்திய வைப்பக முறையில் பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் - எஸ்எஸ்எஸ்எஸ்/01/2006 | | (cxxvii) |
| 58 | இலங்கையில் முதனிலை வணிகர்களுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமைக் | 08/24/002/0005/006 | (cxxix) |
| | கட்டமைப்பின் மீதான பணிப்புரை | | (cxl) |
| 59. | பங்கேற்கும் முகவர்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள் | | (cxliii) |
| 60. | வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள் | | |

## வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்


61. 2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (ஆகக் குறைந்த மைய மூலதனம்) (cxlvii)
பணிப்புரை

62. 2006ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (இடைநேர்வு நிறையேற்றப்பட்ட (cxlviii)
மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரை

63. 2006ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (அறவிடமுடியா, ஐயக்கடன்களுக்கான (cxlix)
ஏற்பாட்டு) பணிப்புரை

64. 2006ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) (cli)
பணிப்புரை (cliii)

65. 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்புரை

66. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (பணிப்பாளர் மற்றும் அவர்களின் (cliv)
உறவினர்களுடனான வியாபார கொடுக்கல் வாங்கல்கள்) பணிப்புரை (clv)

67. 2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (முதலீடுகள்) பணிப்புரை (clvi)

68. 2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (விளம்பரப்படுத்தல்) விதி (clviii)

69. 2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்குத்தகை (ஆகக் குறைந்த மூலதனம்) பணிப்பு

70. 2006ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக்குத்தகை (அறவிடமுடியா, ஐயத்துக்கிடமான (clix)
கடன் வசதிகளுக்கான ஒதுக்கம்) பணிப்பு

71. 2006ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (தனியொரு கடன்பாட்டாளர் (clxi)
வரையறை) பணிப்புரை

72. 2006ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (அதிகரிப்பு விகிதம்) (clxiv)
பணிப்புரை (clxvi)

73. 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடல் (ஒதுக்கு நிதியம்) பணிப்புரை

74. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (நிதியியல் கூற்றுக்கள்) (clxvii)
பணிப்புரை

75. 2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (கம்பனி மற்றும் தொழிற்பாட்டு (clxviii)
தகவல்) பணிப்புரை

**02/04/003/0401/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 சனவரி 26

**அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளனதும்**

**முதன்மை நிறைவேற்று அலுவர்களுக்கும்**

அன்புள்ள ஐயா,

**வங்கிகளின் காலாண்டு நிதிக்கூற்றுக்களை பத்திரிகைகளில் வெளியிடுதல்**

2005 செத்தெம்பர் 30ஆம் நாளிடப்பட்ட எண் 02/04/003/0401/001 கொண்ட சுற்றறிக்கையின் மூலம் வங்கிகளின் காலாண்டு நிதிக்கூற்றுக்களை பத்திரிகைகளில் வெளியிடுவது தொடர்பான தேவைப்பாடுகள் அனைத்து வங்கிகளுக்கும் அறிவிக்கப்பட்டன. இவை 2005இன் 3ஆம் காலாண்டிலிருந்து நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதற்கு ஏற்புடையதாக இருந்தன.

2005இன் 3ஆம் காலாண்டு தொடர்பான வெளியீடுகளைப் பொறுத்தவரை பல குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. ஆகவே, அனைத்து வங்கிகளும் மேலேயுள்ள சுற்றறிக்கையில் காணப்படும் தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுமாறு அறிவிக்கப்பட்டன. அவை பின்வரும் விடயங்களைக் கவனித்தல் வேண்டும்.

1. வெளியிடப்படுவதற்கான கால அட்டவணை ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்ததிலிருந்து இரண்டு மாதங்களுக்கு உட்பட்டதாக இருக்கும்.

2. வெளியீடுகள் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய தினசரிப் பத்திரிகைகளில் மேற்கொள்ளப்படவேண்டும். இது வங்கிகளின் நிதியியல் நிலைமைகளை பொது மக்களுக்கு அறிவிப்பதனை தேவைப்படுத்துவதுடன் இது அனைத்து வங்கிகளுக்கும் ஏற்புடைத்தானதாகும்.

3. சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட படிவமுறை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். மீதி 'இல்லை' யாயின் அது படிவத்தில் ஒரு விடயமாக அறிக்கையிடப்பட்டிருக்க வேண்டும். படிவத்திலிருந்து முழு நிரலையும் அழித்துவிடுவதற்குப் பதிலாக அத்தகைய விடயங்களை 'இல்லை' என அறிக்கையிடல் வேண்டும்.

4. முதன்மைச் செயலாற்றக் குறிகாட்டிகள் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வரைவிலக்கணங்களின்படி கணிக்கப்படவேண்டும்.

வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினது கணக்குகளின் வெளியீட்டினைப் பொறுத்தவரையில், உலகளாவிய கணக்குகளின் வெளியீடு ஆண்டு அடிப்படையில் கட்டாயமானதாகவுள்ள அதேவேளையில், வங்கிகள் பிந்திய கிடைக்கத்தக்க காலப்பகுதியுடன் தொடர்பான பிந்திய தகவல்களை காலாண்டு அடிப்படையில் வெளியிடலாம். எனினும் அத்தகைய அனைத்து வங்கிகளும் தொடர்பான காலாண்டுப்பகுதிக்குரிய தாய் வங்கியின் மூலதனப் போதுமை விகிதம், சொத்துக்கள் மீதான வருவாய், பங்கு மீதான வருமானம், மற்றும் செயற்படா முற்பணங்கள் போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட குறிகாட்டிகளை காலாண்டு அடிப்படையில் வெளியிடல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 பெப்புருவரி 13

**அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும்**

**முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு**

அன்புள்ள ஐயா,

**கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை வங்கிகள் சமர்ப்பித்தல்**

2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மற்றும் 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 38(1) மற்றும் 38(2) இன் பால் தங்களின் கவனத்தினை ஈர்க்க விரும்புகின்றேன். அதன் நியதிகளில்

1. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் அவற்றின் நிதியியல் ஆண்டு முடிவடைந்த ஐந்து மாதங்களுக்குள், நிதியியல் ஆண்டின் முடிவிலுள்ளவாறு அதன் கணக்காய்வு செய்யப்பட்ட அதன் ஐந்தொகையினையும் அதன் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் உட்பட இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள அதன் வியாபாரம் தொடர்பாக அத்தகைய நிதியாண்டிற்குரிய அதன் இலாபநட்டக் கணக்குகளையும் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் அவற்றின் நிதியியல் ஆண்டு முடிவடைந்த ஐந்து மாதங்களுக்குள் நிதியியல் ஆண்டின் மேலுள்ளவாறு அதன் கணக்காய்வு செய்யப்பட்ட அதன் ஐந்தொகையினையும் அதன் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் உட்பட இலங்கையிலுள்ள அதன் வியாபாரம் தொடர்பாக அத்தகைய நிதியாண்டிற்குரிய அதன் இலாப நட்டக்கணக்குகளையும் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

2005ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றினை, 02.06.98ஆம் நாளிடப்பட்ட பீஎல்38/89 எண் கொண்ட சுற்றறிக்கையில் விளக்கப்பட்டவாறான படிவத்தில் சமர்ப்பிக்குமாறு நீங்கள் தயவுடன் நினைவூட்டப்படுகின்றீர்கள்.

வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 30(2)இன் பால் தங்களில் கவனம் ஈர்க்கப்படுகின்றது. இதன் நியதிகளின்படி, கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றின் படி ஒன்றினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. கணக்காய்வு செய்யப்பட்ட வங்கித்தொழில் கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்கும் மேலே குறிப்பிட்ட படிவ முறையையே பயன்படுத்த வேண்டும்.

இதன்படி, 2005ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல்கூற்றினை, குறிப்பிட்ட கால வரையறைக்குள் மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கிணங்க சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**02/04/003/0401/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 பெப்புருவரி 21

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற**
**சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின்**
**அனைத்து வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவர்களுக்கு**

அன்புள்ள ஐயா,

**வங்கிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை பத்திரிகைகளில் வெளியிடுதல்**

2005 செத்தெம்பர் 30ஆம் நாளும் 2006 சனவரி 26ஆம் நாளும் வங்கிகளின் நிதியியல் கூற்றுக்களை பத்திரிகைகளில் வெளியிடுவது தொடர்பாக விடுக்கப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு மேலதிகமாக.

வங்கிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை பத்திரிகைகளில் வெளியிடுவதற்கான நேர காலத்தினைப் பொறுத்த வரையில் அவர்களால் எதிர்நோக்கப்பட்ட நடைமுறை இடர்ப்பாடுகள் தொடர்பாக வங்கிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை பரிசீலனையில் கொண்டு, இறுதிக் காலாண்டின் கணக்காய்வு செய்யப்படாத பெறுபேறுகளை வெளியிடுவதிலிருந்து விலக்குப் பெறுவதற்கான தகைமையினைப் பெறுவதற்கு அனைத்து வர்த்தக வங்கிகளும் பின்வருமாறு அறிவிக்கப்பட்டன.

- வங்கியானது அதன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை நிதியியல் ஆண்டு முடிவடைந்ததிலிருந்து மூன்று மாதங்களுக்குள் வெளியிடுமாயின், 2005 செத்தெம்பர் 30ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கையின் நியதிகளின்படி நான்காவது காலாண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை வெளியிட வேண்டுமென்ற தேவைப்பாடு கட்டாயமானதாக இருக்கமாட்டாது.

- வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அத்தகைய வங்கியின் உலகளாவிய தொழிற்பாடுகளுடன் தொடர்பான பிந்திய கிடைக்கத்தக்க முதன்மை செயலாற்றக் குறிகாட்டிகளைக் காலாண்டு அடிப்படையிலும், கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட விகிதத்தை தாய் வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களுடன் சேர்த்தும் வெளியிடலாம்.

- கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதற்கான படிவமுறை முறையினைப் பொறுத்தவரை காலாண்டு நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அனைத்து வங்கிகளும் 2005 செத்தெம்பர் 30ஆம் நாளன்று வெளியிடப்பட்ட படிவத்தினையே பயன்படுத்த வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**02/19/4011/0072/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 மாச்சு 07

**அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளனதும்**

**முதன்மை நிறைவேற்று அலுவர்களுக்கு**

அன்புள்ள ஐயா,

**அரசசார்பற்ற அமைப்புக்களினூடாகவும் அரசசார்பற்ற அமைப்புக்கள் அல்லாதவையினூடாகவும் பெறப்பட்ட சுனாமிக்குப் பின்னைய பணவனுப்பல்களை மத்திய வங்கிக்கு அறிக்கையிடல்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான 2005 மே 13ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை தொடர்பான, மேற்குறிப்பிட்ட பணவனுப்பல்கள் தொடர்பான தகவல்களை அறிக்கையிடுவதற்கான படிவம் 2006 மாச்சு 1ஆம் நாளிலிருந்து இத்தால் திருத்தப்படுகின்றது.

திருத்தப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி, இங்கே இணைக்கப்பட்டுள்ள இரு அட்டவணைகளில் தரவுகளை வழங்கவேண்டுமென வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. (அட்டவணை 1 மற்றும் 2) புதிய அட்டவணையானது (அட்டவணை 2) 2006 மாச்சிலிருந்து மாதாந்த அடிப்படையில் தொடர்பான கொடை வழங்குநர்கள்/ பண அனுப்புனர், எடுப்பனவுகள் மற்றும் வெளிநிற்கும் கணக்கு மீதி போன்ற அரசசார்பற்ற அமைப்புக்களின் விபரங்களை உள்ளடக்கி அறிக்கையிடுகின்ற மாதத்தினை தொடர்ந்து வரும் மாதத்தின் 10ஆம் நாளன்று வழங்குதல் வேண்டும். 2006 சனவரி மற்றும் பெப்புருவரி மாதங்களுக்குரிய தகவல்களை அட்டவணை 2இல் 2006 மாச்சு 24ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்குமாறு வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

வங்கிகள் "உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் வழிகாட்டியினை" கடுமையாகப் பின்பற்றுமாறும் மேற்கொள்ளப்படுகின்ற அத்தகைய பணவனுப்பல்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் மீது நுணுக்கமான வாடிக்கையாளர் கவனிப்பினை உறுதிப்படுத்தும் விதத்தில் அத்தகைய பணவனுப்பல்களை கண்காணிக்கும் விதத்தில் போதுமான முறைமைகளையும் கட்டுப்பாடுகளையும் நடைமுறைப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன. பணம் தூயதாக்குதலுக்கெதிரான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு மிக விரைவில் நடைமுறைக்கு வரவுள்ள பின்னணியில் இது தவிர்க்க முடியாததாக இருக்கிறது.

இது தொடர்பான தங்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு பெருமளவிற்கு வரவேற்கப்படும்

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

ஒப்பம்

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

## அரச, அரசல்லா அமைப்புக்கள் மற்றும் ஏனையவற்றினால் (அரசசார்பற்றன அல்லாத) பெறப்பட்ட நன்கொடைகள்

**அட்டவணை 1**

வர்த்தக வங்கியின் பெயர்:- ..........................................................

காலப்பகுதி 2004 திசெம்பர் 26இலிருந்து

| விடயம் | சுனாமி | | | சுனாமி அல்லாத | |
|---|---|---|---|---|---|
| | வெளிநாட்டு கொடைகள் | | உள்நாட்டு கொடைகள் இலங்கை ரூபாவில் | வெளிநாட்டு நாணயத்தில் தொகை | சமமான ரூபாய் |
| | வெளிநாட்டு நாணயத்தில் தொகை | இலங்கை ரூபாவிற்குச் சமனானது | | | |
| அரசினால் பெறப்பட்ட நன்கொடை<br>அரசல்லா அமைப்புக்களினால் பெறப்பட்ட நன்கொடைகள் (அரசசார்பற்ற அமைப்புக்கள்) (அ)<br>ஏனையவற்றினால் பெறப்பட்ட நன்கொடைகள் (அரசசார்பற்ற அமைப்புக்கள் அல்லாத) | | | | | |
| மொத்தம் | | | | | |

(அ) படிவம் 2இல் கேட்டுக் கொள்ளப்பட்டவாறான விபரமான தகவல்களை தயவு செய்து தரவும்.

அட்டவணை 2

## அரசசார்பற்ற நிறுவனங்களினால் பெறப்பட்ட நன்கொடைகள்

வர்த்தக வங்கியின் பெயர் ..........................................................

அறிக்கையிடும் மாதம் ..........................................................

| அரசசார்பற்ற அமைப்பின் பெயரும் முகவரியும் | கணக்கின் எண் | கிளை | வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட பணவனுப்பல்கள் | | | உள்ளூர் கொடைகள் | | எடுப்பனவுகள் (ரூ.) | மாத இறுதியில் உள்ளவாறு மீதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வெளிநாட்டு நாணயத் தொகை | சமமான ரூபாய் | நன்கொடைகள்/ பணவனுப்பினர்களின் பெயரும் முகவரியும் | தொகை (ரூ.) | நன்கொடைகள் பணவனுப்பினர்களின் பெயரும் முகவரியும் | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

குறிப்பு:

ஒவ்வொரு அறிக்கையிடும் மாதகாலப்பகுதியிலும் பெறப்பட்ட நன்கொடைகள் தொடர்பான மேற்குறிப்பிட்ட தகவல்களையும், அரசசார்பற்ற அமைப்புக்களினால் பேணப்படும் கணக்குகள் தொடர்பான எடுப்பனவுகளையும் மாத இறுதியில் உள்ள மீதிகளையும் தயவு செய்து வழங்கவும்.

இது தொடர்பாக வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் திரு. ஜி. சி. ஏ. ஆரியதாசவினைத் (தொலைபேசி: 4277110) தொடர்பு கொள்ளவும்.

**02/04/003/0401/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 மார்ச் 24

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின்**

**முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கும்**

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின்**

**முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கும்**

அன்புள்ள ஐயா,

**வங்கிகளின் போதுமானதற்ற/ பிழையான வெளிப்படுத்தல்களைக் கொண்ட பத்திரிகைக் கூற்றுக்கள்**

2006 மார்ச் 26ஆம் நாள் நடாத்தப்பட்ட முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் கூட்டத்தில் தங்களுக்கு தெரிவிக்கப்பட்டவாறு, தவறான கூற்றுக்களை/ தரவுகளை வெளியிடுவதன் மூலம் பொதுமக்களை பிழையாக வழிநடத்துவதற்கு வங்கிகள் முயற்சித்திருக்கின்றமைக்கு அல்லது நியதிச்சபை ஒழுங்கு விதிகளுக்கு இணங்கி ஒழுகாமை தொடர்பாக குறிப்பிட்ட சில தகவல்களை வெளியிடாமல் வங்கிகள் இருந்தமைக்கு என பல்வேறு உதாரணங்கள் எடுத்துக் காட்டப்பட்டன.

பொதுமக்கள் பிழையாக வழி நடத்துவதற்கு வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய முயற்சிகள் இத்தொழில்துறையில் வங்கிகளின் உண்மையான நிலை பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக ஒழுங்கு முறைப்படுத்துநர்களினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை முழுமையாகவே இல்லாததாக்குவதுடன், அத்தகைய மோசடிகளை நிறுத்துவதற்கு ஒழுங்கு முறைப்படுத்துநர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளாதுவிடின் இது தொடர்பான எமது அதிகரித்த முயற்சிகளை மேலும் பயனற்றதாக்கிவிடும். தமது நிதி நிலைமைகளை பற்றி பொதுமக்களுக்கு பிழையான தகவல்களை வழங்க வங்கிகளை அனுமதிக்கின்றமைக்காக மத்திய வங்கி தவறுடையதாகிவிடும்.

அவர்களது நிதியியல் நிலைமைகள் தொடர்பான உண்மையான தன்மையினை பொதுமக்களுக்கு வெளிப்படுத்துவதற்கான அவற்றின் நம்பிக்கை பொறுப்பினை ஆற்றுவது வங்கி முகாமைத்துவத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

ஆகவே, பொதுமக்கள் தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கும் விதத்தில் அவர்களுக்கு துல்லியமான தகவல்களை வழங்கும் ஆர்வத்துடன் பத்திரிகைகளில் அறிக்கைகளை விடுவதிலும் மற்றும் வங்கிகளின் நிதியியல் பெறுபேறுகளை வெளியிடுவதிலும் இணங்கிக் கொள்ளப்படாத விடயங்கள் ஏதுமிருப்பின் அதற்கு போதுமானளவு விளம்பரம் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு முன்மதியுடைய விகிதத்தினையும் இவ்விகிதத்தினை ஈடுசெய்வதற்கு வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளையும் சேர்த்து வெளியிடுமாறு அனைத்து வங்கிகளும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகாத, அத்தகைய விடயங்களை பத்திரிகை நேர்முக விளம்பல் அல்லது கூற்றுக்களில் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தாத வங்கிகள் காணப்படுமிடத்து, ஒழுங்கு முறைப்படுத்துநர் என்ற ரீதியில் இலங்கை மத்திய வங்கி பொது மக்களின் நலன் கருதி அத்தகைய தகவல்களைத் திருத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்படும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

படி: செயலாளர் நாயகம்/ இ.வ.நிறுவனம்

## வங்கித் தொழில்சட்டம்

2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.

கொழும்பு
2006.03.01

ஒப்பம் **சுனில் மெண்டிஸ்**
ஆளுநர்

## வங்கிகளினது முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் பகுப்பாய்வு, மதிப்பீடு மற்றும் தொழிற்பாடு என்பனவற்றிற்கான முன்மதியுடைய விதிகளின் மீதான பணிப்புரை

1. 2006 மாச்சு 31ஆம் நாள் தொடக்கம் அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் அவற்றின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலை இரண்டு வகைகளின் கீழ் அதாவது முதலீட்டுக் கணக்கு மற்றும் வர்த்தகக் கணக்கு ஆகிய இரு வகைகளின் கீழ், பகுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. இந்நோக்கத்திற்காக அனைத்து வங்கிகளும் இரு வேறு கணக்கேடுகளை பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

2. கையேற்கும் நேரத்தில் முதலீட்டு வகை பற்றி வங்கிகள் தீர்மானிக்க வேண்டியதுடன் தீர்மானம் ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பகுப்பானது சுதந்திரமானதொரு தேர்வாக இல்லை, எனினும் உண்மை மற்றும் கொள்வனவு நாளில் முகாமைத்துவத்தின் நோக்கம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும். ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் பகுப்புக்களிடையே மாற்றல் செய்வது கட்டுப்படுத்தபட்டிருக்கும்.

3. வங்கிகளின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் பகுப்பு மற்றும் மதிப்பிடலுக்காக வழங்கப்பட்ட பிரமாணங்கள் கீழே தரப்படுகின்றன.

**அ. முதலீட்டுக் கணக்கு**

(அ) நேர்க்கணிய நோக்கத்துடனும் முதிர்ச்சிக்காலம் வரை வைத்திருக்கக்கூடிய இயலாற்றலைக் கொண்டதுமான கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து பிணையங்களும் முதலீட்டுக் கணக்கின் கீழ் பகுக்கப்பட வேண்டும்.

(i) பின்வரும் தன்மைகளைக் கொண்டிருப்பின் நேர்க்கணிய நோக்குக் கொண்டதென எடுத்துக் காட்டப்பட முடியாது.

- வரைவிலக்கணப்படுத்தப்படாத காலப்பகுதியொன்றுக்கு மாத்திரம் பிணையங்களை வைத்திருப்பதற்கு வங்கி எண்ணுமிடத்து அல்லது
- சந்தையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப, அதாவது வட்டி வீதங்கள் அல்லது இடர்நேர்வு, திரவத்தன்மை தேவைப்பாடு, மாற்று முதலீடுகள் மீதான விளைவுகளின் கிடைப்பனவில் ஏற்படும் மாற்றங்கள், நிதியிடல் மூலங்கள் மற்றும் நியதிகளில் மாற்றம் அல்லது வெளிநாட்டு நாணய இடர்நேர்வுகளில் மாற்றம் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு பிணையங்களை விற்பனை செய்வதற்கு வங்கிகள் தயார் நிலையில் இருக்குமிடத்து அல்லது
- பிணையங்களில் தொகையொன்று அவற்றின் கடன் தீர்ப்பனவுச் செலவிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவு குறைவாக இருக்கையில் அப்பிணைகள் தீர்ப்பனவு செய்வதற்கான உரிமையினை வழங்குனர் கொண்டிருக்குமிடத்து

(ii) பின்வரும் தன்மைகளைக் கொண்டிருப்பின் முதிர்ச்சி வரை பிணையங்களை வைத்திருக்கும் ஆற்றல் கொண்டது என எடுத்துக் காட்டப்படமுடியாது.

- முதிர்ச்சியடையும் வரை முதலீடுகளுக்கு தொடர்ந்தும் நிதியிடுவதற்கு வங்கியானது நிதியியல் மூலவளங்களைக் கொண்டிருக்காதவிடத்து அல்லது
- வங்கியொன்று முதிர்ச்சியடையும் வரை பிணையங்களை வைத்திருக்கும் நோக்கத்தினை சிதைத்து விடக்கூடிய சட்ட ரீதியான அல்லது வேறு தடைகளுக்கு உட்பட்டிருக்குமிடத்து.

(iii) வங்கியொன்றின் நடவடிக்கைகள் முதிர்ச்சிக்காலம் வரை முதலீடுகளை வைத்திருக்கும் அதன் நோக்கம் அல்லது இயலாற்றலின் மீது சந்தேகத்தினை ஏற்படுமிடத்து, இலங்கை மத்திய வங்கி முதலீட்டுக் கணக்கு முழுவதையும் அல்லது அதன் பகுதியினை வர்த்தகக் கணக்கிற்கு மீளப்பகுக்கவும் பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்வதற்குமான உரிமைகளைக் கொண்டுள்ளது.

(ஆ) பட்டியலிடப்படாத அனைத்துப் பிணையங்களும் (உ-ம்: பங்குகள், தொகுதிக்கடன்கள்) முதலீட்டுக் கணக்குகளின் கீழ் பொதுவாகப் பகுக்கப்படவேண்டும். எனினும், அரச பிணையங்கள் மேலேயுள்ள விடயம் அ(அ)இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் பகுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) முதலீட்டுக் கணக்கிலுள்ள பிணையங்களை மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்தலாம்.

(ஈ) முதலீட்டுக் கணக்கிலுள்ள பிணையங்கள் முன் கொண்டு செல்லப்பட்டு மீட்புக்காலப்பகுதியில் கையேற்புச் செலவில் குறிப்பிடப்படல் வேண்டும்.

(i) முதலீட்டுக் கணக்கிலுள்ள வட்டி உழைக்கின்ற பிணையங்கள் கொண்டிருக்கின்ற பெறுமதிகள் கழிவிடலின் (அல்லது வட்டத்தினை இல்லாமல் செய்தல்) அதிகரிப்பிற்கான கணக்கிற்கு சீராக்கம் செய்யப்படலாம். இச்சீராக்கங்கள் முதிர்ச்சிக்கான காலப்பகுதியில் நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டுதோறும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.

(ii) மற்றைய அனைத்துப் பிணையங்களும் செலவில் பேணப்பட வேண்டும். நிரந்தரமானதாகக் கருதப்படக்கூடிய பெறுமதியில் ஏற்படக்கூடிய எந்தவிதமான பழுதும் இலாப நட்டக் கணக்கிற்கு உடனடியாக முழுமையாக வழங்கப்பட வேண்டும். பெறுமதியில் பழுதேனும் உள்ளதா என்பதனை தீர்மானிப்பதற்காக பின்வரும் நிலைமைகள் பரிசீலிக்கப்படவேண்டும்.

- பங்கிலாபங்கள்/ வருவாய் ஈட்டங்களின் விரைவான பதிவு - தொடர்ச்சியாக மூன்றாண்டு காலப்பகுதிக்கு பங்கிலாபம்/ வருவாய் ஈட்டங்கள் பெறப்படாவிடின் இது பழுதுறும் தன்மையொன்றாகக் கருதப்படுவதுடன் முதலீடுகள் செயற்படாக் கடன்களாக பகுக்கப்படவும் வேண்டும்.

- சந்தை விலைகள் - மூன்றாண்டு காலப்பகுதிக்கும் மேலாக முதலீட்டுப் பெறுமதிச் செலவிற்கும் கீழாக இருப்பதுடன் சேர்ந்து சந்தை விலைகளில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு காணப்படுமிடத்து பெறுமதியில் ஏற்படும் பழுதொன்றாகக் கருதப்படல் வேண்டும்.

(iii) இது தொடர்பாக குறிக்கப்பட்ட கோரிக்கைகள்/ விலக்கல்களை பரிசீலிக்கும் விதத்தில் இலங்கை மத்திய வங்கி நெகிழ்ச்சித் தன்மையொன்றினைக் கொண்டிருக்கும்.

(iv) பெறுமதியில் ஏற்படும் எந்த ஒரு பழுதும் அல்லது முதலீட்டுக் கணக்கில் வைத்திருக்கப்பட்ட முதலீட்டின் விற்பனையில் ஏற்பட்ட இழப்புக்கள் இலாப மற்றும் நட்டக் கணக்கிற்கு எடுக்கப்படவேண்டும்.

(உ) முதலீட்டுக்கணக்கின் கீழ் பகுக்கப்பட்ட பிணையங்களின் விற்பனைகள் முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் சிறிதளவு தொகையாக மாத்திரமே இருக்க வேண்டியதுடன், சொத்துப் பட்டியலின் எஞ்சிய பகுதிக்கு கேடு விளைக்காததொரு சூழ்நிலைக்கு கட்டுப்படுத்தப்படவும் வேண்டும். இச்சூழ்நிலைகளாவன:

- முதலீடானது முதிர்ச்சிக்கு அல்லது அழைப்பு நாளுக்கு மிக அண்மித்ததாக இருக்குமாயின் வட்டியின் சந்தை வீதங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் முதலீட்டுச் சந்தையின் பெறுமதியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை கொண்டிருக்க முடியாது;

- அட்டவணையிடப்பட்ட கொடுப்பனவுகள் அல்லது முன்கொடுப்பனவுகளூடாக முதலீட்டின் ஆரம்ப முதல் தொகையில் கணிசமாக முழுவதையும் நிறுவனமானது சேகரித்ததன் பின்னர் செய்யப்பட்ட விற்பனை;

- நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாக மீண்டும் மீண்டும் நிகழாத, நியாயமான முறையில் எதிர்பார்க்கப்பட்டிராத தனியான சம்பவமொன்றின் காரணமாக ஏற்பட்ட விற்பனை.

**ஆ. வர்த்தகப்படுத்தல் கணக்கு**

(அ) சந்தைவிலைகளிலும் விளைவுகளிலும் ஏற்படுகின்ற குறுங்கால மாற்றங்களின் அநுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக, கிரமமான அடிப்படையில் (குறைந்தது ஒவ்வொரு காலாண்டும்) வர்த்தகப்படுத்தலின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக கையேற்கப்பட்ட அனைத்து பிணையங்களும் வர்த்தக கணக்கினீ கீழ் பகுக்கப்பட வேண்டும். வர்த்தகப்படுத்தல், சொத்துக்களின் பகுப்பாய்வு ஆரம்ப நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் நோக்கம் பின்னா் மாற்றமடைந்தமையின் காரணமாக இவை முதலீட்டுக் வகைக்கு மாற்றல் செய்யப்படவும் கூடாது.

(ஆ) வர்த்தகப்படுத்தல் கணக்கில் வைத்திருக்கப்பட்ட பிணையங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படவேண்டும் அல்லது நாளாந்த அடிப்படையில் சந்தை விலைப் பெறுமதிப்படி மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். பிணையங்களைப் பொறுத்த வரை இவற்றின் நாளாந்த விலைகள் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, குறைந்தது கிழமைக்கொரு தரம் என்ற அடிப்படையில் சந்தைப் பெறுமதிப்படியான விலைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இரு வழி விலைக் குறிப்பீடுகள் வெளியிடப்படுமிடத்து (உ-ம்: அரச பிணையங்களுக்கான வீதங்கள்) நடுவீதம் பின்பற்றப்பட வேண்டும்.

(இ) வர்த்தகப்படுத்தல் கணக்கில் வைத்திருக்கப்பட்ட முதலீடுகளின் விற்பனையின் காரணமாக ஏற்படும் எந்த ஒரு இலாபமும் அல்லது நட்டமும் இலாப நட்டக் கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

**(இ) பிணையங்களின் மாற்றல்**

குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தவிர, வர்த்தகப்படுத்தல் கணக்கிற்கிடையில் பிணையங்களை மாற்றல் செய்வது பொதுவாக அனுமதிக்கப்படமாட்டாது. இது இலாபம் அல்லது நட்டங்களை அங்கீகரிக்கின்ற கையாளல்களை அல்லது சந்தைப் பெறுமதியின் மாற்றங்களை மறைக்கின்ற வாய்ப்புக்களை மட்டுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும்.

(அ) வர்த்தகப்படுத்தல் கணக்கிற்கும் முதலீட்டுக் கணக்கிற்குமிடையிலான பிணையங்களின் மாற்றல்கள் நியாயப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

(ஆ) முதலீட்டுக் கணக்கிற்கு அல்லது அதிலிருந்தான சொத்துப்பட்டியல் மாற்றல்களை பணிப்பாளர் சபை, சொத்துக்கள் பொறுப்புக்கள் குழு அல்லது முதலீட்டுக்குழு என்பனவற்றின் ஒப்புதலுடன் மிக அருமையாக மட்டுமே மேற்கொள்ள வேண்டும். (பெரும்பாலும் கணக்கீட்டு ஆண்டின் ஆரம்பத்தில்) அத்தகைய மாற்றல்களை நியாயப்படுத்தக்கூடிய சூழ்நிலைகள் கீழே தரப்படுகின்றன:

(i) நியதி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளில் மாற்றம்

(ii) வங்கியின் முதலீட்டு உடமைகளில் குறைப்பினை ஏற்படுத்துவதற்கு அதனைக் கடப்பாடுடையதாக்கும் விதத்தில் மூலதனத்தேவைப்பாடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு.

(iii) வங்கியின் இடர்நேர்வு தோற்றப்பாட்டினைப் பேணுவதற்காக பிணையங்களின் மாற்றல்களை அவசியமாக்குகின்ற முக்கியமானதொரு வியாபார நிகழ்வுகள்.

(iv) இறுக்கமான திரவ நிலைமை மற்றும் தீவிரமான ஏற்ற இறக்கம் போன்ற விதிவிலக்கான சூழ்நிலைகள்.

(இ) வர்த்தகப்படுத்தல் கணக்கிலிருந்து முதலீட்டுக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட பிணையங்கள் கொண்டிருக்கின்ற பெறுமதி மாற்றல் செய்யப்படுவதற்கு முன்னர் சந்தைப் பெறுமதியான விலைக்கு நிர்ணயிக்கப்பட வேண்டும். ஆகவே, மீள்மதிப்பீட்டின் காரணமாக ஏற்படும் எந்த ஒரு இலாபமும் அல்லது நட்டமும் மாற்றல் செய்யப்படுவதற்கு முன்னர் வருவாய் ஈட்டத்தில் குறிப்பிடப்பட வேண்டும். எனவே, முதலீட்டுக் கணக்கில் மாற்றல் செய்யப்படும் வேளையில் பிணையங்களின் சந்தைப் பெறுமதி, கணக்கீட்டு நோக்கங்களுக்காக "கையேற்புச் செலவாக" மாறும்.

(ஈ) சொத்துப்பட்டியல் மீதான கூற்றுக்கள், ஏதுமிருப்பின், வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலரினால் கையொப்பமிடப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திடம் காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(உ) இலங்கை மத்திய வங்கி சொத்துப்பட்டியல் மாற்றல்களின் கூற்றுக்களை மீளாய்வு செய்யும் உரிமையினையும் தேவையென கருதுமிடத்து ஒதுக்கங்களை மேற்கொள்ளுமாறு வங்கிகளைக் கேட்டுக் கொள்வதற்கான உரிமையினையும் கொண்டிருக்கும்.

## வங்கித் தொழில்சட்டம்

2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76J(1)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.

கொழும்பு
2006.03.01

ஒப்பம் **சுனில் மெண்டிஸ்**
ஆளுநர்

## வங்கிகளினது முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் பகுப்பாய்வு, மதிப்பீடு மற்றும் தொழிற்பாடு என்பனவற்றிற்கான முன்மதியுடைய விதிகளின் மீதான பணிப்புரை

1. 2006 மாச்சு 31ஆம் நாள் தொடக்கம் அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் அவற்றின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் இரண்டு வகைகளின் கீழ் அதாவது முதலீட்டுக் கணக்கு மற்றும் வர்த்தகக் கணக்கு ஆகிய இரு வகைகளின் கீழ் பகுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. இந்நோக்கத்திற்காக அனைத்து வங்கிகளும் இரு வேறு கணக்கேடுகளை பேணுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

2. கையேற்கும் நேரத்தில் முதலீட்டு வகை பற்றி வங்கிகள் தீர்மானிக்க வேண்டியதுடன் தீர்மானமும் ஆவணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பகுப்பானது சுதந்திரமானதொரு தேர்வாக இல்லை, எனினும் உண்மை மற்றும் கொள்வனவு நேரத்தில் முகாமைத்துவத்தின் நோக்கம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும். ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் வகைகளிடையே மாற்றல் செய்வது கட்டுப்படுத்தபட்டிருக்கும்.

3. வங்கிகளின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் பகுப்பு மற்றும் மதிப்பிடலுக்காக வழங்கப்பட்ட பிரமாணங்கள் கீழே தரப்படுகின்றன.

**அ. முதலீட்டுக் கணக்கு**

(அ) நேர்க்கணிய நோக்கத்துடனும் முதிர்ச்சிக்காலம் வரை வைத்திருக்கக்கூடிய இயலாற்றலைக் கொண்டதுமான கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து பிணையங்களும் முதலீட்டுக் கணக்கின் கீழ் பகுக்கப்பட வேண்டும்.

(i) பின்வரும் தன்மைகளைக் கொண்டிருப்பின் நேர்க்கணிய உள்நோக்குக் கொண்டதென எடுத்துக் காட்டப்பட முடியாது.

- வரைவிலக்கணப்படுத்தப்படாத காலப்பகுதியொன்றுக்கு மாத்திரம் பிணையங்களை வைத்திருப்பதற்கு வங்கி எண்ணுமிடத்து அல்லது
- சந்தையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப, அதாவது வட்டி வீதங்கள் அல்லது இடர்நேர்வு, திரவத்தன்மை தேவைப்பாடு, மாற்று முதலீடுகள் மீதான விளைவுகளின் கிடைப்பனவில் ஏற்படும் மாற்றங்கள், நிதியிடல் மூலங்கள் மற்றும் நியதிகளில் மாற்றம் அல்லது வெளிநாட்டு நாணய இடர்நேர்வுகளில் மாற்றம் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு பிணையங்களை விற்பனை செய்வதற்கு வங்கிகள் தயார் நிலையில் இருக்குமிடத்து அல்லது
- பிணையங்களில் தொகையொன்று அவற்றின் கடன் தீர்ப்பனவுச் செலவிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவு குறைவாக இருக்கையில் அப்பிணைகள் தீர்ப்பனவு செய்வதற்கான உரிமையினை வழங்குனர் கொண்டிருக்குமிடத்து.

(ii) பின்வரும் தன்மைகளைக் கொண்டிருப்பின் முதிர்ச்சி வரை பிணையங்களை வைத்திருக்கும் ஆற்றல் கொண்டது என எடுத்துக் காட்டப்படமுடியாது.

- முதிர்ச்சியடையும் வரை முதலீடுகளுக்கு தொடர்ந்தும் நிதியிடுவதற்கு வங்கியானது நிதியியல் மூலவளங்களைக் கொண்டிருக்காதவிடத்து அல்லது
- வங்கியொன்று முதிர்ச்சியடையும் வரை பிணையங்களை வைத்திருக்கும் நோக்கத்தினை சிதைத்து விடக்கூடிய சட்ட ரீதியான அல்லது வேறு தடைகளுக்கு உட்பட்டிருக்குமிடத்து.

(iii) வங்கியொன்றின் நடவடிக்கைகள் முதிர்ச்சிக்காலம் வரை முதலீடுகளை வைத்திருக்கும் அதன் நோக்கம் அல்லது இயலாற்றலின் மீது சந்தேகத்தினை ஏற்படுமிடத்து, இலங்கை மத்திய வங்கி முதலீட்டுக் கணக்கு முழுவதையும் அல்லது அதன் பகுதியினை வர்த்தகக் கணக்கிற்கு மீளப்பகுக்கவும் பொருத்தமான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்வதற்குமான உரிமைகளைக் கொண்டுள்ளது.

(ஆ) பட்டியலிடப்படாத அனைத்துப் பிணையங்களும் (உ-ம்: பங்குகள், தொகுதிக்கடன்கள்) முதலீட்டுக் கணக்குகளின் கீழ் பொதுவாகப் பகுக்கப்படவேண்டும். எனினும், அரச பிணையங்கள் மேலேயுள்ள விடயம் அ(அ)இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் பகுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) முதலீட்டுக் கணக்கிலுள்ள பிணையங்களை மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்தலாம்.

(ஈ) முதலீட்டுக் கணக்கிலுள்ள பிணையங்கள் முன் கொண்டு செல்லப்பட்டு மீட்புக்காலப்பகுதியில் கையேற்புச் செலவில் குறிப்பிடப்படல் வேண்டும்.

(i) முதலீட்டுக் கணக்கிலுள்ள வட்டி உழைக்கின்ற பிணையங்கள் கொண்டிருக்கின்ற பெறுமதிகள் கழிவிடலின் (அல்லது வட்டத்தினை இல்லாமல் செய்தல்) அதிகரிப்பிற்கான கணக்கிற்கு சீராக்கம் செய்யப்படலாம். இச்சீராக்கங்கள் முதிர்ச்சிக்கான காலப்பகுதியில் நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டுதோறும் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.

(ii) மற்றைய அனைத்துப் பிணையங்களும் செலவில் பேணப்பட வேண்டும். நிரந்தரமானதாகக் கருதப்படக்கூடிய பெறுமதியில் ஏற்படக்கூடிய எந்தவிதமான பழுதும் இலாப நட்டக் கணக்கிற்கு உடனடியாக முழுமையாக வழங்கப்பட வேண்டும். பெறுமதியில் பழுதேனும் உள்ளதா என்பதனை தீர்மானிப்பதற்காக பின்வரும் நிலைமைகள் பரிசீலிக்கப்படவேண்டும்.

- பங்கிலாபங்கள்/ வருவாய் ஈட்டங்களின் விரைவான பதிவு - தொடர்ச்சியாக மூன்றாண்டு காலப்பகுதிக்கு பங்கிலாபம்/ வருவாய் ஈட்டங்கள் பெறப்படாவிடின் இது பழுதுறும் தன்மையொன்றாகக் கருதப்படுவதுடன் முதலீடுகள் செயற்படாக் கடன்களாக பகுக்கப்படவும் வேண்டும்.

- சந்தை விலைகள் - மூன்றாண்டு காலப்பகுதிக்கும் மேலாக முதலீட்டுப் பெறுமதிச் செலவிற்கும் கீழாக இருப்பதுடன் சேர்ந்து சந்தை விலைகளில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு காணப்படுமிடத்து பெறுமதியில் ஏற்படும் பழுதொன்றாகக் கருதப்படல் வேண்டும்.

(iii) இது தொடர்பாக குறிக்கப்பட்ட கோரிக்கைகள்/ விலக்கல்களை பரிசீலிக்கும் விதத்தில் இலங்கை மத்திய வங்கி நெகிழ்ச்சித் தன்மையொன்றினைக் கொண்டிருக்கும்.

(iv) பெறுமதியில் ஏற்படும் எந்த ஒரு பழுதும் அல்லது முதலீட்டுக் கணக்கில் வைத்திருக்கப்பட்ட முதலீட்டின் விற்பனையில் ஏற்பட்ட இழப்புக்கள் இலாப மற்றும் நட்டக் கணக்கிற்கு எடுக்கப்படவேண்டும்.

(உ) முதலீட்டுக்கணக்கின் கீழ் பகுக்கப்பட்ட பிணையங்களின் விற்பனைகள் முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் சிறிதளவு தொகையாக மாத்திரமே இருக்க வேண்டியதுடன், சொத்துப் பட்டியலின் எஞ்சிய பகுதிக்கு கேடு விளைக்காததொரு சூழ்நிலைக்கு கட்டுப்படுத்தப்படவும் வேண்டும். இச்சூழ்நிலைகளாவன:

- முதலீடானது முதிர்ச்சிக்கு அல்லது அழைப்பு நாளுக்கு மிக அண்மித்ததாக இருக்குமாயின் வட்டியின் சந்தை வீதங்களில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் முதலீட்டுச் சந்தையின் பெறுமதியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை கொண்டிருக்க முடியாது;

- அட்டவணையிடப்பட்ட கொடுப்பனவுகள் அல்லது முன்கொடுப்பனவுகளூடாக முதலீட்டின் ஆரம்ப முதல் தொகையில் கணிசமாக முழுவதையும் நிறுவனமானது சேகரித்ததன் பின்னர் செய்யப்பட்ட விற்பனை;

- நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாக மீண்டும் மீண்டும் நிகழாத, நியாயமான முறையில் எதிர்பார்க்கப்பட்டிராத தனியான சம்பவமொன்றின் காரணமாக ஏற்பட்ட விற்பனை.

**ஆ. வர்த்தகப்படுத்தல் கணக்கு**

(அ) சந்தைவிலைகளிலும் விளைவுகளிலும் ஏற்படுகின்ற குறுங்கால மாற்றங்களின் அநுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக, கிரமமான அடிப்படையில் (குறைந்தது ஒவ்வொரு காலண்டும்) வர்த்தகப்படுத்தலின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக கையேற்கப்பட்ட அனைத்து பிணையங்களும் வர்த்தக கணக்கின் கீழ் பகுக்கப்பட வேண்டும். வர்த்தகப்படுத்தல், சொத்துக்களின் பகுப்பாய்வு ஆரம்ப நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் நோக்கம் பின்னர் மாற்றமடைந்தமையின் காரணமாக இவை முதலீட்டு வகைக்கு மாற்றல் செய்யப்படவும் கூடாது.

(ஆ) வர்த்தகப்படுத்தல் கணக்கில் வைத்திருக்கப்பட்ட பிணையங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படவேண்டும் அல்லது நாளாந்த அடிப்படையில் சந்தை விலைப் பெறுமதிப்படி மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். பிணையங்களைப் பொறுத்த வரை இவற்றின் நாளாந்த விலைகள் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, குறைந்தது கிழமைக்கொரு தரம் என்ற அடிப்படையில்

சந்தைப் பெறுமதிப்படியான விலைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இரு வழி விலைக் குறிப்பீடுகள் வெளியிடப்படுமிடத்து (உ-ம்: அரச பிணையங்களுக்கான வீதங்கள்) நடுவீதம் பின்பற்றப்பட வேண்டும்.

(இ) வர்த்தகப்படுத்தல் கணக்கில் வைத்திருக்கப்பட்ட முதலீடுகளின் விற்பனையின் காரணமாக ஏற்படும் எந்த ஒரு இலாபமும் அல்லது நட்டமும் இலாப நட்டக் கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

**(இ) பிணையங்களின் மாற்றல்**

குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தவிர, வர்த்தகப்படுத்தல் கணக்கிற்கிடையில் பிணையங்களை மாற்றல் செய்வது பொதுவாக அனுமதிக்கப்படமாட்டாது. இது இலாபம் அல்லது நட்டங்களை அங்கீகரிக்கின்ற கையாளல்களை அல்லது சந்தைப் பெறுமதியின் மாற்றங்களை மறைக்கின்ற வாய்ப்புக்களை மட்டுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும்.

(அ) வர்த்தகப்படுத்தல் கணக்கிற்கும் முதலீட்டுக் கணக்கிற்குமிடையிலான பிணையங்களின் மாற்றல்கள் நியாயப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.

(ஆ) முதலீட்டுக் கணக்கிற்கு அல்லது அதிலிருந்தான சொத்துப்பட்டியல் மாற்றல்களை பணிப்பாளர் சபை, சொத்துக்கள் பொறுப்புக்கள் குழு அல்லது முதலீட்டுக்குழு என்பனவற்றின் ஒப்புதலுடன் மிக அருமையாக மட்டுமே மேற்கொள்ள வேண்டும். (பெரும்பாலும் கணக்கீட்டு ஆண்டின் ஆரம்பத்தில்) அத்தகைய மாற்றல்களை நியாயப்படுத்தக்கூடிய சூழ்நிலைகள் கீழே தரப்படுகின்றன:

(i) நியதி மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளில் மாற்றம்

(ii) வங்கியின் முதலீட்டு உடமைகளில் குறைப்பினை ஏற்படுத்துவதற்கு அதனைக் கடப்பாடுடையதாக்கும் விதத்தில் மூலதனத்தேவைப்பாடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு.

(iii) வங்கியின் இடர்நேர்வு தோற்றப்பாட்டினைப் பேணுவதற்காக பிணையங்களின் மாற்றல்களை அவசியமாக்குகின்ற முக்கியமானதொரு வியாபார நிகழ்வுகள்.

(iv) இறுக்கமான திரவ நிலைமை மற்றும் தீவிரமான ஏற்ற இறக்கம் போன்ற விதிவிலக்கான சூழ்நிலைகள்.

(இ) வர்த்தகப்படுத்தல் கணக்கிலிருந்து முதலீட்டுக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட பிணையங்களில் கொண்டிருக்கின்ற பெறுமதி மாற்றல் செய்யப்படுவதற்கு முன்னர் சந்தைப் பெறுமதியான விலைக்கு நிர்ணயிக்கப்பட வேண்டும். ஆகவே, மீள்மதிப்பீட்டின் காரணமாக ஏற்படும் எந்த ஒரு இலாபமும் அல்லது நட்டமும் மாற்றல் செய்யப்படுவதற்கு முன்னர் வருவாய் ஈட்டத்தில் குறிப்பிடப்பட வேண்டும். எனவே, முதலீட்டுக் கணக்கில் மாற்றல் செய்யப்படும் வேளையில் பிணையங்களின் சந்தைப் பெறுமதி, கணக்கீட்டு நோக்கங்களுக்காக "கையேற்புச் செலவாக" மாறும்.

(ஈ) சொத்துப்பட்டியல் மீதான கூற்றுக்கள், ஏதுமிருப்பின், வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலரினால் கையொப்பமிடப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திடம் காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(உ) இலங்கை மத்திய வங்கி சொத்துப்பட்டியல் மாற்றல்களின் கூற்றுக்களை மீளாய்வு செய்யும் உரிமையினையும் தேவையென கருதுமிடத்து ஒதுக்கங்களை மேற்கொள்ளுமாறு வங்கிகளைக் கேட்டுக் கொள்வதற்கான உரிமையினையும் கொண்டிருக்கும்.

## வங்கித் தொழில்சட்டம்

2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினாலும் 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 19(2) மற்றும் 19(7)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.

கொழும்பு
2006.03.01

ஒப்பம் **சுனில் மெண்டிஸ்**
ஆளுநர்

## சந்தை இடர்நேர்வுகளுக்காக மூலதனக் கட்டணமொன்றினைக் கணிப்பதன் மீதான தீர்மானம்

1. 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் என்பனவற்றினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவுகள் 19(2) மற்றும் 19(7) இன் நியதிகளில், மத்திய வங்கியின் நாணயச் சபையானது, தற்போதைய பன்னாட்டு நடைமுறைகளையும் பாசல் குழுவின் தேவைப்பாடுகளையும் பேணுகின்ற விதத்தில் சந்தை இடர்நேர்வுகளுக்காக மூலதனக் கட்டணமொன்றினை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அனைத்தும் கணித்துக் கொள்ளவேண்டும் என தீர்மானித்திருக்கிறது.

2. 2006 மாச்சு 31ஆம் நாளிலிருந்து, அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக (கொடுகடன் இடர்நேர்வு மற்றும் சந்தை இடர்நேர்விற்காக) 5 சதவீதத்திற்குக் குறையாத மைய மூலதனத்தினை உள்ளடக்கி, ஆகக் குறைந்தது 10 சதவீதமாக மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேண வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. கொடுகடன் இடர்நேர்விற்கான மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகள் ஏற்கனவே இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி கணிக்கப்பட வேண்டியதுடன் சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கிணங்க கணிக்கப்பட வேண்டும்.

3. அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் வழங்கப்பட்ட தற்போதுள்ள மூலதனப் போதுமைக் கூற்றின் படிவம் 4 ஆனது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள புதிய படிவம் 4 மற்றும் 5இன் மூலம் நீக்கப்படுகிறது.

## வங்கித் தொழில்சட்டம்

2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டம், 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் மேற்கொள்ளப்பட்டதிர்மானம்

கொழும்பு
2006.03.01

ஒப்பம் **சுனில் மெண்டிஸ்**
ஆளுநர்

## சந்தை இடர்நேர்வுகளுக்காக மூலதனக் கட்டணமொன்றினைக் கணிப்பதன் மீதான தீர்மானம்

1. 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் என்பனவற்றினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவுகள் 19(2) மற்றும் 19(7) இன் நியதிகளில், மத்திய வங்கியின் நாணயச் சபையானது, தற்போதைய பன்னாட்டு நடைமுறைகளையும் பாசல் குழுவின் தேவைப்பாடுகளையும் பேணுகின்ற விதத்தில் சந்தை இடர்நேர்வுகளுக்காக மூலதனக் கட்டணமொன்றினை உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அனைத்தும் கணித்துக் கொள்ளவேண்டும் என தீர்மானித்திருக்கிறது.

2. 2006 மாச்சு 31ஆம் நாளிலிருந்து, அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக (கொடுகடன் இடர்நேர்வு மற்றும் சந்தை இடர்நேர்விற்காக) 5 சதவீதத்திற்குக் குறையாத மைய மூலதனத்தினை உள்ளடக்கி, ஆகக் குறைந்தது 10 சதவீதமாக மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேண வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. கொடுகடன் இடர்நேர்விற்கான மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகள் ஏற்கனவே இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி கணிக்கப்பட வேண்டியதுடன் சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கிணங்க கணிக்கப்பட வேண்டும்.

3. அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் வழங்கப்பட்ட தற்போதுள்ள மூலதனப் போதுமைக் கூற்றின் படிவம் 4 ஆனது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள புதிய படிவம் 4 மற்றும் 5இன் மூலம் நீக்கப்படுகிறது.

## சந்தை இடர்நேர்வுகளுக்காக மூலதனக் கட்டணத்தினைக் கணிப்பதற்கான வரைவிலக்கணங்களும் அறிவுறுத்தல்களும்

### 1. அறிமுகம்

(1.1) சந்தை இடர்நேர்வு என்பது சந்தை விலைகளில் ஏற்படும் அசைவுகளிலிருந்து தோன்றுகின்ற ஐந்தொகையிலும் ஐந்தொகைக்கு வெளியேயுமுள்ள இழப்புக்களின் இடர்நேர்வு என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. சந்தை இடர்நேர்வுகள் பின்வரும் மூலதனக் கட்டண இடர்நேர்வுகளுக்கு உட்பட்டிருக்கின்றன.

(அ) வர்த்தகப்படுத்தல் ஏட்டில் வட்டி வீதத்துடன் தொடர்பான சாதனங்களுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகள்
(ஆ) வங்கி முழுவதற்குமான (தங்க நிலைமை உட்பட) வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு
(இ) வர்த்தகப்படுத்தல் ஏட்டில் பங்குகளுடன் தொடர்பான இடர்நேர்வுகள்

### 2. சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணத்தின் செயற்பரப்பும் உள்ளடக்கமும்

(2.1) இவ்வழிகாட்டல்கள் வர்த்தகப்படுத்தல் ஏட்டிலுள்ள வட்டி வீதத்துடன் தொடர்புபட்ட சாதனங்கள் மற்றும் பங்குகள், மற்றும் வங்கி முழுவதிலுமுள்ள வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள் (தங்க நிலைமைகள் உட்பட) என்பனவற்றிற்கான மூலதனக் கட்டணங்களை கணிப்பதுடன் தொடர்புபட்டிருந்த பிரச்சனைகளையும் கட்டுப்படுத்துகின்றன. இவ்வழிகாட்டல்களின் நோக்கத்திற்காக, வர்த்தகப்படுத்தல் ஏடு பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

(i) பிணையங்கள், இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வங்கியின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் பகுப்பாய்வு, மதிப்பிடல், மற்றும் தொழிற்பாடு என்பனவற்றிற்கான முன்மதியுடைய விதிகளின் மீதான பணிப்புரையின் நியதிகளின்படி பகுக்கப்பட்டன.

(ii) ஆரம்ப தங்க நிலைமைகள்

(iii) ஆரம்ப வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகள்

(2.2) வங்கிகளின் ஏடுகளில் சந்தை இடர்நேர்வுகளை அந்தந்த நேர அடிப்படையில் முகாமைப்படுத்துமாறும் சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள் தொடர்ச்சியான அடிப்படையில் அதாவது ஒவ்வொரு வேலைநாள் முடிவடைகையிலும் பேணப்பட்டு வருகின்றது என்பதனை உறுதிப்படுத்துமாறும் வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. சந்தை இடர்நேர்வுகளுக்கான ஒரு நாளுக்குள்ளேயான வெளிப்படுத்தல்களை கண்காணித்து கட்டுப்படுத்துவதற்காக கடுமையான இடர்நேர்வு முகாமைத்துவ முறையினைப் பேணுமாறும் வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

**(3) வட்டி வீத இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணங்களை அளவிடுதல்**

(3.1) இப்பிரிவானது வர்த்தகப்படுத்தல் ஏட்டில் இலங்கை ரூபாவிலும் அதே போன்று வெளிநாட்டு நாணயங்களிலும் குறித்துரைக்கப்பட்ட படுகடன் பிணையங்கள் மற்றும் வட்டியுடன் தொடர்பான சாதனங்களை வைத்திருத்தல் அல்லது கையேற்று வைத்திருத்தலுடன் தொடர்பான இடர்நேர்வுகளை அளவிடுவதற்கான கட்டமைப்பினை விபரிக்கிறது.

(3.2) வட்டி வீதத்துடன் தொடர்பான சாதனங்களுக்கான மூலதனக் கட்டணத்தினை வங்கியின் வர்த்தகப்படுத்தல் ஏட்டிலுள்ள இவ்விடயங்களின் நடைமுறைச் சந்தைப் பெறுமதிக்கும் பிரயோகிக்கலாம். அந்தந்த நேர அடிப்படையில் சந்தை இடர்நேர்வுகளுக்காக மூலதனத்தினை பேணுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளமையினால், நாளாந்த அடிப்படையில் அவர்களின் வர்த்தகப்படுத்தல் நிலைமையினை சந்தைப் பெறுமதிப்படி குறிப்பிடுமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். நடைமுறைச் சந்தை பெறுமதி இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வங்கிகளின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் பகுப்பாய்வு, மதிப்பீடு மற்றும் தொழிற்பாடுகளுக்கான முன்மதியுடைய விதிகளின் மீதான பணிப்புரைகளின்படி தீர்மானிக்கப்படும்.

(3.3) ஆகக் குறைந்த மூலதனத்தேவைப்பாடுகள் இரு தனித்தனியான கணிக்கப்பட்ட கட்டணங்களின் அடிப்படையில் விவரிக்கப்படுகிறது. (i) ஒவ்வொரு பிணையத்திற்குமான "குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வு" இது கொடுகடன் இடர்நேர்விற்கான மரபு ரீதியான மூலதனக் கட்டணத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக இருப்பதுடன் இரண்டும் குறுகிய மற்றும் நீண்ட கால நிலைமைகளைக் கொண்டுள்ளது. அத்துடன் (ii) சொத்துப்பட்டியலிலுள்ள வட்டிவீத இடர்நேர்வுகளுக்கான "பொதுச்சந்தை இடர்நேர்வு" கட்டணம் இருக்குமிடத்து வேறுபட்ட பிணையங்கள் அல்லது சாதனங்களிலுள்ள நீண்ட கால, குறுங்கால நிலைமைகளை எதிரீடு செய்ய முடியும்.

**குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வு**

3.3.1 குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளுக்கான கட்டணமானது, தனிப்பட்ட வழங்குனருடன் தொடர்பான காரணிகளின் காரணமாக தனிப்பட்ட ஒருவரின் பிணையத்தினது விலையில் ஏற்படும் மோசமான அசைவிலிருந்தும் பாதுகாக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

3.3.2 குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வினைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்படவுள்ள சந்தை இடர்நேர்வுக் கட்டணங்கள் பின்வருமாறு:

(i) இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அரசாங்க பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பிணையங்கள் என்பன 0% இடர்நேர்வுக் கட்டணத்திற்கு உட்பட்டிருக்கும்.

**அட்டவணை 1: வெளிநாட்டு அரசாங்கம்/ மத்திய வங்கிகளினால் வழங்கப்பட்ட பிணையங்களுக்கான குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுக் கட்டணங்கள்**

| நாட்டிற்கான தரமிடல் | குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணம் |
|---|---|
| AAA இருந்து AA- | 0% |
| A+ இருந்து BBB-<br>மற்றைய அனைத்தும் | 0.25% (இறுதி முதிர்ச்சியான 6 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான எஞ்சிய காலப்பகுதி)<br>.00% (24 மாதங்கள் உட்பட 6 மாதங்களுக்கும் அதற்குக் கூடுதலானதுமான இறுதி முதிர்ச்சிகளுக்கான எஞ்சிய காலப்பகுதி<br>1.60% (24 மாதங்கள் விஞ்சிய இறுதி முதிர்ச்சிக்கு எஞ்சியதாகவுள்ள காலப்பகுதி) |

(ii) வெளிநாட்டு அரசாங்கத்தினால் அல்லது வெளிநாட்டு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பிணையங்கள் கீழேயுள்ள அட்டவணை 1இல் காட்டப்பட்டுள்ளவாறான கொடுகடன் தரமிடலை அடிப்படையாகக் கொண்ட இடர்நேர்வு கட்டணத்திற்கு உட்பட்டிருக்கும்.

**தகுதி பெறுகின்ற வகை:**

(iii) கம்பனி நிறுவனங்களுக்கு கீழே அட்டவணை 2இல் காட்டப்பட்டவாறு அவற்றின் தரமிடலின் அடிப்படையில் குறித்துரைக்கப்பட்ட சந்தை இடர்நேர்வுகளுக்காக, இடர்நேர்வுக் கட்டணம் வழங்கப்படும்.

| அட்டவணை 2: கம்பனிகளுக்கான குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுக் கட்டணங்கள் | |
|---|---|
| **வெளிநாட்டு தரமிடல்** | **குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணம்** |
| AAA இருந்து AA- | 0.25% |
| A+ இருந்து BBB-<br>மற்றைய அனைத்தும் | 1.00% (இறுதி முதிர்ச்சியான 6 மாதங்கள் அல்லது அதற்கும் குறைவான எஞ்சிய காலப்பகுதி)<br>.60% (24 மாதங்கள் உட்பட 6 மாதங்களுக்கும் அதற்குக் கூடுதலானதுமான இறுதி முதிர்ச்சிகளுக்கான எஞ்சிய காலப்பகுதி<br>10.00% (24 மாதங்கள் விஞ்சிய இறுதி முதிர்ச்சிக்கு எஞ்சியதாகவுள்ள காலப்பகுதி) |

- வெளிநாட்டுக் கம்பனிகளுக்கான குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுக் கட்டணங்கள் உள்நாட்டுக் கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான இடர்நேர்வுகளிலும் பார்க்க ஒரு அளவுக் குறியீடு குறைவான சாதகமான தன்மையினைக் கொண்டிருக்கும்.

(iv) அரசதுறை நிறுவனங்கள் 0% மான இடர்நேர்வுக் கட்டணத்தை தேவைப்படுத்தும் வெளிப்படையான திறைசேரி உத்தரவாதங்களினால் ஆதரவளிக்கப்பட்டாலொழிய அந்நிறுவனங்கள் கம்பனி நிறுவனங்களாகவே கருதப்பட வேண்டும்.

**"ஏனைய" வகை:**

(v) மற்றைய அனைத்து வகை வெளிப்படுத்துகைகளுக்கும் 10% மான மூலதன விதிப்பு ஏற்புடைத்தாகும்.

**பொதுவான சந்தை இடர்நேர்வுகள்**

3.3.3 பொதுவான சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகள், சந்தை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து உருவாகின்ற இழப்பு இடர்நேர்வுகளையும் கொண்டிருக்கும் விதத்தில் வடிவமைக்கப் பட்டிருக்கிறது. பொதுவாக மூலதனக் கட்டணங்கள் நான்கு கூறுகளைக் கொண்டிருக்கும்.

(அ) முழுவர்த்தக ஏட்டிலும் காணப்படும் தேறிய குறுகிய அல்லது நீண்ட தன்மை;

(ஆ) ஒவ்வொரு நேர அளவிலும் ("நிலக்குத்தான அனுமதிக்கப்படாத படிகள்") காணப்படும் பொருந்தத்தக்க நிலைமை சிறு விகிதம்;

(இ) வேறுபட்ட நேர அளவு முழுவதிலும் ("நிலக்கிடையான அனுமதிக்கப்படாத படிகள்") பொருந்தத்தக்க நிலைமையின் சிறு விகிதம்; அத்துடன்

(ஈ) பொருத்தமானவிடத்து விருப்பார்வத்திலுள்ள நிலைமைகளுக்கான தேறிய கட்டணங்கள்.

குறிப்பு - கூறுகள் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்பன தற்பொழுது ஏற்புடைத்தாகாது.

3.3.4. இலங்கை வங்கிகள் உள்ளக இடர்நேர்வு முகாமைத்துவ மாதிரிகளை அபிவிருத்தி செய்வதில் இன்னமும் ஆரம்ப நிலையிலேயே உள்ளமையினால் ஆரம்பத்தில் தரப்படுத்தப்பட்ட அளவீட்டு முறையினைப் பின்பற்றுவதற்கு அனுமதிப்பதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தரப்படுத்தப்பட்ட அளவீடு முறையின் கீழ், சந்தை இடர்நேர்வுகளை அளவிடுவதற்கு இரண்டு முக்கிய முறைகள் அதாவது முதிர்ச்சி முறை மற்றும் கால அளவு முறை என்பன காணப்படுகின்றன. மூலதனக் கட்டணத்தினைக் கணிப்பதற்கு கால அளவு முறையினைப் பின்பற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, வர்த்தகப்படுத்தல் ஏட்டிலுள்ள ஒவ்வொரு சாதனத்தினதும் விலை உணர்வுத்தன்மையினை வெவ்வேறாகக் கணிப்பதன் மூலமும், அனுமதிக்கப்படாதபடி விடயங்கள் ஏதுமிருப்பின் அதற்கு உட்பட்ட விதத்தில் முதிர்ச்சி படிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட விலை உணர்வுகளிலிருந்து தோன்றுவதனைக் கூட்டுவதன் மூலமும் பொதுவான சந்தை இடர்நேர்வுக் கட்டணங்களை அளவிடுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

**கணிப்பதற்கான படிமுறைகள் பின்வருமாறு:**

(i) 1.2 மற்றும் 2.0 சதவீத புள்ளிகளுக்கிடையில் வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களின் நியதிகளில் ஒவ்வொரு சாதனத்தினதும் விலை உணர்வுகளை கணிப்பது சாதனங்களின் முதிர்ச்சித்தன்மையின் மீது (அட்டவணை 3இனைப் பார்க்கவும்) தங்கியிருக்கிறது;

(ii) அட்டவணை 3இல் எடுத்துக் காட்டப்பட்டவாறு பதினைந்து நேர பிரிவுகளுடன் கால அளவினை அடிப்படையாகக் கொண்ட முதிர்ச்சிப் படிமுறைக்கு விலை உணர்வுப் பெறுபேறுகளை பொருத்துதல்;

(iii) ஒவ்வொரு நேரப்பிரிவிலுமுள்ள நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய நிலைமைகள் நிலக்குத்தான அனுமதிக்கப்படாத படிகளின் 5 சதவீதத்திற்கு உட்பட்ட விதத்தில் அடிப்படை இடர்நேர்வுகளை கையேற்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது; அத்துடன்

(iv) அட்டவணை 4இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ள அனுமதிக்கப்படாத படிக்குட்பட்டு கிடையான எதிரீடுகளுக்காக ஒவ்வொரு நேரப்பிரிவிலும் தேறிய நிலைமையினை முன்னோக்கி கொண்டு செல்லல்.

குறிப்பு - மேலே 3.3.3 பந்தியின் கீழ் உள்ள (ஆ), (இ) மற்றும் (உ) இலுள்ள கூறுகள் தற்பொழுது பிரயோகிக்கப்படாமையினால் படிமுறை (ii) இலிருந்து (iv) வரையான படிமுறைகள் தற்பொழுது தேவைப்படுத்தப்படவில்லை.

**அட்டவணை 3**

**காலப்பகுதி முறை - நேரப்பிரிவும் விளைவில் எடுகோள் கொள்ளப்பட்ட மாற்றங்களும்**

| நேரப்பிரிவு | விளைவில் ஊகிக்கப்படும் மாற்றங்கள் |
|---|---|
| **முதிர்ச்சி வலையம் - 1** | |
| 1 மாதம் அல்லது குறைவாக | 2.00 |
| 1 மாதத்திற்கு மேல் 3 மாதங்கள் வரை | 2.00 |
| 3 மாதங்களுக்கு மேல் 6 மாதங்கள் வரை | 2.00 |
| 6 மாதங்களுக்கு மேல் 12 மாதங்கள் வரை | 2.00 |
| **முதிர்ச்சி வலையம் - 2** | |
| 1.0 ஆண்டிற்கு மேல் 1.9 ஆண்டுகள் வரை | 1.80 |
| 1.9 ஆண்டுகளுக்கு மேல் 2.8 ஆண்டுகள் வரை | 1.60 |
| 2.8 ஆண்டுகளுக்கு மேல் 3.6 ஆண்டுகள் வரை | 1.50 |
| **முதிர்ச்சி வலையம் - 3** | |
| 3.6 ஆண்டுகளுக்கு மேல் 4.3 ஆண்டுகள் வரை | 1.50 |
| 4.3 ஆண்டுகளுக்கு மேல் 5.7 ஆண்டுகள் வரை | 1.40 |
| 5.7 ஆண்டுகளுக்கு மேல் 7.3 ஆண்டுகள் வரை | 1.30 |
| 7.3 ஆண்டுகளுக்கு மேல் 9.3 ஆண்டுகள் வரை | 1.20 |
| 9.3 ஆண்டுகளுக்கு மேல் 10.6 ஆண்டுகள் வரை | 1.20 |
| 10.6 ஆண்டுகளுக்கு மேல் 12 ஆண்டுகள் வரை | 1.20 |
| 12 ஆண்டுகளுக்கு மேல் 20 ஆண்டுகள் வரை | 1.20 |
| 20 ஆண்டுகளுக்கு மேல் | 1.20 |

**அட்டவணை 4**

**கிடையான அனுமதிக்கப்படாதபடிகள்**

<table>
<tr><th>முதிர்ச்சி வலையம்</th><th>நேரப்பிரிவு</th><th>வலையங்களுக்குள்</th><th>அடுத்தடுத்துள்ள வலையங்களுக் கிடையில்</th><th>வலையம் 1 மற்றும் 3 இற்கிடையில்</th></tr>
<tr><td rowspan="4">முதிர்ச்சி வலையம் - 1</td><td>1 மாதம் அல்லது குறைவாக</td><td rowspan="4">40%</td><td rowspan="7">40%</td><td rowspan="15">100%</td></tr>
<tr><td>1 மாதத்திற்கு மேல் 3 மாதங்கள் வரை</td></tr>
<tr><td>3 மாதங்களுக்கு மேல் 6 மாதங்கள் வரை</td></tr>
<tr><td>6 மாதங்களுக்கு மேல் 12 மாதங்கள் வரை</td></tr>
<tr><td rowspan="3">முதிர்ச்சி வலையம் - 2</td><td>1.0 ஆண்டிற்கு மேல் 1.9 ஆண்டுகள் வரை</td><td rowspan="3">30%</td></tr>
<tr><td>1.9 ஆண்டுகளுக்கு மேல் 2.8 ஆண்டுகள் வரை</td></tr>
<tr><td>2.8 ஆண்டுகளுக்கு மேல் 3.6 ஆண்டுகள் வரை</td></tr>
<tr><td rowspan="8">முதிர்ச்சி வலையம் - 3</td><td>3.6 ஆண்டுகளுக்கு மேல் 4.3 ஆண்டுகள் வரை</td><td rowspan="8">30%</td><td rowspan="8">40%</td></tr>
<tr><td>4.3 ஆண்டுகளுக்கு மேல் 5.7 ஆண்டுகள் வரை</td></tr>
<tr><td>5.7 ஆண்டுகளுக்கு மேல் 7.3 ஆண்டுகள் வரை</td></tr>
<tr><td>7.3 ஆண்டுகளுக்கு மேல் 9.3 ஆண்டுகள் வரை</td></tr>
<tr><td>9.3 ஆண்டுகளுக்கு மேல் 10.6 ஆண்டுகள் வரை</td></tr>
<tr><td>10.6 ஆண்டுகளுக்கு மேல் 12 ஆண்டுகள் வரை</td></tr>
<tr><td>12 ஆண்டுகளுக்கு மேல் 20 ஆண்டுகள் வரை</td></tr>
<tr><td>20 ஆண்டுகளுக்கு மேல்</td></tr>
</table>

**வட்டிவீத பெறுதிகளுக்கான மூலதனக் கட்டணம்**

3.3.5 வட்டிவீத பெறுதிகளுக்கான மூலதனக் கட்டணம் சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணத்திலிருந்து தற்பொழுது நீக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

**4. பங்குகளுக்கான மூலதனக் கட்டணத்தினை அளவிடல்**

4.1 வர்த்தகப்படுத்தல் ஏட்டில் பங்குகளை வைத்திருத்தல் அல்லது கையேற்பதுடன் தொடர்பான இடர்நேர்வினை உள்ளடக்குவதற்கான ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன. பங்குகளைப் போன்று சந்தை நடவடிக்கைகளை எடுத்துக் காட்டும் அனைத்து சாதனங்களுக்கும் இது ஏற்புடைத்தாகும். உள்ளடக்கப்பட்டுள்ள சாதனங்கள் பங்குகள் (வாக்குள்ள மற்றும் வாக்கற்ற) பங்குகளைப் போன்று நடத்தையைக் கொண்ட மாற்றத்தக்க பிணையங்கள் (உ-ம்: நம்பிக்கைக் கூறுகளின் அலகுகள்) மற்றும் பங்கு பிணையங்களை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கான (உ-ம்: உத்தரவாதங்கள், உரிமம் வழங்கல் மற்றும் மிகை இலாப வழங்கல்கள்) கடப்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

**குறித்துரைக்கப்பட்ட மற்றும் பொதுவான சந்தை இடர்நேர்வுகள்**

4.1.1 குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வு என்பது வங்கியின் மொத்த பங்குகளின் நிலைமை என வரைவிலக்கணம் (அதாவது அனைத்து நேர்க்கணிய பங்குடமை நிலைமைகள் மற்றும் அனைத்து எதிர்க்கணிய பங்குடமை நிலைமைகள்) செய்யப்படுகின்றது. மிலங்கா விலைச்சுட்டெண் மீதான பங்குகளுக்கான குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணம் 5% ஆக இருக்கும் வேளையில் மற்றைய அனைத்து பங்குகளும் 10% ஆக குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுக் கட்டணங்களைக் கொண்டிருக்கும்.

4.1.2 பொதுவான சந்தை இடர்நேர்வு என்பது பங்குச் சந்தையொன்றிற்கான திரண்ட தேறிய நிலைமை (அதாவது நேர்க்கணிய தொகைக்கும் எதிர்க்கணிய தொகைக்குமிடையான வேறுபாடு) என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. பொதுவான சந்தை இடர்நேர்வுக் கட்டணம் 10% ஆக இருக்கும்.

**5. வெளிநாட்டுச் செலாவணி மற்றும் தங்க ஆரம்ப நிலைமைகளுக்கான மூலதனக் கட்டணத்தினை அளவிடல்**

5.1 இப்பிரிவானது, தங்கம் உட்பட வெளிநாட்டு நாணயங்களை வைத்திருத்தல் அல்லது நிலைமைகளைக் கையேற்றல் தொடர்பான இடர்நேர்வுகளை உள்ளடக்குவதற்கான ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளை குறிப்பிடுகிறது. தங்கமானது ஒரு பண்டமாகக் கருதப்படாது வெளிநாட்டுச் செலாவணி நிலைமையாகவே கருதப்படுகிறது. ஏனெனில் இதன் தளம்பல்கள் வெளிநாட்டு நாணயங்களின் தளம்பல்களுடன் பெருமளவிற்கு ஒத்திருந்த தன்மையும் வங்கிகள் அதே விதத்தில் அதனை முகாமைப்படுத்துவதுமேயாகும்.

5.2 வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணத்தினை கணிப்பதில் முன்னோக்கிய உடன்படிக்கைகளும் உள்ளடக்கப்படும்.

5.3 வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகளின் கணிப்பு இரு செயல்முறைகளை உள்ளடக்கியுள்ளது.

5.3.1 வெளிப்படுத்துகையினை தனியொரு நாணய நிலைமையில் அளவிடுவது

ஒவ்வொரு நாணயத்திலும் வங்கியின் தேறிய ஆரம்ப நிலைமையானது ஐந்தொகையிலுள்ள தேறிய நிலைமையிலுள்ள அனைத்தையும் கூட்டுவதன் மூலம் கணிக்கப்படுவதுடன் முன்னோக்கி ஒப்பந்தம் குறிப்பிட்ட நாணயத்திலேயே குறித்துரைக்கப்படும்.

5.3.2 வேறுபட்ட நாணயங்களிலுள்ள நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய நிலைமைகள் கலந்த தன்மையினைக் கொண்டுள்ள வங்கிகளில் இயல்பாகவே காணப்படும் இடர்நேர்வுகளை அளவிடல்

கணிப்பிடலில் குறுகிய வழிமுறையொன்றினைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. இக்குறுகிய வழிமுறைகளின் கீழ், ஒவ்வொரு வெளிநாட்டு நாணயத்திலும், தங்கத்திலும் உள்ள தேறிய நிலைமையின் பெயரளவு தொகையானது அறிக்கையிடும் நாணயத்திற்கு (அதாவது இலங்கை ரூபாவிற்கு) மாற்றப்படுகிறது. திரண்ட தேறிய ஆரம்ப நிலைமை பின்வருவனவற்றைக் கூட்டுவதன் மூலம் அளவிடப்படுகிறது.

* தேறிய எதிர்க்கணிய நிலைமைகளின் தொகை அல்லது தேறிய நேர்க்கணிய நிலைமைகளின் தொகை இதில் எது பெரியதோ அதனையும்
* அடையாளங்களை பொருட்படுத்தாத விதத்தில் தங்கத்தின் தேறிய நிலைமையினையும் (எதிர்க்கணிய அல்லது நேர்க்கணிய) கூட்டுவதன் மூலம்

மூலதனக் கட்டணம் வெளிநாட்டு நாணயம் மற்றும் தங்கத்தின் திரண்ட தேறிய ஆரம்ப நிலைமையின் 10% ஆக இருக்கும்.

**அட்டவணை 6**

**வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளை குறுகிய முறையில் அளவிடுவதற்கான உதாரணம்**

| யென் | யூரோ | பவுண் | இந்தியன் ரூபாய் | ஐ.அ.டொலர் | தங்கம் |
|---|---|---|---|---|---|
| + 50 | +100 | +150 | - 20 | -180 | - 35 |
| + 300 | | | - 200 | | 35 |

மேலேயுள்ள உதாரணத்தில், மூலதனக் கட்டணமானது தேறிய நேர்க்கணிய நாணய நிலைமைகள் அல்லது தேறிய எதிர்க்கணிய நாணய நிலைமைகள் (அதாவது 300) மற்றும் தங்கத்தின் தேறிய நிலைமை (35) = 335 x 10% = 33.5.

**6. சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணத்தின் கூட்டு மொத்தம்**

6.1 குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வு மற்றும் பொதுவான சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணங்கள் கூட்டப்படுவதற்கு முன்னர் வேறுவேறாகக் கணிக்கப்படவேண்டும். சந்தை இடர்நேர்வுகளுக்கான மொத்த மூலதனக் கட்டணங்களைக் கணிப்பதற்கு படிவம் 4இல் உள்ள படிவ முறையினைப் பயன்படுத்தவும்.

**7. மூலதனத்தின் வரைவிலக்கணம்**

7.1 சந்தை இடர்நேர்வுகளை உள்ளடக்குவதற்கான தகைமையுடைய மூலதனத்தின் பிரதான வடிவமானது, 2001 திசெம்பர் 27ஆம் நாளன்று இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவது தொடர்பான அறிவித்தலில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, மைய மூலதனத்தினையும் (அடுக்கு 1 மூலதனம்), துணை நிரப்பு மூலதனத்தினையும் (அடுக்கு 2 மூலதனம்) உள்ளடக்குகிறது. சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகளின் ஒரு பகுதியினை ஈடுசெய்யும் ஒரே நோக்கத்திற்காக பின்வரும் நிலைமைகளுக்குட்பட்டு, கீழே பந்தி 7.2 இல் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, குறுங்கால துணைப்படுகடனை உள்ளடக்குகின்ற மூன்றாவது அடுக்கு மூலதனமொன்றினைப் பேணுவதற்கும் (அடுக்கு 3) வங்கிகள் அனுமதிக்கப்பட்டன.

* இப்பணிப்புரையின் 1ஆம் பந்தியில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு சந்தை இடர்நேர்வுகளுக்கு உதவுவதற்கு மட்டுமே அடுக்கு 3 மூலதனத்தினைப் பயன்படுத்த வங்கிகள் உரித்துடையனவாக இருக்கும். இதன் கருத்துயாதெனில், கொடுகடன் இடர்நேர்வு தொடர்பாக எழும் எந்த ஒரு மூலதனத் தேவைப்பாடும் தற்பொழுதுள்ள மூலதனத்தின் வரைவிலக்கணத்தினைப் பூர்த்தி செய்தல் வேண்டும் என்பதேயாகும் (அதாவது அடுக்குகள் 1 மற்றும் 2 உம் அதனைத் தொடர்ந்து அனைத்து அவசிய சீராக்கங்களும்)

* அடுக்கு 3 மூலதனமானது சந்தை இடர்நேர்வுகளுக்காகக் கிடைக்கத்தக்கதாகவுள்ள வங்கியின் அடுக்கு 1/ மூலதனத்தின் 250% சதவீதத்திற்கு வரையறுக்கப்பட்டிருக்கும்.

* சந்தை இடர்நேர்வுகளில் குறைந்தது ஏறத்தாள 28% சந்தை இடர்நேர்வுகளுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள அடுக்கு 1 மூலதனத்தினால் ஆதரவளிக்கப்பட வேண்டும்.

* இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவதன் மீதான அறிவித்தலில் இதுவரை பொதுவான வரையறையே குறிப்பிடப்பட்டிருப்பது இதுவரை மீறப்படாதிருப்பதனால் அதாவது தகைமையுடைய அடுக்கு 2 மூலதனம் மொத்த அடுக்கு 1 மூலதனத்தினை விஞ்சாதிருக்குமென்பதனாலும் நீண்ட கால துணைப்படுகடன் அடுக்கு 1 மூலதனத்தின் 50% இனை விஞ்சாது இருக்குமென்பதனாலும் அடுக்கு 2 மூலங்கள் அடுக்கு 3 இற்கு அதே வரையான 250% இற்கு பதிலீடாக இருக்க முடியும்.

* மேலும், அடுக்கு 1 மூலதனம் தகுதியான மொத்த மூலதனத்தில் குறைந்தது அரைப் பங்கினையாவது கொண்டிருத்தல் வேண்டும், அதாவது அடுக்கு 2 மற்றும் அடுக்கு 3 இன்னும் மொத்தக் கூட்டுத்தொகை அடுக்கு 1இன் மொத்தத்தினை விஞ்சக் கூடாது.

* தகுதியான அடுக்கு 3 மூலதனத்தினை தீர்மானிக்கும் நோக்கத்திற்காக அடுக்கு 1 மூலதனத்தின் மட்டத்தினை தீர்மானிப்பதில், மொத்த மூலதனத்தளத்தினை பெறுவதற்குத் தேவையான அனைத்து சீராக்கங்களும் (இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினை பேணுவது தொடர்பான அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டவாறு) பரிசீலனைக்கு எடுக்கப்படவேண்டும்.

7.2 குறுங்கால துணைப்படுகடன் அடுக்கு 3 மூலதனமாகத் தன்மை பெறுவதற்கு, சூழ்நிலை தேவைப்படுத்துமாயின், இது வங்கியின் நிரந்தர மூலதனத்தின் ஒரு பகுதியாக மாறுவதற்கான இயலாற்றலைப் பெறும் தேவை காணப்படுவதுடன் இதன் மூலம் கடனிறுக்க வகையற்ற சந்தர்ப்பத்தில் இழப்புக்களை ஈர்த்துக் கொள்ள இது கிடைக்கத்தக்கதாக இருக்கும். ஆகவே இது மிகக் குறைந்தது:

* பிணையிடப்படாததாகவும், துணையானதாகவும் முழுமையாகச் செலுத்தப்பட்டதாகவும்

* குறைந்தது ஆரம்பத்தில் இரண்டாண்டு முதிர்ச்சியினைக் கொண்டதாகவும்

* இலங்கை மத்திய வங்கியின் முன் சம்மதத்தினைப் பெற்றிருந்தாலொழிய உடன்பட்ட மீள் கொடுப்பனவுகளுக்கு முதல் மீள்கொடுப்பனவு செய்ய முடியாததாகவும் இருத்தல் வேண்டும்.

**8. மூலதன விகிதத்தினைக் கணித்தல்**

8.1 கொடுகடன் மற்றும் சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனத் தேவைப்பாடுகளின் கணிப்பில் நிலையான தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, தெளிவான எண்ணியல் தொடர்பானது சந்தை இடர்நேர்வுகளின் அளவீட்டினை 10 இனால் பெருக்குவதன் (அதாவது 10% மான ஆகக் குறைந்த மூலதன விகிதத்தின் பெருக்குகள்) கொடுகடன் இடர்நேர்வுகளுக்காக திரட்டப்பட்ட இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் தொகைக்கான பெறுபேற்று எண்தொகையினைக் கூட்டுவதன் மூலமும் உருவாக்கப்படும். விகிதமானது இரண்டினது கூட்டுத்தொகையினை தகைமையுடைய மூலதனத்தினை மட்டும் பயன்படுத்தி வகுப்பதன் மூலம் கணிக்கப்படும்.

8.2 தகைமையுடைய மூலதனத்தினைக் கணிப்பதில், கொடுகடன் இடர்நேர்விற்கான வங்கியின் ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாட்டினைக் கணிப்பது முதலில் அவசியமானதாகும். அதன் பின்னர் சந்தை இடர்நேர்வுகளுக்கு உதவியளிப்பதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள அடுக்கு 1 மற்றும் அடுக்கு 2 மூலதனங்கள் எவ்வளவு உள்ளன என்பதனை கண்டறிவதற்கான சந்தை இடர்நேர்வுத் தேவைப்பாடு முக்கியமானதாகக் காணப்படுகிறது. தகைமையுடைய மூலதனமானது, இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினை பேணுவது தொடர்பான அறிவித்தலில் விதிக்கப்பட்ட வரையறையின் கீழ் வங்கியின் அடுக்கு 1 மூலதனத்தினையும் அடுக்கு 2 மூலதனத்தினையும் கூட்டிய முழுத்தொகையாக இருக்கும். அடுக்கு 3 மூலதனமானது மேலேயுள்ள பந்திகள் 7.1 மற்றும் 7.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் சந்தை இடர்நேர்வுகளுக்குப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் பட்சத்தில் மட்டுமே தகைமையுடைய மூலதனமாகப் பயன்படுத்தப்படும். எனவே அறிவிக்கப்பட்ட மூலதன விகிதமானது, கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு ஆகிய இரண்டினையும் ஈடுசெய்வதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலதனத்தினைக் காட்டுகின்றது.

படிவம் 1: ஐந்தொகையிலுள்ள விடயங்கள்

**இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் மீதான கூற்று**
**இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களைக் கணித்தல்**

**காலாண்டு/ ஆண்டுக் கூற்றுக்கள்**

**நிறுவனத்தின் பெயர்: ..............................................................** **............. அன்று உள்ளவாறு**

1) எமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை இக்கூற்று சரியானது எனவும்;

அத்துடன்

3) ஆய்விற்குரிய காலாண்டில் ஆண்டில் எந்த ஒரு நேரத்திலும் மூலதனப் போதுமை விகிதமானது, 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மற்றும் 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 19(7)இன் நியதிகளில் நிர்ணயிக்கப்பட்ட அளவிலும் பார்க்கக் குறைவாக இருக்கவில்லை என்பதனையும் நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

| | |
|---|---|
| ............................................................ | ............................................................ |
| முதன்மைக் கணக்காளர்/ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் | முதன்மை நிறைவேற்று அலுவலர் |
| ............................................................ | ............................................................ |
| பெயர் | பெயர் |
| திகதி : ........................................ | திகதி : ........................................ |

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

**(ஐந்தொகையிலுள்ள விடயங்கள்)**

**நிறுவனத்தின் பெயர்: ..............................................................** ................... **அன்று உள்ளவாறு**

**(ஆயிரம் ரூபாய்களில்)**

| குறியீடு | சொத்துக்கள் | ஐந்தொகை விடயங்களின் முதல்தொகை | ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்களுக்கு சமமான கொடுகடன் | மொத்தம் X | இடர்நோர்வு நிறை = | இடர்நோர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | காசு - உள்நாட்டு | | | 0 | 0% | 0 |
| | - வெளிநாட்டு நாணயம் | | | 0 | 0% | 0 |
| 2 | தங்கம் மற்றும் தங்கக்கட்டிகள் | | | 0 | 0% | 0 |
| 3 | இலங்கை மத்திய வங்கியிலிருந்து வரவேண்டியவை | | | 0 | 0% | 0 |
| 4 | இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள் | | | 0 | 0% | 0 |
| 5 | இலங்கை அரச/ மத்திய வங்கிப் பிணையங்கள் | | | 0 | 0% | 0 |
| 6 | இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்ட ஏனைய பிணையங்கள் | | | | | |
| 7 | **கடன்களும் முற்பணங்களும் ***  | | | | | |
| 7.01 | காசு வைப்புக்கள்/ தங்கத்திற்கு எதிரானவை | | | 0 | 0% | 0 |
| 7.02 | இலங்கை அரச உத்தரவாதங்கள்/ பிணையங்களுக்கு எதிரானவை | | | 0 | 0% | 0 |
| 7.03 | இலங்கை மத்திய வங்கியினால் உத்தரவாதமளிக்கப்பட்டவை | | | 0 | 0% | 0 |
| 7.04 | ஊழியர் சேம நிலுவைகளினால் பிணையிடப்பட்ட அலுவலர் கடன்கள் | | | 0 | 0% | 0 |
| 7.05 | பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு, மத்திய அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியினால் உத்தரவாதமளிக்கப்பட்டவை | | | 0 | 10% | 0 |
| 7.06 | பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு அல்லாத, அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியினால் உத்தரவாதமளிக்கப்பட்டவை | | | 0 | 20% | 0 |
| 7.07 | ஓராண்டு வரையான முதிர்ச்சியுடன் உள்நாட்டு/ வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் மற்றும் உள்நாட்டு/ வெளிநாட்டு அபிவிருத்தி நிதியியல் நிறுவனங்கள் என்பனவற்றின் உத்தரவாதங்கள் | | | 0 | 20% | 0 |
| 7.08 | பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் | | | 0 | 20% | 0 |
| 7.09 | இலங்கை ஏற்றுமதிக் காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் | | | 0 | 50% | 0 |
| 7.10 | வதிவிட சொத்துக்களின் மீதான ஆரம்ப ஈட்டின் மூலம் பிணையிடப்பட்டவை | | | 0 | 50% | 0 |
| 7.11 | ஏனைய கடன்களும் முற்பணங்களும் | | | 0 | 100% | 0 |
| 8 | வெளிநாட்டிலுள்ள கிளைகளிலிருந்து வரவேண்டியவை | | | 0 | 0% | 0 |
| 9 | வெளிநாட்டிலுள்ள வங்கிகளிலிருந்து வரவேண்டியவை | | | 0 | 20% | 0 |
| 10 | அபிவிருத்தி நிறுவனங்கள் உட்பட உள்நாட்டு வங்கிகளிலிருந்து வரவேண்டியவை | | | 0 | 20% | 0 |
| 11 | வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து வரவேண்டியவை ** | | | 0 | 10% | 0 |
| 12 | சேகரிப்பு கையிலுள்ள காசு விடயங்கள் | | | 0 | 20% | 0 |
| 13 | ஏனைய முதலீடுகள் (மொத்த மூலதனத்திலிருந்து கழிக்கப்பட்ட விடயங்கள் நீங்கலாக) | | | 0 | 100% | 0 |
| 14 | நிலையான சொத்துக்கள் | | | 0 | 100% | 0 |
| 15 | ஏனைய சொத்துக்கள் | | | 0 | 100% | 0 |
| 16 | **மொத்த இடர்நோர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்** | | | | | |
| | | 0 | 0 | 0 | | 0 |

குறிப்பு - * கடன்களும் முற்பணங்களும் குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கங்கள் மற்றும் தொங்கலிலுள்ள வட்டி என்பனவற்றைக் கழித்தனவாக இருத்தல் வேண்டும்.

** உள்ளூரில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மட்டும் ஏற்புடைத்தாகும்.

படிவம் 2: ஐந்தொகைக்கு வெளியிலுள்ள விடயங்கள்

## இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் கணிப்பு

**(ஐந்தொகைக்கு வெளியிலுள்ள விடயங்கள்)**

**நிறுவனத்தின் பெயர்: ..............................................................** **.................. அன்று உள்ளவாறு**

**(ஆயிரம் ரூபாய்களில்)**

| குறியீடு | சொத்துக்கள் | ஐந்தொகைக்கு வெளியிலுள்ள விடயங்களின் முதல்தொகை | X | கொடுகடன் மாற்றல் காரணி | = | ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்களின் கொடுகடனுக்குச் சமமானது |
|---|---|---|---|---|---|---|
| 17 | நேரடி கொடுகடன் பதிலீடுகள் | | | 100% | | |
| 17.1 | படுகடன்களின் பொதுவான உத்தரவாதங்கள் | | | | | 0 |
| 17.2 | நிதியியல் உத்தரவாதங்களாக துணைநில் நாணயக்கடிதங்கள் தொழிற்படல் | | | | | 0 |
| 17.3 | வங்கி ஏற்புகள் | | | | | 0 |
| 17.4 | ஏனையவை | | | | | 0 |
| 18 | எதிர்பாராதவற்றுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் | | | 50% | | |
| 18.1 | செயலாற்றும் முறிகள், கோரல் முறிகள் மற்றும் உத்தரவாதம் | | | | | 0 |
| 18.2 | குறிப்பிட்ட வாங்கல்களுடன் தொடர்பான துணைநில் நாணயக்கடிதம் | | | | | 0 |
| 18.3 | ஏனையவை | | | | | 0 |
| 19 | குறுங்கால சுய ஒடுக்குதல் வர்த்தக தொடர்புபட்ட எதிர்பாரா விடயங்கள் | | | 20% | | |
| 19.1 | கப்பற்படுத்தல் உத்தரவாதங்கள் | | | | | 0 |
| 19.2 | நாணயக்கடித ஆவணங்கள் | | | | | 0 |
| 19.3 | வர்த்தகத்துடன் தொடர்பான ஏற்புக்கள் | | | | | 0 |
| 19.4 | ஏனையவை | | | | | 0 |
| 20 | விற்பனை, மீள்கொள்வனவு உடன்படிக்கை மற்றும் வங்கியில் கொடுகடன் இடர்நேர்வு காணப்படுமிடத்தினை நாடும் சொத்து விற்பனை | | | 100% | | |
| 20.1 | விற்பனை மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் | | | | | 0 |
| 20.2 | துணையுடன் விற்கப்பட்ட வீடமைப்புக் கடன்கள் | | | | | 0 |
| 20.3 | துணையுடன் விற்கப்பட்ட ஏனைய சொத்துக்கள் | | | | | 0 |
| 20.4 | முன்னோக்கிய சொத்துக் கொள்வனவுகள் | | | | | 0 |
| 20.5 | பகுதியளவில் கொடுப்பனவு செய்யப்பட்ட பங்குகள்/ பிணையங்கள் | | | | | 0 |
| 20.6 | ஏனையவை | | | | | 0 |
| 21 | தற்போதுள்ள பொறுப்பேற்கப்பட்ட உடன்படிக்கையின் கீழான கடப்பாடுகள் | | | 50% | | |
| 21.1 | பொறுப்பேற்கப்பட்ட பங்குகள்/ பிணையங்களின் வழங்கல் | | | | | 0 |
| 21.2 | சான்றிதழ் வழங்கல் வசதி மற்றும் மீளப்பயன்படுத்தத்தக்க பொறுப்பேற்பு வசதிகள் | | | | | 0 |
| 21.3 | ஏனையவை | | | | | 0 |
| 22 | ஓராண்டு வரையான ஆரம்ப முதிர்ச்சியுடன் கூடிய அல்லது எந்த நேரத்திலும் நிபந்தனை எதுவுமின்றி இரத்துச் செய்யப்படக்கூடிய ஏனைய கடப்பாடுகள் | | | 0% | | |
| 22.1 | வழமையான துணைநில் வசதிகள் மற்றும் தொடர்க் கொடுகடன்கள் | | | | | 0 |
| 22.2 | எடுப்பனவு செய்யப்படாத தவணைக் கடன்கள் | | | | | 0 |
| 22.3 | எடுப்பனவு செய்யப்படாத மேலதிகப் பற்று வசதிகள் | | | | | 0 |
| 22.4 | ஏனையவை | | | | | 0 |
| 23 | ஓராண்டிற்கும் மேலான ஆரம்ப முதிர்ச்சியுடன் கூடிய ஏனைய கடப்பாடுகள் | | | 50% | | |
| 23.1 | வழமையான துணைநில் வசதிகள் மற்றும் தொடர்க் கொடுகடன்கள் | | | | | 0 |
| 23.2 | எடுப்பனவு செய்யப்படாத தவணைக்கடன்கள் | | | | | 0 |
| 23.3 | ஏனையவை (தயவு செய்து குறிப்பிடவும்) | | | | | 0 |
| 24 | வெளிநாட்டுச் செலாவணி மற்றும் வட்டிவீத ஒப்பந்தங்கள் * | | | | | |
| | : வங்கி | | | | | 0 |
| | : வாடிக்கையாளர் | | | | | 0 |
| 25 | **மொத்தம்** | 0 | | | | 0 |

குறிப்பு - ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்கள் மீதான வெளிப்படுத்துகை இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதத்தின் கணிப்பில் உள்ளடக்கப்படும் ஒவ்வொரு ஐந்தொகைக்கும் வெளியேயுள்ள விடயங்களுடன் சேர்ந்துள்ள கொடுகடன் இடர்நேர்வுகளின் மாற்றம் முதல் தொகையினை கொடுகடன் மாற்றல் காரணியினால் பெருக்குவதன் மூலம் ஐந்தொகை கொடுகடனுக்குச் சமமான தொகையொன்றுக்கு மாற்றப்படும் கொடுகடன் சமமான தொகையானது. தொடர்பான சொத்து விடயங்களின் தன்மைக்கேற்ப நிறைவேற்றப்படும்.

* மாற்றல் காரணிகளுக்கு தயவுசெய்து வழிகாட்டல்களைப் பார்க்கவும்

படிவம் 3: மூலதன மூலங்கள்

## இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் மீதான கூற்று
## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மூலதனத்தளம்

(ஐந்தொகைக்கு வெளியிலுள்ள விடயங்கள்)

**நிறுவனத்தின் பெயர்: ............................................................ .................. அன்று உள்ளவாறு**

**(ஆயிரம் ரூபாய்களில்)**

| குறியீடு | மூலதனத்தின் அமைப்பு | தொகை |
|---|---|---|
| | ***அடுக்கு 1: மைய மூலதனம்*** | |
| 26 | செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள்/ பொதுவான இருப்பு/ ஒப்படைக்கப்பட்ட மூலதனம் ++ | |
| 27 | ஒன்று திரளாத, மீட்கப்பட முடியாத முன்னுரிமைப்பங்குகள் | |
| 28 | பங்கு வட்டம் | |
| 29 | நியதி ஒதுக்கு நிதியம் | |
| 30 | வெளியிடப்பட்ட பிடித்து வைக்கப்பட்ட இலாபம் /(ஒன்று சேர்ந்த இழப்புக்கள்) | |
| 31 | பொதுவான மற்றும் ஏனைய ஒதுக்குகள் | |
| 32 | நிலையான மற்றும் நீண்ட கால முதலீடுகளின் விற்பனையிலிருந்து தோன்றிய வரிக்குப் பின்னரான மிகை/ இழப்பு | |
| 33 | வெளியிடப்படாத நடைமுறை ஆண்டின் இலாபம்/ நட்டம் | |
| 34 | சிறுபான்மை வட்டிகள் (மேலேயுள்ள மூலதன அமைப்புடன் இணங்கப்பட்டது) | |
| 35 | **துணை மொத்தம்** | 0 |
| | கழிவுகள் | |
| 36 | நன்மதிப்பு | 0 |
| 37 | **மொத்த அடுக்கு 1 மூலதனம்** | 0 |
| ++ | பொருத்தமற்றவற்றை வெட்டி விடவும் | |
| | ***அடுக்கு 2: துணைநிரப்பு மூலதனம்*** | |
| 38 | மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் (இ.ம.வங்கியின் ஒப்புதலளிக்கப்பட்டது) | |
| 39 | பொதுவான ஒதுக்கங்கள் | |
| 40 | கலந்த (படுகடன்/ பங்கு) மூலதனச் சாதனங்கள் | |
| 41 | துணை நிறுவனங்களினால் வழங்கப்பட்ட முன்னுரிமைப்பங்குகளிலிருந்து கிடைத்த சிறுபான்மை வட்டிகள் | |
| 42 | * ஒப்புதலளிக்கப்பட்ட துணைநிலை நியதிப்படுகடன் (உண்மையான தொகை ரூ. .................) | |
| 43 | **மொத்த அடுக்கு 2 மூலதனம்** | 0 |
| 44 | **தகைமையுடைய அடுக்கு 2 மூலதனம்** | |
| 45 | **மொத்த மூலதனம்** | 0 |
| 46 | சீராக்கம் I **sssssss | 0 |
| 46.1 | இலங்கை ரூபாவில் இலங்கைக்கு வெளியிலுள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளிலிருந்து வரவேண்டிய தொகை | |
| 46.2 | கழிக்குக: இலங்கை ரூபாவில் இலங்கைக்கு வெளியிலுள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளிலிருந்து வரவேண்டிய தொகை | |
| 47 | **சீராக்கங்களின் பின்னர் மொத்த மூலதனம் I **** | 0 |
| 48 | சீராக்கம் II ** | |
| 48.1 | வெளிநாட்டு நாணயத்தில் இலங்கைக்கு வெளியிலுள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளிலிருந்து வரவேண்டிய தொகை | |
| 48.2 | அதன் சொந்த வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து வரவேண்டிய தொகை | |
| 48.3 | கழிக்குக: வெளிநாட்டு நாணயத்தில் இலங்கைக்கு வெளியிலுள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளிலிருந்து வரவேண்டிய தொகை | |
| 48.4 | அதன் சொந்த வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து வரவேண்டிய தொகை | |
| 49 | துணை மொத்தம் | 0 |
| 50 | **சீராக்கப்பட்ட மொத்த மூலதனம் **** | 0 |
| 51 | கழிவுகள் | 0 |
| 51.1 | திரட்டப்படாத வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துணை நிறுவனங்களிலுள்ள பங்கு முதலீடுகள் | |
| 51.2 | மற்றைய வங்கிகள் நிதியியல் துணை அமைப்புக்களின் மூலதனத்தில் முதலீடுகள் | |
| 52 | **மூலதனத்தளம்** | 0 |

* வரிகள் 46இலிருந்து 50 வரையான நிரல்கள் வெளிநாட்டு வங்கிக் கிளைகளுக்கு மாத்திரமே பொருந்தும்

** வரையறைகள்: i) ஒப்புதலளிக்கப்பட்ட துணைநிலை நியதிப்படுகடன் மொத்த அடுக்கு 1 மூலதனத்தின் 50% இல் மட்டுப்படுத்தப்பட்டது. (துணைநிலைப்படுகடன் உண்மையான தொகை குறிப்பிடப்பட வேண்டும்.)

ii) அடுக்கு 2 துணை நிரப்பு மூலங்களின் மொத்தம் அடுக்கு 1 மூலங்களின் ஆகக்கூடியது 100% இனை விஞ்சக்கூடாது.

iii) மொத்த ஒதுக்கானது இடர்நேர்வுநிறையேற்றப்பட்ட சொத்துக்களில் 1.25% இனை விஞ்சக்கூடாது.

படிவம் 4: சந்தை இடர்நேர்வு

# இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் மீதான கூற்று உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனக்கட்டணத்தைக் கணித்தல்

**நிறுவனத்தின் பெயர்:** ................................................................ .................... **அன்று உள்ளவாறு**

**(ஆயிரம் ரூபாய்களில்)**

| குறியீடு | இடர்நேர்வு வகை | மூலதனக் கட்டணத் தொகை |
|---|---|---|
| 53 | சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணம் | |
| 53.1 | வட்டி வீதம் = (அ) + (ஆ) | 0 |
| | (அ) பொதுவான சந்தை இடர்நேர்வு | 0 |
| | (i) தேறிய நீண்ட அல்லது குறுகிய நிலைமை | |
| | (ii) கிடையான | |
| | (iii) நிலக்குத்தான | |
| | (iv) விருப்பார்வம் | |
| | (ஆ) குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வு | |
| 53.2 | பங்கு = (இ) + (ஈ) | 0 |
| | (இ) பொதுவான சந்தை இடர்நேர்வு | |
| | (ஈ) குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வு | |
| 53.3 | வெளிநாட்டுச் செலாவணி மற்றும் தங்கம் = (உ) | 0 |
| 54 | **சந்தை இடர்நேர்வுகளுக்கான மொத்த மூலதனக்கட்டணம்** = (அ + ஆ + இ + ஈ + உ) | 0 |

படிவம் 5: விகிதம்

## இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் மீதான கூற்று உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மூலதனவிகிதத்தினைக் கணித்தல்

**நிறுவனத்தின் பெயர்:** ............................................................ .................. **அன்று உள்ளவாறு**

**(ஆயிரம் ரூபாய்களில்)**

| குறியீடு | இடர்நேர்வு வகை | | | தொகை |
|---|---|---|---|---|
| 55 | மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் | | | |
| 55.1 | கொடுகடன் இடர்நேர்விற்கான மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் (= விடயம் 16) | | .................. | |
| 55.2 | சந்தை இடர்நேர்விற்கான மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் (= விடயம் 16 x 10) | | .................. | |
| | *துணை மொத்தம்* | | | .................. |
| 56 | ஆகக்குறைந்த மூலதனக் கட்டணம் | | | |
| 56.1 | கொடுகடன் இடர்நேர்வுகளுக்கான மூலதனக்கட்டணம் (= விடயம் 55.1 x 10%) | | .................. | |
| 56.2 | சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனக்கட்டணம் (= விடயம் 54) | | .................. | |
| | *துணை மொத்தம்* | | | .................. |
| 57 | கொடுகடன் இடர்நேர்விற்கான மூலதனக்கட்டணத்தினை ஈடுசெய்வதற்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள மொத்த மூலதனத்தளம் (= விடயம் 52) | | | |
| 57.1 | மொத்த அடுக்கு 1 மைய மூலதனம் (= விடயம் 37) | | .................. | |
| 57.2 | அடுக்கு 2 மூலதனமும் அனைத்துச் சீராக்கங்கள்/ கழிவுகள் | | .................. | |
| | *துணை மொத்தம்* | | | .................. |
| 58 | சந்தை இடர்நேர்வுகளை ஈடுசெய்வதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மொத்த மூலதனத்தளம் (= விடயம் 57 - விடயம் 56.1) | | | .................. |
| 59 | **மொத்த கிடைக்கத்தக்க அடுக்கு 3 மூலதனம்** | | | |
| 59.1 | ஒப்புதலளிக்கப்பட்ட குறுங்கால துணைப்படுகடன் | | | .................. |
| 60 | தகைமையுடைய அடுக்கு 3 மூலதனத்திற்கு ஏற்புடைத்தான வரையறை | வரையறை | பயன்படுத்தப்பட்ட தொகை | |
| 601. | சந்தை இடர்நேர்விற்காக குறைந்தது 28.5% மான மூலதனக்கட்டணம் இடர்நேர்வினைத் தேவைப்படுத்தாத அடுக்கு 1 மூலதனத்தின் மூலம் ஈடுசெய்யப்படும் (= விடயம் 56.2* 28.5%) | .................. | .................. | |
| 60.2 | கொடுகடன் இடர்நேர்விற்காக தேவைப்படுத்தப்படாத அடுக்கு 1 மூலதனத்தில் கூடியது 250% (= விடயம் 58* 250%) | .................. | .................. | |
| 60.3 | ஆகக்கூடிய அடுக்கு 2 + அடுக்கு 3 = அடுக்கு 1 மூலதனம் | .................. | | |
| 61 | **தகைமையுடைய அடுக்கு 3 மூலதனம்** | | | |
| 61.1 | தகைமையுடைய பயன்படுத்தப்பட்ட அடுக்கு 3 மூலதனம் | | .................. | |
| 61.2 | தகைமையுடைய ஆனால் பயன்படுத்தப்படாத அடுக்கு 3 மூலதனம் | | .................. | |
| | *துணை மொத்தம்* | | | .................. |
| 62 | சந்தை இடர்நேர்வுகளுக்கான மூலதனக்கட்டணத்தினை ஈடுசெய்வதற்காக கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலதனம் (= விடயம் 58 + விடயம் 61) | | | .................. |
| 63 | **மொத்த தகைமையுடைய மூலதனம் (பயன்படுத்தப்படாத அடுக்கு 3 மூலதனம் நீங்கலாக)** | | | .................. |
| 64 | **மைய மூலதன விகிதம்** = தகைமையுடைய அடுக்கு 1 மூலதனம் / இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்து (கொடுகடன் இடர்நேர்வு மற்றும் சந்தை இடர்நேர்வு) = விடயம் 57.1 / விடயம் 55 | | >=5% | .................. |
| 65 | **மொத்த மூலதன விகிதம்** = மொத்த தகைமையுடைய மூலதனம் / இடர்நிறையேற்றப்பட்ட சொத்து (கொடுகடன் இடர்நேர்வு மற்றும் சந்தை இடர்நேர்வு) = விடயம் 63 / விடயம் 55 | | >=10% | .................. |

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 மாச்சு 28

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும்**

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும்**

**முதன்மை நிறைவேற்று அரச வங்கிகளுக்கு**

அன்புள்ள ஐயா,

**சமகாலத்தில் பாசல் I மற்றும் பாசல் II இனை கணித்தல்**

இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் பாசல் II இனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களினது கூட்டத்தில் தங்களுக்கு எடுத்துக் கூறப்பட்டவாறும் இலங்கை வங்கியாளர் சங்கத்துடன் இணங்கிக் கொள்ளப்பட்டவாறும் 2008இன் முதற் காலாண்டில் பாசல் II முழுமையாக நடைமுறைப்படுத்தும் வரையான பாசல் I மற்றும் பாசல் II என்பனவற்றை இணையாக கணிப்பிடுவது 2006இன் முதற் காலாண்டிலிருந்து தொடங்கும்.

சமகால நடவடிக்கையைக் கொண்ட இக்காலப்பகுதியில் பாசல் I இன் கீழான மூலதன போதுமைக் கணிப்பு காத்திரமான நியதி மூலதன விகிதமாக விளங்கும். பாசல் II தொடர்பாக இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் இறுதி வடிவத்தில் இல்லாத அதேவேளையில், சமகால நடவடிக்கைகளைக் கொண்ட காலப்பகுதியில் பரீட்சிப்பு கணிப்புக்களினது பெறுபேறுகளின் அடிப்படையில் இவை சீர்செய்யப்படும்.

ஆரம்ப நடவடிக்கையாக இக்காலப்பகுதியில் பாசல் II இன் கீழான மூலதனப் போதுமை விகிதம் வங்கி மாத்திரம் (ஏக) என்ற அடிப்படையில் கணிக்கப்படவேண்டும்.

இவ்வரைவு வழிகாட்டல்கள் 3 பகுதிகளை அதாவது அறிமுக வழிகாட்டல்கள், மூலதன விகிதத்தினை கணிப்பதற்கான முறை மற்றும் கணிப்பதற்கான விடயங்களுக்கான வரைவிலக்கணங்கள் என்பனவற்றைக் கொண்டுள்ளன.

பாசல் II இன் மீதான அனைத்துக் கணிப்புக்களும் பாசல் I இன் கீழான மூலதனப் போதுமை விகிதத்தின் கணிப்பிடலுடன் சேர்த்து ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்ததைத் தொடர்ந்து வரும் மாதத்தின் இறுதியளவில் இத்திணைக்களத்தினை அடைதல் வேண்டும்

இது தொடர்பான தங்களின் ஒத்துழைப்பு பெருமளவில் வரவேற்கப்படும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

## பாசல் II மீதான வழிகாட்டல்கள்

## பகுதி I - ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாடுகள்

பாசல் II இன் கீழ் மூலதனப் போதுமையினைக் கணிப்பிடுதல்

$$\frac{\text{மொத்த அடுக்கு 1 மூலதனம்}}{\text{மொத்த இடர்நேர்வுநிறையேற்றப்பட்ட சொத்துக்கள்}} \geq 5\%$$

மற்றும்

$$\frac{\text{மொத்த மூலதனம்}}{\text{மொத்த இடர்நேர்வுநிறையேற்றப்பட்ட சொத்துக்கள்}} \geq 10\%$$

எங்கு

கொடுகடன் இடர்நேர்வு + சந்தை இடர்நேர்வு + தொழிற்பாட்டு இடர்நேர்வு = மொத்த இடர்நேர்வுநிறையேற்றப்பட்ட சொத்துக்கள்

அத்துடன்

மொத்த இடர்நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் = (சந்தை இடர்நேர்வு x 10) + கொடுகடன் இடர்நேர்வின் கீழ் இடர்நிறையேற்றப்பட்ட சொத்து

### அ. கொடுகடன் இடர்நேர்வு

- ஈடுபட்டுள்ள இணைக்கிணைத்தரப்பினரின் வெளிக்கொடுகடன் தரமிடலின்படி அனைத்து <u>வெளிப்படுத்துகைகளும்</u> இடர்நிறையேற்றல்களாக விளங்கும்.

- இணைக்கிணை தரப்பினருக்கான வெளிப்படுத்துகை முதலீடுகள் கடன்கள் மற்றும் முற்பணங்கள் அல்லது ஏனைய வெளிப்படுத்துகைகளை உள்ளடக்கும்.

- பாசல் I இன் படி, ஐந்தொகையிலுள்ள விடயங்கள் இடர்நிறையேற்றப்பட்டனவாக, கொடுகடன் தரமிடலுக்கு ஏற்புடைத்தான இடர்நிறையேற்றலுக்கு பொருந்துவனவாகவுள்ள வேளையில் ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்கள், இவ் ஆவணத்தில் தரப்பட்டுள்ள கொடுகடன் மாற்றல் காரணிகளைப் பயன்படுத்தி தொடர்ந்தும் கொடுகடன் சமமான தொகைக்கு மாற்றப்படவுள்ளதுடன் அதன் பின்னர் இடர்நேர்வு நிறையேற்றலின்படி இணைக்கிணை தரப்பினருக்கு ஏற்புடைத்ததாகவும் இருக்கும்.

- அனைத்து வெளிப்படுத்துகைகளும் தொடர்பான வாடிக்கையாளர் கணக்கிற்கு விதிக்கப்பட்டிருக்கின்ற குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் தொங்கலிலுள்ள வட்டி என்பனவற்றைக் கழித்த இடர்நேர்வு நிறையேற்றலாக இருத்தல் வேண்டும்.

1. **நாட்டிற்கான மற்றும் மத்திய வங்கிக்கான கோரல்கள்**

1.1 வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை உட்பட உள்நாட்டு தரமிடல் மற்றும் மத்திய வங்கியின் மீதான கோரல்கள்: 0%

1.2 ஏனைய நாட்டிற்கான தரமிடல் மற்றும் அவற்றின் மத்திய வங்கிகள் மீதான கோரல்கள் பின்வரும் விதத்தில் நிறையேற்றப்படும்.

| கொடுகடன் மதிப்பிடல் | AAA இலிருந்து AA- | A+ இலிருந்து A- | BBB+ இலிருந்து BBB- | BB+ இலிருந்து B- | B- இற்கு கீழே | தரமிடப்படாதது |
|---|---|---|---|---|---|---|
| இடர்நேர்வு நிறை | 0% | 20% | 50% | 100% | 150% | 100% |

[1] வெளிநாட்டு கொடுடன் தரமிடல் தொடர்பான விபரங்களுக்கு தயவு செய்து 11 ஆம் பிரிவினைப் பார்க்கவும்.

.1.3 பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கி, பன்னாட்டு நாணய நிதியம், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் ஐரோப்பிய சமூகம் என்பனவற்றின் மீதான கோரல்கள்: 0%

1.4 மத்திய அரசாங்கம் மத்திய அரசாங்கம் அல்லாத அரசதுறை நிறுவனம்: இது அனைத்து அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், மாகாண அதிகார சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவற்றை உள்ளடக்கும்.

- தெளிவான அரச உத்தரவாதமொன்றினால் உள்ளடக்கப்பட்டது: 0%
- ஏனைய வெளிப்படுத்துகைகள்: கம்பனிகளாகக் கருதப்படும்

1.5 பல்புடை அபிவிருத்தி வங்கிகள் மீதான கோரல்கள்

ஏற்புடைத்தான இடர்நேர்வு நிறையேற்றல் பின்வரும் விதத்தில் ஒவ்வொரு வங்கிக்குமான வெளிநாட்டு தரமிடலின் மீது தங்கியிருக்கும்:

| கொடுகடன் மதிப்பிடல் | AAA இலிருந்து AA- | A+ இலிருந்து A- | BBB + இலிருந்து BBB- | BB+ இலிருந்து B- | B- இற்கு கீழே | தரமிடப்படாதது |
|---|---|---|---|---|---|---|
| இடர்நேர்வு நிறை | 20% | 50% | 50% | 100% | 150% | 50% |

எனினும், பின்வரும் பல்புடை அபிவிருத்தி வங்கிகள் மீதான கோரல்கள் 0% இடர்நேர்வு நிறையினையே கொண்டிருக்கும். புத்தாக்கம் மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி, பன்னாட்டு நிதிக்கூட்டுத்தாபனம் என்பனவற்றை உள்ளடக்கிய உலக வங்கிக் குழுமம்

ஆசிய அபிவிருத்தி வங்கி
ஆபிரிக்க அபிவிருத்தி வங்கி
புத்தாக்க அபிவிருத்திக்கான ஐரோப்பிய வங்கி
இன்ரர் அமெரிக்கா அபிவிருத்தி வங்கி
ஐரோப்பிய முதலீட்டு வங்கி
நோர்டிக் முதலீட்டு வங்கி
கரிபியன் அபிவிருத்தி வங்கி
இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி
ஐரோப்பிய அபிவிருத்தி வங்கிச் சபை

**2. வங்கிகள் மீதான கோரல்கள்**

2.1 இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றை உள்ளடக்கிய அனைத்து வங்கிகள் மீதான கோரல்கள் பின்வரும் விதத்தில் அவற்றின் வெளிநாட்டு கொடுகடன் மதிப்பீட்டின் (விருப்பார்வம் 2) அடிப்படையில் இடர்நேர்வு நிறையேற்றப்படவேண்டும்.

2.2 குறுகியகால கோரல்கள்: குறுகிய கால கோரல்களுக்கான முன்னுரிமை வசதிகளுக்கு தகைமை பெறும் பொருட்டு அவர்கள் 3 மாதங்கள் அல்லது குறைவான மூல ஒப்பந்தங்கள் செய்யத்தக்க முதிர்ச்சியைக் கொண்டிருக்க வேண்டியதுடன் இதனை மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

| வங்கிகளின் கொடுகடன் மதிப்பீடு | AAA இலிருந்து AA- | A+ இலிருந்து A- | BBB+ இலிருந்து BBB- | BB + இலிருந்து B- | B- இற்கு கீழே | தரமிடப்படாதவை |
|---|---|---|---|---|---|---|
| வெளிப்படுத்துகை > 3 மாதங்கள்: இடர்நேர்வு நிறையேற்றல் | 20% | 50% | 50% | 100% | 150% | 50% |
| வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை < 3 மாதங்கள்: இடர்நேர்வு நிறையேற்றல் | 20% | 20% | 20% | 50% | 150% | 20% |
| ரூபா கோரல் < 3 மாதங்கள்: இடர்நேர்வு நிறையேற்றல் | 20% | 20% | 20% | 20% | 20% | 20% |

குறிப்பு: வெளிநாடுகளில் வங்கிகளினது கிளைகள் கூட்டிணைக்கப்பட்டிருக்கும் விடயத்தினைப் பொறுத்த வரையில், கிளையானது உள்நாட்டில் தரமிடப்படாதிருப்பின், தலைமை அலுவலகத்திற்கு ஏற்புடைத்தான வீதத்தினை குறிப்பிட்ட கிளைக்குப் பொருந்தத்தக்க வீதமாகவும் பயன்படுத்தலாம்.

**3. காப்புறுதிக்கம்பனிகள், பங்குத்தரகர்கள், முதனிலை வணிகர்கள், நிதிக்கம்பனிகள், குத்தகைக்கு விடும் கம்பனிகள், வணிக வங்கிகள் மற்றும் முதலீட்டு வங்கிகள் மீதான கோரல்கள்:**

கம்பனிகள் மீதான கோரலைப் போன்ற அதே விதத்தில் இதுவும் கருதப்படவேண்டும்.

**4. கம்பனிகள் மீதான கோரல்கள்**

4.1 கம்பனி வாடிக்கையாளர்கள் பின்வரும் அட்டவணைக்கேற்ப இடர்நேர்வு நிறைகளைக் கணித்தல் வேண்டும்.

| கொடுகடன் மதிப்பிடல் | AAA இலிருந்து AA- | A+ இலிருந்து A- | BBB + இலிருந்து BB- | BB- இற்கு கீழே | தரமிடப்படாதவை |
|---|---|---|---|---|---|
| இடர்நேர்வு நிறை | 20% | 50% | 100% | 150% | 100% |

4.2 மேற்பார்வையாளரின் ஒப்புதலுடன், வங்கிகள் அனைத்து கம்பனி வாடிக்கையாளர்களையும் 100% இல் தரமிடுவதற்கான விருப்பத்தினை நடைமுறைப்படுத்த முடியும்.

**5. ஒழுங்குமுறையான சில்லறை சொத்துப்பட்டியல்**

பின்வரும் பிரமாணங்களை பூர்த்தி செய்கின்ற கோரல்கள் ஒழுங்குமுறையான சில்லறைச் சொத்துப்பட்டியலில் உள்ளடக்கப்படுவதற்கு தகைமை பெறும். அத்தகைய சொத்துப்பட்டியல் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து செயல்முறைப்படுத்தல் வெளிப்படுத்துகைகளும் 75% மான இடர்நேர்வு நிறைக்கு தகைமை பெறுகின்றன.

ஒழுங்குமுறையான சில்லறை சொத்துப்பட்டியலுக்குத் தகைமை பெறும் பிரமாணம்.

- **சார்ந்த பிரமாணம்** - வெளிப்படுத்துகை தனிப்பட்ட ஒரு ஆளாக அல்லது ஆட்களாக அல்லது சிறிய நடுத்தர தொழில்முயற்சியாக இருத்தல் வேண்டும்.

- **சாதன பிரமாணம்** - வெளிப்படுத்துகை பின்வரும் சாதன வகைகளுள் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

- மேலதிகப் பற்றுக்கள் மற்றும் கொடுகடன் அட்டைகள் உட்பட மீண்டும் பயன்படத்தக்க கொடுகடன் மற்றும் தொடர் கொடுகடன்கள்

- தனிப்பட்ட தவணைக்கடன்கள் மற்றும் குத்தகைகள் (அதாவது தவணைக்கடன்கள், ஊர்திக்கடன்கள் மற்றும் குத்தகைக்கடன்கள், மாணவர் கல்விசார் கடன்கள், தனியார் நிதி

- சிறிய நடுத்தர கடன்கள்

- முறிகள் மற்றும் பங்குகள் போன்ற பிணையங்கள் நீக்கப்பட்டுள்ளன (முதலீடுகளாகக் கருதப்படும்).

- சொத்துக்களைக் கொண்ட ஈடுகளினால் பிணையிடப்பட்ட கடன்கள் கோரல்களாக உள்ளடக்கப்பட தகைமை பெறுகின்றன. வதிவிட சொத்துக்களினால் பிணையிடப்பட்டவை நீக்கப்படுகின்றன (கீழே 6இனைப் பார்க்க)

- <u>சிறிதளவான பிரமாணங்கள்</u> - ஒழுங்குமுறையிலமைந்த சில்லறை சொத்துப்பட்டியலானது, சொத்துப்பட்டியலிலுள்ள இடர்நேர்வுகளைக் குறைக்கின்றதொரு அளவிற்கு போதுமானளவில் பன்முகப்படுத்தப்படவேண்டும். இப்பிரமாணத்தினை ஈடுசெய்யும் பொருட்டு, கொடுகடன் இடர்நேர்வு தணிப்பினை பரிசீலனை செய்யாமல் கூட்டு மொத்த வெளிப்படுத்துகை இல்லையாகையால் ஒரு இணைத்தரப்பினர் மொத்த ஒழுங்கு முறையிலான சில்லறை சொத்துப்பட்டியலின் (எந்த ஒரு செயற்படாத சில்லறைக்கடனும் நீங்கலாக) 0.2% இனை விஞ்சக்கூடாது (இணைத்தரப்பு - ஒன்று அல்லது பல நிறுவனங்கள் சேர்ந்து ஒரு நன்மை பெறுநராக உருவாக்கப்பட்டது. உ-ம்: சிறிய வியாபாரமொன்று இன்னொரு சிறிய வியாபாரத்துடன் இணைக்கப்படும் விடயத்தில் வரையறை இரண்டு வியாபாரங்களின் மீதுமான வங்கியின் கூட்டு மொத்த வெளிப்படுத்துகையாக இருக்கும்.

- <u>தனிப்பட்ட வெளிப்படுத்துகைகளின் குறைந்த பெறுமதி</u> - ஒரு இணைத்தரப்பினருக்கான ஆகக் கூடிய கூட்டு மொத்த சில்லறை வெளிப்படுத்துகை மூலதன நிதியத்தின் 0.2% ம் கொண்ட ஆகக் குறைந்த அளவினை அல்லது ரூ. 10 மில்லியனை விஞ்சக்கூடாது.

சிறிய நடுத்தர தொழில் முயற்சியின் வரைவிலக்கணம் (இறுதியாக்கப்படுவதற்கு)

- நிலம் மற்றும் கட்டிடம் நீங்கலாக சொத்துக்களின் பெறுமதி ரூ.35 மில்லியனை விஞ்சக்கூடாது அத்துடன்
- கடனின் ஆகக் கூடிய அளவு ரூ. 35 மில்லியனாக இருக்க வேண்டும்
- ஆண்டு மொத்தப்புரள்வு ரூ. 30 மில்லியனுக்குக் கூடுதலாக இருக்கக்கூடாது.

மேலேயுள்ள மூன்று பிரமாணங்களில் இரண்டு பூர்த்தி செய்யப்படவேண்டும்.

## 6. வதிவிட சொத்தினால் பிணையிடப்பட்ட வதிவிட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள்

கடன்பட்டாளர் வதிகின்ற அல்லது வதியவுள்ள அல்லது வாடகைக்கு விடப்படுகின்ற வதிவிட சொத்துக்களைக் கொண்ட முதனிலை ஈட்டின் மூலம் முழுமையாகப் பிணையிடப்பட்டுள்ள வதிவிட வீடமைப்புக் கடன்கள் 35% இடர்நேர்வு நிறைக்குத் தகைமை பெறும்.

முன்னுரிமை சார்ந்த இடர்நேர்வு நிறையினை பயன்படுத்துவதனை இயலச் செய்வதற்காக தகைமை பெறும் பிரமாணங்களை வங்கிகள் கடுமையாகப் பின்பற்ற வேண்டும்.

இச்சலுகை ரீதியான இடர்நேர்வு நிறைக்கு தகைமை பெறுவதற்கு பின்வரும் மதிப்பீட்டு பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்: கடன் வழங்கும் நேரத்தில் சொத்துக்களின் பெறுமதியில் குறைந்தது 75% மான வரையறை, சுதந்திரமான வெளியிலுள்ள மதிப்பீட்டாளனின் மதிப்பீடு, மதிப்பீடுகளின் கால வரிசை போன்றன.

## 7. வரவேண்டிய கடந்த காலக்கடன்கள்

7.1 குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் இன்றி 90 நாட்களுக்குக் கூடுதலாக வரவேண்டிய பிணையிடப்படாத எந்த ஒரு கடனும் (தகைமை பெற்ற வதிவிட ஈட்டுக்கடன்கள் தவிர) பின்வரும் இடர்நேர்வு நிறையேற்றலுக்கு உட்பட்டிருக்கும்.

| | இடர்நேர்வு நிறையேற்றல் |
|---|---|
| குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் கடனின் வெளிநின்ற தொகையில் < 20% | 150% |
| குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் கடனின் வெளிநின்ற தொகையில் > 20% | 100% |

7.2 கடனின் பிணையிடப்பட்ட பங்கினை தீர்மானிக்கும் பொருட்டு, 10 இலிலுள்ள பிணைகளை கழித்துவிட முடியும்.

7.3 வரவேண்டிய கடந்த கால வதிவிட ஈட்டுக் கடன்கள்

- வரவேண்டிய (> 90 நாட்களுக்கு மேலாக வரவேண்டிய கடன்கள்) கடந்த கால வதிவிட ஈட்டுக் கடன்கள் - குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் இன்றி 100% இடர்நேர்வு நிறையேற்றல்
- அத்தகைய வரவேண்டிய வதிவிட ஈட்டுக்கடன்கள் மீதான குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் வெளிநின்ற தொகையில் >20% மாக இருக்குமாயின் இடர்நேர்வு நிறையேற்றல் 50% மாக இருக்கும்.

## 8. ஏனைய சொத்துக்கள்

| | |
|---|---|
| கையிலுள்ள பணம் | 0% |
| தங்கக்கட்டிகள் | 0% |
| சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்கள் | 20% |
| மற்றைய அனைத்து சொத்துக்களும் | 100% |

## 9. ஐந்தொகைக்கு வெளியிலுள்ள விடயங்கள்

பாசல் Iஇல் உள்ளவாறு, ஐந்தொகைக்கு வெளியிலுள்ள விடயங்கள் கொடுகடன் மாற்றல் காரணிகளைப் பயன்படுத்துவதன் மூலமாக கொடுகடன் வெளிப்படுத்துகைக்குச் சமமானவைகளாக மாற்றப்படும். அதாவது

ஐந்தொகைக்கு வெளியிலுள்ள விடயங்கள் x கொடுகடன் மாற்று காரணி x இடர்நேர்வு நிறை = இடர்நேர்வு வெளிப்படுத்துகை

கொடுகடன் மாற்று காரணிகள் பின்வருமாறு பயன்படுத்தப்படும்:

9.1 நேரடி கடன் பதிலீடுகள்: பொதுவான உத்தரவாதங்கள், நிதியியல் உத்தரவாதங்களாக தொழிற்படும் துணைநில் நாணயக்கடிதங்கள் வங்கி ஏற்புக்கள் போன்றன - 100%

9.2 கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புபட்ட எதிர்பாராத நிகழ்வுகள்: செயலாற்றும் முறிகள், விலைக்குறிப்பீட்டு முறிகள், உத்தரவாதங்கள் குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான துணைநில் நாணயக்கடிதம் போன்றன - 50%

9.3 குறுங்கால சுயமாக ஒடுக்குகின்ற வர்த்தகத்துடன் தொடர்பான எதிர்பாரா நிகழ்வுகள்: கப்பற்படுத்தல் உத்தரவாதங்கள், நாணயக்கடிதங்களின் ஆவணப்படுத்தல், வர்த்தகத்துடன் தொடர்பான ஏற்புகள் போன்றன - 20%

9.4 விற்பனை மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் சொத்து விற்பனைகள் வங்கியில் கொடுகடன் இடர்நேர்வுகள் காணப்படுமிடத்து: விற்பனை மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் நிபந்தனைகளுடன் விற்பனை செய்யப்பட்ட வீடமைப்புக் கடன்கள் நிபந்தனைகளுடன் விற்பனை செய்யப்பட்ட ஏனைய சொத்துக்கள், முன்னோக்கிய சொத்துக்களின் கொள்வனவு, பகுதியளவில் கொடுப்பனவு செய்யப்பட்ட பங்குகள்/ பிணையங்கள் போன்றன - 100%

9.5 தற்பொழுதுள்ள பங்குகளைப் பொறுப்பேற்கும் உடன்படிக்கையொன்றின் கீழான கடப்பாடுகள்: பங்குகள்/ பிணையங்களின் வழங்கல்களைப் பொறுப்பேற்றல்/ சான்றிதழ் வழங்கல் வசதிகள், மீண்டும் பயன்படுத்தத்தக்க பொறுப்பேற்பு வசதிகள்; போன்றன 50%

9.6 முன்னறிவித்தலின்றி வங்கியினால் எந்த ஒரு நேரத்திலும் நிபந்தனையின்றி இரத்துச் செய்யக்கூடிய அல்லது கடன்பாட்டாளரின் கொடுகடன் நன்மதிப்பு மோசமடைவதன் காரணமாக தன்னியக்கமாகவே இரத்துச் செய்யப்படுவதற்கு உட்பட்ட கடப்பாடுகள் - 0%

9.7 1 ஆண்டு வரையான ஆரம்ப முதிர்ச்சியுடன் கூடிய கடப்பாடுகள்: வழமையான துணைநில் நாணயக்கடிதம்; எடுப்பனவு செய்யப்படாத தவணைக்கடன்கள்; எடுப்பனவு செய்யப்படாத மேலதிக பற்றுக்கள்; பயன்படுத்தப்படாத கொடுகடன் அட்டைகள்; போன்றன - 20%

9.8 1 ஆண்டிற்கும் மேலான ஆரம்ப முதிர்ச்சியுடன் கூடிய கடப்பாடுகள்: வழமையான துணைநில் வசதிகள் மற்றும் தொடர்க் கொடுகடன்கள்; எடுப்பனவு செய்யப்படாத தவணைக்கடன்கள் போன்றன - 50%

9.9 வெளிநாட்டுச் செலாவணி மற்றும் வட்டிவீத உடன்படிக்கைகள் (ஏற்கனவேயுள்ள பணிப்புக்களிலுள்ளதைப் போன்றன).

**10. கொடுகடன் இடர்நேர்வுத் தணிப்பு**

பின்வரும் தகைமையுடைய பிணைகளினால் கொடுக்கல் வாங்கல்கள் பிணையிடப்பட்டு கீழே விபரிக்கப்பட்டுள்ள தகைமையுடைய பிரமாணங்களை பூர்த்தி செய்திருக்குமிடத்து பிணைச் சாதனங்களுக்கு ஏற்புடைத்தான இடர்நேர்வு நிறையானது பிணைய மயப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகையின் ஒரு பகுதி தொடர்பான இணைத்தரப்பினரின் இடர்நேர்வு நிறைக்காக பதிலீடு செய்யப்பட முடியும்.

அனைத்து வங்கிகளினதும் பயன்பாட்டிற்குமாக இலகுவான அணுகுமுறை (பாசல் Iஇனைப் போன்று) விதந்துரைக்கப்பட்டுள்ளது - கடனின் பிணையிடப்பட்ட பகுதிக்கான பிணையத்திற்கு ஏற்புடைத்தான இடர்நேர்வு நிறையினை பிரயோகித்தல்.

பகுதியாக பிணைய மயப்படுத்துவதும் அனுமதிக்கப்படும் - அதாவது கடனின் ஒரு பகுதியினையும் பிணையமானது உள்ளடக்கியிருக்க முடியும்.

எனினும், முக்கியமான வெளிப்படுத்துகைகளினதும் பிணையங்களினதும் முதிர்ச்சியில் காணப்படும் பொருத்தப்பாடின்மை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது, அதாவது பிணைகள் குறைந்தது வெளிப்படுத்துகைகளின் வாழ்நாள் காலம் வரையாவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10.1 முற்தேவைப்பாடுகள்:

- சட்ட ரீதியான உறுதித்தன்மை - பிணைய மயப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலும் ஐந்தொகை தொடர்பான ஆவணப்படுத்தல்கள் உத்தரவாதங்கள் போன்றவற்றில் பயன்படுத்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் அனைத்து தரப்பினரையும் கட்டுப்படுத்துவனவாகவும் தொடர்பான நியாயதிக்கத்தில் சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தக் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும். வங்கிகள் சட்ட ரீதியான ஆய்வுகளை போதுமானளவில் மேற்கொள்ள வேண்டியதுடன் இதனைச் சரிபார்ப்பதற்காக தொடர்ச்சியான நடைமுறைப்படுத்தல்களை உறுதிப்படுத்தும் விதத்தில் அத்தகைய ஆய்வுகளை தேவையானவிடத்து மேற்கொள்ளுதலும் வேண்டும்.

- செலுத்தத்தவறும் சந்தர்ப்பத்தில் உரிய நேரத்தில் ஒடுக்கி விடுவதற்கான அல்லது பிணையங்களை செயல்முறைப்படுத்துவதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிமையினை வங்கிகள் கொண்டுள்ளன. பிணையத்தில் வங்கிகளுக்குள்ள ஈடுபாட்டினை பாதுகாப்பதற்காக வங்கிகள் சட்டத்தின் கீழான தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும் உதாரணம் பதிவாளருடன் பதிவு செய்தல்.

- பாதுகாப்பு வழங்குவதற்கான பிணையங்களின் பொருட்டு இணைத்தரப்பினரின் கொடுகடன் தகைமை மற்றும் பிணையங்களின் பெறுமதி என்பன ஒன்றிற்கொன்று நேர்க்கணிய தொடர்புகளை கொண்டிருக்கக்கூடாது. அதாவது, இணைத்தரப்பினர் அல்லது தொடர்பான எந்த ஒரு குழும நிறுவனத்தினாலும் வழங்கப்படும் பிணையங்கள் தகைமையுடையனவாக இருக்கமாட்டா.

- பிணையங்களை சரியான நேரத்தில் ஒடுக்கி விடுவதற்காக தெளிவானதும் உறுதிமிக்கதுமான வழிமுறைகளை வங்கிகள் கொண்டிருத்தல் வேண்டும்.

- பிணையங்கள் கட்டுக்காப்பாளர் வசமிருக்குமிடத்து கட்டுக்காப்பாளர் அவரின் சொந்தச் சொத்துக்களிலிருந்து இப்பிணையங்களை வேறாகக் கொண்டுள்ளார் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வங்கிகள் நியாயமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

10.2 மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான நிலமைகளுக்குட்பட்டு கொடுகடன் இடர்நேர்வு தணித்தலுக்கான இலகுவான அணுகு முறையின் கீழ் பிணையங்களின் பின்வரும் வடிவங்கள் அங்கீகரிக்கப்படுவதற்கு தகைமையுடையனவாகும்.

(அ) வங்கிக்கான உரித்தின் கீழான (கடன் வழங்கிய வங்கிகளினால் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்கள், சேமிப்புச் சான்றிதழ்கள் உட்பட) காசு

(ஆ) தங்கம் - வங்கியின் நிலவறையில் வைத்திருக்கப்படும் தங்கக்கட்டிகளும் சான்றிதழ்களும்

(இ) பின்வருவனவற்றில் ஏதாவதொன்றைக் கொண்டிருக்குமிடத்து அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுக் கொடுகடன் மதிப்பீட்டு நிறுவனத்தினால் தரமிடப்பட்ட படுகடன் பிணையங்கள் இவற்றில்

- குறைந்தது BB- நாட்டிற்கான தரமிடுபவரினால் அல்லது தேசிய மேற்பார்வையாளரினால் நாட்டிற்கான தரமிடல் என கருதப்படுகின்ற PSE இனால் வழங்கப்படும் பொழுது; அல்லது
- குறைந்தது BBB- ஏனைய நிறுவனங்களினால் (வங்கிகள் உட்பட) வழங்கப்படும் பொழுது
- குறைந்தது A-3/P-3 குறுங்கால படுகடன் கருவிகளுக்காக

(ஈ) பின்வருமாறு காணப்படுமிடத்து அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு கொடுகடன் ஒப்பீட்டு நிறுவனங்களினால் படுகடன் பிணைங்கள் தரமிடப்படமாட்டா.

- வங்கியினால் வழங்கப்பட்டவை; அத்துடன்
- அங்கீகரிக்கப்பட்ட செலாவணி மீது பட்டியலிடப்பட்டவை
- மூத்த படுகடனாக பாகுபடுத்தப்பட்டவை; அத்துடன்

சந்தைப்பெறுமதியில் 25% கொண்ட கழிவிடலுக்கு உட்பட்டிருக்கும்.

(உ) முக்கிய சுட்டெண்ணில் உள்ளடக்கப்பட்டுள்ள பங்குகள் (மாற்றத்தக்க முறிகள் உட்பட) சந்தைப் பெறுமதியில் 25% மான கழிவிடலுக்குட்பட்டிருக்கும்.

மேலும் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் அல்லது உரிமம் பெற்ற சிறிப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள், தொடர்பான வங்கிக்கான இடர்நேர்வு நிறைகளாக சாட்டுதல் செய்யப்படலாம்.

**11. வெளிநாட்டு கொடுகடன் மதிப்பீடுகள்**

- பாசல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைப் பிரமாணங்களையும் தொடர்பான இடர்நேர்வு நிறையேற்றலுக்கு எதிரான இடர்நேர்வு தரமிடல் திட்டத்தினையும் பூர்த்தி செய்த வெளிநாட்டு கொடுகடன் மதிப்பீட்டு நிறுவனங்களை தேசிய மேற்பார்வையாளர் தீர்மானிப்பார்.
- குறிப்பிட்ட கோரலுக்காக வெளிநாட்டு கொடுகடன் மதிப்பீட்டு நிறுவனமொன்றினால் ஒரே ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்படுமிடத்து அத்தகைய மதிப்பீடு ஏற்புடைத்தான இடர்நேர்வினை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். வேறுபட்ட இடர்நேர்வு நிறைகளைக் கொண்ட திட்டத்தில் இரண்டு மதிப்பீடுகள் காணப்படுமாயின், உயர் இடர்நேர்வு நிறைகள் ஏற்புடைத்தாக இருக்கும்.

## ஆ. அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறையின் கீழான தொழிற்பாட்டு இடர்நேர்வு

$K_{BIA} = [\sum (GI_{1...n} \; x')]/n$

$K_{BIA}$ = அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறையின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணம்

GI = நேர்க்கணியமாக இருக்கமிடத்து முன்னை மூன்று ஆண்டுகளையும் விட ஆண்டு மொத்த வருமானம்

n = மொத்த வருமானம் நேர்க்கணியமாக இருந்த முன்னைய மூன்றாண்டுகளின் எண்

’ = 15%

மொத்த வருமானம் = தேறிய வட்டி வருமானத்தையும் தேறிய வட்டியல்லா வருமானத்தையும் கூட்டியது. (தேறிய வட்டி வருமானம் ஒதுக்கங்கள் மற்றும் தொழிற்பாட்டு செலவுகளுக்கு முன்னையது, பிணையங்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட இலாபங்கள்/ நட்டங்கள் நீங்கலாக (வர்த்தகப்படுத்தல் மற்றும் முதலீடு) மற்றும் வழமைக்கு மாறான அல்லது கிரமமற்ற விடயங்கள் நீங்கலாக) (பாசல் உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணம்).

“மொத்த வருமானம்” தொழிற்பாட்டு இலாபத்தினைக் கணிப்பதற்கு பின்வரும் சூத்திரத்தினை பயன்படுத்துவதற்கு யோசனை தெரிவிக்கப்படுகிறது.

+ ஒதுக்கங்கள்

+ தொழிற்பாட்டுச் செலவுகள்

+ பிணையங்களின் விற்பனையினால் ஏற்பட்ட இழப்புக்கள்

- பிணையங்களின் விற்பனையின் மூலம் பெறப்பட்ட இலாபம்

வழமைக்கு/ மாறான கிரமமற்ற விடயங்கள் நீங்கலாக

பாசல் II இன் கீழ் இடைக்கால அறிக்கையிடல் படிவம்

பகுதி 2

## இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதத்தின் மீதான கூற்று

## வர்த்தக வங்கிகளின் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் கணிப்பு

**தொழிற்பாட்டு இழப்பு (அடிப்படைக்குறிகாட்டி அணுகுமுறை)**

$$K_{BIA} = [\sum (GI_{1...n}\ x')]/n$$

$K_{BIA}$ = அடிப்படைக் குறிகாட்டி அணுகுமுறையின் கீழ் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான மூலதனக் கட்டணம்

GI = நேர்க்கணியமாக இருக்குமிடத்து முன்னைய மூன்று ஆண்டுகளையும் விட ஆண்டு மொத்த வருமானம்

n = மொத்த வருமானம் நேர்க்கணியமாக இருந்த முன்னைய மூன்றாண்டுகளின் எண்ணிக்கை

மொத்த வருமானம் = தேறிய வட்டி வருமானத்தையும் தேறிய வட்டியல்லா வருமானத்தையும் கூட்டியது. (தேறிய வட்டி வருமானம் ஒதுக்கங்கள் மற்றும் தொழிற்பாட்டு செலவுகள், விற்பனையிலிருந்து பெறப்பட்ட இலாபங்கள்/ நட்டங்கள் தவிர்க்கிறது (வர்த்தகப்படுத்தல் மற்றும் முதலீடு) மற்றும் வழமைக்கு மாறான அல்லது கிரமமற்ற விடயங்கள் நீங்கலாக)

கொடுகடன் இடர்நேர்வுகளுக்காக மூலதன கட்டணத்தினைக் கணித்தல்

### ஐந்தொகையிலுள்ள விடயங்கள்

**நிறுவனத்தின் பெயர்:** .............................................. ...................... **அன்று உள்ளவாறு**

(ஆயிரம் ரூபாய்களில்)

| குறியீடு | விபரங்கள் | ஐந்தொகையில் உள்ள விடயங்களின் முதல்தொகை | ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்களின் கொடுகடனுக்குச் சமனான தொகை | வெளிநாட்டு கொடுகடன் மதிப்பீடு | மொத்தம் | X இடர்நேர்வு | = இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| **01.00** | **செயலாற்ற கோரல்கள்** | | | | | | |
| **01.01** | **நாட்டின் மற்றும் மத்திய வங்கி மீதான கோரல்கள்** | | | | | | |
| 01.0101 | உள்நாட்டு மற்றும் மத்திய வங்கி மீதான கோரல்கள் | | | | | 0% | |
| 01.01.02 | மற்றைய நாடுகள் மற்றும் அவற்றின் மத்திய வங்கி மீதான கோரல்கள் | | | AAA இலிருந்து AA-<br>A+இலிருந்து A- BBB+<br>இலிருந்து BBB- BB+<br>இலிருந்துB- B- இற்கு<br>கீழே தரப்படவில்லை | | 0%<br>20%<br>50%<br>100%<br>150%<br>100% | |
| 01.01.03 | பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கி, பன்னாட்டு நாணய நிதியம், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் ஐரோப்பிய சமூகம் என்பன மீதான கோரல்கள் | | | | | 0% | |
| **01.01.04** | **மத்திய அரசாங்கம்/ மத்திய அரசாங்கமல்லா அரசதுறை நிறுவனங்கள் மீதான கோரல்கள்** | | | | | | |
| 01.01.04.01 | * தெளிவான அரச உத்தரவாத மொன்றினால் உள்ளடக்கப்பட்டது | | | | | 0% | |
| 01.01.04.02 | * ஏனைய வெளிப்படுத்துகைகள் | | | AAA இலிருந்து AA-<br>A+இலிருந்து A-<br>BBB+ இலிருந்து BB-<br>இற்கு தரமிடப்படாதது | | 20%<br>50%<br>150%<br>100% | |
| 01.01.05 | பல்புடை அபிவிருத்தி வங்கிகள் மீதான கோரல்கள் (குறித்துரைக் கப்பட்டது) | | | | | 0% | |

| குறியீடு | விபரங்கள் | ஐந்தொகையில் உள்ள விடயங்களின் முதல்தொகை | ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்களின் கொடுகடனுக்குச் சமனான தொகை | வெளிநாட்டு கொடுகடன் மதிப்பீடு | மொத்தம் | X இடர்நேர்வு | = இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 01.01.06 | ஏனைய பல்புடை அபிவிருத்தி வங்கிகள் மீதான கோரல்கள் (ஏனையவை) | | | AAA இலிருந்து AA-<br>A+ இலிருந்து BBB-<br>BB+ இலிருந்து B-<br>B- இற்கு கீழே<br>தரப்படாதது | | 20%<br>50%<br>100%<br>150%<br>50% | |
| **01.02** | **வங்கிகள் மீதான கோரல்கள்** | | | | | | |
| 01.02.01 | குறுங்கால கோரல்கள் | | | | | | |
| 01.02.01.01 | 3 மாத முதிர்ச்சிகளைக் கொண்ட வெளிநாட்டு நாணய வெளிப்படுத்து கைகள் | | | AAA இலிருந்து BBB-<br>BB+ இலிருந்து B-<br>B- இற்கு கீழே<br>தரப்படாதது | | 20%<br>50%<br>150%<br>20% | |
| 01.02.01.02 | 3 மாத முதிர்ச்சிகளைக் கொண்ட ரூபாக் கோரல்கள் | | | AAA இற்கு<br>தரப்படாதது | | 20% | |
| 01.02.02. | ஏனைய கோரல்கள் | | | | | | |
| 01.02.02.01 | 3 மாதங்களுக்குக் கூடுதலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வெளிப்படுத்துகைகள் | | | AAA இலிருந்து AA-<br>A+ இலிருந்து BBB-<br>BB+ இலிருந்து B-<br>B- இற்கு கீழே<br>தரப்படாதது | | 20%<br>50%<br>100%<br>150%<br>50% | |
| **01.03** | **பிணை நிறுவனங்கள் உட்பட கம்பனிகள் மீதான கோரல்கள்** | | | AAA இலிருந்து AA-<br>A+ இலிருந்து A-<br>BBB+ இலிருந்து BB-<br>BB- இற்கு கீழே<br>தரப்படாதது | | 20%<br>50%<br>100%<br>150% | |
| **01.04** | **ஒழுங்குமுறைப்படுத்திய சில்லறை சொத்துப்பட்டியல்** | | | | | | |
| 01.04.01 | சில்லறைச் சொத்துப்பட்டியல் மீதான கோரல் | | | | | 75% | |
| 01.04.02 | சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் மீதான கோரல்கள் | | | | | 75% | |
| **01.05** | **வதிவிட சொத்துக்களினால் பிணையிடப்பட்ட வதிவிட நோக்கங் களுக்காக வழங்கப்பட்ட கடன்கள்** | | | | | 35% | |
| **01.06** | **காசு அல்லது தங்கத்தினால் பிணை யிடப்பட்ட கோரல்கள்** | | | | | 0% | |
| **02.00** | **வரவேண்டிய கடந்த கால கோரல்கள்** | | | | | | |
| **02.01** | **குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கங்கள் நீங்கலாக 90 நாட்களுக்கும் கூடுதலாக நிலுவையிலுள்ள பிணை யிடப்படாத வரவேண்டிய கடந்த காலக் கடன்கள்** | | | | | | |
| 02.01.01 | குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கங்கள் வெளிநின்ற தொகையில் < 20% | | | | | 150% | |
| 02.01.02 | குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கங்கள் வெளிநின்ற தொகையில் > 20% | | | | | 100% | |

| குறியீடு | விபரங்கள் | ஐந்தொகையில் உள்ள விடயங்களின் முதல்தொகை | ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்களின் கொடுகடனுக்குச் சமனான தொகை | வெளிநாட்டு கொடுகடன் மதிப்பீடு | மொத்தம் | X இடர்நேர்வு | = இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| **02.02** | **குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கங்கள் நீங்கலாக 90 நாட்களுக்குக் கூடுதலாக நிலுவையிலுள்ள கடந்த கால வதிவிட ஈட்டுக்கடன்கள்** | | | | | | |
| 02.02.01 | குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கங்கள் வெளிநின்ற தொகையில் < 20% | | | | | 100% | |
| 02.02.02 | குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கங்கள் வெளிநின்ற தொகையில் > 20% | | | | | 50% | |
| **03.00** | **காசு** | | | | | | |
| | **உள்நாட்டு நாணயம்** | | | | | 0% | |
| | **வெளிநாட்டு நாணயம்** | | | | | 0% | |
| **04.00** | **தங்கம் மற்றும் தங்கக்கட்டிகள்** | | | | | 0% | |
| **05.00** | **சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்கள்** | | | | | 20% | |
| **06.00** | **மற்றைய அனைத்து சொத்துக்கள்** | | | | | 100% | |
| **07.00** | **மொத்தம்** | | | | | | |

**நிறுவனத்தின் பெயர்: ............................................ ...................... அன்று உள்ளவாறு**

(ஆயிரம் ரூபாய்களில்)

| குறியீடு | விபரங்கள் | ஐந்தொகையில் உள்ள விடயங்களின் முதல்தொகை | ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்களின் கொடுகடனுக்குச் சமனான தொகை | மொத்தம் | X இடர்நேர்வு | = இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| **08.00** | **நேரடி கொடுகடன் பதிலீடுகள்** | | | | 100% | |
| 08.01 | கடன்பாடுகளின் பொதுவான உத்தரவாதங்கள் | | | | | |
| 08.02 | நிதியியல் உத்தரவாதங்களாக விளங்கிய துணைநில் நாணயக் கடிதம் | | | | | |
| 08.03 | வங்கி ஏற்புகள் | | | | | |
| 08.04 | ஏனையவை (தயவு செய்து குறிப்பிடவும்) | | | | | |
| **09.00** | **கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான எதிர்பாராதவைகள்** | | | | 50% | |
| 09.01 | செயலாற்ற முறிகள், விலைக் குறிப்பீட்டு முறிகள் மற்றும் உத்தரவாதங்கள் | | | | | |
| 09.02 | குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல் களுடன் தொடர்பான துணை நில் நாணயக்கடிதம் | | | | | |
| 09.03 | ஏனையவை (தயவு செய்து குறிப்பிடவும்) | | | | | |
| **10.00** | **குறுங்கால சுயஒடுக்கி விடுதல் வர்த்தகத்துடன் தொடர்பான எதிர்பாராதவைகள்** | | | | 20% | |
| 10.01 | கப்பற்படுத்தல் உத்தரவாதங்கள் | | | | | |
| 10.02 | ஆவணப்படுத்தப்பட்ட நாணயக் கடிதங்கள் | | | | | |
| 10.03 | வர்த்தகத்துடன் தொடர்பான ஏற்புகள் | | | | | |
| 10.04 | ஏனையவை (தயவு செய்து குறிப்பிடவும்) | | | | | |
| **11.00** | **விற்பனை மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள், வங்கிகளுடன் கொடுகடன் இடர்நேர்வு காணப்படுமிடத்து நாடலுடன் கூடிய சொத்து விற்பனைகள்** | | | | 100% | |
| 11.01 | விற்பனை மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள். | | | | | |
| 11.02 | நியதிகளுடன் விற்பனை செய்யப்பட்ட வீடமைப்புக் கடன்கள் | | | | | |
| 11.03 | நியதிகளுடன் விற்பனை செய்யப்பட்ட ஏனைய சொத்துக்கள் | | | | | |
| 11.04 | முன்னோக்கிய சொத்துக்களின் கொள்வனவுகள் | | | | | |
| 11.05 | பகுதியளவில் செலுத்தப்பட்ட பங்குகள்/ பிணையங்கள் | | | | | |
| 11.06 | ஏனையவை (தயவு செய்து குறிப்பிடவும்) | | | | | |

| குறியீடு | விபரங்கள் | ஐந்தொகையில் உள்ள விடயங்களின் முதல்தொகை | ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்களின் கொடுகடனுக்குச் சமனான தொகை | மொத்தம் | X இடர்நேர்வு | = இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| **12.00** | **தற்போதுள்ள பொறுப்பேற்பு உடன்படிக்கை யொன்றின் கீழான கடப்பாடுகள்** | | | | 50% | |
| 12.01 | பொறுப்பேற்கப்பட்ட பங்கு பிணையங்களின் விற்பனை | | | | | |
| 12.02 | சான்றிதழ்களை வழங்கும் வசதிகள் மீண்டும் பயன்படுத்தத்தக்க பொறுப்பேற்கப்பட்ட வசதிகள் | | | | | |
| 12.03 | ஏனையவை (தயவு செய்து குறிப்பிடவும்) | | | | | |
| **13.00** | **ஓராண்டு வரையான ஆரம்ப முதிர்ச்சியுடன் கூடிய அல்லது எந்த ஒரு நேரத்திலும் நிபந்தனையின்றி இரத்துச் செய்யப்படக்கூடிய ஏனைய கடப்பாடுகள்** | | | | 0% | |
| 13.01 | வழமையான துணைநில் வசதிகள் மற்றும் தொடர்புக் கொடுகடன்கள் | | | | | |
| 13.02 | எடுப்பனவு செய்யப்படாத தவணைக்கடன்கள் | | | | | |
| 13.03 | எடுப்பனவு செய்யப்படாத மேலதிக பற்று வசதிகள்/ பயன்படுத்தப்படாத தொடர்க் கொடுகடன் அட்டைகள் | | | | | |
| 13.04 | ஏனையவை (தயவு செய்து குறிப்பிடவும்) | | | | | |
| **14.00** | **1 ஆண்டு வரையான ஆரம்ப முதிர்ச்சியுடன் கூடிய கடப்பாடுகள்** | | | | 20% | |
| 14.01 | வழமையான துணைநில் வசதிகளும் தொடர்க் கொடுகடன்களும் | | | | | |
| 14.02 | எடுப்பனவு செய்யப்படாத தவணைக்கடன்கள் | | | | | |
| 14.03 | ஏனையவை (தயவு செய்து குறிப்பிடவும்) | | | | | |
| **15.00** | **ஓராண்டிற்குக் கூடுதலான ஆரம்ப முதிர்ச்சி களுடன் கூடிய ஏனைய கடப்பாடுகள்** | | | | 50% | |
| 15.01 | வழமையான துணைநில் வசதிகள் மற்றும் தொடர்க் கொடுகடன்கள் | | | | | |
| 15.02 | எடுப்பனவு செய்யப்படாத தவணைக்கடன்கள் | | | | | |
| 15.03 | ஏனையவை (தயவு செய்து குறிப்பிடவும்) | | | | | |
| 15.04 | வெளிநாட்டுச் செலாவணி மற்றும் வட்டி வீத ஒப்பந்தங்கள் | | | | | |
| **16.00** | **மொத்தம்** (மாற்றும் காரணிகளுக்காக வழிகாட்டல்களைப் பார்க்கவும்) | | | | | |
| 17.00 | மொத்தம் | | | | | |

ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்கள் மீதான வெளிப்படுத்துகைகள், இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதத்தினை கணிக்கும் பொழுது உள்ளடக்கப்படவேண்டும். முதல் தொகையினை கொடுகடன் மாற்றும் காரணிகளினால் பெருக்குவதன் மூலம் ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள கொடுகடன் இடர்நேர்வுகளின் மாற்றலை ஐந்தொகையிலுள்ள கொடுகடனின் சமமான தொகைக்கு மாற்றிக் கொள்ள முடியும். கொடுகடனின் சமமான தொகையானது, தொடர்பான சொத்து விபரங்களுக்கு பொருந்தத்தக்க வெளிநாட்டு கொடுகடன் தரமிடலின்படி நிறையேற்றப்படும்.

**இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதத்தின் மீதான கூற்று**
**வர்த்தக வங்கிகளின் மூலதனத்தளம்**

**நிறுவனத்தின் பெயர்:** ............................................................ .................. **அன்று உள்ளவாறு**

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | |
|---|---|---|
| | அடுக்கு 1 - மைய மூலதனம் | |
| 18 | செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள்/ பொது இருப்பு/ ஒப்படைக்கப்பட்ட மூலதனம் ++ | |
| 19 | ஒன்றுதிரளாத, மீட்புச் செய்யப்படாத முன்னுரிமைப் பங்குகள் | |
| 20 | பங்குவட்டம் | |
| 21 | நியதி ஒதுக்கு நிதியம் | |
| 22 | வெளியிடப்பட்ட பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இலாபம் (ஒன்று சேர்ந்த இழப்புக்கள்) | |
| 23 | பொதுவான, மாற்றல் ஒதுக்கங்கள் | |
| 24 | நிலையான மற்றும் நீண்ட கால முதலீடுகளின் விற்பனையிலிருந்து கிடைத்த வரிக்குப் பின்னரான மிகை இழப்பு | |
| 25 | வெளியிடப்படாத நடைமுறையாண்டின் இலாபங்கள் நட்டங்கள் | |
| 26 | சிறுபான்மை வட்டிகள் (மேலேயுள்ள மூலதன கூறுகளின் இணக்கத்துடன்) | |
| 27 | துணை மொத்தம் | |
| 28 | **கழிவுகள்**<br>நன்மதிப்பு | |
| 29 | **மொத்த அடுக்கு 1 மூலதனம்** | |
| | **அடுக்கு 2 - துணை நிரப்பு மூலதனம்** | |
| 30 | மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் (இ.ம. வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட படி) | |
| 31 | பொதுவான ஒதுக்கங்கள் | |
| 32 | கலப்பான (படுகடன்/ பங்கு) மூலதனச் சாதனங்கள் | |
| 33 | துணைக்கம்பனிகளினால் வழங்கப்பட்ட முன்னுரிமைப் பங்குகளிலிருந்து தோன்றிய சிறுபான்மை வட்டிகள் | |
| 34 | * ஒப்புதலளிக்கப்பட்ட துணைநில் தவணைப்படுகடன் (உண்மையான தொகை ரூ.................) | |
| 35 | **மொத்த அடுக்கு 2 மூலதனம்** | |
| 36 | **தகைமையுடைய அடுக்கு 2 மூலதனம்** | |
| 37 | **மொத்த மூலதனம்** | |
| 38<br>38.01<br>38.02 | **சீராக்கம் 1#**<br>தலைமை அலுவலகத்திலிருந்தும் இலங்கைக்கு வெளியேயுள்ள கிளைகளிலிருந்தும் இலங்கை ரூபாவில் வரவேண்டிய தொகை .......................<br>**கழிக்குக**: தலைமை அலுவலகத்திலிருந்தும் இலங்கைக்கு வெளியேயுள்ள கிளைகளிலிருந்தும் இலங்கை ரூபாவில் வரவேண்டிய தொகை (................) | |
| 39 | **சீராக்கங்களின் பின்னரான மொத்த மூலதனம் 1#** | |

# நிரல்கள் 38 இலிருந்து 42 வரையான வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளுக்கு மட்டுமே ஏற்புடைத்தனவாகும்.

**வரையறைகள்:**

(i) ஒப்புதலளிக்கப்பட்ட துணைநில் தவணைப்படுகடன் மொத்த அடுக்கு 1 மூலதனத்தில் 50% இற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
**முக்கிய குறிப்பு:** துணைநில் படுகடனின் **உண்மையான தொகை** அறிவிக்கப்பட வேண்டும்.

(ii) அடுக்கு 2 துணை நிரப்புக்கூறுகளின் மொத்தம், அடுக்கு 1 கூறின் ஆகக் கூடியது 100% இனை விஞ்சக்கூடாது.

(iii) பொதுவான ஒதுக்கங்கள் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் 1.25% இனை விஞ்சக்கூடாது.

மூலதனத் தொகையில் குறியீட்டுக்கூறுகள்

| | | | |
|---|---|---|---|
| 40 | **சீராக்கம் II*** | | |
| 40.01 | இலங்கைக்கு வெளியே தலைமை அலுவலகத்திலிருந்தும் கிளைகளிலிருந்தும் வெளிநாட்டு நாணயத்தில் வரவேண்டிய தொகை | (..................) | |
| 40.02 | இதன் சொந்த வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து வரவேண்டிய தொகை | (..................) | |
| 40.03 | **கழிக்குக:** இலங்கைக்கு வெளியேயுள்ள தலைமை அலுவலகத்திலிருந்தும் கிளைகளிலிருந்தும் வெளிநாட்டு நாணயத்தில் வரவேண்டிய தொகை | (..................) | |
| 40.04 | இதன் சொந்த வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து வரவேண்டிய தொகை | (..................) | |
| 41 | துணை மொத்தம் | (..................) | (..................) |
| 42 | **சீராக்கப்பட்ட மொத்த மூலதனம் *** | | |
| 43 | கழிவுகள் | | |
| 43.01 | கூட்டிணைக்கப்படாத வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துணைக் கம்பனிகளிலுள்ள பங்கு முதலீடு | (..................) | |
| 43.02 | பங்கு முதலீடு மற்றும் வங்கிகள்/ நிதியியல் சங்கங்களின் மூலதனத்தில் முதலீடு | (..................) | (..................) |
| 44 | **மூலதனத்தளம்** | | |

* வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளுக்கு ஏற்புடைத்தானவை

++ பொருத்தாதவற்றை வெட்டி விடவும்

### இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதத்தின் மீதான கூற்று
### வர்த்தக வங்கிகளின் மூலதனத்தளத்தினைக் கணித்தல்

**நிறுவனத்தின் பெயர்** : ................................................................

(ரூபாய் ஆயிரத்தில்)

| குறியீடு | | தொகை |
|---|---|---|
| 29 | மொத்த அடுக்கு 1 மைய மூலதனம் | |
| 44 | மொத்த மூலதனத்தளம் | |
| 45 | கொடுகடன் இடர்நேர்வுகளின் கீழான மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் | |
| 46 | சந்தை இடர்நேர்வு *10 | |
| 47 | தொழிற்பாட்டு இடர்நேர்வு *10 | |
| 48 | மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் | |

### இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதத்தின் மீதான கூற்று
### வர்த்தக வங்கிகளின் மூலதனத்தளத்தினைக் கணித்தல்

**மைய மூலதன விகிதம்** (ஆகக் குறைந்த விகிதம் 5%)

மொத்த அடுக்கு 1 மூலதனம் = x 100 = ....................

மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்

**மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன விகிதம்** (ஆகக் குறைந்த விகிதம் 10%)

மொத்த மூலதனம் = x 100 = ....................

மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்

## வரைவிலக்கணங்களும் தெளிவுபடுத்தல்களும்

### ஐந்தொகையிலுள்ள விடயங்கள்

**01.11 செயற்படுகின்ற கோரல்கள்**

குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கங்கள் தவிர்ந்த, முதலீடுகள், கடன்கள் மற்றும் முற்பணங்கள் போன்ற அனைத்து வெளிப்படுத்துகைகளும்.

**கோரலானது இடர்நேர்வு தணிப்பு தொடர்பான குறிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு காசு வைப்புக்கள், தங்கம், படுகடன் பிணையங்கள் என்பனவற்றினால் பிணையிடப்பட்டிருக்குமாயின், கடன்பாட்டாளரின் இடர்நேர்வு நிறையேற்றலுக்குப் பதிலாக பிணைகளின் வழங்குநருக்கு ஏற்புடைத்தான இடர்நேர்வு நிறைகளைப் பயன்படுத்த முடியும்.**

**01.01 அரசாங்கம் மற்றும் மத்திய வங்கிகள் மீதான கோரல்கள்**

அனைத்து வெளிப்படுத்துகைகளும் நாடுகள் மற்றும் அவற்றின் மத்திய வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களையும், நாடுகள் மற்றும் அவற்றின் மத்திய வங்கிகளினால் வழங்கப்பட்ட பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளையும் உள்ளடக்கியுள்ளன.

**01.01.01 உள்நாட்டு அரசாங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கி மீதான கோரல்கள்**

அனைத்து வெளிப்படுத்துகைகளும் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள், இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல் உடமைகள், இலங்கை அரசாங்கத்தின் பிணையங்கள் மற்றும் மத்திய வங்கியின் பிணையினைக் கொண்ட உடமைகள், டொலர் முறிகள் உட்பட அபிவிருத்தி முறிகளின் உடமைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. நாணயவிதிச்சட்டம் 422இன் 93ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியுடன் நியதி ஒதுக்கு தேவைகளும் வங்கியின் பெயரில் தீர்ப்பனவு நிலுவைகளும் பேணப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்டன. மூலதனத்தின் ஒரு பகுதி இலங்கை மத்திய வங்கியில் வெளிநாட்டு நாணயத்தில் ஒதுக்கொன்றாகப் பேணப்பட்டது.

**01.01.02 மற்றைய நாடுகள் மற்றும் அவற்றின் மத்திய வங்கிகள் மீதான கோரல்கள்**

இலங்கை தவிர்ந்த மற்றைய நாடுகளின் மத்திய அரசாங்கங்களுக்கும் அந்நாடுகளின் மத்திய வங்கிகளுக்குமான கடன்களும் மற்றும் முற்பணங்களும் அவற்றினால் வழங்கப்பட்ட பிணையங்களில் செய்யப்பட்ட முதலீடுகளும்.

**01.01.03 பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கி, பன்னாட்டு நாணய நிதியம், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் ஐரோப்பிய சமூகம் என்பன மீதான கோரல்கள்**

பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கி, பன்னாட்டு நாணய நிதியம், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் ஐரோப்பிய சமூகம் என்பனவற்றிற்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் அவற்றில் செய்யப்பட்ட முதலீடுகள் என்பன உட்பட அனைத்து வெளிப்படுத்துகைகளும்.

**01.01.04 மத்திய அரசாங்கம்/ மத்திய அரசல்லா அரசதுறை நிறுவனங்கள்**

அனைத்து அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் மாகாண அதிகாரசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவற்றிற்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் அவற்றுடன் செய்யப்பட்டுள்ள முதலீடுகள் என்பன உட்பட அனைத்து வெளிப்படுத்துகைகளும்.

**01.01.04.01 தெளிவான அரச உத்தரவாதமொன்றினால் உள்ளடக்கப்பட்ட மத்திய அரசாங்கம்/ மத்திய அரசல்லா அரசதுறை தொழில் முயற்சிகள் மீதான கோரல்கள்**

தெளிவான அரச உத்தரவாதமொன்று அத்தகைய வெளிப்படுத்துகைகள் 100% பிணையப்படுத்துமாயின் அல்லது கோரலின் ஒரு பகுதி அவ்வாறு உள்ளடக்கப்பட்டிருப்பின் இடர்நேர்வு நிறையேற்றல் 0% இல் இருக்கும்.

**01.01.04.02 மத்திய அரசாங்கம்/ மத்திய அரசல்லா அரசதுறை நிறுவனங்கள் மீதான ஏனைய கோரல்கள்**

01.01.04.01இல் குறிப்பிடப்பட்ட வெளிப்படுத்துகைகள் தவிர, அனைத்து அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவற்றிற்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் அத்துடன் அவற்றுடன் செய்யப்பட்டுள்ள முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்ற அனைத்து வெளிப்படுத்துகைகளும்

**01.01.05 பல்புடை அபிவிருத்தி வங்கிகள் (குறித்துரைக்கப்பட்ட) மீதான கோரல்கள்**

பின்வருவனவற்றினால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் அவற்றினால் செய்யப்பட்ட முதலீடுகள் உட்பட அனைத்து வெளிப்படுத்துகைகளும்

புத்தாக்கம் மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி மற்றும் பன்னாட்டு நிதிக்கூட்டுத்தாபனம் என்பனவற்றை உள்ளடக்கிய உலக வங்கி குழுமம்

ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆபிரிக்க அபிவிருத்தி வங்கி

புத்தாக்கம் மற்றும் அபிவிருத்திக்கான ஐரோப்பிய வங்கி

அமெரிக்காவிற்கிடையிலான அபிவிருத்தி வங்கி

ஐரோப்பிய முதலீட்டு வங்கி

ஐரோப்பிய முதலீட்டு நிதியம்

நோர்டின் முதலீட்டு வங்கி

கரிபியன் அபிவிருத்தி வங்கி

இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி

ஐரோப்பிய அபிவிருத்தி வங்கிச்சபை

**01.01.06 பல்புடை அபிவிருத்தி வங்கிகள் (ஏனையவை) மீதான கோரல்கள்**

01.01.05இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் நீங்கலாக, பல்புடை அபிவிருத்தி வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் அவற்றில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய அனைத்து வெளிப்படுத்துகைகளும்

**01.02. வங்கிகள் மீதான கோரல்கள்**

கடன்கள் மற்றும் முற்பணங்கள், வைத்திருக்கப்படும் பணங்கள், வைப்புக்கள் தொகுதிக்கடன்கள் (வழங்கும் வங்கியின் மூலதனமாக இவற்றைக் கருதக்கூடாது) மற்றும் மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் வங்கிகளாக அங்கீகரிக்கப்பட்டு நாட்டின் ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகாரிகளினால் உரிமம் வழங்கப்பட்ட நிறுவனங்களில் காணப்பட்ட முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய அனைத்து வெளிப்படுத்துகைகளும்

**01.02.01 குறுங்கால கோரல்கள்**

குறிப்பு 01.02இல் குறிப்பிடப்பட்டவாறு, ஆரம்ப ஒப்பந்த ரீதியான 3 மாதங்கள் அல்லது குறைவான முதிர்ச்சியொன்றுடன் கூடிய மற்றைய அனைத்து வங்கிகளுக்குமான வெளிப்படுத்துகைகள் காணப்பட்டதுடன் இதனை மீண்டும் பயன்படுத்தவும் கூடாது.

**01.02.02 ஏனைய கோரல்கள்**

குறிப்பு 01.02.01இல் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த மற்றைய அனைத்து வங்கிகளுக்குமான 01.02இன் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறான வங்கி வெளிப்படுத்துகைகள்

**01.03 பிணையங்கள் நிறுவனங்கள் உட்பட கம்பனிகள் மீதான கோரல்கள்**

இது, கம்பனி நிறுவனங்கள் அல்லது இக்கூற்றில் வேறு எங்கும் குறிப்பிடப்படாத காப்புறுதிக்கம்பனிகள் உள்ளிட்டவற்றிற்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள், அவற்றில் செய்யப்பட்ட முதலீடுகள் பங்குத்தரகு நிறுவனங்கள், முதனிலை வணிகர்கள், நிதிக்கம்பனிகள், குத்தகைக்குவிடும் கம்பனிகள், வணிக வங்கிகள் மற்றும் முதலீட்டு வங்கிகள் போன்ற பிணையங்கள் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் அவற்றில் செய்யப்பட்ட முதலீடு என்பனவற்றை உள்ளடக்கிய அனைத்து வெளிப்படுத்துகைகளையும் உள்ளடக்குகிறது.

மத்திய வங்கியின் சிறப்பு ஒப்புதலைப் பெற்ற வங்கிகள் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட அனைத்து கம்பனி கோரல்களும் வெளித் தரமிடலைப் பொருட்படுத்தாமல் 100%இல் தெரிவு செய்து கொள்ள முடியும். எனினும், இத்தற்றுணிபு கிடைக்காது போகும் பொழுது வங்கிகள் தனியொரு உடன்பாட்டு அணுகுமுறைக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அதாவது கிடைக்கின்ற இடங்களில் ஒன்றில் தரமிடலை அல்லது 100% இல் கலந்த அனைத்து கம்பனிகளுக்குமான இடர்நேர்வு நிறையேற்றப் பயன்படுத்தல் வேண்டும்.

**01.04 ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட சில்லறை சொத்துப்பட்டியல்**

இது, சில்லறை சொத்துப்பட்டியல் மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளாக தகைமை பெற்றுள்ள தொழில் முயற்சிகளுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் உட்பட அனைத்து வெளிப்படுத்துகைகளையும் உள்ளடக்குகிறது. அத்தகைய சொத்துப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து செயலாற்ற வெளிப்படுத்துகைகளும் 75% இடர்நேர்வு நிறைக்கு தகைமை பெறுகின்றன.

**01.04.01 சில்லறை சொத்துப்பட்டியல் மீதான கோரல்கள்**

பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்த கோரல்கள் சில்லறை சொத்துப்பட்டியலில் உள்ளடக்கப்படுவதற்கு தகைமை பெறும்.

சில்லறை சொத்துப்பட்டியலுக்காக தகைமை பெறுகின்ற பிரமாணம் *

* பிரமாணம் சார்ந்தவை - வெளிப்படுத்துகை தனிப்பட்ட ஒரு ஆளுக்கான அல்லது ஆட்களுக்கானதாக இருத்தல் வேண்டும்

* சாதனங்களின் பிரமாணம் - வெளிப்படுத்துகை பின்வரும் சாதன வகைகளிலொன்றாக இருத்தல் வேண்டும்

- மேலதிகப் பற்றுக்கள் மற்றும் கொடுகடன் அட்டைகள் உள்ளிட்ட சுழலும் கொடுகடன் மற்றும் தொடர்க் கொடுகடன்கள்
- தனிப்பட்ட தவணைக்கடன்கள் மற்றும் குத்தகை நிதியிடல் (அதாவது தவணைக்கடன்கள், ஊர்திக்கடன்கள் மற்றும் குத்தகைக்கு நிதியிடல், மாணவர் மற்றும் கல்விக்கடன், தனிப்பட்ட நிதியிடல்)

- அடகு வைத்தல் முற்பணங்கள்

- முறிகள் மற்றும் பங்குகள் போன்ற பிணையங்கள் நீக்கப்பட்டுள்ளன (முதலீடுகளாகக் கருதப்படவேண்டும்)

- வதிவிட சொத்துக்களினால் பிணையிடப்பட்ட கோரலாக உள்ளடக்கப்படுவதற்கு தகைமைபெற்ற சொத்து ஈடுகளினால் பிணையிடப்பட்ட கடன்கள் நீக்கப்படுகின்றன (குறிப்பு 01.06இனைப் பார்க்கவும்)

* சிறு அளவுப் பிரமாணங்கள் - ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட சில்லறைச் சொத்துப்பட்டியல், சொத்துப்பட்டியலிலுள்ள இடர்நேர்வுகளை குறைக்கின்ற அளவிற்கு போதுமானளவில் பன்முகப்படுத்தப்பட வேண்டும். இப்பிரமாணங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கொடுகடன் இடர்நேர்வு தணிப்பினை பரிசீலனைக்கெடுக்காமல், ஒரு இணைக்கிணை தரப்பினருக்கான கூட்டு மொத்த வெளிப்படுத்துகை எதுவும் பொதுவான ஒழுங்கு முறைப்படுத்தல் சொத்துப்பட்டியலின் (எந்த ஒரு செயற்படாத சில்லறைக் கடன்களும் நீங்கலாக) 0.2% இனை விஞ்சக்கூடாது. (ஒரு இணைத்தரப்பினர் - ஒன்று அல்லது பல நிறுவனங்கள் சேர்ந்து உருவாக்கும் தனியொரு நன்மை பெறுநர், அதாவது சிறிய வியாபாரமொன்று இன்னொரு சிறிய வியாபாரத்துடன் இணைகின்ற விடயத்தினைப் பொறுத்தவரை வரையறையானது இரண்டு வியாபாரங்களின் மீதுமான வங்கியின் கூட்டுமொத்த வெளிப்படுத்துகைகளுக்கு ஏற்புடைத்ததாக இருக்கும்.)

* தனிப்பட்ட வெளிப்படுத்துகைகளின் ஆகக் கூடிய பெறுமதி - மூலதன நிதியத்தில் 0.2% இற்குக் குறைவாக அல்லது ரூ.10 மில்லியன்.

**01.04.02 சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் மீதான கோரல்கள்**

பின்வரும் பிரமாணங்களைப் பூர்த்தி செய்கின்ற கோரல்கள் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் சொத்துப்பட்டியலில் உள்ளடக்கப்படுவதற்கு தகைமை பெறும்.

சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் சொத்துப்பட்டியலில் உள்ளடக்கப்படுவதற்கான தகைமை பெறும் பிரமாணம்:

* பிரமாணம் சார்ந்தவை - வெளிப்படுத்துகை சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கானதாக இருத்தல் வேண்டும்

* சாதனங்களின் பிரமாணம் - வெளிப்படுத்துகை சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் உற்பத்தி வகைக்கானதாக மட்டுமே இருத்தல் வேண்டும்

* சிறு அளவுப் பிரமாணங்கள் - ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட சில்லறைச் சொத்துப்பட்டியல், சொத்துப்பட்டியலிலுள்ள இடர்நேர்வுகளை குறைக்கின்ற அளவிற்கு போதுமானளவில் பன்முகப்படுத்தப்பட வேண்டும். இப்பிரமாணங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு கொடுகடன் இடர்நேர்வு தணிப்பினை பரிசீலனைக்கெடுக்காமல், ஒரு இணைத்தரப்பினருக்கான கூட்டு மொத்த வெளிப்படுத்துகை எதுவும் பொதுவான ஒழுங்கு முறைப்படுத்தல் சொத்துப்பட்டியலின் (எந்த ஒரு செயற்படாத சில்லறைக் கடன்களும் நீங்கலாக) 0.2% இனை விஞ்சக்கூடாது. (ஒரு இணைத்தரப்பினர் - ஒன்று அல்லது பல நிறுவனங்கள் சேர்ந்து உருவாக்கும் தனியொரு நன்மை பெறுநர், அதாவது சிறிய வியாபாரமொன்று இன்னொரு சிறிய வியாபாரத்துடன் இணைகின்ற விடயத்தினைப் பொறுத்தவரை வரையறையானது இரண்டு வியாபாரங்களின் மீதுமான வங்கியின் கூட்டுமொத்த வெளிப்படுத்துகைகளுக்கு ஏற்புடைத்ததாக இருக்கும்.)

மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் வரைவிலக்கணம்:

* நிலம் மற்றும் கட்டடம் நீங்கலாக சொத்துக்களின் பெறுமதி ரூ.35 மில்லியனை விஞ்சக்கூடாது.

* கடனின் ஆகக்கூடிய அளவு ரூ.35 மில்லியனாக இருத்தல் வேண்டும்.

* ஆண்டு மொத்தப் புரள்வு ரூ.30 மில்லியனுக்கும் குறைவாக இருத்தல் வேண்டும்.

மேலே கூறப்பட்ட மூன்று பிரமாணங்களில் இரண்டினைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**01.05 வதிவிட சொத்துக்களினால் பிணையிடப்பட்ட வதிவிட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள்**

வதிவிட சொத்துக்களின் மூலம் முதனிலை ஈட்டின் மூலம் முழுமையாகப் பிணையிடப்பட்டுள்ள வதிவிட வீடமைப்புக் கடன்கள் கடன்பாட்டாளர் வகிப்பதாக அல்லது வகிக்க இருப்பதாக அல்லது வாடகைக்கு விடப்பட்டதாக இருக்குமிடத்து 35% மான இடர்நேர்வு நிறைக்கு தகைமை பெறும்.

முன்னுரிமை இடர்நேர்வு நிறையேற்றலைப் பயன்படுத்துவதனை இயலச் செய்யும் விதத்தில் வங்கிகள் தகைமை பெறுவதற்கான பிரமாணங்களை மிகக் கடுமையாகப் பின்பற்ற வேண்டும்.

இச்சலுகை ரீதியான இடர்நேர்வு நிறையேற்றலுக்கு தகைமை பெறுவதற்கு பின்வரும் மதிப்பீட்டு பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். குறைந்தது கடன் வழங்கும் நேரத்தில் சொத்தின் மதிப்பிடல் 75% கொண்ட அளவு, சுதந்திரமான வெளியிலுள்ள மதிப்பீட்டாளர், மதிப்பீட்டின் கால இடைவெளி என்பனவாகும்.

**01.06 காசு அல்லது தங்கத்தினால் பிணையிடப்பட்ட கோரல்கள்**

கோரல்கள் காசு வைப்புக்கள் அல்லது தங்கத்தினால் பிணையிடப்பட்டிருக்குமாயின், அத்தகைய தொகையினை பிணையின் இடர்நேர்வு தணிப்பின் தாக்கத்தினைக் கவனத்திற் கொண்டு வெளிப்படுத்துகைகளிலிருந்தும் கழிக்க முடிவதுடன் மீதியானது பொருத்தமான ஐந்தொகை வகையின் கீழ் தொடர்பான இடர்நேர்வு நிறையேற்றலுக்கு இணங்க இடர்நேர்வு நிறையேற்றல் மேற்கொள்ளப்படும்.

**02.00 வரவேண்டிய கடந்த கால கோரல்கள்:**

செயற்படா முற்பணங்கள் மீதான வட்டியினை இடை நிறுத்துவது தொடர்பான பணிப்புரைகளின்படி செயற்படாதவை என வகைப்படுத்தப்பட்ட முதலீடுகள், கடன்கள் மற்றும் முற்பணங்கள் போன்ற அனைத்து வெளிப்படுத்துகைகளையும் உள்ளடக்கிய அனைத்து கோரல்களும் குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கங்கள் தவிர ஒதுக்கங்களை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக அறவிடமுடியா மற்றும் ஐய முற்பணங்களாக வகைப்படுத்தப்பட்டதாகவும் வரவேண்டிய கடந்தகால கோரல்களாகவும் கருதப்படவேண்டும்.

**02.01 பிணையிடப்படாத வரவேண்டிய கடந்த கால தொகை:**

குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் இல்லாமல் 90 நாட்களுக்கும் கூடுதலாக நிலுவையில் நின்ற எந்த ஒரு கடனினதும் பிணையிடப்படாத (வதிவிட ஈட்டுக் கடனுக்கு தகைமை பெற்றவை தவிர) பங்கு.

**02.02 வரவேண்டிய கடந்த கால வதிவிட ஈட்டுக் கடன்கள்:**

குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் இல்லாமல், 90 நாட்களுக்கும் கூடுதலாக நிலுவையிலுள்ள வதிவிட ஈட்டுக்கடன்கள் அத்தகைய கடன்கள் ஈட்டுக்கடன்களாகத் தகைமை பெறுவதற்க 04.06 குறித்துரைக்கப்பட்ட பிரமாணத்தினைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**03.00 காசு - உள்நாட்டு நாணயம்:**

இலங்கையில் சட்ட ரீதியான நாணயமான நாணயத் தாள்களும் குத்திகளும்

**வெளிநாட்டு நாணயம்:**

அறிக்கையிடும் நாளன்று இலங்கை ரூபாவிற்கு மாற்றல் செய்யப்பட்ட வெளிநாட்டில் சட்ட ரீதியான நாணயங்களிலுள்ள நாணயத்தாள்களும் குத்திகளும்

**04.00 தங்கமும் தங்கக்கட்டிகளும்:**

வங்கியின் நிலவறைகளில் வைக்கப்பட்டுள்ள தங்கமும் தங்கக்கட்டிகளும். பாதுகாப்புக் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டுள்ள தங்க விடயங்கள் நீக்கப்படல் வேண்டும்

**05.00 சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்கள்:**

காசோலைகள், வரைவுகள் மற்றும் காசு விடயங்கள், வங்கிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் பெயரில் வரையப்பட்ட காசுக்கட்டளைகள், அஞ்சல் கட்டளைகள் போன்றவை மற்றும் சமர்ப்பிக்கப்பட்டதும் உடனடியாக கொடுப்பனவு செய்யப்படத்தக்கவை சேகரிப்பு நிலையிலுள்ள இறக்குமதி உண்டியல்கள் ஏற்றுமதி உண்டியல்கள் போன்ற வர்த்தக உண்டியல்கள் இவ்விடயத்திலிருந்து நீக்கப்பட வேண்டியதுடன் கடன்கள் மற்றும் முற்பணங்களாக கருதப்படவேண்டும்.

**06.00 மற்றைய அனைத்து சொத்துகள்:**

இக்கூற்றில் வேறு எங்கும் உள்ளடக்கப்படாத மற்றைய அனைத்து சொத்துக்கள் அல்லது முதலீடுகள்

**ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்கள்:**

**08. நேரடி கொடுகடன் பதிலீடுகள்:**

**08.01 படுகடன்களின் பொதுவான உத்தரவாதங்கள்:**

கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் இழப்புக்களின் இடர்நேர்வுகள் காணப்படுமிடத்து படுகடன்களின் பொதுவான உத்தரவாதங்கள் நேரடி பொறுப்பில் காட்டப்படலாம் என்பதுடன் இணைத்தரப்பினரின் மீதான நேரடிக் கோரலாகவும் மாற்றம் பெறலாம். இவை காப்புறுதி முகவர்கள், விற்பனை முகவர்கள் போன்றவர்களினால் அவர்களது நன்மை பெறுநர்களுக்கு செலுத்தத்தவறும் காப்புறுதி வட்டம், விற்பனைப் பெறுகைகள் போன்ற எந்த ஒரு கொடுப்பனவினையும் உள்ளடக்கும் விதத்தில் அத்தகைய காப்புறுதி முகவர்கள் விற்பனை முகவர்கள் போன்றவற்றினை உள்ளடக்குகின்றது. சுங்கத்தின் பெயரிலான வங்கி உத்தரவாதங்கள் அவற்றின் இணைத்தரப்பினரால் கொடுப்பனவு செய்யப்படாத சுங்கத் தீர்வையும் உள்ளடங்கும். இது கடன்களுக்கான நிதியியல் உத்தரவாதங்களாக தொழிற்படும் நாணயக்கடிதங்களையும், பிணையங்கள் மற்றும் ஏனைய நிதியியல் பொறுப்புக்களையும் உள்ளடக்குகிறது.

**08.03 வங்கி ஏற்புக்கள்:**

உண்டியல் வசதிகளின் மீதான ஏற்புக்களிலிருந்து எழும் பொறுப்புக்களை உள்ளடக்குகிறதெனினும் வங்கிகளினால் கழிவிடப்பட்ட உண்டியல்களை நீக்குகிறது. வாடிக்கையாளரொருவரின் நிதியியல் கடப்பாடுகளை மீளச் செலுத்துவதற்காக பொறுப்பேற்கப்பட்ட இடர்நேர்வு பங்கேற்பு மற்றும் அதனையொத்த கடப்பாடுகளை அவ்வாறு செய்ய அவர் தவறும் போது அவை உள்ளடக்கப்படவேண்டும்.

**08.04 ஏனையவை:**

கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் இழப்புக்களின் அதே இடர்நேர்வுகளைக் கொண்டுள்ள ஏனைய எந்த ஒரு கடன்பாடும் இணைத்தரப்பினரின் மீதான நேரடிக் கோரலுக்குச் சமமான தொகையும்

**09. கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான எதிர்பாரா நிகழ்வுகள்:**

**09.01 செயலாற்றுகை முறிகள், விலைக்குறிப்பீட்டு முறிகள் மற்றும் உத்தரவாதங்கள்:**

கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான செயலாற்றுகை முறிகள், விலைக்குறிப்பீட்டு முறிகள் மற்றும் உத்தரவாதங்கள் போன்ற விடயங்கள் மூன்றாந்தரப்பினரின் கொடுப்பனவுகளுக்கான மாற்றமுடியாத கடப்பாடுகள், ஒப்பந்தங்கள் அல்லது கொடுக்கல் வாங்கல்களின் வாடிக்கையாளரின் நிதியல்லா கடப்பாடுகள் தொடர்பாக கடப்பாடுகள் அவர் நிறைவேற்றத் தவறுவதன் மூலம் ஏற்படும் இழப்புக்களின் இடர்நேர்வுகள் தோன்றுமிடத்து அத்தகைய எதிர்பாரா நிகழ்வுகள், இணைத்தரப்பினர் கொடுப்பனவுகளைச் செய்யத்தவறும் சந்தர்ப்பங்கள் தவிர நிகழக்கூடிய அல்லது நிகழாத சந்தர்ப்பங்களைப் பொறுத்து உண்மையான பொறுப்புகளுக்குள் ஒதுக்கப்படக்கூடும்.

**09.02 குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான துணைநில் நாணயக்கடிதங்கள்:**

குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான எதிர்பாரா நிகழ்வுப் பொறுப்புக்கள். இங்கும் கூட இணைத்தரப்பினர் கொடுப்பனவுகளை செய்யத்தவறும் சந்தர்ப்பங்கள் தவிர நிகழக்கூடிய அல்லது நிகழாத சந்தர்ப்பங்களைப் பொறுத்து உண்மையான பொறுப்புக்களுக்குள் ஒதுக்கப்படக்கூடும்.

**09.03 ஏனையவை:**

வாடிக்கையாளர் ஒருவர் நிதியல்லாக் கடப்பாடுகளை அல்லது ஒப்பந்தம் அல்லது கொடுக்கல் வாங்கல்களின் நியதிகளை நிறைவேற்றத் தவறுமிடத்து மூன்றாந்தரப்பினருக்கான கொடுப்பனவுகளுக்கான மாற்ற முடியாத கடப்பாடுகளிலிருந்து தோன்றுகின்ற மற்றைய எதிர்பாரா பொறுப்புக்கள்.

**10. குறுகிய கால சுயமாக ஒடுக்கிவிடும் வர்த்தகத்துடன் தொடர்பான எதிர்பாரா நிகழ்வுகள்:**

**10.01 கப்பற்படுத்தல் உத்தரவாதங்கள்:**

பொருட்களை ஏற்றியமைக்கான சுமை உண்டியல்களை சமர்ப்பிக்காமல் அத்துடன்/ அல்லது பெறுகின்ற தரப்பினரின் ஏனைய கப்பற்படுத்தல் ஆவணங்கள் இன்றி பொருட்களை விடுவிப்பதிலிருந்து தோன்றும் அனைத்து பொறுப்புக்களுக்கெதிராகவும் அறிக்கையிடும் நிறுவனம் பெயர் குறித்துரைக்கப்பட்ட கப்பற்படுத்தல் முகவருக்கு இழப்பீடுகளை முழுமையாகச் செலுத்த உடன்படுமிடத்து அறிக்கையிடும் நிறுவனங்களினால் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் உத்தரவாதங்கள்.

**10.02 நாணயக்கடிதத்தின் ஆவணப்படுத்தல்:**

முக்கியமான கப்பற்படுத்தல் நிறுவனங்களினால் பிணையிடப்பட்ட ஆவணப்படுத்தப்பட்ட கொடுகடன்கள் இவை குறுங்காலத்தைக் கொண்டனவாக சுயமாக ஒடுக்கக்கூடியனவாக வர்த்தகத்துடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களாகும்.

**10.03 வர்த்தகத்துடன் தொடர்பான ஏற்புகள்:**

ஏற்புக்களிலிருந்து எழுகின்ற பொறுப்புக்கள் இவை ஒன்றில் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு குறித்துரைக்கப்பட்ட வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. உ-ம்: நாணயக்கடிதம்

**10.04 ஏனையவை:**

குறுங்கால சுய ஒடுக்கி விடுதல் வர்த்தகத்துடன் தொடர்பான கடப்பாடுகளிலிருந்து எழும் எதிர்பாராப் பொறுப்புக்கள்

**11. வங்கியில் கொடுகடன் இடர்நேர்வு காணப்படுமிடத்து நாடலுடன் விற்பனை மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் சொத்துக்களின் விற்பனை:**

இவ்விடயங்களுக்கான இடர்நேர்வுகள் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்ட இணைத்தரப்பினரை விட முக்கியமான சொத்துக்கள் அல்லது சொத்துக்களின் வழங்குனர்களது அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படவேண்டும்.

**11.01 விற்பனை மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்:**

விற்பனை மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கை என்பது வங்கியொன்று சொத்துக்கள் மூன்றாந்தரப்பினருக்கு உடன்பட்ட விலையொன்றில் உடன்பட்ட எதிர்கால திகதியொன்றில் மீள்கொள்வனவு செய்வதென்ற கடப்பாட்டின் காரணமாக மேற்கொள்ளப்படுவதாகும். கொள்வனவு மற்றும் மீள் விற்பனை உடன்படிக்கைகள் பிணையிடப்பட்ட கடன்களாகக் கருதப்படல் வேண்டும். குறிப்பிட்ட சொத்து ஐந்தொகையிலுள்ள விடயமாக அறிவிக்கப்பட்டிருந்தாலொழிய இடர்நேர்வானது இணைத்தரப்பினருக்கான வெளிப்படுத்துகையொன்றாக அளவிடப்படவேண்டும் இதனால் குறிப்பிட்ட சொத்திற்கான பொருத்தமான இடர்நேர்வு பயன்படுத்தப்படவேண்டும்.

**11.02 ஏற்கனவேயுள்ள நிபந்தனைகளுடன் விற்கப்பட்ட வீடமைப்புக் கடன்கள்:**

ஏற்கனவேயுளள நிபந்தனையுடன் வீடமைப்புக் கடனின் தொகை இணைத்தரப்பினருக்கு விற்கப்படுமிடத்து கொடுகடன் இடர்நேர்வு வங்கியுடனேயே இருக்கும்.

**11.03 ஏற்கனவேயுள்ள நிபந்தனைகளுடன் விற்கப்பட்ட ஏனைய சொத்துக்கள்:**

ஏற்கனவேயுள்ள நிபந்தனைகளுடன் சொத்துக்கள் விற்கப்படுமிடத்து கொடுகடன் இடர்நேர்வு அறிக்கையிடும் நிறுவனங்களிலேயே இருக்கும். சொத்துக்களை வைத்திருப்பவர் உடன்பட்ட காலப்பகுதியொன்றிற்குள் அல்லது குறிப்பிட்ட விபரிக்கப்பட்ட சூழ்நிலையொன்றின் கீழ் அறிக்கையிட்ட நிறுவனத்திலேயே மீண்டும் வைத்திருப்பதற்கு உரித்துடையவராவர் உ-ம் குறிப்பிட்ட சொத்தின் பெறுமதி அல்லது கொடுகடனின் தகைமை தேய்வடையும்.

**11.04 முன்னோக்கிய சொத்துக்களின் கொள்வனவுகள்:**

குறித்துரைக்கப்பட்ட எதிர்கால திகதியில் அத்துடன் அல்லது முன்னொழுங்கு செய்யப்பட்ட நியதிகளில் கடனொன்றை, பிணையத்தினை அல்லது மற்றைய சொத்துக்களை இன்னொரு தரப்பினரிடமிருந்து கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு

**11.05 பகுதியளவில் கொடுப்பனவு செய்யப்பட்ட பங்குகள்/ பிணையங்கள்:**

பகுதியளவில் கொடுப்பனவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் மீது செலுத்தப்படாத தொகை காணப்படுமிடத்து வழங்குநரானவர் முன்னரே தீர்மானிக்கப்பட்ட அல்லது எதிர்காலத்தில் குறித்துரைக்கப்படாத திகதியொன்றில் கொடுப்பனவைச் செய்யுமாறு வங்கியைக் கேட்டுக் கொள்ளமுடியும்.

**11.06 ஏனையவை:**

குறிப்பிட்ட எடுப்பனவுகளுடன் கூடிய முன்னோக்கிய வைப்புக்களினை வைத்திருத்தல் மற்றும் ஏனைய கடப்பாடுகள் முன்னோக்கிய வைப்பு என்பது இரு தரப்பினருக்குமிடையிலான உடன்படிக்கையொன்றாகும். இதன் மூலம் தீர்மானிக்கப்பட்ட எதிர்வரும் திகதியொன்றில், உடன்பாடு காணப்பட்ட வட்டி வீதமொன்றில் வைப்புக்களை ஒருவர் விற்க மற்றவர் வாங்கிக் கொள்வார். முன்னோக்கிய வைப்பினை வைத்திருப்பதற்கான கடப்பாடு இவ்விடயத்தின் கீழும் அறிவிக்கப்பட வேண்டியதுடன் இணைத்தரப்பினருக்கு பொருத்தமான இடர்நேர்வு நிறையேற்றல் அடிப்படையிலும் அறிவிக்கப்படவேண்டும்.

**12. நடைபெற்று வரும் பொறுப்பேற்பு உடன்படிக்கையின் கீழான பொறுப்புக்கள்:**

**12.01 பங்குகள் பிணையங்களின் வழங்கலைப் பொறுப்பேற்றல்:**

இன்னொரு நிறுவனத்தினால் துணைப் பொறுப்பேற்ற தொகை நீங்கலான, பங்குகள் மற்றும் பிணையங்களைப் பொறுப்பேற்றதின் காரணமாக ஏற்பட்ட பொறுப்பு

**12.02 சான்றிதழ்களை வழங்குகின்ற வசதிகளும் மாறிக் கொண்டிருக்கும் பங்குகளை பொறுப்பேற்கும் வசதிகளும்:**

அறிக்கையிடுகின்ற வங்கிகள் பொறுப்பேற்றுக் கொள்வதற்கான கடப்பாட்டினைக் கொண்டிருக்கின்ற சான்றிதழ்களின் வழங்கலினூடாக முன்னரே தீர்மானிக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் விபரிக்கப்பட்ட அளவிற்கு கடன்பாட்டாளர் நிதிகளை எடுப்பனவு செய்யக்கூடிய ஒழுங்குகளைக் கொண்டது.

**12.03 ஏனையவை:**

தற்பொழுது பங்குகளை பொறுப்பேற்கும் உடன்படிக்கைகளின் காரணமாக ஏற்பட்ட மற்றைய கடப்பாடுகள்

**13. ஓராண்டு வரையான ஆரம்ப முதிர்ச்சி அல்லது எந்த ஒரு நேரத்திலும் நிபந்தனையெதுவுமின்றி இரத்துச் செய்யக்கூடிய ஏனைய கடப்பாடுகள்**

**13.01 வழமையான துணைநில் வசதிகளும் தொடர்க் கொடுகடன்களும்:**

கடப்பாடுகள் எந்த ஒரு பிணிக்கும் ஒழுங்குகளினதும் எடுப்பனவு செய்யப்படாத பங்கினை உள்ளடக்குகிறது. இது அறிக்கையிடும் நிறுவனம் எதிர்கால திகதியில் நிதியினை வழங்குவதற்கான கடப்பாட்டினை ஏற்படுத்துகின்றது. அத்தகைய கடப்பாடுகள் ஓராண்டிற்கும் குறைவான ஆரம்ப முதிர்ச்சியை அல்லது அறிக்கையிடும் வங்கியினால் அதன் தற்றுணிபின்படி எந்த நேரத்திலும் நிபந்தனையின்றி இரத்துச் செய்யப்படக்கூடிய தன்மையினைக் கொண்டிருக்கும். நாணயக்கடிதம், நம்பிக்கைப் பெறுகைகள் போன்றனவற்றிற்கான வழமையான துணைநில் வசதிகளும் தொடர்க்கொடுகடன்களும் இவ்விடயத்தின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டும்.

**13.02 எடுப்பனவு செய்யப்படாத தவணைக் கடன்கள்:**

ஓராண்டிற்கும் குறைவான ஆரம்ப முதிர்ச்சியுடன் அல்லது அறிக்கையிடும் வங்கியினால் எந்த நேரத்திலும் நிபந்தனை எதுவுமின்றி இரத்துச் செய்யப்படக்கூடியதுமான தவணைக்கடனில் எடுப்பனவு செய்யப்படாத பகுதி.

**13.03 எடுப்பனவு செய்யப்படாத மேலதிகப் பற்று வசதிகள்/ பயன்படுத்தப்படாத கொடுகடன் அட்டைகள்:**

ஓராண்டிற்கும் குறைவான ஆரம்ப முதிர்ச்சியுடன் அல்லது அறிக்கையிடும் வங்கியினால் எந்த நேரத்திலும் நிபந்தனை எதுவுமின்றி இரத்துச் செய்யப்படக்கூடியதுமான மேலதிகப் பற்றுவசதிகளின் எடுப்பனவு செய்யப்படாத பகுதி.

**13.04 ஏனையவை:**

ஓராண்டு வரையான ஆரம்ப முதிர்ச்சியுடன் அல்லது எந்த ஒரு நேரத்திலும் நிபந்தனையின்றி இரத்துச் செய்யப்படக் கூடியதுமான மற்றைய கடப்பாடுகள் எதுவும்.

**14. ஓராண்டு வரையான ஆரம்ப முதிர்ச்சியுடன் கூடிய ஏனைய கடப்பாடுகள்:**

**14.01 வழமையான துணைநில் வசதிகளும் தொடர்க் கொடுகடன்களும்:**

ஓராண்டு வரையான ஆரம்ப முதிர்ச்சியொன்றைக் கொண்டுள்ள வழமையான துணைநில் வசதிகள் மற்றும் தொடர்க்கொடுகடன்களின் கீழான கடப்பாடுகள்.

**14.02 எடுப்பனவு செய்யப்படாத தவணைக்கடன்கள்:**

ஓராண்டு வரையான ஆரம்ப முதிர்ச்சியைக் கொண்ட தவணைக்கடன்களின் எடுப்பனவு செய்யப்படாத பகுதி

**14.03 ஏனையவை:**

ஓராண்டு வரையான ஆரம்ப முதிர்ச்சியுடன் கூடிய மற்றைய எந்தக் கடன்பாடுகளும். ஆரம்ப முதிர்ச்சி என்பது கடப்பாடு மேற்கொள்ளப்பட்ட திகதிக்கும் அறிக்கையிடும் வங்கி அதன் விருப்பத்தின்படி நிபந்தனையின்றி கடப்பாட்டினை இரத்துச் செய்வதன் மீதான மிகக் கிட்டிய நாளுக்குமிடையிலான ஒரு காலப்பகுதி என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

**15. காலாண்டிற்கும் கூடுதலான ஆரம்ப முதிர்ச்சிகளுடன் கூடிய மற்றைய கடப்பாடுகள்:**

**15.01 வழமையான துணைநில் வசதிகளும் தொடர்க் கொடுகடன்களும்**

ஓராண்டிற்கும் கூடுதலான ஆரம்ப முதிர்ச்சிகளுடன் கூடிய வழமையான துணைநில் வசதிகள் மற்றும் தொடர்க் கொடுகடன்களின் கீழான கடப்பாடுகள்.

**15.02 எடுப்பனவு செய்யப்படாத தவணைக்கடன்கள்:**

ஓராண்டிற்கும் கூடுதலான ஆரம்ப முதிர்ச்சியைக் கொண்ட தவணைக் கடன்களின் எடுப்பனவு செய்யப்படாத பகுதி

**15.03 ஏனையவை:**

ஓராண்டு வரையான ஆரம்ப முதிர்ச்சியுடன் கூடிய மற்றைய எந்தக் கடன்பாடுகளும். ஆரம்ப முதிர்ச்சி என்பது கடப்பாடு மேற்கொள்ளப்பட்ட திகதிக்கும் அறிக்கையிடும் வங்கி அதன் விருப்பத்தின்படி நிபந்தனையின்றி கடப்பாட்டினை இரத்துச் செய்வதன் மீதான மிகக் கிட்டிய நாளுக்குமிடையிலான ஒரு காலப்பகுதி என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

**16. வெளிநாட்டுச் செலாவணியும் வட்டி வீத ஒப்பந்தங்களும்**

**செலாவணிவீத ஒப்பந்தங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும் -**

(i) குறுக்கு நாணய வட்டிவீத பரிமாற்றம்

(ii) முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி உடன்படிக்கைகள்

(iii) நாணயத்தின் எதிர்காலம்

(iv) கொள்வனவு செய்யப்பட்ட நாணய விருப்பார்வம் அத்துடன்

(v) ஏனைய இதையொத்த சாதனங்கள்

ஆனால் 14 கலண்டர் நாட்களுக்கும் குறைவான ஆரம்ப முதிர்ச்சியைக் கொண்ட செலாவணிவீத உடன்படிக்கைகளை நீக்குகிறது.

**வட்டிவீத உடன்படிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்.**

(i) தனியொரு நாணய வட்டிவீத பரிமாற்றம்

(ii) அடிப்படை பரிமாற்றம்

(iii) முன்னோக்கிய வீத உடன்படிக்கைகள்

(iv) வட்டிவீத எண்தொகைகள்

(v) கொள்வனவு செய்யப்பட்ட வட்டிவீத தேர்வு; மற்றும்

(vi) இதனையொத்த மற்றைய சாதனங்கள்

**குறிப்பு:**

(i) புதிய ஒப்பந்தமொன்றை செய்வது என்பதற்கு உட்பட்டு ஒப்பந்தங்களை **தவிர்ப்பது** அனுமதிக்கப்படும். ஆகவே ஒன்றுக்கொன்று பரிமாற்றம் மற்றும் அதே இணைத்தரப்பினருடான (புதியவற்றிற்கு உட்பட்டு) இதே மாதிரியான ஒப்பந்தம் என்பனவற்றிலிருந்து

தோன்றும் கோரல்களை விட தேறிய தன்மையே நிறையேற்றப்படும். இப்பின்னணியில், **புத்தாக்கல்** என்பது இருதரப்பினருக்கிடையிலான இருபுடை ஒப்பந்தம் என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. இதன் கீழ், தரப்பட்ட திகதியில் தரப்பட்ட நாணயமொன்றினை வழங்குவதற்கு ஒவ்வொருவருக்குமுள்ள கடப்படானது, **அதே நாணயம்** மற்றும் பெறுமதி திகதிக்கான மற்றைய அனைத்து கடப்பாடுகளுடன் தன்னியக்கமாகவே ஒன்றிணைக்கப்படுவதானது முன்னைய மொத்தக் கடப்பாடுகளுக்கான தனியொரு தேறிய தொகையினைப் பதிலீடு செய்கிறது.

(ii) செலாவணி வீதம் மற்றும் வட்டிவீத ஒப்பந்தங்களின் கடனுக்கு சமமான தொகையினைப் பெறுவதற்காக சாதனங்களின் தன்மை மற்றும் அவற்றின் முதிர்ச்சி என்பனவற்றிற்கிணங்க ஒவ்வொரு சாதனத்தினதும் கோட்பாட்டு முதற்தொகைக்கு ஆரம்ப வெளிப்படுத்துகை முறையொன்றினைப் பிரயோகிப்பதற்கு வங்கியொன்று மாற்றுக் காரணிகளின் பின்வரும் இரண்டு தொகுதிகளில் ஒன்றிற்கு விண்ணப்பிக்க வேண்டியிருக்கும்.

| ஆரம்ப முதிர்ச்சி | வட்டிவீத ஒப்பந்தங்கள் | செலாவணிவீத ஒப்பந்தங்கள் |
|---|---|---|
| ஓராண்டிற்கும் குறைவானது | 0.5% | 2.0% |
| ஓராண்டு - இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவானது | 1.0% | 5.0% (அதாவது 2% + 3%) |
| ஒவ்வொரு மேலதிக ஆண்டிற்கும் | 1.0% | 3.0% |

(iii) ஐந்தொகைக்கு வெளியேயுள்ள மற்றைய விடயங்களின் கொடுகடனுக்கு சமமான தொகையினைப் போன்றே, செலாவணி வீதம் மற்றும் வட்டிவீத ஒப்பந்தங்களின் கொடுகடனுக்குச் சமமான தொகைகள் இணைத்தரப்பினர் வகைக்கிணங்க நிறையேற்றப்படும். எனினும், செலாவணி வீதம் மற்றும் வட்டி வீதம் என்பனவற்றினூடாக தொடர்பான ஒப்பந்தங்களுக்காக இணைத்தரப்பினரைப் பொறுத்தவரையில் 50% நிறை பிரயோகிக்கப்படும் அல்லது வட்டியின் 100% **நிறையேற்றல்** கவரப்படும் (உ-ம்: வர்த்தக ரீதியான வாடிக்கையாளர்) மறு சொல்லில் கூறுவதாயின், ஏனைய வெளிப்படுத்துகைகளுக்கான வழமையான ஐந்து வகை இடர்நேர்வு நிறைகளுக்குப் பதிலாக இணைத்தரப்பினர்களின் தன்மையினைப் பொறுத்து வெளிநாட்டு செலாவணி மற்றும் வட்டிவீத ஒப்பந்தங்களின் கொடுகடனுக்கு சமமான தொகை நான்கு வகையான இடர்நேர்வு நிறையேற்றல்களுக்கு அதாவது 01%, 10%, 20% மற்றும் 50% இற்கு உட்பட்டிருக்கும்.

**மூலதனக்கூறுகள்**

**18. செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள்/ பொதுவான இருப்பு**

வழங்கப்பட்டு முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள் அல்லது பொதுவான இருப்புக்களின் கணித்தலுக்காக மட்டும் பகுதியளவில் செலுத்தப்பட்ட பங்குகள் அல்லது இருப்புக்களின் செலுத்தப்பட்ட பகுதி மூலதனமாக கணக்கிடப்பட வேண்டும்.

**ஒப்படைக்கப்பட்ட மூலதனம்**

1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 19(2) (ஆ) பிரிவின் நியதிகளில் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் தலைமை அலுவலகத்தினால் பங்கு மூலதனம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

**19. ஒன்று திரளாத, மீட்புச் செய்ய முடியாத முன்னுரிமைப் பங்குகள்**

மீட்புச் செய்யப்படாத முன்னுரிமைப் பங்குகளைப் பொறுத்தவரை, பங்கிலாபத்தினை பகுதியாக அல்லது முழுமையாக ஆதரவளிப்பதற்கு இலாபத்தன்மை போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் அத்தகைய கொடுப்பனவினை குறைக்க அல்லது நிரந்தரமாக விட்டுக் கொடுக்க முடியும்.

**20. பங்குவட்டம்**

சாதாரண பங்குகள் அல்லது பொதுவான இருப்பு அல்லது திரளாத, மீட்புச் செய்யப்படாத முன்னுரிமைப் பங்குகளின் முகப்புப் பெறுமதியினை விட கூடுதலான மிகையான வழங்கல் விலை.

**21. நியதி ஒதுக்கு விகிதம்**

இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக்கூற்றில் உள்ளவாறும் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 20(1) மற்றும் (2) இன் நியதிகளில் வர்த்தக வங்கிகளினால் ஏற்படுத்தப்பட்டவாறும் ஒதுக்கு நிதியத்திலுள்ள நிலுவை

**22. வெளியிடப்பட்ட பிடித்து வைக்கப்பட்ட இலாபம்/ (ஒன்று சேர்ந்த இழப்புக்கள்)**

முன்னைய நிதியியல் ஆண்டுகளிலிருந்தும் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்ட கணக்குக் கூற்றுக்களிலிருந்தும் முன்கொண்டு செல்லப்பட்ட இலாப நட்டக் கணக்கிலுள்ள மீதி. ஒன்று சேர்ந்த நட்டங்கள் அடைப்புக்குறிக்குள் காட்டப்பட வேண்டியதுடன் மற்றைய மூலதனக்கூறுகளிலிருந்தும் கழிக்கப்படவும் வேண்டும்.

**23. பொதுவான மற்றும் ஏனைய ஒதுக்கங்கள்**

இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் கூற்றுப்படி தடுத்து வைக்கப்பட்ட வருவாய்கள், பங்கு வட்டம் அல்லது ஏனைய மிகைகளின் ஒதுக்கத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது அதிகரிக்கப்பட்ட பொதுவான படிவத்தில் உள்ள வெளிப்படுத்தப்பட்ட ஒதுக்கங்கள் அல்லது ஏனைய ஒதுக்கங்கள்.

**24. நிலையான மற்றும் நீண்ட கால முதலீடுகளின் விற்பனையிலிருந்து தோன்றிய வரிக்குப் பின்னரான மிகை/ இழப்பு**

இறதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் முடிவுத்திகதியிலிருந்து நிலையான மற்றும் நீண்ட கால முதலீடுகளின் விற்பனையிலிருந்து தோன்றிய வரிக்குப் பின்னரான எந்த ஒரு மிகை/ இழப்பு. நிலையான மற்றும் நீண்ட கால முதலீடுகளின் விற்பனையிலிருந்து எழுகின்ற தேறிய இழப்புக்கள் அடைப்புக்குறிக்குள் இடப்பட வேண்டியதுடன் ஏனைய மூலதனக்கூறுகளிலிருந்தும் கழிக்கப்படவும் வேண்டும்.

**25. வெளியிடப்படாத நடைமுறை ஆண்டின் இலாபம்/ நட்டங்கள்**

இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட முடிவு நாளின் பின்னர் ஈட்டப்பட்ட/ ஏற்பட்ட நடைமுறையாண்டின் இலாப/ நட்டங்கள் (நிலையான மற்றும் நீண்டகால முதலீடுகளின் விற்பனையிலிருந்து தோன்றிய வரிக்குப் பின்னரான எந்த ஒரு மிகை இழப்புக்களும் நீங்கலாக) மற்றும் நடைமுறை ஆண்டிற்கான இலாபம்/ நட்டம்.

**26. சிறுபான்மை வட்டிகள் (மேலேயுள்ள மூலதன அமைப்புடன் இணைந்தது)**

திரட்டிய மூலதன விடயங்களின் மீதான சிறுபான்மை வட்டிகள்.

**27. துணை மொத்தம்**

18-26 வரையான மைய மூலதன விடயங்களின் மொத்தம்.

**28. நன்மதிப்பு**

ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு நன்மதிப்புத் தொகையை அறிவித்தல்.

**29. மொத்த அடுக்கு 1 மூலதனம்**

மொத்த அடுக்கு 1 மூலதனத்தினைப் பெறுவதற்கு விடயம் 27இல் உள்ள துணை மொத்தலிருந்து நன்மதிப்பினைக் கழித்தல் வேண்டும்.

**30. மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள்**

மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் விலைத்தளம்பல்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட விற்பனை என்பனவற்றை முழுமையாகப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அத்தகைய மீள்மதிப்பீட்டு முன்மதியுடன் மதிப்பிடப்பட்டிருக்குமிடத்து மத்திய வங்கியின் முன் ஒப்புதலுடன் அடுக்கு 2 துணைநிரப்பு மூலதனத்திற்குள் உள்ளடக்கலாம்.

**31. பொதுவான ஒதுக்கங்கள்**

சாத்தியமான எதிர்கால இழப்புக்களுக்கெதிராக பொதுவான ஒதுக்கங்கள் அல்லது பொதுவான கடன் இழப்பு ஒதுக்குகள் உருவாக்கப்பட்டன. அவை குறிப்பிட்ட சொத்துக்களில் உட்படுத்தப்படாததுடன் குறிப்பிட்ட சொத்துக்களின் மதிப்பீட்டில் கழிப்பினையும் பிரதிபலிக்காதவிடத்து அவை அடுக்கு 2 துணைநிரப்பு மூலதனத்தில் உள்ளடக்குவதற்கு தகைமை பெறும். பொதுவான ஒதுக்கங்கள் அனைத்து இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் 1.25% இனை விஞ்சக்கூடாது.

**32. கலந்த (படுகடன்/ பங்கு) மூலதனச் சாதனங்கள்**

பங்கு மூலதனம் மற்றும் படுகடனில் குறிப்பிட்ட பண்புகளைக் கொண்டுள்ள மூலதனச் சாதனங்கள் உ-ம்: ஆரம்பக்கடனிருப்பு, மீட்புச் செய்யப்படாத முன்னுரிமைப் பங்குகள் போன்றனவும் பின்வரும் பண்புகளைத் திருப்தி செய்வனவும்

(i) பிணையிடப்படாத, துணை மற்றும் முழுமையாகச் செலுத்தப்பட்டது.

(ii) உடமையாளரின் முயற்சி அல்லது இலங்கை மத்திய வங்கியின் முன் அனுமதியின்றி மீட்புச் செய்யப்பட முடியாதது.

(iii) வர்த்தகத்தினை நிறுத்துவதற்கு வங்கி கடப்பாட்டினைக் கொண்டிராத இழப்புக்களில் பங்கேற்பதற்கான சாத்தியம்.

(iv) வட்டிக் கொடுப்பனவிற்கான கடப்பாடு வங்கியின் இலாபம் அத்தகைய கொடுப்பனவினை மேற்கொள்ள ஆதரவளிக்காதவிடத்து அதனைப் பிற்போட முடியும். அத்தகைய விடயங்களை மூலதனத்தளத்தில் உள்ளடக்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் முன் ஒப்புதல் தேவையாகும்.

**33. முன்னுரிமைப் பங்குகளிலிருந்து தோன்றுகின்ற சிறுபான்மையான வட்டி**

முன்னுரிமைப் பங்குகளின் திரட்சிலிருந்து தோன்றுகின்ற அறிக்கையிடுகின்ற நிதியியல் நிறுவனங்களது துணை நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சிறுபான்மையான வட்டிகள்.

நிறுவனங்கள் என்பது துணை நிறுவனங்களாகும்.

**34. ஒப்புதலளிக்கப்பட்ட துணை நிரப்பு தவணைப்படுகடன்**

துணைநிரப்பு தவணைப்படுகடன் அடுக்கு 2 மூலதனத்தில் உள்ளடக்கப்படுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(i) பிணையிடப்படாத, முழுமையாகச் செலுத்தப்படாத கடன் கொடுத்தோரின் ஈடுபாடுகளுக்கு துணையாகவுள்ளமை

(ii) ஆகக் குறைந்தது 5 ஆண்டுகளைக் கொண்ட ஆரம்ப முதிர்ச்சிக்கு.

(iii) இலங்கை மத்திய வங்கியின் முன் அனுமதியின்றி உரிய காலத்திற்கு முன்னரான மீள்கொடுப்பனவினை அல்லது மீட்பினை மேற்கொள்ள முடியாது.

(iv) மூலதனமாகக் கணிக்கப்பட்ட தொகையானது முதிர்ச்சிக்கு முன்னுள்ள நான்கு ஆண்டு காலப்பகுதியில் ஒவ்வொரு ஆண்டிலும் 1/5இனால் மீள்கழிவு செய்யப்பட வேண்டும்.

ஒப்புதலளிக்கப்பட்ட துணைநில் தவணைப்படுகடன்கள் அடுக்கு 1 மூலதனத்தின் மொத்தத்தில் 50%இற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. துணைநில் படுகடனின் உண்மையான தொகையும் அறிக்கையிடப்பட வேண்டும்.

**35. மொத்த அடுக்கு 2 மூலதனம்**

விடயங்கள் 30-34 வரையான துணைநிரப்பு மூலதனத்தின் மொத்தம்.

**36. தகைமையுடைய அடுக்கு 2 மூலதனம்**

தகைமையுடைய அடுக்கு 2 மூலதனம் ஆகக் கூடியது அடுக்கு 1 மூலதனத்தின் 100% இற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அடுக்கு 1 மூலதனம் அடுக்கு 2 மூலதனத்தினை விடக் குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில், தகைமையுடைய அடுக்கு 2 மூலதனம் அடுக்கு 1 மூலதனத்திற்கு சமமானதாக இருக்கும். அடுக்கு 1 மூலதனம் எதிர்க்கணியமாக தொகை "இன்றி" இருக்குமாயின் தகைமையுடைய அடுக்கு 2 மூலதனமாகக் கருதப்பட வேண்டும்.

**37. மொத்த மூலதனம்**

அடுக்கு 1 மூலதனம் (29) தகைமையுடைய அடுக்கு 2 மூலதனம் (36) என்பனவற்றின் மொத்தம்.

**38.01 இலங்கைக்கு வெளியேயுள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளிலிருந்து இலங்கை ரூபாவில் வரவேண்டிய தொகை**

இலங்கைக்கு வெளியேயுள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளுக்காக வைத்திருக்கப்படும் இலங்கை ரூபாவில் அமைந்த "வொஸ்ரோ" நடைமுறைக்கணக்கிலுள்ள வரவு மீதி; ஏனைய வைப்புக்கள் மற்றும் இலங்கைக்கு வெளியேயுள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளிலிருந்து இலங்கை ரூபாவில் கடன்பட்ட தொகை.

**38.02 இலங்கைக்கு வெளியேயுள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளிலிருந்து இலங்கை ரூபாவில் வரவேண்டிய தொகை**

இலங்கைக்கு வெளியேயுள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளுக்காக வைத்திருக்கப்படும் இலங்கை ரூபாவில் அமைந்த "வொஸ்ரோ" நடைமுறைக்கணக்கிலுள்ள பற்று நிலுவைகள் மற்றும் இலங்கைக்கு வெளியேயுள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளிலிருந்து இலங்கை ரூபாவில் வழங்கப்பட்ட கடன் தொகை;

**39 சீராக்கத்திற்கு பின்னர் மொத்த மூலதனம் - 1**

விடயங்கள் 38.01 மற்றும் 38.02 இற்காக சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் மொத்த மூலதனம்

**40.01 இலங்கைக்கு வெளியேயுள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் வரவேண்டிய தொகை**

இலங்கைக்கு வெளியேயுள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளுக்காக வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயத்தில் அமைந்த "நொஸ்ரோ" நடைமுறைக்கணக்கிலுள்ள பற்று நிலுவைகளும்; மற்றும் இலங்கைக்கு வெளியேயுள்ள தலைமை அலுவலகம் மற்றும் கிளைகளில் வைத்திருக்கப்பட்ட நிலையான, ஏனைய வைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட கடன்தொகையும்.

**40.02 இதன் சொந்த வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவிலிருந்து வரவேண்டிய தொகை**

வங்கியொன்றின் உள்நாட்டுப் பிரிவினால் அதன் சொந்த வெ.நா.வ. தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கில் உள்ள வரவு மீதிகள்.

**41. துணைமொத்தம் (கழிவு)**

விடயங்கள் 40.01 மற்றும் 40.02 என்பனவற்றின் கூட்டுக்களையும் விடயங்கள் 40.03 மற்றும் 40.04 என்பனவற்றின் கூட்டுக்களையும் கொண்ட தேறிய மொத்தம்.

**42. சீராக்கப்பட்ட மொத்த மூலதனம்**

விடயம் 41இன் துணை மொத்தம் நேர்க்கணியமாக இருப்பின் (+) தலைமை அலுவலகம், கிளைகள் மற்றும் வெ.நா.வ. பிரிவு என்பனவற்றிலிருந்து வரவேண்டிய தேறிய தொகையானது விடயம் 39 இலிருந்து கழிக்கப்படவேண்டும். விடயம் 41இன் துணை மொத்தம் எதிர்க்கணியமாக இருப்பின் தலைமை அலுவலகம், கிளைகள் மற்றும் வெ.நா.வ. பிரிவுகளுக்கு வரவேண்டிய தேறிய தொகையினை சீராக்கப்பட்ட மொத்த மூலதனத்தை கணிப்பதற்கு கணக்கில் எடுக்கப்படக்கூடாது. அத்தகைய சந்தர்ப்பமொன்றில் விடயம் 42இல் உள்ள சீராக்கப்பட்ட மொத்த மூலதனம் விடயம் 39இற்கு சமமாக இருக்கும்.

**43.01 ஒன்று திரட்டப்படாத வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துணைக்கம்பனிகளில் பங்கு முதலீடுகள்**

வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துணைக்கம்பனிகளில் பங்கு முதலீடுகள்; ஒன்று திரட்டப்பட்ட கூற்றுக்களைப் பொறுத்தவரை ஒன்று திரட்டப்படாத வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துணைக்கம்பனிகளின் முதலீடுகளை மட்டுமே உள்ளடக்கும்.

**43.02 ஏனைய வங்கிகள் நிதியியல் இணை நிறுவனங்களின் மூலதனத்தில் முதலீடு**

பங்குகள் கலந்த மூலதன சாதனங்கள் அல்லது துணை தவணைப்படுகடன் போன்ற வழிகளிலமைந்த ஏனைய உள்நாட்டு வங்கித்தொழில் நிறுவனங்கள், நிதியியல் மற்றும் நிதியியல் இணை நிறுவனங்களின் உடைமைகள். ''இணை நிறுவனமென்பது'' வங்கியானது பின்வருவனவற்றை வைத்திருக்கும் பொழுது இணை நிறுவனம் என கருதப்படும்.

(அ) 20 சதவீதம் அல்லது கூடுதலாக ஆனால் நிறுவனத்தின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தில் ஐம்பது சதவீதத்தினை விஞ்சாத தொகையினை, அத்துடன்

(ஆ) நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அக்கறையினைக் கட்டுப்படுத்தல்

இலங்கை அரசாங்கம் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அனுசரணையின் கீழ் நிதியியல் இணை நிறுவனங்களின் மூலதனத்தில் செய்யப்பட்ட முதலீடுகள் மூலதனத் தளத்தின் கணிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. எனினும், அத்தகைய முதலீடுகள் ஐந்தொகையிலுள்ள சொத்துக்களாக ஏனைய முதலீடுகள் என்பதன் கீழ் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**44. மூலதன தளம்**

மொத்த மூலதனத்திலிருந்து (விடயம் 39) விடயம் 43.1 மற்றும் விடயம் 43.2 இனைக் கழித்த பின்னர் உள்ள தொகை அல்லது சீராக்கப்பட்ட மொத்த மூலதனம் (விடயம் 42).

**45. மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்**

ஐந்தொகையிலுள்ள சொத்துக்கள் மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான சொத்துக்கள் என்பவற்றின் மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்

**02/04/003/0401/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 மாச்சு 26

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின்

முதன்மை நிறைவேற்று அலுவர்களுக்கும்

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின்

முதன்மை நிறைவேற்று அலுவர்களுக்கும்

அன்புள்ள ஐயா,

**ஈட்டப்படாத வருமானத்தினை நேர்மாற்றுதலும் முற்பணத்தினை செயற்படாததாக பகுப்பாய்வு செய்தலும்**

2006 மாச்சு 23ஆம் நாளன்று நடைபெற்ற முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டவாறு, முற்பணமொன்றினை செயற்படாததொன்றாக பகுக்கும் பொழுது வட்டி வருமானமாக அங்கீகரிக்கப்பட்ட பகுப்பதற்கு முன்னுள்ள மூன்று மாதங்களுக்குமான ஈட்டப்படாத வருமானம் திருப்பப்பட்டு தொங்கலிலுள்ள வட்டி என வேறாகக் கருதப்பட வேண்டும். நிதியியல் ஆண்டு முடிவடைந்த பின்னர் அடையாளம் காணப்பட்ட ஈட்டப்படாத வருமானத்தினை நேர்மாற்றுதல், முற்பணங்கள் செயற்படாத முற்பணங்களாக அடையாளம் காணப்பட்ட நிதியாண்டிற்கானதாக கணக்கிடப்படலாம்.

1. இதன்படி அத்தகைய வருமானமானது, வருமானக் கூற்றிலுள்ள போலியான வருமானத்தினை உள்ளடக்குவதற்கு ஒப்பானதாக இருக்குமென்பதனை ஏற்றுக் கொள்கின்ற விதத்தில், வட்டி வருமானத்தினை இதுவரை மாற்றியிராத ஆனால் செயலாற்றமில்லா முற்பணங்களை பெற்றிராத அனைத்து வங்கிகளும் 2006.01.01 இலிருந்து அவ்வாறு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

2. செயற்படாத முற்பணமாக பகுப்பாய்வு செய்யும் நோக்கத்திற்காக, கடன்பாட்டாளர் அல்லது உத்தரவாதமளிப்பவரின் பிணையங்கள் அல்லது தேறிய பெறுமதியின் கிடைப்பனவு கணக்கிலெடுக்கப்படக் கூடாது என்பதுடன், பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்டவாறு மூன்று மாதங்களுக்கும் கூடுதலாக நிலுவையில் நிற்கும் பொழுது காசினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட முற்பணங்கள் கூட செயற்படா முற்பணங்களாகவே கருதப்பட வேண்டும். அத்தகைய பரிசீலனைகள் ஏற்பாடுகள் மேற்கொள்கின்ற நேரத்துடன் மட்டும் தொடர்பானதாக இருக்கும்.

3. இவ் ஏற்பாடுகள், வரைவுப் பணிப்பில் கலந்துரையாடப்பட்ட மற்றைய விடயங்கள் தொடர்பாக வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற ஈடுபாடுகளைப் பரிசீலித்ததன் பின்னர், எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ள பகுப்பின் மீதான திருத்தப்பட்ட பணிப்புரைகளில் உள்ளடக்கப்படவுள்ளன.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

படி: செயலாளர் நாயகம்/இ.வ.நிறுவனம்

**02/17/402/0079/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 மே 02

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும்

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின்

முதன்மை நிறைவேற்று அலுவர்களுக்கு

அன்புள்ள ஐயா,

**கைவிடப்பட்ட சொத்துக்கள் மீதான வங்கித்தொழில் சட்டத்தின் பகுதி IX இன் (பிரிவுகள் 72 இலிருந்து 76 வரை) ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்**

24.11.05 அன்று நடத்தப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தின் தங்களுக்கு தெரிவிக்கப்பட்டவாறு, வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 73 (1)இன் நியதிகளின்படி, அனைத்து வர்த்தக வங்கிகளும் வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 72இல் குறிப்பிடப்பட்டவாறு "கைவிடப்பட்ட சொத்துக்கள்" இணைப்பு 1இல் தரப்பட்டுள்ள நாணயச்சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான படிவத்தில் வழங்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. கைவிடப்பட்ட சொத்துக்கள் மீதான வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் இணைப்பு 2இல் தரப்பட்டுள்ள வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகள் கைவிடப்பட்ட சொத்துக்களை அறிவிக்குமாறு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளைக் கேட்டுக் கொள்ளவில்லை. எனினும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், வங்கித்தொழில் சட்டத்தின் 72ஆம் பிரிவில் விலக்கப்பட்டுள்ளவாறு கைவிடப்பட்ட சொத்தாகக் கருதப்படக்கூடிய விடயங்களை அடையாளம் காணுமாறும், இத்தகைய ஏற்பாடுகள் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் ஏற்புடைத்தாக செய்யப்படும் அத்தகைய நேரம் வரை இணைப்பு 1இல் உள்ள படிவத்தைப் பயன்படுத்தி அறிக்கையிடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

முதலாவது அறிக்கையானது 2005.12.31 வரை கைவிடப்பட்டதாக எண்ணப்படுகின்ற சொத்துக்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

இக்கடிதம் கிடைத்தமை பற்றி தயவு செய்து அறிவிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

இணைப்பு

**இணைப்பு - 2**

## கைவிடப்பட்ட சொத்துக்கள் மீதான வங்கித்தொழில் சட்டத்தின் பகுதி IX இனை (பிரிவுகள் 72 இலிருந்து 76 வரை) நடைமுறைக்கிடுவது தொடர்பான வழிகாட்டல்கள்

வங்கித்தொழில் சட்டத்தின் பகுதி IX இன் ஏற்பாடுகளை 2005 திசெம்பர் 31ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கிடுவது என இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருக்கின்றது. இவ் வழிகாட்டல்கள் அத்தகைய சொத்துக்களை கையாள்வதற்கான நடைமுறைகளுக்கு வசதியளிக்கின்றது.

### 1. கைவிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் காணுதல்

(அ) அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் வங்கித்தொழில் சட்டத்தின் 72ஆம் பிரிவில் விளக்கப்பட்டவாறு கைவிடப்பட்ட சொத்தாக இருக்குமென கருதப்படுவதற்கான விடயங்களை அடையாளம் கண்டு கொள்ளல் வேண்டும். கைவிடப்பட்ட சொத்துக்கள் பொதுவாக பத்தாண்டு காலமாக நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டமைக்கு சான்றுகள் எதுவுமில்லாமலிருக்கும் பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றன.

- சட்டமுறையான விதிப்புக்கள் நீங்கலாக, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலுள்ள ஏதாவது வட்டி அல்லது வங்கிலாபங்களுடன் கூடிய பொதுவான எந்த ஒரு வைப்பும் (கேள்வி, சேமிப்பு அல்லது முதிர்ச்சியடைந்த தவணை வைப்பு).
- சட்டமுறையான விதிப்புக்கள் நீங்கலாக, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலுள்ள ஏதாவது வட்டி அல்லது பங்கிலாபங்களுடன் கூடிய பங்குகளை அல்லது ஏனைய அக்கறையுடைய விடயங்களைக் கொள்வனவு செய்வதற்காகச் செலுத்தப்பட்ட ஏதாவது நிதியம்.
- உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் நேரடியாகப் பொறுப்புடைய, காசோலைகள் அல்லது ஏனைய கருவிகளின் மீது கொடுப்பனவு செய்யத்தக்க ஏதாவது தொகை.
- நம்பகத்தகுதியினால் வைத்திருக்கப்படுகின்ற தனிப்பட்ட அருவச் சொத்துக்கள் மற்றும் அதன் மீதான எந்த ஒரு வருமானமும் அல்லது வட்டியும்.
- வாடகைக்காலம் முடிவடைந்தைத் தொடர்ந்து குத்தகைக்காரரின் இறுதியாக அறியப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்பட்டும் மூன்று ஆண்டுகளுக்குள் குத்தகைக்காரர் அதற்குப் பதிலளிக்கத் தவறுகின்ற பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்களுக்குள் உள்ள பொருட்கள்.

(ஆ) சொந்தக்காரர் ஒருவரால் அவரது சொத்துக்கள் தொடர்பாக எடுக்கும் எந்த ஒரு நடவடிக்கைகளும் சொந்தக்காரர் அவரது சொத்துக்கள் கைவிடப்பட்டவை எனக் கருத தேவையில்லை என்பதனை எடுத்துக் காட்டும். அத்தகைய நடவடிக்கைகள் வாடிக்கையாளர் கணக்கினைப் பொறுத்தவரை வைப்புச் செய்தல் அல்லது எடுப்பனவு செய்தல், அஞ்சல் முகவரியின் மாற்றத்தினை அறிவித்தல், வைப்புப் பெட்டகத்தின் வாடகைக் கட்டணத்தைச் செலுத்துதல், மற்றைய ஏதாவது எழுத்து மூலமான தொடர்புகள் பூரணப்படுத்துவதற்காக சேமிப்புப்புத்தகத்தினை சமர்ப்பித்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

### 2. கைவிடப்பட்ட சொத்துக்கள் மீதான அறிக்கைகளை மத்திய வங்கியுடன் கோவைப்படுத்தல்

(அ) கைவிடப்பட்ட எந்த ஒரு சொத்தினையும் வைத்திருக்கும் அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதிக்குள் மத்திய வங்கிக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். முதலாவது அறிக்கையானது 2005.12.31ஆம் நாள் வரை கைவிடப்பட்டதாகக் கருதப்படும் சொத்தினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். மாச்சு 31ஆம் நாள் நிதியியல் ஆண்டு முடிவடைகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளைப் பொறுத்தவரை முதலாவது அறிக்கையானது 2006.03.31ஆம் நாளன்று உள்ள நிலைமையினை உள்ளடக்கலாம்.

(ஆ) கைவிடப்பட்ட சொத்துக்களின் அனைத்து அறிக்கையிடலும் நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட இணைப்பு 1இல் தரப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படல் வேண்டும். தகவல்கள் சாத்தியமானளவிற்கு சொந்தக்காரரின் இறுதிப்பெயரின் அகர வரிசைப்படியும், கிளைகளின் படியும் பதிவு செய்யப்படல் வேண்டும். வயதுவராதோரின் கணக்குகள் தனியாக அறிவிக்கப்பட வேண்டும். அடையாளம் காணுகின்ற செய்முறையும் அறிக்கையினைப் பூரணப்படுத்துவதும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் தன்னியக்கப்படுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) கைவிடப்பட்ட சொத்து என்ற வரைவிலக்கணத்தின் கீழ்வரும் அனைத்து சொத்துக்களையும் வங்கி அறிக்கையிட வேண்டிய அதே வேளையில், சிறப்பு பரிசீலனைகளுக்கு எடுக்க வேண்டிய சொத்துக்கள் காணப்படின், அதாவது, சொந்தக்காரர் வங்கிக்கு அறிவித்து விட்டு புலம்பெயர்ந்திருக்குமிடத்து அல்லது கால வரையற்ற குறிக்கப்படாத காலப்பகுதிக்கு நாட்டை விட்டுச் சென்றிருக்குமிடத்து அத்தகைய சிறப்பு பரிசீலனைகள் மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்பட வேண்டும்.

(ஈ) வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 73ஆம் பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறு அறிக்கையிடுவதற்கு கைவிடப்பட்ட சொத்துக்கள் எதனையும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கொண்டிராதவிடத்து, தொடர்பான வங்கி சாதாரணமாக மத்திய வங்கிக்கு அறிவிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய தொடர்பூட்டல் "எதிர்க்கணிய அறிக்கை" என கருதப்படும்.

(உ) கைவிடப்பட்ட சொத்துக்கள் பற்றி மத்திய வங்கிக்கு அறிவிக்க முன்னர், அத்தகைய கைவிடப்பட்ட சொத்துக்களின் உரிமையாளருக்கு, இறுதியாகத் தெரிந்த முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் இது பற்றி அறிவித்தல் வேண்டும். உரிமையாளர் இதற்கு பதிலளிப்பதற்கு நியாயமான ஒரு காலப்பகுதியினையும் வழங்குதல் வேண்டும். அத்தகைய அறிவித்தலானது சொத்தின் விபரணங்களையும், கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான நியதித் தேவைப்பாடுகளை விளக்குகின்ற கூற்றொன்றினையும் பதில் கிடைக்காதவிடத்து மத்திய வங்கிக்கு சொத்துக்கள் அறிவிக்கப்படவுள்ள உத்தேச திகதியினையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். வயதுவராதோரின் கணக்குகளைப் பொறுத்தவரை, குறிப்பிட்ட கணக்கொன்றினை அதன் உள்ளமைந்த பண்புகள் காரணமாக கைவிடப்பட்ட

ஒன்றாகக் கருதுவது நியாயமற்றது என்ற கருத்தினை வங்கிகள் கொண்டிருக்குமிடத்து வங்கிகள் அத்தகைய கணக்குகளின் சொந்தக்காரர்/ பாதுகாவலருக்கு அறிவிக்கத் தேவையில்லை. எனினும், வங்கிகள் கைவிடப்பட்ட சொத்துக்கள் என்ற வரைவிலக்கணத்திற்குள் வரும் அனைத்து வயதுவராதோரின் கணக்குகளையும் கைவிடப்பட்ட சொத்துக்களாக ஏன் கருதப்படக்கூடாது என்பதனை குறித்துரைத்து மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஊ) கைவிடப்பட்ட சொத்துக்கள் மீதான அறிக்கையினைக் கோவைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்கையில் வங்கியொன்று அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை நிரூபிப்பதற்குத் தேவையான ஆவணங்களை அறிக்கை சமர்ப்பித்த நாளிலிருந்து குறைந்தது ஆறு ஆண்டு காலப்பகுதிக்காவது பேணுதல் வேண்டும்.

### 3. கைவிடப்பட்ட சொத்துக்களை மத்திய வங்கிக்கு வழங்குதல்

வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 73இன் துணைப்பிரிவு (2) மற்றும் (3)இன் நியதிகளின்படி மேற்கொள்ளப்பட வேண்டிய எந்த ஒரு மேலதிக நடவடிக்கையும் அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் எதிர்வரும் காலப்பகுதியில் அறிவிக்கப்படும்.

### 4. கைவிடப்பட்ட சொத்துக்களின் அறிவித்தலை வெளியிடுதல்

(அ) வங்கித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவிற்கிணங்க வங்கியொன்று அறிக்கை சமர்ப்பித்த முப்பது நாட்களுக்கிடையில் மேலேயுள்ள பந்தி 2(அ)இன் கீழ் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு

- குறிப்பிட்ட சொத்துக்களின் சொந்தக்காரரின் பெயரினையும் விபரங்களையும் தெரிவிக்கின்ற அறிவித்தலொன்றினை சிங்களம், தமிழ், ஆங்கில தினசரி செய்திப் பத்திரிகைகளில் வெளியிடுமாறும்.
- சொத்துக்களின் விபரங்களை உள்ளடக்கிய அறிவித்தலொன்றினை சொந்தக்காரரின் இறுதியாகத் தெரிந்த முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறும்

கேட்டுக்கொள்ளப்பட்டன.

(ஆ) வயதுவராதோரின் கணக்குகளைப் பொறுத்தவரை மேலே பந்தி 2 (உ)இல் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

### 5. பாதுகாப்பு வைப்புக்களை துளையிடல்/ திறத்தல்

(அ) திறக்கப்பட்ட பாதுகாப்பு வைப்பு பெட்டகங்களின் விபரங்களை பதிவு செய்வதற்காக வங்கி பாதுகாப்பு வைப்பக பொருள் பதிவேட்டுத்தாள் ஒன்றினை தயாரித்தல் வேண்டும். பாதுகாப்பு கட்டுக்காப்பு பெட்டகங்களின் பூட்டுக்கள் ஏனைய விடயங்களுடன் இத்தகைய பணி, குறிப்பாக, ஒப்படைக்கப்பட்ட இரண்டு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் முன்னிலையில் திறக்கப்படுதல் வேண்டும். இவ்விரு அலுவலர்களில் ஒருவர் குறைந்தது மூத்த நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பெட்டகத்தில் காணப்பட்ட அனைத்துப் பொருட்களும் கைவிடப்பட்டவைகளாகக் கருதப்பட்டு விதி விலக்கெதுவுமின்றி பொருட்பட்டியல் தாளில் உள்ளடக்கப்பட வேண்டும். எந்த ஒரு பொருளையும் விற்கவோ, அழிக்கவோ அல்லது அகற்றவோ கூடாது.

(ஆ) இணைப்பு 3இல் உள்ள படிவத்தினை இந்நோக்கத்திற்காக பயன்படுத்தலாம். பொருட்பட்டியல் தாள், பொருட்பட்டியல் மேற்கொண்ட அலுவலரினால் கையொப்பமிடப்பட்டு கைவிடப்பட்ட சொத்துக்களின் மீதான அறிக்கையுடன் சேர்த்து மத்திய வங்கிக்கு திரும்ப அனுப்பப்படல் வேண்டும்.

(இ) பாதுகாப்பு வைப்புப் பெட்டகம் துளையிடப்பட்ட/ திறக்கப்பட்ட பின்னர் பாதுகாப்பு வைப்புப் பெட்டகத்திலுள்ள அனைத்து விடயங்களும் வகைப்படுத்தப்பட்டு பாதுகாப்பான கட்டுக்காப்பில் வைக்கப்பட வேண்டும்.

### 6. செலவுகள்

வங்கிகள் இவ்வழிகாட்டல்களை மிகச் சிக்கனமான முறையில் நிறைவேற்றுவதற்கு முயற்சித்தல் வேண்டும். வங்கிக்கும் வாடிக்கையாளருக்கு மிடையே செல்லுபடியான, நடைமுறைப்படுத்தத்தக்க, எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் குறிக்கப்பட்ட கட்டணத்தொகை மற்றும் அத்தகைய கட்டணத்தின் விதிப்பு என்பன வாடிக்கையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்குமாயின் இச்செலவுகள் கைவிடப்பட்ட சொத்துக்களின் உரிமையாளர்களின் மீது விதிக்கப்படவேண்டும்.

### 7. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள்

வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகள் கைவிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் கண்டு அறிக்கையிடுமாறு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை கேட்டுக் கொள்ளவில்லை. எனினும், வங்கித்தொழில் சட்டத்தின் 72ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறு கைவிடப்பட்டவை என கருதப்படக்கூடிய விடயங்களை அடையாளம் காணுமாறும் இணைப்பு 1இல் உள்ள படிவத்தினைப் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கையளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

## இணைப்பு 1இல் கைவிடப்பட்ட சொத்துக்களின் அறிக்கையினைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

தகவல்கள் சாத்தியமானளவிற்கு சொந்தக்காரரின் இறுதிப் பெயரின் அகரவரிசைப்படியும் கிளைகளின் படியும் பதிவு செய்யப்பட வேண்டும். வயதுவராதோரின் கணக்கிற்காக வேறான தாள் பயன்படுத்தப்பட வேண்டும்.

**வங்கியின் பெயர்:** அறிக்கையிடும் வங்கியின் பெயரைப் பதியவும்

**அறிக்கையிடும் நாள்:** அறிக்கை எப்பொழுது செய்யப்பட்டதோ அந்த நாளை பதியவும்

**நிரல் அ :** சொந்தக்காரரின் இறுதிப்பெயரையும் அதனைத் தொடர்ந்து முழுப்பெயரையும் முழுநடுப் பெயர்களையும் பதியவும்

நடுப்பெயரின் பின்னா் செல்வி, திரு., திருமதி., போன்ற அடையாளம் காண்பதற்கு உதவும் தகவல்களை பதியவும்.

இரண்டு அல்லது மூன்று சொந்தக்காரா்களைக் கொண்ட ஒரு பொருளைப் பொறுத்தவரை அத்தகைய அனைத்து சொந்தக்காரா்களினதும் பெயா்களை அவா்களின் உறவுமுறையுடன் பதிதல் வேண்டும்.

உங்களது பதிவேடுகள் பொருளொன்றுக்கான சொந்தக்காரரின் பெயரைக் காட்டாவிட்டால் சொந்தக்காரரின் பெயா் தெரியவில்லை என பதியவும்.

**நிரல் ஆ :** உங்கள் பதிவேடுகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள முகவரியினை முழுமையாக குறிப்பிடவும். முகவரி இல்லாவிட்டால் அவ்வாறே எழுதவும்.

பல சொந்தக்காரா்கள் இருக்கும் விடயத்தினைப் பொறுத்தவரை முகவரி ஒன்றானால் முகவரியினை ஒருவருக்கு பதிவு செய்து மற்றவா்களுக்கும் இதே முகவரிதான் என்பதனை குறிப்பிடவும்.

**நிரல் இ :** சொந்தக்காரா் அடையாளங்காண உதவும் விதத்தில் சொந்தக்காரரின் தேசிய அடையாள அட்டை எண், கடவுச் சீட்டு எண், பிறந்த திகதி அல்லது வேறு ஏதாவது தகவல்களைக் குறிப்பிடவும். இவை கோரல்களைக் கொடுப்பனவு செய்வதற்கு இன்றியமையாததாகையால் அவை அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**நிரல் ஈ :** போதுமான விபரங்களுடன் பொருளின் விபரணத்தினை குறிப்பிடவும்.

**நிரல் உ:** கணக்கு இலக்கம், காசோலை இலக்கம் போன்ற ஒவ்வொரு பொருளுக்கும் அடையாள இலக்கங்களை குறிப்பிடவும்.

**நிரல் ஊ:** இப்பொருள் வட்டி உழைக்கின்ற ஒன்றா என்பதனைக் குறிப்பிடவும்.

**நிரல் எ :** சொந்தக்காரா் இறுதி வைப்பினை, எடுப்பனவினை அல்லது தொடா்பினை மேற்கொண்ட திகதியைக் குறிப்பிடவும். இவை பங்கிலாபம் கொடுப்பனவு செய்யக்கூடியதாக மாறுகின்ற, காசோலை அல்லது வரைவு வழங்கப்பட்ட, சான்றிதழ்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதிகளாகக் கூட இருக்கலாம்.

**நிரல் ஏ:** இறுதி நடவடிக்கையின் தன்மையினைக் குறிக்கவும்.

**நிரல் ஐ:** அறிக்கையிடும் நாள்வரை சொந்தக்காரருக்கு சேரவேண்டிய அனைத்து வட்டிகள், பங்கிலாபங்கள் என்பன உள்ளிட்ட வருவாய்களை, பணிக்கட்டணம் எதனையும் கழிக்காமல் குறிப்பிடவும்.

பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்கள் அல்லது பாதுகாப்பிற்காக வைத்திருக்கப்படும் ஏனைய விடயங்களைப் பொறுத்தவரை உள்ளே உள்ள பொருட்களை இனம் கண்டு பெறுமதியான எந்த ஒரு பொருளினதும் விபரணத்தினையும் உள்ளடக்கவும். இணைப்பு - 3 இல் உள்ளவாறு அனைத்து பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்களையும் பொருள்பட்டியல் தாளில் உள்ளடக்கவும்.

**நிரல் ஒ:** செய்யப்பட்ட கழிவுகளின் தொகையினைக் குறிக்கவும். இது சட்ட ரீதியான விதிப்புக்களை மட்டும் உள்ளடக்குதல் வேண்டும்.

**நிரல் ஓ:** பணிக்கட்டணம், வரி போன்ற செய்யப்பட்ட அத்தகைய கழிவுகளின் தன்மையினைக் குறிப்பிடவும்.

**நிரல் ஔ:** குறிப்பிடப்பட்ட கழிவுகளின் பின்னா் வரவேண்டிய தேறிய தொகையினை குறிப்பிடவும்.

**நிரல் க:** வட்டி வீதம், கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் போன்ற சொந்தக்காரருடன் உடன்பட்டுக் கொண்ட நியதிகளைக் குறிப்பிடவும். அவை கோரல்களின் கொடுப்பனவினைப் பொறுத்தவரை இன்றியமையததாக இருக்கும். அத்தகைய சொத்துக்களுடன் தொடா்பான ஏதும் சிறப்பான பரிசீலனைகள் இருக்குமாயின் அதனையும் தவணை வைப்புக்களைப் பொறுத்தவரை முதிா்ச்சி திகதியையும் குறிப்பிடவும்.

**மொத்தம்:** நிரல் (ஔ) இனை கூட்டி ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் குறிப்பிடவும். இறுதிப்பக்கத்தில் பக்கத்தின் மொத்தத்தையும் அறிக்கை முடிவில் கூட்டு மொத்தத்தினையும் பதியவும்.

### இணைப்பு 3இல் உள்ள பாதுகாப்பு வைப்புப் பெட்டக பொருட்பட்டியலை பூா்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

**வங்கியின் பெயா்:** அறிக்கையிடும் வங்கியின் பெயரைக் குறிப்பிடவும்

**அறிக்கையிடும் நாள்:** அறிக்கையிடுகின்ற திகதியிலுள்ளவாறான திகதியைக் குறிக்கவும்

**பெட்டகச் சொந்தக்காரரின் பெயா்(கள்):** சொந்தக்காரரின் அடையாளத்தினை அறிந்து கொள்ள உதவக்கூடிய தகவல்கள் உட்பட சொந்தக்காரரின் முழுப்பெயரினை (களை) குறிப்பிடவும்.

**பெட்டக இலக்கம்:** பாதுகாப்பு வைப்புப் பெட்டக இலக்கத்தினை குறிப்பிடவும்.

**துளையிடப்பட்ட திகதி:** பாதுகாப்பு வைப்புப் பெட்டகம் திறக்கப்பட்ட திகதியைக் குறிப்பிடவும்.

**நிலவறை அமைந்துள்ள இடம்:** பாதுகாப்பு வைப்புப் பெட்டகம் வைக்கப்பட்டுள்ள நிலவறை அமைந்துள்ள இடத்தைக் குறிப்பிடவும்.

**அளவும் விபரமான விபரணமும்:** பாதுகாப்பு வைப்புப் பெட்டகத்திலுள்ள ஒவ்வொரு விடயத்தினதும் தன்மையினை அளவுகளுடன் குறிப்பிடவும்

**பொருட்பட்டியலின் திகதி:** பொருட்பட்டியல் எடுக்கப்பட்ட திகதி

**இணைப்பு 3**

## பாதுகாப்பு வைப்புப் பெட்டக பொருட்பட்டியல் தாள்

**வங்கியின் பெயர்:**

**அறிக்கையிடும் ஆண்டு:**

**பெட்டகச் சொந்தக்காரரின் (களின்) பெயர்:**

**பெட்டகத்தின் எண்:** **துளையிடப்பட்ட நாள்:** **நிலவறையின் அமைவிடம்:**

| அளவு | உள்ளிருந்த பொருட்களின் விபரமான விபரணம் | வேறு ஏதாவது தொடர்பான தகவல்கள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

மேலேயுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும் எந்த ஒரு பொருளும் அகற்றப்படவோ அல்லது அழிக்கப்படவோ இல்லை எனவும் நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

பொருட்பட்டியலிடப்பட்ட திகதி:

................................................ .................................. ......................

வங்கி அலுவலரின் ஒப்பம் அலுவலரின் பெயர் பதவி

................................................ .................................. ......................

வங்கி அலுவலரின் ஒப்பம் அலுவலரின் பெயர் பதவி

**இணைப்பு 1**

## கைவிடப்பட்ட சொத்துக்களின் அறிக்கை

**வங்கியின் பெயர்:**

**அறிக்கையிடும் காலம்:**

| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | க |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சொந்தக்காரரின் மற்றைய பெயர்களுடன் இறுதிப் பெயர் முழுமையாக | இறுதியாக அறிந்த முழுமையான முகவரி | சொந்தக்காரரின் அடையாள இலக்கம், தெரிந்திருப்பின் (தே.அ.இ., கடவுச்சீட்டு இலக்கம், பிறவுச்சான்றிதழ் போன்றன) | சொத்துக் களின் விபரம் | சொத்தின் அடையாள இலக்கம் | வட்டி உழைக் கின்றதா ஆம்/ இல்லை | இறுதியாக நடவடிக்கை மேற்கொண்ட திகதி | நடவடிக் கையின் தன்மை | வர வேண்டிய தொகை | கழிக்கப் பட்ட தொகை | கழிவின் விபரங்கள் | தொகை | உடன் படிக்கைகளின் நியதிகளும் சொந்தக் காரரின் அறிவுறுத்தல் களும் |
| 1 | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | | | | |
| 10 | | | | | | | | | | | | | |
| 11 | | | | | | | | | | | | | |
| 12 | | | | | | | | | | | | | |

.............................. ஆகிய நான் சான்று பகிரப்பட்ட விதத்தில் முறையாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டு மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்காக 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கைவிடப்பட்டது என முடிவு செய்யப்படாதிருக்கும் அத்தகைய சொத்துக்கள் நீங்கலாக கைவிடப்பட்டதாகக் கருதப்படும் மொத்தமாக ரூ....... பெறுமதி கொண்ட சொத்துக்கள் தொடர்பாக ................ பக்கங்களை உள்ளடக்குகின்ற அறிக்கையைப் பரீட்சித்து சரியான முறையில் தயாரித்துள்ளேன் என்பதனையும் இவ்வறிக்கையினை நிறைவேற்றுவதற்கு ............................ வங்கியினால் (வங்கியாளர்) முறையாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளேன் எனவும் எனது சிறந்த அறிவின்படியும் நம்பிக்கையின்படியும் இவ்வறிக்கையானது உண்மையானது எனவும் மேலேயுள்ள திகதியிலுள்ளவாறு பூரணப்படுத்தியிருக்கின்றேன் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கையொப்பம்: ................................................ பெயர்: .................................. பதவி: .............................

அவரது/ அவளது கையொப்பம் எனக்கு முன்னால் வைக்கப்பட்டது என உறுதிப்படுத்துகிறேன்.

நாள் ............ மாதம் ..................... ஆண்டு .....................

கையொப்பம்: ................................................ பெயர்: ..................................

**02/08/005/0002/002**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 மே 03

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும்

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும்

முதன்மை நிறைவேற்று அலுவர்கள்

அன்புள்ள ஐயா,

**வங்கித்தொழில் நிலையங்களை பகுப்பாய்வு செய்தல்**

2006.03.23ஆம் நாள் நடைபெற்ற உரிமம் பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து மேலேயுள்ள விடயம் தொடர்பாக வங்கிகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக. அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள பகுப்பாய்விற்கு இணங்கிக் கொள்ளும் விதத்தில் தமது வங்கித்தொழில் நிலையங்களை பெயரிட்டு தொழிற்படுத்துதல் வேண்டும்.

ஏற்கனவேயுள்ள நிலையங்களைப் பொறுத்த வரை, சாத்தியமானளவு அவற்றிற்கு பொருத்தமான விதத்தில் மீளப் பெயரிடுமாறும் அல்லது எங்களுக்கு முன்கூட்டியே அறிவித்துவிட்டு பகுப்பாய்விற்கேற்ப நடவடிக்கைகளை கட்டுப்படுத்திக் கொள்ளுமாறும் வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. எனினும், ஒழுங்கு முறைப்படுத்தல் நோக்கங்களுக்காக ஏற்கனவேயுள்ள நிலையங்களும் கூட புதிய பகுப்பாய்வின் கீழ் பரிசீலனைக்கெடுக்கப்பட வேண்டும்.

பின்வருவனவற்றை உள்ளடக்குகின்ற நடமாடும் வங்கித்தொழில் பிரிவுகள் மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வுகளிலிருந்து நீக்கப்படுகின்றன.

அ. பல்வேறு அமைவிடயங்களிலும் ஊர்திகளில் மேற்கொள்ளப்படுகின்ற வங்கித்தொழில் பணிகள்

ஆ. வங்கி அலுவலர்கள் வங்கிப் பணிமனைகளுக்கு வெளியே வாடிக்கையாளர்களிடம் விஜயம் செய்து அவர்களுடன் வியாபார கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுகின்ற ''எளிமையான வங்கித்தொழில்''

இ. விஜயம் செய்யும் வங்கிப் பிரிவுக் கிளையைச் சேர்ந்த அலுவலர்கள் கொடுக்கல் வாங்கல் வியாபாரத்திற்காக ஒரு நிரந்தரமான இடத்தில் வாரத்தில் ஒரு சில நாட்கள் (அனைத்து வேலைநாட்களிலும் அல்ல) ஒரு பிரிவாக மேற்கொள்ளப்படும் வங்கிப்பணிகள்.

ஈ. கோயில்கள், பள்ளிக்கூடங்கள், களியாட்ட நிலையங்கள், கண்காட்சிகள், மாநாடுகள் போன்ற பொது இடங்கள் தொழிற்படுகின்ற தற்காலிக நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்ற வங்கித்தொழில் பணிகள்.

தயவு செய்து இது கிடைத்தமை பற்றி அறியத்தரவும்

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

படி: செயலாளர் நாயகம்

வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம் பெற்ற) இலங்கை வங்கியாளர் சங்கம்

**இணைப்பு**

| **வங்கித் தொழில் நிலையத்தின் பெயர்** | **அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள்** | **நிலை** |
|---|---|---|
| கிளை | வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் | முழுமையான பிரதான கிளை |
| மாணவர் சேமிப்புப் பிரிவு | தொடர்பான பள்ளிக்கூடத்தின் மாணவர், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களினால் திறக்கப்பட்டு தொழிற்படுத்தப்படுகின்ற சேமிப்புக் கணக்குகள் | பிரதான கிளையுடன் இணைக்கப்பட வேண்டும் |
| அடகு பிடித்தல் நிலையம் | அடகு பிடித்தலுடன் தொடர்பான நடவடிக்கைகள் | - மேற்படி - |
| வானூர்தி நிலையத்தின் கொடுப்பனவு அலுவலகம் | வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் பயணிகள் காசோலைகளை வழங்குவதும் காசாக மாற்றுவதும் | - மேற்படி - |
| விரிவாக்க அலுவலகங்கள் | - ஏற்கனவேயுள்ள வாடிக்கையாளர்களின் வைப்புக்களை ஏற்றுக் கொள்ளல் மற்றும் கடன் என அறவிடல்<br>- வைப்புக்கள் மற்றும் கடன்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல்<br>- அடகு பிடித்தலுடன் தொடர்பான நடவடிக்கை<br>- வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் பயணிகள் காசோலைகளை வழங்குவதும் காசாக மாற்றுவதும்<br>- அவசியமான சரிபார்ப்புக்களும் அங்கீகரிப்புக்களும் கிடைக்கத்தக்கதாக இருக்குமிடத்து காசு எடுப்பனவுகளை வழங்குதல்<br>- பொது வசதிகளின் கொடுப்பனவுப் பட்டியல்களை ஏற்றுக் கொள்ளல்<br>- அவசியமான சரிபார்ப்புக்களும் அங்கீகரிப்புக்களும் கிடைக்கத்தக்கதாக இருக்குமிடத்து வைப்புக்களுக்கு எதிராக முற்பணங்களை வழங்குதல்<br>- ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் | - மேற்படி - |
| தேசிய சேமிப்பு வங்கியின் அஞ்சல் அலுவலக/ துணை அஞ்சல் அலுவலகப் பிரிவுகள் | வைப்புகளைத் திரட்டுவதும் தலைமை அலுவலகத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட அளவிற்கு எடுப்பனவுகளை அனுமதிப்பதும் | - மேற்படி - |

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 மே 31

உரிமம் பெற்ற வங்கிகளுக்கும்

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் அரச சார்பற்ற அமைப்புகளின் கணக்குகள்**

அரசசார்பற்ற நிறுவனங்களினால் தொழிற்படுத்தப்படும் கணக்குகளுக்கான உள்முக பணவனுப்பல்கள் மற்றும் வெளிச்செல்லும் மாற்றல்கள் அல்லது நிதிய எடுப்பனவுகள் தொடர்பான நெருக்கமான கவனிப்புக்களையும் “உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்” என்பது தொடர்பான கடுமையான அவதானிப்புக்களின் அவசியம் பற்றியும் அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளினதும் உடனடிக் கவனம் ஈர்க்கப்படுகிறது.

இது தொடர்பாக அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளினதும் கவனம் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 15இன் துணைப்பிரிவு 2இனதும், 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச்சட்டத்தின் பிரிவு 3இனதும் ஏற்பாடுகளின்பால் உங்களின் கவனம் ஈர்க்கப்படுவதுடன் இவ்வேற்பாடுகள் இலகுவான உசாவுதலுக்காக இத்துடன் இணைக்கப்படுகிறது.

ஒப்பம்

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 15இன் துணைப்பிரிவு (2)** பின்வருமாறு வாசிக்கப்படுகிறது:

(2) கொடுக்கல் வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலொன்று -

(அ) ஏதேனும் சட்ட விரோதமான செயற்பாட்டிற்கு ஏற்றிக் கூறப்படற்பாலனவான வருவாய்களை ஈடுபடுத்தக் கூடும்; அல்லது

(ஆ) 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடை செய்யும் சட்டத்தின் கீழ் பணம் தூய்தாக்கல் தவறைப் புரிவதுடன் தொடர்புடையதாயிருக்கலாம்; அல்லது

(இ) 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிவதற்கான ஆயத்தமாக இருக்கலாம்.

எனச் சந்தேகிப்பதற்கு நிதிசார் உளவறிதற் கூறுக்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமிடத்து -

(i) கொடுக்கல் வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அவசியமான விசாரணைகளைச் செய்வதற்கு; அத்துடன்

(ii) அது தோதானதென நிதிசார் உளவறிதற் கூறு கருதுமாயின், விசாரணைகளில் சட்டத்தை வலுவுக்கிடும் இயைபான முகவராண்மையுடன் கலந்தாலோசிப்பதற்கு அல்லது அதற்கு மதியுரை வழங்குவதற்கு.

என நிதிசார் உளவறிதற் கூறை அனுமதிப்பதற்காக நிதிசார் உளவறிதற் கூறினால் தீர்மானிக்கப்பட வேண்டிய காலப்பகுதியொன்றுக்கு (இது ஏழு நாட்களுக்கு மேற்படாதிருக்கலாம்) அக்கொடுக்கல் வாங்கலினால் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலினால் பாதிக்கப்பட்ட நிதிகள் தொடர்பில் கொடுக்கல் வாங்கலை அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலை அல்லது வேறு ஏதேனும் கொடுக்கல் வாங்கலைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டாமென்று எழுத்தினால் அல்லது இருபத்து நாலு மணித்தியலாங்களுள் எழுத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டிய தொலைபேசி அழைப்பினால் அது நிறுவனத்தைப் பணிக்கலாம்.

(3) நிதிசார் உளவறிதற் கூறு அத்தகைய விண்ணப்பத்திற்கான ஏதுக்களைத் தந்து (2) ஆம் உட்பிரிவில் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் நீடிப்பொன்றிற்கென கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்திற்கு மறுகட்சியற்ற விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

துணைப்பிரிவு 15 (2) (அ)இன் நோக்கங்களுக்காக மேலே குறிப்பிடப்பட்ட "சட்டத்திற்கு மாறான நடவடிக்கை" என்பது மற்றைய விடயங்களுடன் தண்டனைக்குரிய குற்றத்தின் கீழ் வரும் எந்தவொரு நடவடிக்கையும்

(அ) தற்பொழுது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத்தினை தடைசெய்கின்ற மற்றும் ஒடுக்குவதுடன் தொடர்பாக எந்த ஒரு சட்டம் அல்லது ஒழுங்கு விதி

எனவே, மேலேயுள்ள சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, கம்பனியொன்றிலிருந்து தனிப்பட்ட ஒருவருக்கு பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதற்காக நிதியம் மாற்றல் செய்யப்பட்டிருக்கின்றது என்பதற்கு போதுமான சான்றுகள் கிடைக்கத்தக்கதாக இருப்பின், எந்த ஒரு பயங்கரவாத நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு தனிப்பட்ட ஒருவருக்கு அத்தகைய நிதியினை விடுவிப்பதற்கான உத்தேசத்தினைக் கொண்ட கம்பனிக்கான நிதிகளை வைத்திருக்கும் குறிப்பிட்ட வங்கிக்கு நிதியியல் உளவறிதல் பிரிவு 7 நாள்களைக் கொண்ட காலப்பகுதிக்கு கணக்கினை இடை நிறுத்துமாறு அறிவிக்க முடியும். கணக்கிலுள்ள நிதியத்தினை முடக்குவதற்கு பொருத்தமான நடவடிக்கையினை மேற்கொள்ள காலம் போதாமல் இருப்பின் இக்காலப்பகுதியை நீடிப்பதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவு 7 நாட்கள் முடிவடைவதற்கு முன்னதாக கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

மேலும், **2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் 3ஆம் பிரிவு** பின்வருமாறு வாசிக்கப்படுகிறது

3(1) எவ்வழிவகைகள் மூலமும், நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ, சட்ட விரோதமாகவும் வேண்டுமென்றும் -

(அ) இதற்கான 1ஆம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படும் பொருத்தனைகளுள் ஏதேனுமொன்றின் நோக்கெல்லைக்குள் அல்லது வரைவிலக்கணத்தினுள் தவறொன்றாக அமைகின்ற ஒரு செயலை:

(ஆ) ஆயுதமேந்திய மோதல் நிலைமையொன்றில், பொதுமகன் ஒருவருக்கு அல்லது பகைமைகளில் தீவிரமான பங்கெடுக்காத வேறேவரேனுமாளுக்கு மரணத்தை அல்லது பாரதூரமான உடலூறுபாட்டை விளைவிக்க உட்கருத்துக் கொண்ட அத்தகைய செயலின் நோக்கம். அதன் தன்மையினால் அல்லது சந்தர்ப்பத்தினால், ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது செய்யாது தவிர்ப்பதற்கு ஒரு குடிசனத்தை அச்சுறுத்துவதாக அல்லது ஓர் அரசாங்கத்தை அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பை வலுக்கட்டாயப்படுத்துவதாக உள்ள வேறேதேனும் செயலை.

புரிவதற்கு எவையேனும் நிதிகள் முழுமையாக அல்லது பகுதியளவில் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற உட்கருத்துடன் அல்லது அவை பயன்படுத்தப்படவுள்ளன அல்லது அவை பயன்படுத்தப்படக்கூடிய சாத்தியமுள்ளது என நம்புவதற்கு ஏது உள்ளது என அறிந்து கொண்டு அத்தகைய நிதிகளை வழங்குகின்ற அல்லது சேகரிக்கின்ற எவரேனுமாள், பயங்கரவாதிகளுக்கு அல்லது பயங்கரவாத ஒழுங்கமைப்புக்களுக்கு நிதியளித்தல் என்ற தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஆயின், செயலொன்று மேலே தரப்பட்டுள்ள தவறாக அமைவதற்கு, சேகரிக்கப்பட்ட நிதிகள் உள்ளபடியாகவே தவறொன்றைப் புரிவதில் பயன்படுத்தப்பட்டன என்பதைக் காட்டுவது அவசியமானதாதலாகாது.

(2) பயங்கரவாதிகளுக்கு அல்லது பயங்கரவாத ஒழங்கமைப்புகளுக்கு நிதியளித்தல் என்ற தவறை -

(அ) புரிய எத்தனிக்கின்ற;

(ஆ)) புரிவதில் உதவுகின்ற அல்லது உடந்தையாகவிருக்கின்ற; அல்லது

(இ) இன்னோராளுடன் அல்லது ஆட்கள் தொகுதியுடன் பொதுவான நோக்கமொன்றுடன் செயலாற்றி புரிவதற்கு உதவுகின்ற.

எவரேனுமாள், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவில் "உடந்தை" என்பது தண்டனைச் சட்டக்கோவை 100ஆம், 101ஆம் பிரிவுகளில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது.

(3) ஓராம் பந்தியில் அல்லது (2)ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட தவறொன்று ஓர் ஆட்கள் குழுவினால் புரியப்படுமிடத்து, அப்போது அத்தகைய ஆட்கள் குழுவினால் புரியப்படுமிடத்து அப்போது அத்தகைய ஆட்கள் குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், பணிப்பாளரும், முகாமையாளரும், செயலாளரும், அலுவலரும் அல்லது சேவையாளரும் தவறானது அவர் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய விழிப்புக் கவனம் எல்லாவற்றையும் அவர் பிரயோகித்தனரென எண்பிக்க முடியுமாக இருந்தாலொழிய அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழான அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொருவர், மேல் நீதிமன்றத்தினால், குற்றப்பகர்வின் மீதான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமான காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

4(1) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்காக மேல் நீதிமன்றத்தில் எவரேனும் ஆளுக்கெதிரான குற்றப்பகர்வின் மீது 3ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறி சேகரிக்கப்பட்ட நிதிகள் யாவும், அத்தகைய குற்றப் பகிர்வு கோப்பிடப்படுகின்ற திகதியிலிருந்து பயனுறுவதாக -

(அ) அத்தகைய நிதிகள் ஏதேனும் வங்கியில் கணக்கொன்றில் இருக்குமாயின் முடக்கல் கட்டளை ஒன்றிற்கு அமைவானதாதல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய நிதிகள் எவரேனம் ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்குமாயின் கைப்பற்றப்படுவதற்கு இலக்காதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி நிதிகள் முடக்குதல் அல்லது கைப்பற்றுதல் விளக்கம் முடிவுறும் வரை வலுவிலிருத்தல் வேண்டும்.

(3) குற்றப்பகர்வைக் கோப்பிடுவதன்மேல் சட்டத்துறை தலைமையதிபதி, விடயத்திற்கேற்ப முடக்குதல் அல்லது கைப்பற்றுதல் பற்றி மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) மத்திய வங்கி, அது தகுதியானதென எண்ணக்கூடியவாறாக விடயத்திற்கேற்றவாறு முடக்குதல் அல்லது கைப்பற்றுதல் கட்டளைக்கு போதுமான விளம்பரத்தைக் கொடுப்பதற்கு அதன்மேல் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 யூன் 01

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

என்பனவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவர்களுக்கு

அன்புள்ள ஐயா,

## பாசல் IIஇன் கீழ் மூலதனப் போதுமையைக் கணிப்பதன் மீதான வரைவு வழிகாட்டல்கள்

பாசல் I மற்றும் பாசல் II என்பனவற்றை சமகாலத்தில் கணிப்பது தொடர்பாக வங்கிகளினால் கேட்டுக் கொள்ளப்பட்ட தெளிவுபடுத்தல்கள் மற்றும் 2005.05.26ஆம் நாளன்று நடத்தப்பட்ட பாசல் II தொடர்பாக இலங்கை வங்கியாளர் சங்கத்தின் துணைக்குழுக் கூட்டத்தில் வங்கிகளினால் எழுப்பப்பட்ட விடயங்கள் என்பன அனைத்து வங்கிகளினதும் தகவல்களுக்காக இத்தால் சுற்றறிக்கைப்படுத்தப்படுகின்றன.

எதிர்கால கணிப்புக்களுக்காக அனைத்து வங்கிகளும் இத்தெளிவுபடுத்தல்களை கவனிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

1. **சில்லறை மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் சொத்துப்பட்டியல்கள்**

1.1 பாசல் II இன் கீழ் சில்லறை மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் சொத்துப்பட்டியல் ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக முன்னுரிமை இடர்நேர்வு நிறையேற்றலுக்கு தகைமை பெறும் பொருட்டு வங்கிகள் மேற்பார்வையிடல் செல்லுபடியாகும் தன்மைக்காக அவற்றை அடையாளம் கண்டு வெவ்வேறாக்குதல் வேண்டும். ஆகவே, பாசல் II இனை நடைமுறைப்படுத்தியதும் சலுகை ரீதியான இடர்நேர்வு நிறையேற்றல்களை பிரயோகிப்பதற்கு இயலும் விதத்தில் அத்தகைய சொத்துப்பட்டியல்களை நேரகாலத்துடன் அடையாளம் காணவும் வெவ்வேறாக்குவதற்காகவும் வங்கிகள் தமது தகவல் முறைகளை அபிவிருத்தி செய்வது முக்கியமானதாகும்.

1.2 சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளின் வரைவிலக்கணம் - "சில்லறை/ சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் வரைவிலக்கணம்" மீதான இலங்கை வங்கியாளர் சங்கத்தின் துணைக்குழுவின் ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு இறுதிப்படுத்தப்படுவதுடன் அதனைத் தொடர்ந்து வங்கிகளிலிருந்தான உதவித் தகவல்கள் மீளாய்வு செய்யப்படும்.

1.3 இலங்கை மத்திய வங்கியினால் தெரிவிக்கப்பட்ட தற்போதைய 3 பிரமாணங்களைக் கொண்ட யோசனைக்குப் பதிலாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை அடையாளம் காண்பதற்கு பின்வரும் இரண்டு பிரமாணங்களைப் பயன்படுத்துவதற்கும் ஆலோசனை தெரிவிக்கப்படுகிறது.

- நிலம் மற்றும் கட்டிடங்கள் நீங்கலாக, ரூ.35 மில்லியனை விஞ்சாத சொத்துக்களின் பெறுமதி
- சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் ஆண்டு மொத்தப் புரள்வு ரூ.30 மில்லியனுக்குக் குறைவாக இருத்தல் (தீர்மானிக்கப்பட வேண்டியது).

மேலும், சிறிய நடுத்தர தொழில் முயற்சியொன்று சில்லறைச் சொத்துப்பட்டியலின் ஒரு பகுதியாக இருப்பதனால், சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் சொத்துப்பட்டியலும் கூட சில்லறைக் கடன்களாக அதே தகைமை பெறும் பிரமாணங்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். சில்லறை மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான திருத்தப்பட்ட பிரமாணங்களுக்காக பாசல் II இன் மீதான வரைவு வழிகாட்டல்களுக்காக இணைக்கப்பட்ட பின்னிணைப்பினை தயவு செய்து பார்க்கவும்.

2. **ஏனைய தெளிவுபடுத்தல்கள்**

2.1 **கொடுகடன் அட்டை வைத்திருக்குமொருவர் மேலதிகப் பற்று மற்றும் தவணைக்கடன் வசதியை அனுபவிப்பதனை ஒழுங்குமுறைப்படுத்தல் சில்லறை சொத்துப்பட்டியலின் கீழ் பரிசீலிக்க முடியுமா?**

தனிப்பட்ட கடன்களையும் தனிப்பட்ட மேலதிகப் பற்றுக்களையும் சில்லறை சொத்துப்பட்டியலின் கீழ் (சார்ந்த மற்றும் சாதனப் பிரமாணங்கள்) உள்ளடக்குவதற்கு பரிசீலிக்க முடியும். இதன்படி, மேலதிகப் பற்றுக்களும் தவணைக்கடன்களும் வியாபார நோக்கங்களுக்காக வழங்கப்பட்டிருக்குமாயின் அவை சில்லறைச் சொத்துப்பட்டியலின் கீழ் உள்ளடக்கப்படுவதற்கு தகைமை பெறமாட்டா. பிரமாணத்திற்கான தகைமையினைப் பூர்த்தி செய்வதனைப் பொறுத்து அவை சிறிய நடுத்தர தொழில் முயற்சிச் சொத்துப்பட்டியலுக்குள் உள்ளடக்கப்படலாம்.

2.2 **ஏக சொத்துடமையாண்மைக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் சில்லறை சொத்துப்பட்டியலின் கீழா அல்லது சிறிய நடுத்தர தொழில் முயற்சி சொத்துப்பட்டியலின் கீழா உள்ளடக்கப்படுவதற்கு தகைமை பெறும்.**

பிரமாணத்திற்கு தகைமையை பெறுவதனைப் பொறுத்து சிறிய நடுத்தர தொழில் முயற்சி சொத்துப்பட்டியலின் கீழ் உள்ளடக்கப்படும்.

2.3 **வதிவிடங்களின் ஈடுகள்**

**நிலம் கடன்பாட்டாளருக்கு சொந்தமாக இருந்து கட்டுமானத்திற்கு கடன் வழங்கப்பட்டிருக்கும் பொழுது சொத்தின் பெறுமதி கண்டறியப்படுகிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில் நிலத்திற்குப் பெறுமதி இல்லையாகையால் வங்கிக்கான கணியத்தின் பெறுமதி மீது 75% இனை பிரயோகிக்க முடியுமா?**

**கூட்டு உறுதியைக் கொண்ட சொத்தில் வீடொன்றினைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட கடன்களை "வதிவிட சொத்தினால் பிணையிடப்பட்ட, வதிவிட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்" எனக் கருத முடியுமா? விடை ஆம் எனில், (கூட்டு உறுதிச் சொத்தக்கள் எந்த ஒரு பெறுமதியினையும் கொண்டிருக்காமையினால்) மேலே குறிப்பிடப்பட்ட வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்ட கடனின் பொருட்டு பரிசீலனைக்கெடுக்கப்பட வேண்டிய பெறுமதி என்ன?**

கடன் வழங்கல் நோக்கங்களுக்காக வங்கிகளினால் பயன்படுத்தப்பட்ட மதிப்பீடு சொத்துக்களின் பெறுமதியாகக் கருதப்பட வேண்டும்.

2.4 **பிணையங்களின் கொடுகடன் தரமிடல் - வெளிப்படுத்துகையினை உள்ளடக்குகின்ற பிணையங்களின் கொடுகடன் தரமிடல் கடன்பாட்டாளரின் கொடுகடன் தரமிடலை விடக் குறைவானதாக இருக்கும் சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்துகைக்கான இடர்நேர்வினைக் கணிப்பதற்கு எத்தரமிடலைப் பயன்படுத்த வேண்டும்?**

பிணையத்தின் கொடுகடன் தரமிடல் கடன்பாட்டாளாரினதைவிட குறைவாக இருக்குமாயின் பிணையமானது கொடுகடன் இடர்நேர்வு தணிப்பினை வழங்கமாட்டாது. எனவே பாசல் II இன் நோக்கங்களுக்காக இது பிணையிடப்பட்ட கொடுக்கல் வாங்கலாக இருக்கமாட்டாது.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**இணைப்பு**

**ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட சில்லறை மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளின் சொத்துப்பட்டியல் அடையாளச் சான்றலுக்கான திருத்தப்பட்ட பிரமாணம்**

பின்வரும் பிரமாணத்தினை பூர்த்தி செய்கின்ற செயலாற்றுகின்ற கோரல்கள் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட சில்லறை மற்றும் சொத்துப்பட்டியலின் கீழ் உள்ளடக்கப்படுவதற்கும் முன்னுரிமை இடர்நேர்வு நிறையின் 75% இற்கும் தகைமை பெறும்.

**ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட சில்லறைச் சொத்துப்பட்டியலுக்கு தகைமை பெறுவதற்கான பிரமாணம்.**

1. சார்ந்த பிரமாணம் - வெளிப்படுத்துகையானது தனிப்பட்ட நோக்கங்களுக்கான தனிப்பட்ட ஆளாக இருத்தல் வேண்டும்.

2. சாதனப் பிரமாணம் - வெளிப்படுத்துகை பின்வரும் உற்பத்தி வகைகளுள் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

   - மீண்டும் பயன்படுத்தத்தக்க கொடுகடன் மற்றும் தனிப்பட்ட மேலதிக பற்றுக்கள் மற்றும் கொடுகடன் அட்டைகள் உட்பட தொடர்க் கொடுகடன்
   - தனிப்பட்ட தவணைக்கடன்கள் மற்றும் குத்தகைகள் (உ-ம்: தவணைக்கடன்கள், ஊர்திக்கடன்கள் மற்றும் குத்தகைகள் மாணவர் கல்விக்கான கடன்கள், தனியார் நிதி)
     - முறிகள் மற்றும் பங்குகள் போன்ற பிணையங்கள் (முதலீடுகளாகக் கருதப்படல் வேண்டும்) நீக்கப்படுகின்றன.
     - சொத்து ஈட்டுக்களினால் பிணையிடப்பட்ட கடன்கள் கோரல்களாக உள்ளடக்கப்படுவதற்கு தகைமை பெறுகின்றன. வதிவிட சொத்துக்களினால் பிணையிடப்பட்டவை நீக்கப்படுகின்றன.

3. சிறிய அளவுப் பிரமாணங்கள் - ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட சில்லறைச் சொத்துப்பட்டியலனாது, சொத்துப்பட்டியலிலுள்ள இடர்நேர்வுகளைக் குறைக்கத்தக்க அளவிற்கு போதுமானளவில் பன்முகப்படுத்தப்பட வேண்டும். இப்பிரமாணத்தினைப் பூர்த்தி செய்யும் விதத்தில், கொடுகடன் இடர்நேர்வு தணிப்பினை கருத்திற் கொள்ளாமல் கூட்டு மொத்த வெளிப்படுத்துகையானது ஒரு இணைத்தரப்பினரைப் பொறுத்தவரையில் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட மொத்த சில்லறை சொத்துப்பட்டியலில் 0.2% இனை விஞ்சக்கூடாது (எந்த ஒரு செயற்படாத சில்லறைக்கடன்களும் நீங்கலாக) (ஒரு இணைத்தரப்பினர் - ஒன்று அல்லது பல தொழில் முயற்சிகள் சேர்ந்து தனியொரு நன்மை பெறுநராக உருவாவது உ-ம்: சிறிய வியாபாரங்கள் இன்னொரு சிறிய வியாபாரத்துடன் இணைக்கப்படுகின்றமையினைப் பொறுத்தவரை வங்கியின் கூட்டு மொத்த வெளிப்படுத்துகைக்கு ஏற்புடைத்தான வரையறை இரு வியாபாரங்களின் மீதுமானதாக இருக்கும்).

4. தனியாட்களுக்கான வெளிப்படுத்துகைகளின் தாழ்ந்த பெறுமதி - தனியொரு இணைத்தரப்பினருக்கான ஆகக்கூடிய கூட்டு மொத்த சில்லறை வெளிப்படுத்துகையானது மூலதன நிதியத்தில் 0.2% இற்கும் குறைவான அளவினை அல்லது ரூ.10 மில்லியனை விஞ்சக்கூடாது.

**சிறிய நடுத்தர தொழில் முயற்சித் சொத்துப்பட்டியலுக்கான தகைமைப் பிரமாணம்**

1. சார்ந்த பிரமாணம் - வெளிப்படுத்துகையானது வியாபார நோக்கங்களுக்கான (ஏக சொத்துரிமையாண்மை) தனிப்பட்ட ஆளொருவருக்கானதாக அல்லது நிறுவனம் அல்லது சிறிய அல்லது நடுத்தர தொழில் முயற்சிக்கானதாக இருத்தல் வேண்டும்.

   சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள்:

   பின்வரும் பிரமாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

   - சொத்துக்களின் பெறுமதி நிலம் மற்றும் கட்டிடம் நீங்கலாக ரூ.35 மில்லியனை விஞ்சக்கூடாது; அத்துடன்
   - ஆண்டு மொத்தப் புரள்வு ரூ.30 மில்லியனிற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்

2. சாதனப் பிரமாணம் - வெளிப்படுத்துகையானது பின்வரும் உற்பத்தி வகைகளில் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

   - மேலதிகப் பற்றுக்கள் உட்பட மீண்டும் கிடைக்கும் கொடுகடன் மற்றும் தொடர்க் கொடுகடன்கள்
   - தவணைக்கடன்கள் மற்றும் குத்தகைகள்
     - முறிகள் மற்றும் பங்குகள் போன்ற பிணையங்கள் நீக்கப்படுகின்றன (முதலீடுகளாகக் கருதப்படவேண்டும்).
     - சொத்து ஈடுகளினால் பிணையிடப்பட்ட கடன்கள் கோரல்களாக உள்ளடக்கப்படுவதற்கு தகைமை பெறுகின்றன. வதிவிட சொத்துக்களினால் பிணையிடப்பட்டவை நீக்கப்படுகின்றன.

3. சிறிய அளவுப் பிரமாணங்கள் - சொத்துப்பட்டியலிலுள்ள இடர்நேர்வுகளைக் குறைக்கின்ற அளவிற்கு சிறிய நடுத்தர தொழில் முயற்சி சொத்துப்பட்டியல் போதுமானளவிற்கு பன்முகப்படுத்தப்படல் வேண்டும். இப்பிரமாணங்களை நிறைவு செய்யும் விதத்தில் கொடுகடன் இடர்நேர்வுத் தணிப்பினை கருத்திற் கொள்ளாமல் கூட்டு மொத்த வெளிப்படுத்துகையானது ஒரு இணைத்தரப்பினரைப் பொறுத்தவரையில் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட மொத்த சில்லறை சொத்துப்பட்டியலில் 0.2% இனை விஞ்சக்கூடாது. (எந்த ஒரு செயற்படாத சில்லறைக்

கடன்களும் நீங்கலாக) (ஒரு இணைத்தரப்பினர் - ஒன்று அல்லது பல தொழில் முயற்சிகள் சேர்ந்து தனியொரு நன்மை பெறுநரராக உருவாவது உ-ம்: சிறிய வியாபாரங்கள் இன்னொரு சிறிய வியாபாரத்துடன் இணைக்கப்படுகின்றமையினைப் பொறுத்தவரை வங்கியின் கூட்டு மொத்த வெளிப்படுத்துகைக்கு ஏற்புடைத்தான வரையறை இரு வியாபாரங்களின் மீதுமானதாக இருக்கும்)

4. தனிப்பட்ட ஆட்களின் வெளிப்படுத்துகைகளின் தாழ்ந்த பெறுமதி - ஒரு இணைத்தரப்பினருக்காக ஆகக்கூடிய மொத்த வெளிப்படுத்துகை ரூ.35 மில்லியன் கொண்ட முழுமையான கீழ் மட்டத்தினை விஞ்சக்கூடாது.

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 யூன் 13

உரிமம் பெற்ற வங்கிகளின்

முதன்மை நிறைவேற்று அலுவர்களுக்கு

அன்புள்ள ஐயா,

## இலத்திரனியல் அட்டைகளைப் பயன்படுத்தி மோசடியிலீடுபடுவதனைத் தடுத்தல்

பல்வேறு நாடுகளிலும், குறிப்பாக தென்கிழக்காசிய பிராந்தியத்தில் கொடுகடன் அட்டைகள் மற்றும் தன்னியக்கக் கூற்றுப்பொறி அட்டைகளைப் பயன்படுத்தி வங்கிகளிலிருந்து பெருமளவு பணத்தினை மோசடியான முறையில் எடுப்பனவு செய்துள்ளமை பற்றி அண்மைக்கால அறிக்கைகள் எடுத்துக்காட்டியுள்ளன.

பயங்கரவாதக்குழுக்கள் பொருளாதாரத்தின் இன்றியமையாததுறையில் பாதுகாப்பற்ற நிலைமையொன்றினை உருவாக்குகின்ற நோக்குடன் இவற்றினைப் பயன்படுத்துவதிலுள்ள ஆபத்தினைக் கருத்திற்கொண்டு சனாதிபதி செயலகம், 2006 யூன் 6ஆம் நாளிடப்பட்ட அதன் கடிதத்தின் மூலம் இலங்கையிலும் கூட அத்தகைய முயற்சிகள் இடம் பெறும் சாத்தியத்தினைத் தவிர்ப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பதற்கான தேவை குறித்து மத்திய வங்கியின் கவனத்தினை ஈர்த்திருக்கிறது.

இதன்படி, வாடிக்கையாளர்களுக்கு இலத்திரனியல் அட்டைகளை வழங்கும் உரிமம் பெற்ற வங்கிகள் நடைமுறைப்படுத்தத்தக்க பின்வரும் நடவடிக்கைகளை விரைவாக எடுத்தல் வேண்டும்.

1. இலத்திரனியல் அட்டைகளுக்கு மாற்றத்திற்குள்ளாகாத நுண்ணிய பொறிமுறை போன்ற பாதுகாப்பு பண்புகளை அறிமுகப்படுத்தல்.
2. அத்தகைய அட்டைகளை மோசடியான முறையில் பயன்படுத்துவதனால் பாதிக்கப்படக்கூடிய தன்மையினை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் இலத்திரனியல் அட்டையின் பாதுகாப்புப் பற்றி அறிவூட்டுவதற்கும், கிரமமான இடைவெளியில் அவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நினைவூட்டுவதற்கும் பொருத்தமான நடவடிக்கையினை எடுத்தல்.
3. தொழில்நுட்பத்தில் அவசியமான முதலீடுகளை மேற்கொள்வதற்காக ஆண்டு தோறும் போதுமான ஒதுக்கங்கள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துதல்.

தன்னியக்கக் கூற்றுப்பொறி அட்டைகள்/ பொறிகள் தொடர்பாக ஏனைய பொருத்தமான பாதுகாப்பு வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும் வங்கிகள் ஊக்குவிக்கப்படுகின்றன. தன்னியக்கக் கூற்றுப்பொறி நிலையங்களில் கண்காணிப்பினை அதிகரிக்கும் விதத்தில் அனைத்து தன்னியக்கக் கூற்றுப்பொறி நிலையங்களிலும் தொலைக்காட்சி கமராக்களைப் பொருத்துமாறும் ஆலோசனை வழங்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பான தங்களின் கருத்துக்கள் 2006யூன் 22ஆம் நாளன்று நடைபெறவுள்ள முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் மாதாந்தக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்காக வரவேற்கப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

## சனாதிபதி செயலகம்

2006 யூன் 6

தேசமான்ய சுனில் மென்டிஸ்

ஆளுநர்

இலங்கை மத்திய வங்கி

சிங்கப்பூரிலும் அதே போன்று நியூசிலாந்து போன்ற மற்றைய நாடுகளிலும் இடம் பெற்றதாக அண்மையில் அறிவிக்கப்பட்ட தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் மோசடித்தன்மையானது (திவயின - 25.5.2006) அத்தகைய நடைமுறைகள் உலகம் முழுவதும் பரவக்கூடிய தன்மையினை எடுத்துக் காட்டுகிறது.

பயங்கரவாதக்குழுக்கள் பொருளாதாரத்தின் இன்றியமையாத துறையில் பாதுகாப்பற்ற நிலைமையொன்றினை உருவாக்குகின்ற நோக்குடன் இவற்றினைப் பயன்படுத்துவதிலுள்ள ஆபத்தினைக் கருத்திற் கொண்டு, இலங்கையிலும் அத்தகைய முயற்சிகளை மேற்கொள்வதற்கான சாத்தியங்களைத் தவிர்ப்பதற்கு முன்மதியுடைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இதன்படி நாட்டிலுள்ள வங்கிகள் இது தொடர்பாக எந்த ஒரு முன் முயற்சியையும் இதுவரை எடுத்திருக்காவிடின் பின்வரும் வழிமுறைகளையும் ஏனையவற்றையும் மேற்கொள்வதற்கு வங்கிகளைக் கேட்டுக்கொள்ள நேரகாலத்துடன் நடவடிக்கையினை மேற்கொள்வது நன்மை பயக்கும்.

1. மாற்றத்திற்குள்ளாகாத நுண்ணிய பொறிமுறை வங்கி அட்டைகளை (தற்பொழுது பல நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருவது போன்று) அறிமுகப்படுத்தும் செய்முறையினை விரைவுபடுத்தல்.
2. தன்னியக்கக் கூற்றுப் பொறிக் கொள்ளைகளினால் பாதிக்கப்படுவதனை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு கிரமமான இடைவெளிகளில் வாடிக்கையாளர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அவர்களுக்கு நினைவூட்டுவது.

வங்கிகளை, அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு அல்லது நாட்டின் உறுதித்தன்மைக்கு எவ்வடிவிலேனும் ஏற்படும் இடர்நேர்வினைக் குறைப்பதற்கு மிக இன்றியமையாதது என்ற உண்மையின் அடிப்படையில் எமது அவதானிப்புக்களையும் ஆலோசனைகளையும் நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள் என நாம் நம்புகிறோம்.

உண்மையுள்ள

ஒப்பம்

**லலித் வீரதுங்க**

சனாதிபதியின் செயலாளர்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 யூன் 16

அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளினதும்

முதன்மை நிறைவேற்று அலுவர்களுக்கும்

அன்புள்ள ஐயா,

**உரிமம் பெற்ற வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் அரச சார்பற்ற அமைப்புக்களின் கணக்குகள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2006 மே 31ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கைக்கு மேலதிகமாக, அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் கவனம் பின்வரும் விடயங்களின்பால் ஈர்க்கப்படுகின்றது.

- வெளிநாட்டு மூலங்களிலிருந்து நிதி உதவியைப் பெறுகின்ற அரச சார்பற்ற அமைப்புக்களினால் மேற்கொள்ளப்பட்ட நிதியியல் கொடுக்கல் வாங்கல்களின் சட்ட ரீதியான தன்மையினை ஆராயும் பொருட்டு, நிதித்திட்டமிடல் அமைச்சு பொருத்தமான கண்காணிப்பு நடைமுறைகளை நிறுவுமாறும் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளைக் கண்டறிந்து கொள்ளுமாறும் தொடர்பான அமைச்சுக்களைக் கேட்டுக்கொண்டது.

- இதன்படி அத்தகைய அரச சார்பற்ற அமைப்புக்கள் அவற்றின் நடவடிக்கைச் செயற்பரப்பிற்கு வெளியே தொழிற்படுகின்றன என்பதற்குச் சான்றுகள் கிடைக்குமிடத்து தொடர்பான அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு அத்தகைய நிதிகளை விடுவிப்பதற்கு முன்னர் தொடர்பான அமைச்சிலிருந்தும் வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்திலிருந்தும் இசைவுக் கடிதமொன்றினைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இசைவுக் கடிதத்தின் படியொன்றினை இலங்கை மத்திய வங்கிக்கும் அனுப்பி வைக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 யூன் 27

*உரிமம் பெற்ற வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

*ஒப்புதலளிக்கப்பட்ட கணக்காளர் குழுமத்திற்கும்*

அன்புள்ள ஐயா,

**வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறைகளினது வரிக் கொடுப்பனவுகள்**

உள்நாட்டரசிறைத் திணைக்களம் வங்கித்தொழில்துறையின் வரிக் கொடுப்பனவில் (வருமானவரி, பெறுமதிசேர் வரி - நிதியியல் நடவடிக்கைகள் மீதான பெறுமதிசேர் வரி உட்பட, உழைக்கும் போதே செலுத்தும் வரி, பற்று வரி, பொருளாதாரப் பணிக்கட்டணம்) அவதானிக்கப்பட்ட பிறழ்வுகள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் கவனத்தினை ஈர்த்திருக்கின்றது.

ஆகவே, உள்ளாட்டரசிறைத் திணைக்களத்திற்கு செலுத்தப்படற்பாலதான வருமான வரி, பெறுமதிசேர் வரி (நிதியியல் நடவடிக்கைகள் மீதான பெறுமதிசேர் வரி உட்பட) உழைக்கும் போதே செலுத்தும் வரி, பற்று வரி மற்றும் பொருளாதார பணிக்கட்டணம் போன்ற அனைத்து வரிக் கொடுப்பனவுகளும், அத்தகைய கொடுப்பனவுகளைச் செய்யும் வேளையில் உள்ளாட்டரசிறைத் திணைக்களத்தின் தொடர்பான ஏற்பாடுகளுடன் இணங்கி செல்லும் விதத்தில் வங்கியின் வெளிக்கணக்காய்வாளர்களின் உறுதிப்படுத்துதலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 யூன் 28

இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள
உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை
நிறைவேற்று அலுவர்களுக்கு

அன்புள்ள ஐயா,

**தனியொரு கடன்பாட்டாளர் வரையறை - கூட்டு மொத்த வெளிப்படுத்துகை வரையறைக்கு இணங்கியொழுகுதல்**

அனைத்து வங்கிகளினதும் கவனம், அனைத்து நேரங்களிலும் இணங்கியொழுகப்பட வேண்டுமென தேவைப்படுத்துகின்ற 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தனியொரு கடன்பாட்டாளர் வரையறைப் பணிப்புரையின் 3ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டவாறு, தனியொரு கடன்பாட்டாளர் வரையறையின் கீழான கூட்டு மொத்த வெளிப்படுத்துகை வரையறையின்பால் ஈர்க்கப்படுகின்றது. கடன் வசதிகள் தலைமை அலுவலக உத்தரவாதம்/ பொறுப்பேற்றலொன்றிற்கெதிரான தனியொரு கடன்பாட்டாளர் வரையறையினை விஞ்சுவது கூட்டு மொத்த வெளிப்படுத்துகை வரையறையிலிருந்து விலக்கப்படமாட்டாது என்பதனை தயவு செய்து அறிவித்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

படி: செயலாளர் நாயகம்/ இலங்கை வங்கியாளர் நிறுவனம்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 யூலை 28

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின்
முதன்மை நிறைவேற்று அலுவர்களுக்கு

அன்புள்ள ஐயா,

**தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையினை அடிப்படையாகக் கொண்ட புதிய வெப்தளத்தினை நடைமுறைப்படுத்தல் - உ.வ. வங்கிகள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2006 மாச்சு 17ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை மற்றும் 2006.07.04 மற்றும் 2006.06.22ஆம் நாட்களில் நடைபெற்ற உரிமம் பெற்ற வங்கிகளின் முதனிலை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டங்களின் கலந்துரையாடல்களுக்கு மேலதிகமாக, அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளுக்கும், காலாந்தரக் கூற்றுக்களை கையெழுத்து வடிவில் வழங்குவது, 2006 யூனுடன் முடிவடையும் காலப்பகுதிக்கான கூற்றுக்களுடன் நிறுத்தப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகிறோம். புதிய "வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக்கள்" 2006 யூலை 01 ஆம் நாள் தொடங்குகின்ற அறிக்கையிடும் காலப்பகுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக்களின் பட்டியல்கள் இணைப்பு 1இல் தரப்பட்டுள்ளன. ஏற்கனவேயுள்ள கூற்றுக்கள் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக்களின் மூலம் அகற்றப்படாததுடன் சமர்ப்பிக்கப்பட்ட கையினால் செய்யப்பட்ட வடிவத்திலேயே தொடர்ந்துமிருக்கும்.

2. வாராந்த/ மாதாந்த, காலண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பான சான்றுபடுத்தும் கூற்றுக்கள் முறையே இணைப்பு 2, இணைப்பு 3, இணைப்பு 4 மற்றும் இணைப்பு 5இல் குறித்துரைக்கப்பட்டவாறு அறிக்கையிடும் காலம் முடிவடைந்ததிலிருந்து 3 நாட்களுக்கிடையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

இணைப்பு 1

## புதிய வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட விபரத்திரட்டுக்களின் பட்டியல்

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

| தற்பொழுதுள்ள கையெழுத்து விபரத்திரட்டு | கையெழுத்து விபரத்திட்டிற்குப் பதிலாக புதிய வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட விபரத்திட்டு |
|---|---|
| வாராந்த விபரத்திரட்டுக்கள் | |
| வட்டி வீதம் | BSD-WF-13-IR-வட்டி வீதங்கள் (“வங்கி மாத்திரம்” மொத்தம்) |
| மாதாந்த விபரத்திரட்டுக்கள் | |
| சொத்துக்களும் பொறுப்புக்களும் - உ.வ.தொ.பிரிவு | BSD-MF-01-BD-ஐந்தொகை (உ.வ.தொ.பிரிவு வங்கி மட்டும் தொழிற்பாடுகள்) |
| சொத்துக்களும் பொறுப்புக்களும் - வெ.நா.வ.தொ.பிரிவு | BSD-MF-01-BF-ஐந்தொகை (வெ.நா.வ.தொழில் தொழிற்பாடுகள்) |
| வருமானமும் செலவும் - உ.வ.தொ.பிரிவு (குறிப்பு) | BSD-MF-02-PD-இலாபம் மற்றும் நட்டம் (உ.வ.தொ.பிரிவு வங்கி மட்டும் தொழிற்பாடுகள்) |
| வருமானமும் செலவும் - வெ.நா.தொ.பிரிவு (குறிப்பு) | BSD-MF-02-PF-இலாபம் மற்றும் நட்டம் (வெ.நா.வ.தொ.பிரிவின் தொழிற்பாடுகள்) |
| பகுக்கப்பட்ட முற்பணங்கள் - உ.வ.தொ.பிரிவு (குறிப்பு) | BSD-MF-03-CD-கடன்கள் மற்றும் முற்பணங்களின் பகுப்பு (உ.வ.தொ.பிரிவின் தொழிற்பாடுகள்) |
| பகுக்கப்பட்ட முற்பணங்கள் - வெ.நா.தொ.பிரிவு (குறிப்பு) | BSD-MF-03-CF-கடன்கள் மற்றும் முற்பணங்களின் பகுப்பு (வெ.நா.வ.தொ.பிரிவின் தொழிற்பாடுகள்) |
| நியதி திரவச் சொத்துக்கள் - உ.வ.தொ.பிரிவு | BSD-MF-04-LD-நியதி திரவச் சொத்து விகிதம் (உ.வ.தொ.பிரிவின் தொழிற்பாடுகள்) |
| நியதி திரவச் சொத்துக்கள் - வெ.நா.தொ.பிரிவு | BSD-MF-04-LF-நியதி திரவச் சொத்து விகிதம் (வெ.நா.வ.தொ.பிரிவின் தொழிற்பாடுகள்) |
| வர்த்தகப்பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழ் | BSD-MF-16-CP-வர்த்தகப்பத்திரங்கள்/ வாக்குறுதிச்சான்றிதழ்கள் |
| வரவேண்டிய ஏற்றுமதிக் கொடுகடன் (உ.வ.தொ.பிரிவு மற்றும் வெ.நா.தொ.பிரிவு) | BSD-MF-17-CS-வரவேண்டிய ஏற்றுமதிக் கொடுகடன் (தீர்ப்பனவுகளின் மீது அதிகரிக்கப்பட்ட வட்டி விதிப்பு)<br>BSD-MF-17-CO-வரவேண்டிய ஏற்றுமதிக் கொடுகடன் (வெளிநின்றவை) |
| | BSD-MF-15-GE-அரசாங்க வெளிப்படுத்துகை (“வங்கி மட்டும்” மொத்தம்) *(புதியது)* |
| காலாண்டு விபரத்திரட்டுக்கள் | |
| வங்கி பணிப்பாளருக்கும் அத்துடன்/ அல்லது நெருங்கிய உறவினருக்கும் வழங்கப்பட்ட கடன் வசதி | BSD-QF-06-RC-தொடர்பான தரப்பினரின் வெளிப்படுத்துகை (வங்கிப்பணிப்பாளாருக்கும் அத்துடன்/ அல்லது நெருங்கிய உறவினருக்கு அளிக்கப்பட்ட கடன்கள் “வங்கி மட்டும்” மொத்தம்) |
| வங்கிப்பணிப்பாளருக்கும் அவர் கணிசமாக ஈடுபாடு கொண்ட விடயங்களுக்கும் வழங்கப்பட்ட கடன் வசதி - உ.வ.தொ.பிரிவு | BSD-QF-06-RS-தொடர்பான தரப்பினரின் வெளிப்படுத்துகைகள் (வங்கியின் பணிப்பாளர் கணிசமான ஈடுபாட்டினைக் கொண்டிருக்குமிடத்து வங்கியினால் வழங்கப்பட்ட கடன் வசதி கரிசனைக்குரியது - “வங்கி மட்டும்” மொத்தம்) |

| | |
|---|---|
| பங்குகளில் முதலீடு (1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க (திருத்திச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 17(அ) (1)இன் பிரிவு) | BSD-QF-07-IE-பங்குகளில் முதலீடு ("வங்கி மட்டும்" மொத்தம்) |
| **ஏற்கனவேயுள்ள கையினால் தயாரிக்கப்பட்ட விபரத்திரட்டு** | **கையினால் தயாரிக்கப்பட்ட விபரத்திரட்டிற்குப் பதிலாக புதிய வெப்தளத்தை அடிப்படையாகக் கொண்டு விபரத்திரட்டு** |
| மூலதனப்போதுமை - தனி | BSD-QF-11-C1-C4-மூலதனப் போதுமை ("வங்கி மாத்திரம்" தனி அடிப்படையில் மொத்தம்) |
| மூலதனப்போதுமை - திரட்டியது | BSD-QF-11-C5-C8-மூலதனப் போதுமை (திரட்டிய மொத்தம்) தனி அடிப்படையில் மொத்தம் |
| வட்டி வீச்சு | BSD-QF-14-SP -வட்டி வீச்சு |
| - | BSD-QF-05-LN-பாரிய வெளிப்படுத்துகைகள் (செயற்படும் மற்றும் செயற்படாதவை - "வங்கி மாத்திரம்" மொத்தம்) (புதியவை) |
| - | BSD-QF-08-FE-வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை (உ.வ.தொ.பிரிவு வெளிப்பாடு மாத்திரம்) *(புதியது)* |
| - | BSD-QF-09-GA-முதிர்ச்சி இடை வெளிப்பகுப்பாய்வு ("வங்கி மாத்திரம்" மொத்தம்) *(புதியது)* |
| - | BSD-QF-10-IS-வட்டி வீத மாறும் தன்மை ("வங்கி மாத்திரம்" மொத்தம்) *(புதியது)* |
| - | BSD-QF-12-SC-துணை வாரியான கொடுகடன் வெளிப்படுத்துகை ("வங்கி மாத்திரம்" மொத்தம்) *(புதியது)* |
| ஆண்டு விபரத்திரட்டுக்கள் - கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கேடுகளின்படி | |
| சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் - உ.வ.தொ.பிரிவு | BSD-AF-01-BD-ஐந்தொகை (உ.வ.தொ.பிரிவு மற்றும் வங்கி மாத்திரம் தொழிற்பாடுகள்) |
| சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் - வெ.நா.வ.தொ.பிரிவு | BSD-AF-01-BD மற்றும் BF-ஐந்தொகை (வெ.நா.வ.தொ.பிரிவின் தொழிற்பாடுகள்) |
| வருமானமும் செலவும் - உ.வ.தொ.பிரிவு | BSD-AF-02-PD-இலாபம் மற்றும் நட்டம் (உ.வ.தொ.பிரிவும் வங்கி மாத்திரம் தொழிற்பாடுகள்) |
| வருமானமும் செலவும் - வெ.நா.வ.தொ.பிரிவு | BSD-AF-02-PF-இலாபம் மற்றம் நட்டம் (வெ.நா.வ.தொ.பிரிவின் தொழிற்பாடுகள்) |
| மூலதனப் போதுமை - தனி | BSD-AF-11-C1-C4-மூலதனப் போதுமை ("வங்கி மாத்திரம்" தனி அடிப்படையில் மொத்தம்) |
| மூலதனப் போதுமை - திரட்டப்பட்டது | BSD-AF-11-C5-C8-மூலதனப் போதுமை (திரட்டப்பட்ட மொத்தம்) |

*குறிப்பு: கால இடைவெளி காலாண்டிலிருந்து மாதாந்தத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.*

**இணைப்பு 2**

## ஒப்புதலளிக்கப்பட்ட/ சமர்ப்பிக்கப்பட்ட வாராந்த/ மாதாந்த விபரத்திரட்டுக்கள் சான்றுபடுத்தும் கூற்று

| விபரத்திரட்டு | வரவேண்டிய நாள் | சமர்ப்பிக்கப்பட்டது | | ஒப்புதலளிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| | | ஆம் | இல்லை | |
| மாதாந்த விபரத்திரட்டுக்கள் | | | | |
| BSD-MF-01-BD- ஐந்தொகை - உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் தொழிற்பாடுகள் (உ.வ.தொ.பிரிவு) மற்றும் வங்கி | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-01-BF- ஐந்தொகை - வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவின் தொழிற்பாடுகள் (வெ.நா.வ.பிரிவு) | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-02-PD- இலபாம் மற்றம் நட்டம் - உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் தொழிற்பாடுகள் (உ.வ.தொ.பிரிவு) மற்றும் வங்கி | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-02-PF- இலபாம் மற்றம் நட்டம் - வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவின் தொழிற்பாடுகள் (வெ.நா.வ.பிரிவு) | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-03-CD- கடன்கள் மற்றும் முற்பணங்களின் பகுப்பாய்வு - உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் தொழிற்பாடுகள் (உ.வ.தொ.பிரிவு) | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-03-CF- கடன்கள் மற்றும் முற்பணங்களின் பகுப்பாய்வு - வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவின் தொழிற்பாடுகள் (வெ.நா.வ.பிரிவு) | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-04-LD- நியதி திரவச் சொத்து விகிதம் - உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் தொழிற்பாடுகள் (உ.வ.தொ.பிரிவு) | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-04-LF- நியதி திரவச் சொத்து விகிதம் - வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவின் தொழிற்பாடுகள் (வெ.நா.வ.பிரிவு) | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-16-CP- வர்த்தகப்பத்திரங்கள்/ வாக்குறுதிச் சான்றிதழ்கள் | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-17-CS- வரவேண்டிய ஏற்றுமதிக் கொடுகடன் - தீர்ப்பனவின் மீது அதிகரிக்கப்பட்ட வட்டி விதிப்பனவு | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-17-CO- வரவேண்டிய ஏற்றுமதி கொடுகடன் - வெளிநின்றவை | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-15-GE- அரசாங்கத்தின் வெளிப்படுத்துகை (புதியது) | 15/மா./ஆண்டு | | | |
| BSD-WF-13-IR- வட்டி வீதங்கள் - 1ஆம் வாரம் | நாள்/மா./ஆண்டு | | | |
| BSD-WF-13-IR- வட்டி வீதங்கள் - 2ஆம் வாரம் | நாள்/மா./ஆண்டு | | | |
| BSD-WF-13-IR- வட்டி வீதங்கள் - 3ஆம் வாரம் | நாள்/மா./ஆண்டு | | | |
| BSD-WF-13-IR- வட்டி வீதங்கள் - 4ஆம் வாரம் | நாள்/மா./ஆண்டு | | | |
| BSD-WF-13-IR- வட்டி வீதங்கள் - 5ஆம் வாரம் | நாள்/மா./ஆண்டு | | | |

மேலே குறிப்பிடப்பட்ட விபரத்திரட்டிலுள்ள தகவல்கள் வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதென்பதனையும் வங்கிக் கணக்கேடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்கிறோம்.

(பெயர்)

.................................................

ஒப்பம்/ **நிதிக்கட்டுப்பாட்டாளர்**

திகதி: நாள்/மா./ஆண்டு

(பெயர்)

.................................................

ஒப்பம்/ **இணங்குவிப்பு அலுவலர்/ நிருவாக அலுவலர்**

திகதி: நாள்/மா./ஆண்டு

**இணைப்பு 3**

## ஒப்புதலளிக்கப்பட்ட/ சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுக்களின் சான்றுபடுத்தப்பட்ட கூற்று

| விபரத்திரட்டு | வரவேண்டிய நாள் | சமர்ப்பிக்கப்பட்டது | | ஒப்புதலளிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| | | ஆம் | இல்லை | |
| காலாண்டு விபரத்திரட்டுக்கள் | | | | |
| BSD-QF-05-LN- ஐந்தொகை -பாரிய வெளிப்படுத்துறை (புதியது) | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-06-RC- தொடர்பான தரப்பினர் வெளிப்படுத்துகை - பணிப்பாளர்களுக்கும் அத்துடன்/ அல்லது நெருங்கிய உறவினர்களுக்கும் வழங்கப்பட்ட கடன் வசதி | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-06-RS- தொடர்பான தரப்பினர் வெளிப்படுத்துகை - வங்கியின் பணிப்பாளர் கணிசமான ஈடுபாட்டினைக் கொண்டுள்ள விடயங்களுக்கு வங்கியினால் வழங்கப்பட்ட கடன் வசதி | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-07-IE- பங்குகளில் முதலீடு | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-08-FE- வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகைகள் (புதியது) | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-09-GA- முதிர்ச்சி இடைவெளி பகுப்பாய்வு (புதியது) | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-10-IS- வட்டிவீத மாற்றங்கள் (புதியது) | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-12-SC- துறை வாரியான கொடுகடன் வெளிப்படுத்துகை (புதியது) | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-14-SP- வட்டிவீத வீச்சு | 21/மா./ஆண்டு | | | |

மேலே குறிப்பிடப்பட்ட விபரத்திரட்டிலுள்ள தகவல்கள் வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதென்பதனையும் வங்கிக் கணக்கேடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்கிறோம்.

(பெயர்)

..................................................

ஒப்பம்/ **நிதிக்கட்டுப்பாட்டாளர்**

திகதி: நாள்/மா./ஆண்டு

(பெயர்)

..................................................

ஒப்பம்/ **இணங்குவிப்பு அலுவலர்/ நிருவாக அலுவலர்**

திகதி: நாள்/மா./ஆண்டு

**இணைப்பு 4**

**ஒப்புதலளிக்கப்பட்ட/ சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுக்களின் சான்றுபடுத்தப்பட்ட கூற்று**

| விபரத்திரட்டு | வரவேண்டிய நாள் | சமர்ப்பிக்கப்பட்டது | | ஒப்புதலளிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| | | ஆம் | இல்லை | |
| ஆண்டு விபரத்திரட்டுக்கள் | | | | |
| BSD-AF-01-BD- ஐந்தொகை - உ.வ.தொ.பிரிவுகளும் வங்கி மாத்திரம் தொழிற்பாடுகளும் | 30/மா./ஆண்டு | | | |
| BSD-AF-01-BD- மற்றும் BF- ஐந்தொகை (வெ.நா.வ.தொழில் பிரிவின் தொழிற்பாடுகள்) | 30/மா./ஆண்டு | | | |
| BSD-AF-02-PD- இலாபம் மற்றும் நட்டம் - உ.வ.தொ.பிரிவு மற்றும் வங்கி மாத்திரம் தொழிற்பாடுகளும் | 30/மா./ஆண்டு | | | |
| BSD-AF-02-PF- இலாபம் மற்றும் நட்டம் - வெ.நா.வ.தொ.பிரிவின் தொழிற்பாடுகள் | 30/மா./ஆண்டு | | | |

மேலே குறிப்பிடப்பட்ட விபரத்திரட்டிலுள்ள தகவல்கள் வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதென்பதனையும் வங்கிக் கணக்கேடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்கிறோம்.

(பெயர்)

..................................................

ஒப்பம்/ **நிதிக்கட்டுப்பாட்டாளர்**
திகதி: நாள்/மா./ஆண்டு

(பெயர்)

..................................................

ஒப்பம்/ **இணங்குவிப்பு அலுவலர்/ நிருவாக அலுவலர்**
திகதி: நாள்/மா./ஆண்டு

**இணைப்பு 5**

**ஒப்புதலளிக்கப்பட்ட/ சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுக்களின் சான்றுபடுத்தப்பட்ட கூற்று**

| விபரத்திரட்டு | வரவேண்டிய நாள் | சமர்ப்பிக்கப்பட்டது | | ஒப்புதலளிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| | | ஆம் | இல்லை | |
| காலண்டு விபரத்திரட்டுக்கள் | | | | |
| BSD-QF-11-C- மூலதனப்போதுமை - வங்கி மாத்திரம் (தனி அடிப்படையில்) | 30/மா./ஆண்டு | | | |
| BSD-QF-11-C- மூலதனப்போதுமை - திரட்டப்பட்டது | 30/மா./ஆண்டு | | | |

நாம்

(1) மேலே குறிப்பிடப்பட்ட விபரத்திரட்டிலுள்ள தகவல்கள் எமது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் பொறுத்தவரையில் சரியானதெனவும்;

(2) காலாண்டு/ ஆய்விற்குரிய காலப்பகுதியில் எந்த ஒரு நேரத்திலும் மூலதனப் போதுமை விகிதம் 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் என்பவற்றினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 19(7)(அ) நியதிகளில் நாணயச்சபையினால் தீர்மானிக்கப்பட்ட வீதத்திலும் பார்க்கக் குறைவாக இருக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................

**முதன்மைக் கணக்காளர்/ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்**

..................................................

பெயர்
திகதி: ..................................

..................................................

**முதன்மை நிறைவேற்று அலுவலர்**

..................................................

பெயர்
திகதி: ..................................

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 யூலை 28

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின்

முதன்மை நிறைவேற்று அலுவர்களுக்கு

அன்புள்ள ஐயா,

**தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையினை அடிப்படையாகக் கொண்ட புதிய வெப்தளத்தினை நடைமுறைப்படுத்தல் - உ.சி. வங்கிகள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2006 மாச்சு 17ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை மற்றும் 2006.07.04 மற்றும் 2006.06.22ஆம் நாட்களில் நடைபெற்ற உரிமம் பெற்ற வங்கிகளின் முதனிலை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டங்களின் கலந்துரையாடல்களுக்கு மேலதிகமாக, அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளுக்கும், காலாந்தரக் கூற்றுக்களை கையெழுத்து வடிவில் வழங்குவது, 2006 யூனுடன் முடிவடையும் காலப்பகுதிக்கான கூற்றுக்களுடன் நிறுத்தப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகிறோம். புதிய "வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக்கள்" 2006 யூலை 01 ஆம் நாள் தொடங்குகின்ற அறிக்கையிடும் காலப்பகுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக்களின் பட்டியல்கள் இணைப்பு 1இல் தரப்பட்டுள்ளன. ஏற்கனவேயுள்ள கூற்றுக்கள் வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக்களின் மூலம் அகற்றப்படாததுடன் சமா்ப்பிக்கப்பட்ட கையினால் செய்யப்பட்ட வடிவத்திலேயே தொடர்ந்துமிருக்கும்.

2. வாராந்த/ மாதாந்த, காலண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் சமா்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடா்பான சான்றுபடுத்தும் கூற்றுக்கள் முறையே இணைப்பு 2, இணைப்பு 3, இணைப்பு 4 மற்றும் இணைப்பு 5இல் குறித்துரைக்கப்பட்டவாறு அறிக்கையிடும் காலம் முடிவடைந்ததிலிருந்து 3 நாட்களுக்கிடையில் சமா்ப்பிக்கப்படல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

**இணைப்பு 1**

## புதிய வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட விபரத்திரட்டுக்களின் பட்டியல்

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

| கையெழுத்து விபரத்திரட்டு நீக்கப்படுகிறது | கையெழுத்து விபரத்திட்டிற்குப் பதிலாக புதிய வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட விபரத்திட்டு |
|---|---|
| வாராந்த விபரத்திரட்டுக்கள் | |
| வட்டி வீதம் | BSD-WF-13-IR-வட்டி வீதங்கள் (“வங்கி மாத்திரம்” மொத்தம்) |
| மாதாந்த விபரத்திரட்டுக்கள் | |
| சொத்துக்களும் பொறுப்புக்களும் - உ.வ.தொ.பிரிவு | BSD-MF-01-BD-ஐந்தொகை (உ.வ.தொ.பிரிவு வங்கி மட்டும் தொழிற்பாடுகள்) |
| வருமானமும் செலவும் - இலாபப் பங்கீடும் (குறிப்பு) | BSD-MF-02-PD-இலாப மற்றும் நட்டம் (உ.வ.தொ.பிரிவு வங்கி மட்டும் தொழிற்பாடுகள்) |
| திரவச் சொத்துக்கள் - உ.வ.தொ.பிரிவு | BSD-MF-04-LD-நியதி திரவச் சொத்து விகிதம் |
| வர்த்தகப்பத்திரம்/ வாக்குறுதிச் சான்றிதழ் | BSD-MF-16-CP-வர்த்தகப்பத்திரங்கள்/ வாக்குறுதிச்சான்றிதழ்கள் |
| - | BSD-MF-03-CD-கடன்கள் முற்பணங்களின் பகுப்பாய்வு *(புதியது)* |
| - | BSD-MF-15-GE-அரச வெளிப்படுத்துகை (“வங்கி மாத்திரம்” - மொத்தம் *(புதியது)* |
| காலாண்டு விபரத்திரட்டுக்கள் | |
| பாரிய கடன் வழங்கல்கள் (குறிப்பு) | BSD-QF-05-LN-பாரிய வெளிப்படுத்துகை (செயலாற்றம் மற்றும் செயலாற்றமற்றவை - “வங்கி மாத்திரம் மொத்தம்” |
| வங்கி பணிப்பாளருக்கும் அத்துடன்/ அல்லது நெருங்கிய உறவினருக்கும் வழங்கப்பட்ட கடன் வசதி | BSD-QF-06-RC-தொடர்பான தரப்பினரின் வெளிப்படுத்துகை (வங்கிப்பணிப்பாளாருக்கும் அத்துடன்/ அல்லது நெருங்கிய உறவினருக்கு அளிக்கப்பட்ட கடன்கள் “வங்கி மட்டும்” மொத்தம்) |
| வங்கிப்பணிப்பாளருக்கும் அவர் கணிசமாக ஈடுபாடு கொண்ட விடயங்களுக்கும் வழங்கப்பட்ட கடன் வசதி | BSD-QF-06-RS-தொடர்பான தரப்பினரின் வெளிப்படுத்துகைகள் (வங்கியின் பணிப்பாளர் கணிசமான ஈடுபாட்டினைக் கொண்டிருக்குமிடத்து வங்கியினால் வழங்கப்பட்ட கடன் வசதி கரிசனைக்குரியது - “வங்கி மட்டும்” மொத்தம்) |
| பங்குகளில் முதலீடு (பொதுக்கம்பனிகள்) | BSD-QF-07-IE-பங்கு முதலீடு (“வங்கி மட்டும்” மொத்தம்) |
| பங்குகளில் முதலீடு (தனியார் கம்பனிகள்) | |
| மூலதனப்போதுமை - தனி | BSD-QF-11-C1-C4-மூலதனப் போதுமை (“வங்கி மாத்திரம்” ) தனி அடிப்படையில் மொத்தம் |
| மூலதனப்போதுமை - திரட்டியது | BSD-QF-11-C5-C8-மூலதனப் போதுமை (திரட்டிய மொத்தம்) தனி அடிப்படையில் மொத்தம் |
| வட்டி வீச்சு | BSD-QF-14-SP -வட்டி வீச்சு |
| - | BSD-QF-08-FE-வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை ஏற்புடைத்தாயின் *(புதியது)* |

| | |
|---|---|
| - | BSD-QF-09-GA-முதிர்ச்சி இடை வெளிப்பகுப்பாய்வு ("வங்கி மாத்திரம்" மொத்தம்) *(புதியது)* |
| - | BSD-QF-10-IS-வட்டி வீத மாறும் தன்மை ("வங்கி மாத்திரம்" மொத்தம்) (புதியது) |
| - | BSD-QF-12-SC-துணை வாரியான கொடுகடன் வெளிப்படுத்துகை ("வங்கி மாத்திரம்" மொத்தம்) *(புதியது)* |
| ஆண்டு விபரத்திரட்டுக்கள் - கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கேடுகளின்படி | |
| சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் - உ.வ.தொ.பிரிவு | BSD-AF-01-BD-ஐந்தொகை (உ.வ.தொ.பிரிவு மற்றும் வங்கி மாத்திரம் தொழிற்பாடுகள்) |
| வருமானமும் செலவும் - உ.வ.தொ.பிரிவு | BSD-AF-02-PD-இலாபம் மற்றும் நட்டம் (உ.வ.தொ.பிரிவும் வங்கி மாத்திரம் தொழிற்பாடுகள்) |
| மூலதனப் போதுமை - தனி | BSD-AF-11-C1-C4-மூலதனப் போதுமை ("வங்கி மாத்திரம்" தனி அடிப்படையில் மொத்தம்) |
| மூலதனப் போதுமை - திரட்டப்பட்டது | BSD-AF-11-C5-C8-மூலதனப் போதுமை (திரட்டப்பட்ட மொத்தம்) |

*குறிப்பு: கால இடைவெளி காலாண்டிலிருந்து மாதாந்தத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.*

**இணைப்பு 2**

## ஒப்புதலளிக்கப்பட்ட/ சமர்ப்பிக்கப்பட்ட வாராந்த/ மாதாந்த விபரத்திரட்டுக்களை சான்றுபடுத்தும் கூற்று

| விபரத்திரட்டு | வரவேண்டிய நாள் | சமர்ப்பிக்கப்பட்டது | | ஒப்புதலளிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| | | ஆம் | இல்லை | |
| மாதாந்த விபரத்திரட்டுக்கள் | | | | |
| BSD-MF-01-BD- ஐந்தொகை - உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் தொழிற்பாடுகள் (உ.வ.தொ.பிரிவு) மற்றும் வங்கி | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-02-PD- இலாபம் மற்றம் நட்டம் - உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் தொழிற்பாடுகள் (உ.வ.தொ.பிரிவு) மற்றும் வங்கி | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-03-CD- கடன்கள் மற்றும் முற்பணங்களின் பகுப்பாய்வு | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-04-LD- நியதி திரவச் சொத்து விகிதம் - உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவின் தொழிற்பாடுகள் (உ.வ.தொ.பிரிவு) | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-16-CP- வர்த்தகப்பத்திரங்கள்/ வாக்குறுதிச் சான்றிதழ்கள் | 15/மா./ஆண்டு | | | |
| BSD-MF-15-GE- அரசாங்கத்தின் வெளிப்படுத்துகை (புதியது) | 15/மா./ஆண்டு | | | |
| BSD-WF-13-IR- வட்டி வீதங்கள் - 1ஆம் வாரம் | நாள்/மா./ஆண்டு | | | |
| BSD-WF-13-IR- வட்டி வீதங்கள் - 2ஆம் வாரம் | நாள்/மா./ஆண்டு | | | |
| BSD-WF-13-IR- வட்டி வீதங்கள் - 3ஆம் வாரம் | நாள்/மா./ஆண்டு | | | |
| BSD-WF-13-IR- வட்டி வீதங்கள் - 4ஆம் வாரம் | நாள்/மா./ஆண்டு | | | |
| BSD-WF-13-IR- வட்டி வீதங்கள் - 5ஆம் வாரம் | நாள்/மா./ஆண்டு | | | |

மேலே குறிப்பிடப்பட்ட விபரத்திரட்டிலுள்ள தகவல்கள் வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதென்பதனையும் வங்கிக் கணக்கேடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்கிறோம்.

(பெயர்)
.......................................................
ஒப்பம்/ **நிதிக்கட்டுப்பாட்டாளர்**
திகதி: நாள்/மா./ஆண்டு

(பெயர்)
.......................................................
ஒப்பம்/ **இணங்குவிப்பு அலுவலர்/ நிருவாக அலுவலர்**
திகதி: நாள்/மா./ஆண்டு

**இணைப்பு 3**

## ஒப்புதலளிக்கப்பட்ட/ சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுக்களின் சான்றுபடுத்தப்பட்ட கூற்று

| விபரத்திரட்டு | வரவேண்டிய நாள் | சமர்ப்பிக்கப்பட்டது | | ஒப்புதலளிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| | | ஆம் | இல்லை | |
| காலாண்டு விபரத்திரட்டுக்கள் | | | | |
| BSD-QF-05-LN- ஐந்தொகை -பாரிய வெளிப்படுத்துறை (புதியது) | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-06-RC- தொடர்பான தரப்பினர் வெளிப்படுத்துகை - பணிப்பாளர்களுக்கும் அத்துடன்/ அல்லது நெருங்கிய உறவினர்களுக்கும் வழங்கப்பட்ட கடன் வசதி | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-06-RS- தொடர்பான தரப்பினர் வெளிப்படுத்துகை - வங்கியின் பணிப்பாளர் கணிசமான ஈடுபாட்டினைக் கொண்டுள்ள விடயங்களுக்கு வங்கியினால் வழங்கப்பட்ட கடன் வசதி | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-07-IE- பங்குகளில் முதலீடு | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-08-FE- வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகைகள் (புதியது) | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-09-GA- முதிர்ச்சி இடைவெளி பகுப்பாய்வு (புதியது) | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-10-IS- வட்டிவீத மாற்றங்கள் (புதியது) | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-12-SC- துறை வாரியான கொடுகடன் வெளிப்படுத்துகை (புதியது) | 21/மா./ஆண்டு | | | |
| BSD-QF-14-SP- வட்டிவீத வீச்சு | 21/மா./ஆண்டு | | | |

மேலே குறிப்பிடப்பட்ட விபரத்திரட்டிலுள்ள தகவல்கள் வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதென்பதனையும் வங்கிக் கணக்கேடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்கிறோம்.

(பெயர்)

...................................................

ஒப்பம்/ **நிதிக்கட்டுப்பாட்டாளர்**

திகதி: நாள்/மா./ஆண்டு

(பெயர்)

...................................................

ஒப்பம்/ **இணங்குவிப்பு அலுவலர்/ நிருவாக அலுவலர்**

திகதி: நாள்/மா./ஆண்டு

**இணைப்பு 4**

## ஒப்புதலளிக்கப்பட்ட/ சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுக்களின் சான்றுபடுத்தப்பட்ட கூற்று

| விபரத்திரட்டு | வரவேண்டிய நாள் | சமர்ப்பிக்கப்பட்டது | | ஒப்புதலளிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| | | ஆம் | இல்லை | |
| ஆண்டு விபரத்திரட்டுக்கள் | | | | |
| BSD-AF-01-BD- ஐந்தொகை - உ.வ.தொ.பிரிவுகளும் வங்கி மாத்திரம் தொழிற்பாடுகளும் | 30/மா./ஆண்டு | | | |
| BSD-AF-02-PD- இலாபம் மற்றும் நட்டம் - உ.வ.தொ.பிரிவு மற்றும் வங்கி மாத்திரம் தொழிற்பாடுகளும் | 30/மா./ஆண்டு | | | |

மேலே குறிப்பிடப்பட்ட விபரத்திரட்டிலுள்ள தகவல்கள் வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதென்பதனையும் வங்கிக் கணக்கேடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்கிறோம்.

(பெயர்)

...................................................

ஒப்பம்/ **நிதிக்கட்டுப்பாட்டாளர்**

திகதி: நாள்/மா./ஆண்டு

(பெயர்)

...................................................

ஒப்பம்/ **இணங்குவிப்பு அலுவலர்/ நிருவாக அலுவலர்**

திகதி: நாள்/மா./ஆண்டு

**இணைப்பு 5**

**ஒப்புதலளிக்கப்பட்ட/ சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு விபரத்திரட்டுக்களின் சான்றுபடுத்தப்பட்ட கூற்று**

| விபரத்திரட்டு | வரவேண்டிய நாள் | சமர்ப்பிக்கப்பட்டது | | ஒப்புதலளிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| | | ஆம் | இல்லை | |
| காலண்டு விபரத்திரட்டுக்கள் | | | | |
| BSD-QF-11-C- மூலதனப்போதுமை - வங்கி மாத்திரம் (தனி அடிப்படையில்) | 30/மா./ஆண்டு | | | |
| BSD-QF-11-C- மூலதனப்போதுமை - திரட்டப்பட்டது | 30/மா./ஆண்டு | | | |

நாம்

(1) மேலே குறிப்பிடப்பட்ட விபரத்திரட்டிலுள்ள தகவல்கள் எமது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் பொறுத்தவரையில் சரியானதெனவும்;

(2) காலாண்டு/ ஆய்விற்குரிய காலப்பகுதியில் எந்த ஒரு நேரத்திலும் மூலதனப் போதுமை விகிதம் 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் என்பவற்றினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 19(7)(அ) நியதிகளில் நாணயச்சபையினால் தீர்மானிக்கப்பட்ட வீதத்திலும் பார்க்கக் குறைவாக இருக்கவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................

**முதன்மைக் கணக்காளர்/ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்**

..................................................

பெயர்

திகதி: ....................................

..................................................

**முதன்மை நிறைவேற்று அலுவலர்**

..................................................

பெயர்

திகதி: ....................................

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 ஓகத்து 11

இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை

நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா,

**2005ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க பணிப்புரையினால் திருத்தப்பட்டவாறான 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தனியொரு கடன்பாட்டாளர் வரையறை**

2005ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க பணிப்புரையினால் திருத்தப்பட்டவாறான 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க தனியொரு கடன்பாட்டாளர் வரையறைப் பணிப்புரையின் பந்தி 6(1)(உ)(ii) இன் நியதிகளில், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தலைமை அலுவலகத்திலிருந்தான உத்தரவாதங்கள்/ இழப்பீடுகளுக்கு எதிராக அவற்றின் தொடர்பான தனியொரு கடன்பாட்டாளர் வரையறையினை விஞ்சுவதற்கு வழங்கப்பட்ட வசதி உடனடியாக இடை நிறுத்தப்படுவது பற்றி தங்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது. வங்கிகள் ஏற்கனவே மேற்கொண்டிருக்கும் கடப்பாடுகள் ஏதுமிருப்பின் ஒப்பந்தத்திற்குரிய காலப்பகுதி முடியும் வரை அதனைத் தொடரலாம். இது இச் சுற்றறிக்கையின் திகதியிலிருந்து ஓராண்டிற்கும் கூடுதலானதாக இருக்கக்கூடாது.

எந்த ஒரு வங்கியும் அதன் தனியொரு கடன்பாட்டாளர் வரையறையினை விஞ்சுவதற்கு விரும்புமாயின் வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி, குறிப்பிட்ட நிபந்தனைக்குட்பட்டு பந்தி 6(1) இல் குறித்துரைக்கப்பட்ட (அ) இலிருந்து (ஈ) வரையுள்ள விடயங்கள் மற்றும் பந்தி 6 (1) இன் விடயம் (உ)(i) என்பனவற்றிற்கெதிராக அவ்வாறு செய்யலாம்.

இது தொடர்பாக திருத்தப்பட்ட பணிப்புரைகள் இனிவரும் காலப்பகுதியில் வழங்கப்படும்.

உங்கள் உண்மையுள்ள

**வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்**

படி: செயலாளர் நாயகம்/ இலங்கை வங்கியாளர் நிறுவனம்

**02/01/001/0018/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 ஒத்தோபர் 16

*வெளிநாட்டுச் செலாவணியில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா,

## ஏற்றுக் கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான இறக்குமதிகள்

குறிப்பிடத்தக்களவு நுகர்வுப் பொருட்கள் ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்களூடாக இறக்குமதி செய்யப்படுவதும் அத்தகைய இறக்குமதிகளுக்கான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகள் வங்கித்தொழில் முறையினூடாக அனுப்பப்படாமல் வெளிநாட்டிலுள்ள வழங்குநர்களுக்கு வேறுவழியில் அனுப்பப்பட்டு வருவதற்கு மிகத் தெளிவான சாத்தியங்கள் இருப்பதும் அவதானிக்கப்பட்டிருக்கிறது. மேற்குறிப்பிட்ட விடயத்தினைக் கருத்திற்கொண்டு, அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் மறு அறிவித்தல் வரை 2006 ஒத்தோபர் 19ஆம் நாளிலிருந்து பின்வரும் தேவைப்பாடுகளைப் பின்பற்றுவது கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

1. அட்டவணை அ'இல் தரப்பட்டுள்ள இறக்குமதிகளின் பொருட்பட்டியலின் பெறுமதி மீது 50 சதவீதமான அளவு வைப்புத் தேவைப்பாடொன்று ஆவணங்களை வழங்குகின்ற வங்கிகளில் இறக்குமதியாளர்களினால் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் நேரத்தில் செய்யப்படல் வேண்டும். 50 சதவீதமான அளவுத் தேவைப்பாட்டிற்குட்படாத பொருட்களை உள்ளடக்கியிருந்தாலும் கூட அதன் மொத்தப் பெறுமதியினையே கணிக்கப்பட வேண்டும். அளவுத் தேவைப்பாட்டு வைப்பு பெறப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வங்கிகள் பொருட்பட்டியலை புறக்குறிப்பீடு செய்தல் வேண்டும்.

2. அளவு வைப்பானது, ஆவணச் சான்றிதழ்களை சமர்ப்பிக்குமிடத்து அல்லது இலங்கையிலுள்ள வங்கித்தொழில் வழிமுறைகளினூடாக கொடுப்பனவுகள் மற்றும் இறக்குமதிகள் அகற்றப்பட்டமைக்கான சுங்க ஆவணங்கள் சமர்ப்பிப்பதன் மூலம் வைப்பு அளவுகள் விடுவிக்கப்பட வேண்டும்.

3. இவ்வறக்குமதிகளைப் பொறுத்தவரை அளவு வைப்புக்களில் இறக்குமதியாளர்கள் பணம் இடுவதனை இயலச் செய்யும் விதத்தில் வங்கிகள் எந்த ஒரு முற்பணத்தினையும் வழங்கக்கூடாது.

4. அளவ வைப்புக்கள் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டனவாக இருக்கும்.

5. வங்கிகள் 50 சதவீதமான அளவு வைப்புக்களின் மீது வட்டியைச் செலுத்தலாம்.

6. வங்கிகள் அத்தகைய அளவு வைப்புக்களின் விபரங்களைக் கொண்ட மாதாந்த விபரத்திரட்டுக்களை இணைப்பு 1இல் காட்டப்பட்டுள்ளவாறான படிவத்தில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

7. இத்தேவைப்பாடுகள் 2006 ஒத்தோபர் 19ஆம் நாளுக்கு முன்னர் இறக்குமதிகள் கப்பற்படுத்தப்பட்டிருப்பின் அவ்விறக்குமதிகளுக்கு ஏற்புடைதாகாது. கப்பற்படுத்தல் திகதியாக பொருள் ஏற்றிய பட்டியலின் திகதி கருதப்படும்.

உங்கள் உண்மையுள்ள

**டி. வசந்த**
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

**பி. சமரசிறி**
வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

## 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம்

## தீர்மானத்திற்கான திருத்தங்களும் மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவதன் மீதான அறிவித்தலும்

மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவது தொடர்பாக 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 19(2) மற்றும் 19(7)இன் கீழ் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட 2001ஆம் ஆண்டு திசெம்பர் 27ஆம் நாளிடப்பட்ட அறிவித்தல் மற்றும் 1997ஆம் ஆண்டு ஓகத்து 22ஆம் நாளிடப்பட்ட தீர்மானத்தினை இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை பின்வருமாறு திருத்துவதற்கு தீர்மானித்திருக்கின்றது.

ஒப்பம் நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்

ஆளுநர்

கொழும்பு

2006 நவெம்பர் 21

1. படிவம் 1இல் உள்ள விடயம் 07.10 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயத்தினை 07.10: ஆக இடுவதன் மூலம்: 07.10 வதிவிட சொத்துக்களின் மீதான முதனிலை ஈட்டின் மூலம் பிணையிடப்பட்ட கடன்கள் - இடர்நேர்வு நிறை 55%
2. படிவம் 1இல் உள்ள விடயம் 07.11 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயத்தினை 07.11 ஆக இடுவதன் மூலம்: 07.11 ஏனைய கடன்களும் முற்பணங்களும் - இடர்நேர்வு நிறை 110%

## 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம்

## மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவதன் மீதான பணிப்புரைக்கான திருத்தங்கள்

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் பேணப்படும் மூலதனப் போதுமை விகிதம் தொடர்பாக 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(i) இன் கீழ் 2001ஆம் ஆண்டு திசெம்பர் 27ஆம் திகதி மற்றும் 1997ஆம் ஆண்டின் நவெம்பர் 21ஆம் திகதிகளில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புக்கள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

ஒப்பம் நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்

ஆளுநர்

கொழும்பு

2006 நவெம்பர் 21

1. படிவம் 1இல் உள்ள விடயம் 07.10 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயத்தினை 07.10 ஆக இடுவதன் மூலம்: 07.10 வதிவிட சொத்துக்களின் மீதான முதனிலை ஈட்டின் மூலம் பிணையிடப்பட்ட கடன்கள் - இடர்நேர்வு நிறை 55%
2. படிவம் 1இல் உள்ள விடயம் 07.11 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் விடயத்தினை 07.11 ஆக இடுவதன் மூலம்: 07.11 ஏனைய கடன்களும் முற்பணங்களும் - இடர்நேர்வு நிறை 110%

## 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 46ஆம் பிரிவின் நியதிகளில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

ஒப்பம் **நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்**

ஆளுநர்

கொழும்பு

2006 திசெம்பர் 06

## முற்பணங்களுக்காக பொது ஒதுக்கமொன்றைப் பேணுவதற்கான தேவைப்பாடு

1. அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் தொடர்பான கணக்குகளில் பற்று வைக்கப்பட்டுள்ள தொங்கலிலுள்ள வட்டி நீங்கலாக, மொத்த செயலாற்றக் கடன்கள் மற்றும் முற்பணங்கள், வரவேண்டிய கடன்கள் மற்றும் முற்பணங்களில் (கீழே பந்தி 4 இனைப் பார்க்கவும்) 1% கொண்ட பொதுவான ஒதுக்கத்தினைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.

2. வங்கிகள் மேலேயுள்ள ஒதுக்கத்தினைப் பின்வருமாறு மேற்கொள்ளலாம்:

   2006.12.31இல் உள்ளவாறு சொல்லப்பட்ட ஒதுக்கில் 0.1% இனையும் அதன் பின்னர் 2009.03.31 வரை ஒவ்வொரு காலாண்டும் 0.1% கொண்ட அதிகரித்த ஒதுக்கினையும் மேற்கொள்ளலாம். செயல்முறையில், வங்கிகள் 2009.03.31 இற்குப் பிந்தாமல் 1% கொண்ட மொத்த தேவைப்பாட்டினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

3. பொதுவான ஒதுக்கினைப் பேணுவதற்கான தேவைப்பாடு, அதே வங்கியில் காசு வைப்புக்கள், தங்கம் அல்லது அரச பிணையங்களினால் பிணையிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பானவற்றிற்கு ஏற்புடைத்தாகாது.

4. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக:

4.1 "செயற்படும் கடன்கள் மற்றும் முற்பணங்கள்" என்பது "செயற்படா முற்பணங்கள் மீதான வட்டியை இடை நிறுத்த மற்றும் ஒதுக்கு நோக்கங்களுக்காக அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களை வகைப்படுத்தல்" என்பது மீதான வங்கித்தொழில் சட்டத்தின் 46அ பிரிவின் கீழ் 1997.08.22ஆம் நாளன்று விடுக்கப்பட்ட பணிப்புரையின் நியதிகளில் செயற்படா முற்பணங்கள் என வகைப்படுத்தப்பட்டிராத அனைத்துக் கடன்களும் முற்பணங்களும் எனப் பொருள்படும்.

4.2 "வரவேண்டிய கடன்கள் மற்றும் முற்பணங்கள்" என்பது "செயற்படா முற்பணங்கள் மீதான வட்டியின் இடை நிறுத்தம் மற்றும் ஒதுக்கீட்டு நோக்கங்களுக்காக கீழ் நிலைப்படுத்தப்பட்ட அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களை வகைப்படுத்தல்" என்பன மீதான வங்கித்தொழில் சட்டத்தின் 46அ பிரிவின் கீழ் 1997.08.22ஆம் நாளன்று விடுக்கப்பட்ட பணிப்புரையின் நியதிகளில் ஒதுக்கு நோக்கங்களுக்காக நியமங்கள் ஐய அல்லது இழப்புக்களாக வகைப்படுத்தப்பட்டிராத அனைத்து செயற்படாத கடன்களும் முற்பணங்களும் எனப் பொருள்படும்.

5. வங்கித்தொழில் சட்டத்தின் 46ஆம் பிரிவின் ஏற்பாட்டு நியதிகளில் 2006.11.21ஆம் நாளன்று நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

## 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 76ஜே (1)ஆம் பிரிவின் நியதிகளில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

ஒப்பம் நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்

ஆளுநர்

கொழும்பு

2006 திசெம்பர் 06

### முற்பணங்களுக்காக பொது ஒதுக்கமொன்றைப் பேணுவதற்கான தேவைப்பாடு

1. அனைத்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் தொடர்பான கணக்குகளில் பற்று வைக்கப்பட்டுள்ள தொங்கலிலுள்ள வட்டி நீங்கலாக, மொத்த செயலாற்றக் கடன்கள் மற்றும் முற்பணங்கள், வரவேண்டிய கடன்கள் மற்றும் முற்பணங்களில் (கீழே பந்தி 4 இனைப் பார்க்கவும்) 1% கொண்ட பொதுவான ஒதுக்கத்தினைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.

2. வங்கிகள் மேலேயுள்ள ஒதுக்கத்தினைப் பின்வருமாறு மேற்கொள்ளலாம்:

   2006.12.31இல் உள்ளவாறு சொல்லப்பட்ட ஒதுக்கில் 0.1% இனையும் அதன் பின்னர் 2009.03.31 வரை ஒவ்வொரு காலாண்டும் 0.1% கொண்ட அதிகரித்த ஒதுக்கினையும் மேற்கொள்ளலாம். செயல்முறையில், வங்கிகள் 2009.03.31 இற்குப் பிந்தாமல் 1% கொண்ட மொத்த தேவைப்பாட்டினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

3. பொதுவான ஒதுக்கினைப் பேணுவதற்கான தேவைப்பாடு, அதே வங்கியில் காசு வைப்புக்கள், தங்கம் அல்லது அரச பிணையங்களினால் பிணையிடப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பானவற்றிற்கு ஏற்புடைத்தாகாது.

4. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக:

4.1 "செயற்படும் கடன்கள் மற்றும் முற்பணங்கள்" என்பது "செயற்படா முற்பணங்கள் மீதான வட்டியை இடை நிறுத்த மற்றும் ஒதுக்கு நோக்கங்களுக்காக அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களை வகைப்படுத்தல்" என்பது மீதான வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே (1) ஆம் பிரிவின் கீழ் 1997.08.22ஆம் நாளன்று விடுக்கப்பட்ட பணிப்புரையின் நியதிகளில் செயற்படா முற்பணங்கள் என வகைப்படுத்தப்பட்டிராத அனைத்துக் கடன்களும் முற்பணங்களும் எனப் பொருள்படும்.

4.2 "வரவேண்டிய கடன்கள் மற்றும் முற்பணங்கள்" என்பது "செயற்படா முற்பணங்கள் மீதான வட்டியின் இடை நிறுத்தம் மற்றும் ஒதுக்கீட்டு நோக்கங்களுக்காக கீழ் நிலைப்படுத்தப்பட்ட அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களை வகைப்படுத்தல்" என்பன மீதான வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே (1) ஆம் பிரிவின் கீழ் 1997.08.22ஆம் நாளன்று விடுக்கப்பட்ட பணிப்புரையின் நியதிகளில் ஒதுக்கு நோக்கங்களுக்காக நியமங்கள் ஐய அல்லது இழப்புக்களாக வகைப்படுத்தப்பட்டிராத அனைத்து செயற்படாத கடன்களும் முற்பணங்களும் எனப் பொருள்படும்.

5. வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே (1)ஆம் பிரிவின் ஏற்பாட்டு நியதிகளில் 2006.11.21ஆம் நாளன்று நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

## 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம்

## தீர்மானத்திற்கான திருத்தங்களும் மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவதன் மீதான அறிவித்தலும்

மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவது தொடர்பாக 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 19(2) மற்றும் 19(7) இன் கீழ் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட 2001ஆம் ஆண்டு திசெம்பர் 27 மற்றும் 2006ஆம் ஆண்டு நவெம்பர் 21ஆம் நாளிடப்பட்ட அறிவித்தல்களையும் 1997ஆம் ஆண்டு ஓகத்து 22ஆம் நாளிடப்பட்ட தீர்மானத்தினையும் பின்வருமாறு திருத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை தீர்மானித்திருக்கின்றது.

ஒப்பம் **நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்**

ஆளுநர்

கொழும்பு

2006 திசெம்பர் 06

### தீர்மானம்

1. படிவம் 1இல் உள்ள விடயம் 07.11 இனை உடனடுத்து விடயம் 07.11அ இனை உறுதிப்படுத்துவதன் மூலம் பின்வருமாறு வாசிக்கப்படுகிறது.

07.11அ ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்களின் வரவிற்குச் சமமான தொகையும் "ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்களைப்" போன்று இடர்நேர்வு நிறையேற்றப்பட்டது - இடர்நேர்வு நிறை 100%

## 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம்

## மூலதனப் போதுமை விகிதத்தினைப் பேணுவதன் மீதான பணிப்புரைக்கான திருத்தங்கள்

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் பேணப்படும் மூலதன போதுமை விகிதம் தொடர்பாக 1988ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே (1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட 1997 நவெம்பர் 21, 2001 திசெம்பர் 27 மற்றும் 2006 நவெம்பர் 21 ஆகிய நாளிடப்பட்ட பணிப்புரைகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

ஒப்பம் **நிவார்ட் அஜித் லெஸ்லி கப்ரால்**

ஆளுநர்

கொழும்பு

2006 திசெம்பர் 06

### தீர்மானம்

1. படிவம் 1இல் உள்ள விடயம் 07.11 இனை உடனடுத்து விடயம் 07.11அ இனை உட்புகுத்துவதன் மூலம் பின்வருமாறு வாசிக்கப்படுகிறது.

07.11அ ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்களின் வரவிற்குச் சமமான தொகையும் "ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்களைப்" போன்று இடர்நேர்வு நிறையேற்றப்பட்டது - இடர்நேர்வு நிறை 100%

**02/17/800/0002/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2006 திசெம்பர் 11

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை

நிறைவேற்று அலுவர்களுக்கு

அன்புள்ள ஐயா,

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு**

1. 2005 ஏப்பிறல் 12ஆம் நாளிடப்பட்ட எண் 02/17/402/0073/001 கொண்ட சுற்றறிக்கையின் நியதிகளின்படி அதிகரிக்கப்பட்ட ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாட்டினை ஈடுசெய்வதற்கு புதிய மூலதனத்தினை உள்ளீடு செய்யும் செயற்பாட்டில் சில உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அத்தகைய வங்கிகளுக்கு விடயங்களின் ஒழுங்கு அடிப்படையில் கால நீடிப்பினை பின்வரும் அடிப்படையில் வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை தீர்மானித்திருக்கின்றது என்பதனை தங்களுக்கு அறியத்தருகினறோம்.

(அ) 2008 இறுதிவரை குறைவாக உள்ள அளவில் குறைந்தது 50 சதவீதத்தினையாவது உள்ளீடு செய்தல் வேண்டும்.

(ஆ) 2009 இறுதியில் மொத்த மூலதனத் தேவைப்பாடான ரூ 2,500 மில்லியனையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

2. கால நீடிப்பு தேவைப்படும் வங்கிகள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள புதிய திகதிகளில் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாட்டினை ஈடுசெய்வதற்கான கால வரையறையினைக் கொண்ட மூலதன உள்ளீட்டு திட்டமொன்றினை நாணயச்சபையின் பரிசீலனைக்காக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளிடம் சமர்ப்பித்தல் வேண்டும். நாணயச் சபையானது அவசியமானது என அது கருதுகின்ற அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு கால நீடிப்பினை வழங்கும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**திருமதி. எல்.கே. குணதிலக்க**

பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**02/17/800/0002/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2006 திசெம்பர் 11

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் (பிரதேச அபிவிருத்தி

வங்கிகள் நீங்கலாக) முதன்மை நிறைவேற்று அலுவர்களுக்கு

அன்புள்ள ஐயா,

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு**

1. 2005 ஏப்பிறல் 12ஆம் நாளிடப்பட்ட எண் 02/17/402/0073/001 கொண்ட சுற்றறிக்கையின் நியதிகளின்படி அதிகரிக்கப்பட்ட ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாட்டினை ஈடுசெய்வதற்கு புதிய மூலதனத்தினை உள்ளீடு செய்யும் செயற்பாட்டில் சில உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அத்தகைய வங்கிகளுக்கு விடயங்களின் ஒழுங்கு அடிப்படையில் கால நீடிப்பினை பின்வரும் அடிப்படையில் வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை தீர்மானித்திருக்கின்றது என்பதனை உங்களுக்கு அறியத்தருகினறோம்.

(அ) 2008 இறுதிவரை குறைவாக உள்ள அளவில் குறைந்தது 50 சதவீதத்தினையாவது உள்ளீடு செய்தல் வேண்டும்.

(ஆ) 2009 இறுதியில் மொத்த மூலதனத் தேவைப்பாடான ரூ 1,500 மில்லியனையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

2. கால நீடிப்பு தேவைப்படும் வங்கிகள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள புதிய திகதிகளில் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாட்டினை ஈடுசெய்வதற்கான கால வரையறையினைக் கொண்ட மூலதன உள்ளீட்டு திட்டமொன்றுடன் நாணயச்சபையின் பரிசீலனைக்காக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளிடம் சமர்ப்பித்தல் வேண்டும். நாணயச் சபையானது அவசியமானது என அது கருதுகின்ற அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு கால நீடிப்பினை வழங்கும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்

**திருமதி. எல்.கே. குணதிலக்க**

பதில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0010/02**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

2006 மாச்சு 21

**அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

இது, மேற்குறிப்பிட்ட விடயம் பற்றி 2004 ஒத்தோபர் 22ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண் 35/01/005/0010/01 தொடர்பானது.

தீர்வைச் சலுகைக்கு தகைமையுடைய ஊர்திகளின் இறக்குமதிகளை, 2004 ஒத்தோபர் 22 ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண் 35/01/005/0010/01 இன் மூலம் அத்தகைய ஊர்திகளின் இறக்குமதிக்காக விதிக்கப்பட்ட நாணயக்கடிதங்கள் மீதான அளவு வைப்புத் தேவைப்பாடுகளிலிருந்து விலக்களிப்பதற்கு நாணயச்சபை தீர்மானித்திருக்கின்றது.

**பணிப்பாளர்/ உள்நாட்டுத்தொழிற்பாடுகள்**

இலங்கை மத்திய வங்கி

நாணயச்சபையின் அதிகாரமளிக்கப்பட்ட

கையொப்பக்காரர்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0011/01**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

2006 ஏப்பிறல் 17

**அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்**

## இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் பத்திரங்களற்ற வடிவத்தில் மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதன் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஒரு பகுதியாக நாணயவிதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 91(1) (ஆ)இன் கீழ் எப்பொழுது அவசியமானது என நம்புகிறதோ அப்பொழுது மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் சந்தைத் தொழிற்பாட்டுக் குழு தீர்மானிக்கும். இப்பிணையங்களின் முக்கியமான பண்புகள் வருமாறு:

i இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் பத்திரங்களற்ற வடிவத்தில் வழங்கப்படும்.

ii இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் கைமாறத்தக்கவை.

iii பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மற்றும் மத்திய வைப்பக முறை என்பனவற்றின் தொழிற்பாடுகளுக்கு ஏற்புடைத்தான நியதிகளும் ஒழுங்கு விதிகளும் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் மாற்றல்களுக்கும் தீர்ப்பனவுகளுக்கும் ஏற்புடைத்தாக இருக்கும்.

iv இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் சந்தைப்படுத்தத்தக்கனவாகும். எனினும், இப்பிணையங்கள் இலங்கை மத்திய வங்கியுடனான ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதிக்கோ அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கோ தகைமையுடையனவல்ல.

v அரச திறைசேரி உண்டில்களைப் போன்றே இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களும் கழிவிடல் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

vi மத்திய வங்கியிலிருந்து இப்பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கு அனைத்து வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் தகைமையுடையவராவர். பொது மக்கள் இவற்றினை இரண்டாந்தரச் சந்தையில் வர்த்தக வங்கிகளிடமிருந்து அல்லது முதனிலை வணிகர்களிடமிருந்து கொள்வனவு செய்யலாம்.

vii அரச பிணையங்களைப் போன்றே, இப்பிணையங்களின் ஆரம்ப வழங்கல் வட்டி வருமானத்தின் மீது தற்போதைய 10 சதவீத பிடித்து வைத்தல் வரிக்கு உட்பட்டதாகும்.

viii இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் முதனிலை வணிகர்களுக்கு

(அ) ஏலமொன்றின் அடிப்படையில் அத்துடன்/ அல்லது

(ஆ) முன்னரே தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதமொன்றின் (விளைவு வீதம்) அடிப்படையில் வழங்கப்படும்.

ix இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் காலம் (முதிர்ச்சிக்காலம்) பிணையங்கள் வழங்கப்படுகின்ற நேரத்தில் நிலவுகின்ற சந்தை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும்.

பங்கேற்கும் நிறுவனங்களுக்கான முன்னறிவிப்புடன் எந்த ஒரு நியதியையும் அத்துடன்/ அல்லது நிபந்தனைகளை அல்லது இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் ஒரு பகுதியினை திருத்தவோ, மாற்றவோ அல்லது வேறுபடுத்தவோ இலங்கை மத்திய வங்கி உரிமைகளைக் கொண்டுள்ளது.

### (அ) ஏல முறைகளின் கீழ் மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குதல்

1. மத்திய வங்கி, அவசியமானவிடத்து இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதற்கு ஏலமொன்றினை நடத்த எண்ணியுள்ளமை பற்றி உடனடி கணனி இலத்திரனியல் விலைக்கோரல் முறை/ பணச்சந்தை கண்காணிப்பு முறை அத்துடன்/ அல்லது வேறு ஏதாவது தொடர்பூட்டல் முறையூடாக அறிவிக்கும். ஏல அறிவித்தல்கள் விற்கப்படவுள்ள பிணையங்களின் தொகை மற்றும் முதிர்ச்சிக்காலம், ஏலமிடும் நாள் மற்றும் நேரம் மற்றும் தீர்ப்பனவு செய்யும் நாள் என்பன ஏலமிடும் நாளன்று அல்லது ஏலமிடும் நாளுக்கு ஒரு வேலைநாள் முன்னதாக தெரிவிக்கப்படும்.

2. ஏலமானது உடனடி விற்பனை ஏலங்களுக்கான விருப்பத்தேர்வின் கீழ் தற்போதுள்ள உடனடிக் கணனி வலைய இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக நடத்தப்படும். ஏல அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏல நாளன்று பங்கேற்கும் நிறுவனங்கள் தொகை (கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் பிணையங்களின் முகப்புப் பெறுமதி) மற்றும் வட்டி வீதம் (விளைவு வீதம்) என்பனவற்றைக் கொண்ட விலைக்கோரலைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3. பங்கேற்கும் நிறுவனங்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட வீதங்கள் வரியுடனான விளைவு வீதங்களாக இருக்கும்.

4. விலைக்கோரல்கள் உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக சமா்ப்பிக்கப்படுதல் வேண்டும். உடனடிக் கணனி வலையமைப்பு விலைக்கோரல் முறை பழுதடைகின்ற சந்தா்ப்பங்களில் மாத்திரமே தொலைபேசி மூலமான விலைக்கோரல்கள் ஏற்றுக் கொள்ளப்படும். தொலைபேசி ஊடாகச் சமா்ப்பிக்கப்படும் விலைக்கோரல்கள் அதிகாரம் பெற்ற அலுவலா்கள் இருவா் கையொப்பமிட்ட தொலைநகல் மூலமாக 15 நிமிடங்களுக்கிடையில் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். தொலைநகலின் மூலப்பிரதியினை உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு அதே நாளன்று வியாபாரம் முடிவடைவதற்கு முன்னா் அனுப்பி வைத்தல் வேண்டும். பங்கேற்கும் நிறுவனமொன்று ஒவ்வொரு முதிா்ச்சிக்குமாக ஆகக்கூடியது ஆறு விலைக்கோரல்களைச் சமா்ப்பிக்க முடியும். ஆகக் குறைந்த விலைக்கோரல் தொகை ரூபாய் ஒரு மில்லியனாகவும் விலைக்கோரல்கள் ரூபாய் ஒரு மில்லியனின் பெருக்கங்களாகவும் இருத்தல் வேண்டும்.

5. ஏலம் முடிவடைந்த அரை மணித்தியாலத்திற்குப் பின்னா் உடனடியான இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக விலைக்கோரல்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பங்கேற்கும் நிறுவனங்களுக்கு அத்தகைய பெற்றுக் கொள்ளல்கள் பற்றி அறிவிக்கப்படும். வெற்றிபெற்ற விலைக்கோரலாளா்கள் குறிப்பீடு செய்த வீதங்களில் ஒதுக்குகள் மேற்கொள்ளப்படும்.

6. ஏலங்களின் பெறுபேறுகள் உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக அத்துடன் அல்லது வேறு ஏதேனும் தொடா்பூட்டல் வழிமுறைகளினூடாக ஏலம் முடிவடைந்த அரை மணித்தியாலத்தின் பின்னா் வெற்றி பெற்ற விலைக் கோரலாளா்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை மற்றும் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் என்பனவற்றைத் தருகின்ற ஏலங்களின் பெறுபேறு அறிவிக்கப்படும்.

7. அதே வீதத்தில் வழங்கப்படுவதற்கு முன் வைக்கப்பட்ட தொகையினை விலைக்கோரல் தொகை விஞ்சும் சந்தா்ப்பங்களில் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகை அத்தகைய விலைக் கோரலாளா்களிடையே "விகித சம" அடிப்படையில் ஒதுக்கப்படும். இதன்படி, வெட்டு வீதத்திலமைந்த விலைக்கோரல்கள் பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

8. ஒவ்வொரு வெற்றி பெற்ற விலைக் கோரலினதும் விற்பனைப் பெறுமதி (பிடித்து வைத்தல் வரி உட்பட விற்பனை விலை) பிணையங்களின் முதிா்ச்சிக் காலப்பகுதிக்காக, தொடா்பான பங்கேற்கும் நிறுவனங்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட வீதங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிணையங்களின் முகப்புப் பெறுமதியினை கழிவு செய்வதன் மூலம் கணிக்கப்படும்.

9. கொடுக்கல் வாங்கல்களின் தீா்ப்பனவு பொருத்தம் செய்யப்பட்ட வா்த்தக வழங்கல் கோவையின் அடிப்படையில், பிணையங்களின் விற்பனைப் பெறுமதிக்கான (பிடித்து வைத்தல் வரியுடனான விலைகள்) இலங்கை மத்திய வங்கியின் தீா்ப்பனவுக் கணக்கிற்கு பெறப்பட்ட நிதியங்களுக்கு எதிராக வெற்றி பெற்ற விலைக் கோரலாளா்களின் தொடா்பான சொந்தக் கணக்கிற்கு விற்கப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் மூலம் இக்கணனி முறையானது கொடுக்கல் வாங்கல்களை தீா்ப்பனவு செய்யும். இது தொடா்பாக பங்கேற்கும் நிறுவனங்கள் கணனி முறைக்கு எந்தவித தீா்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமா்ப்பிக்கத் தேவையில்லை.

10. வணிகம் மேற்கொள்ளப்பட்ட நாள் அன்றே தீா்ப்பனவு செய்யப்படும் விடயங்களைப் பொறுத்த வரையில் பொருத்தம் செய்யப்பட்ட வா்த்தக வழங்கல் கோவையானது ஏலம் முடிவுற்ற இரண்டு மணித்தியாலங்களின் பின்னா் லங்கா சிகுயருக்கு சமா்ப்பிக்கப்படும். தீா்ப்பனவுகள் மறுநாளாக இருக்குமாயின் பொருத்தம் செய்யப்பட்ட வா்த்தக வழங்கல் கோவையானது தீா்ப்பனவு செய்யப்பட்ட நாளன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா சிகுயருக்கு சமா்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

11. பங்கேற்கும் நிறுவனங்களின் விலைக்கோரல்கள் இலங்கை மத்திய வங்கியினால் பெற்றுக் கொள்ளப்படுவதானது பங்கேற்கும் நிறுவனத்தினை பிணிப்பதுடன் தீா்ப்பனவு நாளன்று லங்கா சிகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னா் கொடுக்கல் வாங்கல்களை (பங்கேற்கும் நிறுவனத்தின் கொள்வனவு) கௌரவிக்கத் தவறுவது, பங்கேற்கும் நிறுவனத்தினால் குறிப்பீடு செய்யப்பட்ட விதத்தில் கொள்வனவு விலைகளின் மீது முதிா்ச்சிக் காலப்பகுதிக்கான வட்டித் தொகைக்குச் சமமான தொகையினை நட்ட ஈடாகச் செலுத்துவதற்கு அந்நிறுவனங்கள் பொறுப்புடையனவாகும். அத்தகைய தொகையானது தீா்ப்பனவு நாளினைத் தொடா்ந்து வரும் அடுத்த வேலை நாளன்று இலங்கை மத்திய வங்கியுடனான பங்கேற்கும் நிறுவனத்தின் தீா்ப்பனவுக் கணக்கிற்கு பற்று வைக்கப்படும்.

12. முதிா்ச்சி நாளன்று, மத்திய வங்கியின் சொந்தக் கணக்கிற்கு பிணையங்களையும் தொடா்பான பிணையங்களை வைத்திருந்த பங்கேற்கும் நிறுவனங்களின் அதேநேர மொத்தத் தீா்ப்பனவு கணக்கிற்கு முதிா்ச்சித் திகதிக்கு முன்னருள்ள வியாபார நாளன்று முதிா்ச்சிப் பெறுகைகளையும் மாற்றல் செய்வதன் மூலம் கணனி முறை தன்னியக்கமாகவே தீா்ப்பனவினை மேற்கொள்ளும்.

13. இலங்கை மத்திய வங்கி, அவசியமெனக் கருதுமிடத்து, அதே நாளன்று மேலதிக ஏலங்களை நடத்தும் உரிமையினையும் கொண்டுள்ளது.

14. இலங்கை மத்திய வங்கி, பங்கேற்கும் நிறுவனங்களின் விலைக்கோரல்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையினை தன்வசம் கொண்டுள்ளது.

**(ஆ) முன்னரே, தீா்மானிக்கப்பட்ட வீதமொன்றில் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குதல்**

1. மத்திய வங்கி, இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை முன்னரே தீா்மானிக்கப்பட்ட விளைவு வீதமொன்றில் வழங்கும்.

2. முன்னரே தீா்மானிக்கப்பட்ட வீதத்தில் வழங்கப்படவுள்ள இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் முதிா்ச்சிக்காலம், பிணை வீதம் (பிடித்து வைத்தல் வரியுடன்) மற்றும் தீா்ப்பனவுத் திகதி என்பன நாணயத்தொழிற்பாட்டு குழுவினால் தீா்மானிக்கப்பட்டு

உடனடி கணனி இலத்திரனியல் விலைக் கோரல் முறை/ பணச்சந்தை கண்காணிப்பு முறை அல்லது/ அத்துடன் வேறு மற்றைய தொடர்பூட்டல் முறைகளினூடாக அறிவிக்கப்படுவதுடன் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவுடன் தொடர்புகளை மேற்கொள்வதன் மூலம் ஒவ்வொரு வியாபார நாளன்றும் 1000 மணிக்கும் 1330 மணிக்குமிடையில் அவற்றினைக் கொள்வனவு செய்வதற்கு பங்கேற்கும் நிறுவனங்கள் அழைக்கப்படுகின்றன.

3. இவ்வகைக் கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கத்தக்க விதத்தில் உடனடி கணனி இலத்திரனியல் விலைக் கோரல்முறையினை தரமுயர்த்தும் காலம் வரை, முன்னரே தீர்மானிக்கப்பட்ட விலையில் மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதற்கு பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படும்.

(அ) முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதங்களில் இலங்கை மத்திய வங்கி பிணையங்களை கொள்வனவு செய்ய விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்குத் தேவையான தொகையினை தொலைபேசி மூலம் அறிவிக்குமாறும் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட 30 நிமிடங்களுக்கிடையில் ஆனால் அதே நாள் 1330 மணிக்கு பிந்தாமல் இரண்டு அதிகாரம் பெற்ற அலுவலர்களினால் கையெழுத்திடப்பட்ட இணைப்பு Iஇல் உள்ள படிவத்தினை தொலைநகல் மூலம் அனுப்பி வைப்பதன் வாயிலாக உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். உறுதிப்படுத்தலின் மூலப்படியினை அதே நாளன்று வியாபாரம் முடிவடைவதற்கு முன்னதாக உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(ஆ) இக்கையாளலின் உறுதிப்படுத்தல் கிடைக்கப் பெற்றதும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவு அனைத்து விபரங்களையும் இலத்திரனியல் விலைக்கோரல் முறைக்கு பதிவு செய்வதுடன் (உடனடி விற்பனை ஏலத் தேர்வின் கீழ்) விபரங்கள் இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக 1400 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(இ) கொடுக்கல் வாங்கலின் ஆகக் குறைந்த தொகை ரூபாய் ஒரு மில்லியனாக இருக்குமென்பதுடன் விலைக்கோரல்கள் ரூபாய் ஒரு மில்லியனின் பெருக்கங்களிலும் இருத்தல் வேண்டும்.

(ஈ) வணிக கையாளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பங்கேற்பு நிறுவனங்கள் அத்தகைய ஏற்றுக் கொள்ளல்களை அதே நாளன்று 1400 மணியளவில் உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக (உடனடி விற்பனை ஏல விருப்பத் தேர்வுகளின் கீழ்) பார்வையிடலாம்.

4. வணிகம் மேற்கொள்ளப்பட்ட நாளன்றே தீர்ப்பனவு செய்யப்படும் விடயங்களைப் பொறுத்த வரையில், பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவையானது வணிகம் செய்யப்பட்ட நாளன்று 1500 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா சிகுயரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். தீர்ப்பனவுகள் மறு நாளாக இருக்குமாயின், பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவையானது தீர்ப்பனவு செய்யப்பட்ட நாளன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா சிகுயருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

5. கொடுக்கல் வாங்கலின் தீர்ப்பனவு வழங்கல் எதிர் கொடுப்பனவு என்ற அடிப்படையில் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் வசதியினூடாக மேற்கொள்ளப்படும். விற்கப்பட்ட பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு நிதியம் கிடைக்கப் பெற்றதற்கு எதிராக பங்கேற்கும் நிறுவனங்களின் தொடர்பான சொந்தக் கணக்கிற்கு விற்கப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் மூலம் கணனி முறையானது கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும். இது தொடர்பான கணனி முறைக்கு பங்கேற்கும் நிறுவனங்கள் எந்த ஒரு தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமர்ப்பிக்க வேண்டிய தேவையில்லை.

6. விற்பனைப் பெறுமதியானது (பிடித்து வைத்தல் வரி உட்பட விற்பனை விலை) பிணையத்தின் முதிர்ச்சிக் காலப்பகுதிக்கு ஏற்புடைத்தான வட்டி வீதங்களின் மூலம் விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின் முகப்புப் பெறுமதியினைக் கழிவு செய்வதன் மூலம் கணிக்கப்படும்.

7. பங்கேற்கும் நிறுவனங்களின் விலைக்கோரல் மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படுமிடத்து அது பங்கேற்கும் நிறுவனங்களை கட்டுப்படுத்துவதுடன் தீர்ப்பனவு நாளன்று லங்கா சிகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னர் கொடுக்கல் வாங்கல்களைக் கௌரவிக்கத் தவறுமிடத்து (பங்கேற்கும் நிறுவனங்களின் கொள்வனவு) பங்கேற்கும் நிறுவனங்கள் முதிர்ச்சிக்காலப் பகுதிக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் கொள்வனவு விலைகளின் மீதான வட்டித் தொகைக்குச் சமமான தொகையொன்றினை மத்திய வங்கிக்கு நட்ட ஈடாகச் செலுத்த வேண்டும். அத்தகைய தொகையானது தீர்ப்பனவு நாளைத் தொடர்ந்து வரும். அடுத்த வியாபார நாளன்று இலங்கை மத்திய வங்கியில் வைத்திருக்கப்படும் பங்கேற்பு நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

8. முதிர்ச்சி நாளன்று, மத்திய வங்கியின் சொந்தக் கணக்கிற்கு பிணையங்களையும் தொடர்பான பிணையங்களை வைத்திருந்த பங்கேற்கும் நிறுவனங்களின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கிற்கு முதிர்ச்சிப் பெறுகைகளையும் முதிர்ச்சித் திகதிக்கு முன்னைய வேலை நாளன்று மாற்றல் செய்வதன் மூலம் கணனிமுறை தன்னியக்கமாகவே தீர்ப்பனவினை மேற்கொள்ளும்.

9. அவசியமானது எனக் கருதுமிடத்து, முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதங்களின் கீழ் வழங்கப்படவுள்ள இலங்கை மத்திய வங்கிப்

பிணையங்களின் விளைவு வீதத்தையும் முதிர்ச்சிக்காலத்தினையும் மாற்றுவதற்கான உரிமையினை மத்திய வங்கி கொண்டிருப்பதுடன், அத்தகைய மாற்றங்கள் உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறை/ பணச்சந்தை நாணயமுறை அல்லது வேறு ஏதாவது தொடர்பூட்டல் வழிமுறைகள் மூலமாக இது நடைமுறைக்கு வரவுள்ள நாளன்று 0930 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ பங்கேற்கும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

**(இ) இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை உரிய காலத்திற்கு முன்னர் முதிர்வடையச் செய்தல்**

முதிர்ச்சி நாளுக்கு முன்னர் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை எப்பொழுது தீர்ப்பனவு செய்வது அவசியமானது என்பதனை நாணய தொழிற்பாட்டுக்குழு தீர்மானிக்கும். இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களின் தீர்ப்பனவு ஒன்றில்

(அ) ஏலங்களின் அடிப்படையில் அல்லது;

(ஆ) முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில்

மேற்கொள்ளப்படும்.

ஏலங்களின் அடிப்படையிலும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதங்களின் அடிப்படையிலும் தீர்ப்பனவு செய்யப்படவுள்ள பிணையங்கள் மீதான நியதிகளும் நிபந்தனைகளும் பிரிவுகள் இ1 மற்றும் இ2 இல் மேலோட்டமாகத் தரப்பட்டுள்ளன.

**(இ1) ஏல முறைகளின் கீழ் மத்திய வங்கிப் பிணையங்களை தீர்ப்பனவு செய்தல்**

1. அவசியமான வேளையில் இலங்கை மத்திய வங்கி உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையின் மூலமாக அது, முதிர்ச்சிக் காலத்திற்கு முன்னதாக மத்திய வங்கிப் பிணையங்களை ஏலமொன்றின் அடிப்படையில் தீர்ப்பனவு செய்ய (கொள்வனவு) எண்ணியுள்ளமை பற்றி அறிவிக்கும்.

2. ஏல அறிவித்தலில் தீர்ப்பனவு செய்யப்படவுள்ள பிணையங்களின் விபரங்கள், அதாவது, தொகை (முகப்புப் பெறுமதி) முதிர்ச்சி நாள் மற்றும் பிணையங்களின் ஐஎஸ்ஐ என்ற பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம் என்பன ஒன்றில் ஏல நாளன்று அல்லது ஏல நாளுக்கு முன்னைய ஒரு வேலை நாளன்று உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக/ பணச்சந்தை கண்காணிப்பு முறை அல்லது/ அத்துடன் வேறு ஏதாவது தொடர்பூட்டல் முறையினூடாக அறிவிக்கப்படும். அத்துடன் பங்கேற்கும் நிறுவனங்கள் ஏல நாளன்று 1300 மணிக்கும் 1400 மணிக்குமிடையிலான காலப்பகுதியில் தொகை மற்றும் வட்டி வீதம் (விளைவு வீதம்) என்பனவற்றைக் குறிப்பிட்டு வழங்கல் முனைவினை சமர்ப்பிக்குமாறு பங்கேற்கும் நிறுவனங்கள் அழைக்கப்படுகின்றன. தீர்ப்பனவு நாள் ஏல நாளினைத் தொடர்ந்து வரும் வேலை நாளாக இருக்கும்.

3. வழங்கல் முனைவு உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். உடனடி இலத்திரனியல் முறை பழுதடைந்துள்ள சந்தர்ப்பங்களில் மட்டுமே தொலைபேசி ஊடான வழங்கல் முனைவுகள் ஏற்றுக் கொள்ளப்படும். தொலைபேசி ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட வழங்கல் முனைவுகள் 15 நிமிடங்களுக்கிடையில் அதிகாரம் பெற்ற இரு அலுவலர்களினால் கையொப்பமிடப்பட்ட தொலைநகல் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தொலைநகலின் மூலப்படி அதே நாளன்று வேலை நேரம் முடிவடைவதற்கு முன்னதாக உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். பங்கேற்கும் நிறுவனமொன்று ஒவ்வொரு முதிர்ச்சிக்கும் ஆகக் கூடியது ஆறு வழங்கல் முனைவுகளை சமர்ப்பிக்க முடியும். வழங்கல் முனைவின் ஆகக் குறைந்த தொகை ரூபாய் ஒரு மில்லியனாக இருப்பதுடன் வழங்கல் முனைவு ரூபாய் ஒரு மில்லியனின் பெருக்கமாகவும் இருத்தல் வேண்டும்.

4. வெற்றிபெற்ற ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனத்திற்கும் உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக, அதன் வழங்கல் முனைவு ஏற்றுக் கொள்ளப்பட்டமை பற்றியும் மத்திய வங்கிப் பிணையங்களின் தொடர்பான கொள்வனவு விலை பற்றியும் 1430 மணியளவில் அறிவிக்கப்படுவர்.

5. வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ஒரே வீதத்தில் வழங்கல் முனைவுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகையானது "விகித சம" அடிப்படையில் அத்தகைய பங்கேற்கும் நிறுவனங்களிடையே ஒதுக்கீடு செய்யப்படும். இதன்படி வழங்கல் முனைவு வெட்டு வீதத்தில் பகுதியளவில் ஏற்றுக் கொள்ளப்படும்.

6. வெற்றி பெற்ற ஒவ்வொரு வழங்கல் முனைவினதும் கொள்வனவு பெறுமதி (விலை), பிணையங்களின் முதிர்ச்சிக் காலப்பகுதிக்காக தொடர்பான பங்கேற்கும் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட வீதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் முகப்புப் பெறுமதியினைக் கழிவு செய்வதன் மூலம் கணிக்கப்படும்.

7. தீர்ப்பனவு நாளன்று, பொருத்தப்பாடு செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவை 0830 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக லங்கா சிகுயருக்கு சமர்ப்பிக்கப்படும். அதன் அடிப்படையில், லங்கா சிகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் சொந்தக் கணக்கிற்கு பெறப்பட்ட தீர்ப்பனவு செய்யப்பட்ட (கொள்வனவு செய்யப்பட்ட) பிணையங்களுக்கெதிராக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையிலுள்ள ஒவ்வொரு வெற்றி பெற்ற பங்கேற்பு நிறுவனத்தினதும் தொடர்பான தீர்ப்பனவுக் கணக்கிற்கு, கணனி முறை கொள்வனவு விலைகளை வரவு வைக்கும். இது தொடர்பாக கணனி முறைக்கு கொடுகடன் நிறுவனங்கள் எந்த ஒரு தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

8. பங்கேற்கும் நிறுவனமொன்றின் முனைவு வழங்கல் மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் அது பங்கேற்கும் நிறுவனத்தினைக் கட்டுப்பாட்டிற்குட்படுத்துவதுடன் தீர்ப்பனவு நாளன்று லங்கா சிகுயரின் வேலை நாள் முடிவடைவதற்கு முன்னர் கொடுக்கல் வாங்கல்களை

(பங்கேற்கும் நிறுவனத்தின் விற்பனை) கௌரவிக்கத் தவறுமிடத்து பங்கேற்கும் நிறுவனத்தினால் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு விற்பனைப் பெறுமதி மீதான வட்டித்தொகைக்கு சமமான தொகையினை நட்ட ஈடாக மத்திய வங்கிக்கு செலுத்துவதற்கு பங்கேற்கும் நிறுவனங்கள் பொறுப்புடையனவாகும். அத்தகைய தொகையானது தீர்ப்பனவு நாளுக்கு அடுத்து வரும் வேலை நாளன்று இலங்கை மத்திய வங்கியிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

9. தேவையானது எனக் கருதப்படுமிடத்து இலங்கை மத்திய வங்கி அதே நாளன்று மேலதிக ஏலங்களை நடத்தும் உரிமையினையும் கொண்டுள்ளது.

10. இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிறுவனமொன்றில் எந்த ஒரு வழங்கல் முனைவினையும் ஏற்றுக் கொள்ள அல்லது நிராகரிப்பதற்கான உரிமையினைக் கொண்டுள்ளது.

**(இ2) முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் மத்திய வங்கிப் பிணையங்களை தீர்ப்பனவு செய்தல்**

1. மத்திய வங்கி முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் மத்திய வங்கிப் பிணையங்களை தீர்ப்பனவு செய்ய உத்தேசித்துள்ளமை பற்றி, முதிர்ச்சியடைவதற்கு முன்னர் தீர்ப்பனவு செய்யப்படவுள்ள மத்திய வங்கிப் பிணையங்களின் வீதம், முதிர்ச்சி நாள் மற்றும் பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம் என்பனவற்றை வழங்குகின்ற விதத்தில் உடனடி இலத்திரனியல் விலைக் குறிப்பீட்டு முறை/ பணச்சந்தைக் கண்காணிப்பு முறை அல்லது/ அத்துடன் வேறு ஏதாவதொரு தொடர்பூட்டல் முறையூடாக அறிவிப்பதுடன் பங்கேற்கும் நிறுவனங்கள் அவர்களது வழங்கல் முனைவினை அதே நாளன்று முன் வைக்குமாறும் அழைக்கப்படுவர்.

2. தீர்ப்பனவு நாள் வியாபாரம் செய்கின்ற நாளை அடுத்து வரும் வேலை நாளாக இருக்கும்.

3. இவ்வகைக் கொடுக்கல் வாங்கல்களை வசதிப்படுத்தத்தக்கவிதத்தில் உடனடி இலத்திரனியல் விலைக் கோரல்முறை தரமுயர்த்தப்படும் வரை முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் முதிர்ச்சிக்கு முன்னர் மத்திய வங்கி பிணையங்களை தீர்ப்பனவு செய்வதற்கு பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படும்.

   (அ) முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் மத்திய வங்கிப் பிணையங்களை விற்பனை செய்ய விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு விற்பதற்கு எதிர்பார்க்கும் தொகையினை தொலைபேசி மூலம் அறிவிக்குமாறும், இக்கையாளலை அதிகாரம் பெற்ற இரு அலுவலர்கள் கையொப்பமிட்ட தொலைநகல் 30 நிமிடங்களுக்கிடையில் ஆனால் அதே நாளன்று 1500 மணித்தியாலங்களுக்கு பிந்தாமல் அனுப்பி வைப்பதன் மூலம் உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உறுதிப்படுத்தப்பட்ட ஆவணத்தின் மூலப்படி அதே நாளன்று வேலை முடிவடைவதற்கு முன்னதாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு அனுப்பு வைக்கப்படுதல் வேண்டும்.

   (ஆ) இவ்வணிக நடவடிக்கை உறுதிப்படுத்தப்பட்டதும் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவு அனைத்து விபரங்களையும் இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறைக்கு (உடனடிக் கொள்வனவு ஏல விருப்பத் தேர்வின் கீழ்) பதிவு செய்வதுடன் இவ்விபரங்கள் அதே நாளன்று 1530 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறையினூடாக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

      (இ) கொடுக்கல் வாங்கல்களின் ஆகக் குறைந்த தொகை ஒரு மில்லியன் ரூபாவாகவும் வணிக நடவடிக்கைகள் ஒரு மில்லியன் ரூபாவின் பெருக்கங்களாகவும் இருத்தல் வேண்டும்.

      (ஈ) வணிக நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பங்கேற்பு நிறுவனங்கள் அத்தகைய ஏற்றுக் கொள்ளல்களை அதே நாளன்று 1530 மணியளவில் உடனடி இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு முறையில் (உடனடி கொள்வனவு ஏல விருப்பத் தேர்வின் கீழ்) பார்வையிட முடியும்.

4. கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவு லங்கா சிகுயரில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் வசதியூடாக வழங்கல் எதிர் கொடுப்பனவு அடிப்படையில் மேற்கொள்ளப்படும் லங்கா சிகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கிக்கு சொந்தமான கணக்கிற்கு பெறப்பட்ட கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களுக்கெதிராக பிணையங்களின் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதிக்காக பங்கேற்கும் நிறுவனங்களின் தொடர்பான தீர்ப்பனவுக் கணக்கிற்கு வங்கி முறையானது வரவு வைப்பதன் அடிப்படையில் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவை லங்கா சிகுயருக்கு தீர்ப்பனவு நாளன்று 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா சிகுயருக்கு சமர்ப்பிக்கப்படும்.

5. பிணையங்களின் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதிக்காக முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் முகப்புப் பெறுமதியினை கழிவு செய்வதன் மூலம் கொள்வனவுப் பெறுமதி (விலை) கணிக்கப்படும்.

6. முன்னரே தீர்மானிக்கப்பட்டதொரு வீதத்தில் மத்திய வங்கிப் பிணையங்களை விற்பதற்காக பங்கேற்கும் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட முனைவு மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படுமிடத்து அது பங்கேற்கும் நிறுவனங்களைப் பிணிப்பதுடன் தீர்ப்பனவு நாளன்று லங்கா சிகுயரின் வேலை முடிவடைவதற்கு முன்னர் கொடுக்கல் வாங்கல்களை (பங்கேற்கும் நிறுவனங்களின் விற்பனை) கௌரவிக்கத் தவறுமிடத்து பங்கேற்கும் நிறுவனங்கள் முன்னரே தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதிக்காக விற்பனைப் பெறுமதியின் மீதான வட்டித் தொகைக்குச் சமமான தொகையினை மத்திய வங்கிக்கு நட்ட ஈடாகச் செலுத்தப் பொறுப்புடையதாகும். அத்தகைய தொகையானது தீர்ப்பனவு நாளை அடுத்து வரும் வேலை நாளன்று இலங்கை மத்திய வங்கியூடாக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் தீர்ப்பனவு கணக்கில் பற்று வைக்கப்படும்.

**டி.எஸ். விஜேசிங்க**
பணிப்பாளர்

**இணைப்பு 1**

**இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்**

**வணிகக் கையாளலை உறுதிப்படுத்தல்**

நிறுவனத்தின் பெயர் :-

வணிக கையாளல் வகை (கொள்வனவு/ விற்பனை):-

முகப்புப் பெறுமதி :-

விளைவு வீதம் :-

வணிக கையாளல் நாள் :-

தீர்ப்பனவு நாள் :-

முதிர்ச்சி நாள் :-

**அதிகாரமளிக்கப்பட்டவர்களின் கையொப்பம்** **அதிகாரமளிக்கப்பட்டவர்களின் கையொப்பம்**

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/10**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

2006 யூன் 16

**அனைத்து முதனிலை வணிகர்களுக்கும்**

**இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்**

2006 யூன் 19ஆம் நாளிலிருந்து இலங்கை மத்திய வங்கி திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான அதன் கொடுக்கல் வாங்கல்களை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் மட்டும் மேற்கொள்ளும்.

**பணிப்பாளர்**

உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**தொடர்பு எண்: 35/01/005/0010/03**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

2006 யூலை 06

**அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

இது மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான 2004 ஒத்தோபர் 22ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண் 35/01/005/0010/001 தொடர்பானது.

மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் நோக்கத்திற்காக வைத்திருக்கப்படும் வைப்புக்களின் காசு அளவின் மீது அவர்களுக்கு வட்டி செலுத்துவதில் மத்திய வங்கிக்கு ஆட்சேபனை எதுவுமில்லை என்பதனை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது.

**பணிப்பாளர்/ உள்நாட்டுத்தொழிற்பாடுகள்**

இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையினது

ஒப்புதல் பெற்ற கையொப்பக்காரர்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0010/04**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

2006 ஒத்தோபர் 11

**அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

**நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

இது, மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2004 ஒத்தோபர் 22ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண் 35/01/005/0010/01 தொடர்பானது.

மேலேயுள்ள சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட பொருட்களின் இறக்குமதிக்காக நாணயக்கடிதத்தினை திறக்கின்ற பொழுது வைப்புச் செய்யப்படவேண்டிய ஆகக் குறைந்த தேவைப்பாட்டினை வழங்குவதற்கு அத்தகைய வாடிக்கையாளர்களை இயலச் செய்யும் நோக்கத்திற்காக அவர்களது இறக்குமதி வாடிக்கையாளர்களுக்கு முற்பணமெதனையும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் வழங்கக்கூடாது என அவர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**பணிப்பாளர்**

உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0010/05**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

2006 ஒத்தோபர் 18

**அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

## நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்

2004 ஒத்தோபர் 22ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண் 35/01/005/0010/01இன் அட்டவணை 'அ' இக்குறித்துரைக்கப்பட்ட ஊர்திகளுக்கு மேலதிகமாக, 2006 ஒத்தோபர் 18ஆம் நாளன்று வேலை முடிவடையும் நேரத்திலிருந்து, அட்டவணை 'அ<sup>1</sup>' இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் இறக்குமதிக்காக வர்த்தக வங்கிகள் நாணயக்கடிதங்களை, அத்தகைய நாணயக்கடிதங்கள் திறக்கப்படும் நேரத்தில் நாணயக்கடிதங்களை திறக்கின்ற வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள தொகை இறக்குமதிப் பெறுமதியில் ஆகக் குறைந்தது 50 சதவீத காசு அளவினை உள்ளடக்கியிருந்தாலொழிய திறக்கக்கூடாது.

ஏற்கனவேயுள்ள நாணயக்கடிதங்கள் அட்டவணை 'அ<sup>1</sup>'இல் குறிப்பிடப்பட்ட பொருள்களின் இறக்குமதியினை உள்ளடக்கியிருக்குமிடத்து, மேலேயுள்ள பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள நியதிகள் தவிர, அத்தகைய நாணயக்கடிதத்தின் பெறுமதியில் எவ்வித அதிகரிப்பினையும் வங்கிகள் அனுமதிக்கக்கூடாது.

இது சுற்றறிக்கையின் மூலம் விதிக்கப்பட்ட ஆகக் குறைந்த அளவுத் தேவைப்பாடுகளை வழங்குவதற்கு வாடிக்கையாளர்களை இயலச் செய்யும விதத்தில் வங்கிகள் அவற்றின் அத்தகைய இறக்குமதி வாடிக்கையாளர்களுக்கு முற்பணங்கள் எதனையும் வழங்கக்கூடாது. எனினும், அளவுத் தேவைப்பாட்டு வைப்புக்கள் மீது வட்டியை செலுத்தலாம்.

இச்சுற்றறிக்கையின் படி அளவுத் தேவைப்பாடுகள் பெறப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் தொடர்பான பொருள் கற்றல் பட்டியலை வங்கிகள் புறக்குறிப்பீடு செய்தல் வேண்டும்.

மறு அறிவித்தல் வரை இப்பணிப்புரைக்கு இணங்கி ஒழுகுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

ஒப்பம்

**பணிப்பாளர்/ உள்நாட்டுத்தொழிற்பாடுகள்**

இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையினது

அதிகாரம் பெற்ற கையொப்பக்காரர்

## அட்டவணை அ[1]

### 50 சதவீத வைப்பு அளவுத் தேவைப்பாட்டிற்கு உட்பட்டுள்ள பொருட்களின் பட்டியல்

| தொடர் இலக்கம் | விபரம் | இணங்குவிக்கப்பட்ட தலைப்புக்களின் உள்ளடக்கம் |
|---|---|---|
| 1. | தாவர எண்ணெய் | 1511.90.09 |
| 2. | சாக்கிலேட்டுக்கள் | 1806.31, 1806.32 மற்றும் 1806.90 |
| 3. | பாண், பேஸ்ரி, கேக் வகை, விசுக்கோத்து மற்றும் ஏனைய வெதுப்பகப் பொருட்கள் | 1905இன் கீழான அனைத்து இணங்குவிப்பு தலைப்புக்களும் |
| 4. | பியர் | 2203 |
| 5. | வைன், நறுமணமூட்டப்பட்ட குடிவகைகள் மற்றும் புளித்த காடி குடிவகைகள் | 2204, 2205 மற்றும் 2206இன் கீழான அனைத்து இணங்குவிப்பு தலைப்புக்களுமை |
| 6. | மதுசாரம், பழத்தேறல் வகை மற்றும் ஏனைய மதுசாரவகைக் குடிவகை | 2208இன் கீழான அனைத்து இணங்கு விப்புக்களும் |
| 7. | வாசனைப் பொருட்கள் மற்றும் குளியலறைத் திரவங்கள் | 3303 |
| 8. | அழகு சாதனங்கள் அல்லது ஒப்பனைத் தயாரிப்புக்கள் (உதட்டுச் சாயம், கண்ணுக்கு தீட்டும் பொருட்கள், கைவிரல் நகங்கள் மற்றும் கால் விரல் நகங்களுக்கான அழகு சாதனங்கள் போன்றவை) | 3304இன் கீழான அனைத்து இணங்கு விப்புக்களும் |
| 9. | தலைமுடிக்கு பயன்படுத்தும் தயாரிப்புக்கள் | 3305இன் கீழான அனைத்து இணங்கு விப்புக்களும் |
| 10. | முகச்சவரத்திற்கு முன்னான முகச்சவரம் செய்கின்ற பொழுது அல்லது முகச்சவரத்தின் பின் பயன்படும் பொருட்கள், உடல் சுத்தமாக்கிகள், வியர்வை துர்நாற்றத்தினை அகற்றும் பொருட்கள், நறுமணமூட்டப்பட்ட குளியல் உப்புக்கள், ஏனைய குளியல் பொருட்கள், அறைகளுக்கான வாசனைப் பொருட்கள் அல்லது சுத்தமாக்கல் பொருட்கள் | 3307.10, 3307.20, 3307.30, 3307.41 மற்றும் 3307.49 |
| 11. | சவர்க்காரம் மற்றும் உடல் மெருகூட்டல் உற்பத்திகள் | 3401இன் கீழான அனைத்து இணங்குவிப்புத் தலைப்புக்களும் |
| 12. | சாப்பாட்டு மேசைப் பொருட்கள், சமயலறைப் பொருட்கள், ஏனைய வீட்டுப்பொருட்கள், குளியலறைப் பொருட்கள் மற்றும் பிளாத்திக்குகள் | 3924.90.01 நீங்கலாக 3924இன் கீழான அனைத்து இணங்குவிப்புத் தலைப்புக்களும் (பாலூட்டும் போத்தல்களுக்கான சூப்பிகள்) |
| 13. | நெய்யப்பட்ட அல்லது பின்னப்பட்ட ஆடைப்பொருட்கள் | 6117.80.01, 6117.80.09 மற்றும் 6117.90 தவிர்ந்த அத்தியாயம் 61இன் கீழான அனைத்து இணங்குவிப்புக்களும் |
| 14. | நெய்யப்படாத அல்லது பின்னப்படாத ஆடைப்பொருட்கள் | 6217 தவிர்ந்த அத்தியாயம் 62இன் கீழான அனைத்து இணங்குவிப்பு தலைப்புக்களும் |
| 15. | காலணி | 6406 (பகுதிகள்) தவிர்ந்த அத்தியாயம் 64இன் கீழான அனைத்து இணங்குவிப்பு தலைப்புக்களும் |

| | | |
|---|---|---|
| 16. | செயற்கைப் பூக்கள் | 6702இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகளும் |
| 17. | சுவர் ஓடுகள், தரை ஓடுகள் மற்றும் அவற்றைப் போன்றனவும் | 6907 மற்றும் 6908இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகளும் |
| 18. | மண்பாண்டம், புரோசலின் அல்லது சீனாவிலிருந்தான உணவு மேசைப் பொருட்கள், சமயலறைப்பொருட்கள், ஏனைய வீட்டுப் பாவனைப்பொருட்கள் மற்றும் குளியலறைப் பொருட்கள் | 6911 மற்றும் 6912இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகளும் |
| 19. | சிறிய சிலைகள் வேறு அலங்கார மட்பாண்டப் பொருட்கள் | 6913இன் கீழான அனைத்து இணங்கு விப்பு குறியீடுகளும் |
| 20. | உணவு மேசை, சமயலறை, குளியலறை, அலுவலகம், உள்ளக அலங்காரம் அல்லது அதனை ஒத்த நோக்கங்களுக்கான கண்ணாடிப் பொருட்கள் | 70.3.99.01 (குழந்தைகளுக்கு பாலூட்டும் போத்தல்) தவிர்ந்த 7013இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகளும் |
| 21. | போலி ஆபரணங்கள் | 7117இன் கீழான அனைத்து இணங்கு விப்பு குறியீடுகளும் |
| 22. | துருப்பிடிக்காத உருக்கினாலான உணவு மேசைப்பொருட்கள், சமயலறைப் பொருட்கள், ஏனைய வீட்டுப்பாவனைப் பொருட்கள் | 7323.93 |
| 23. | பூட்டுக்களும் ஆமைப் பூட்டுக்களும் | 8301.10, 8301.20, 8301.30, 8301.40, மற்றும் 8301.50 |
| 24. | மின் விசிறிகள் | 8414.51, 8414.39, 8414.59.01 மற்றும் 8414.59.09 |
| 25. | குளிரூட்டிகள் | 8415இன் கீழான அனைத்து இணங்குவிப்பு குறியீடுகளும் |
| 26. | குளிர்சாதனப் பெட்டிகள், ஆழ்குளிரூட்டிகள் மற்றும் ஏனைய குளிர்சாதனப் பெட்டிகளினதும் ஆழ்குளிரூட்டினதும் துணைக்கருவிகள் | 8418.91.01, 8418.91.02, 8418.91.09, 8418.99.01, 8418.99.02 மற்றும் 8418.99.09 தவிர்ந்த 8418இன் கீழான அனைத்து இணங்குவிப்புக் களும் |
| 27. | உணவுத்தட்டுக்கள் கழுவும் பொறிகள் | 8422.11, 8422.19 |
| 28. | வீட்டுப்பாவனைக்கான மற்றும் சலவை நிலையத்திற்குரிய வகையிலான பொறிகள் | 8450.90 தவிர்ந்த 8450இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகளும் |
| 29. | மின் உந்து அதனுடன் இணைக்கப்பட்ட மின்னியல் எந்திரங்களிலான வீட்டுப்பாவனைப் பொருட்கள் (உ-ம்: காற்றுறிஞ்சி துப்புரவாக்கிகள், தரைமினுக்கிகள், உணவு அரைக்கும் பொறிகள், கலப்பு பொறிகள் கலக்குகின்ற பொறிகள் போன்றன) | 8509.90 (உதிரிப்பாகங்கள்/ தவிர்ந்த) 8509இன் கீழான அனைத்து இணங்கு விக்கப்பட்ட குறியீடுகள் |
| 30. | மின் உந்து அதனுடன் இணைக்கப்பட்ட முகச்சவரக்கருவிகள், முடிவெட்டும் கருவிகள் மற்றும் முடி அகற்றும் கருவிகள் | 8510.90 (உதிரிப்பாகங்கள்) நீங்கலாக 8510இன் கீழான அனைத்து இணங்குவிக்கப்பட்ட குறியீடுகள் |
| 31. | உடனடியாக அல்லது நீரைச் சேமித்து சூடாக்கும் பொறிகலன்கள் மற்றும் நீரில் அமிழ்த்தும் கொதிகலன்கள் | 8510 |
| 32. | தலைமுடி உலர்த்திகள் மற்றும் தலைமுடி அலங்கரிப்புக் கருவிகள் | 8516.31 மற்றும் 8516.32 |

| | | |
|---|---|---|
| 33. | மின் இசுத்திரிக்கைப் பெட்டிகள் | 8516.40 |
| 34. | மைக்ரோவ் வேவ் ஒவன்கள் | 8516.50 |
| 35. | ஏனைய ஒவன்கள் மற்றும் அடுப்புக்கள் | 8516.60 |
| 36. | கோப்பி மற்றும் தேனீர் தயாரிப்புப் பொறிகள் | 8516.71 |
| 37. | வாட்டும் பொறிகள் | 8516.72 |
| 38. | வீடியோ பதிவு செய்தல் அல்லது மீளத்தயாரிக்கும் கருவிகள், வீடியோ ஒலிச்சீராக்கிகள் | 8521இன் கீழான அனைத்து இணங்குவிப்பு தலையங்களின் கீழும் |
| 39. | தொலைக்காட்சிப் பெட்டிகள் | 8528.12, 8528.12.01, 8528.12.09, 8528.13, 8528.13.01 மற்றும் 8528.13.19 |
| 40. | அன்ரனாக்கள் | 8529.10.01, 8529.10.02 |
| 41. | ஒளிகாலும் மின்குமிழ்கள் மற்றும் வலுவைச் சிக்கனப்படுத்தும் ஒன்றிணைந்த நீண்ட மின் ஒளிகாலும் விளக்குகள் மற்றும் ஏனைய விளக்குகள் | 8539.22, 8539.31, 8539.31.01 மற்றும் 8539.31.09 |
| 42. | கை மணிக்கூடுகளும், மேசை மணிக்கூடுகளும் | 9101, 9102, 9103 மற்றும் 9105 |
| 43. | விளக்குகள் வெளிச்சப் பொருத்துக்கள் | 9405.10, 9405.20, 9405.30, 9405.40, 9405.40.01, 9405.40.02 மற்றும் 9405.40.09 |
| 44. | விளையாட்டுப் பொருட்கள் | 9509, 9502 மற்றும் 9503இன் கீழ் அனைத்து இணங்குவிப்புக்களின் தலைப்புக்களின் கீழும். |

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/11**

உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

2006 திசெம்பர் 26

**அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்**

## நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி

மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் வர்த்தக வங்கிகள் அவற்றின் அவசர திரவப் பிரச்சனைகளை கட்டுப்படுத்துவதற்காக வழங்கப்படுவதுடன், இறுதியாக அவ்வசதியை நாடும் விதத்திலேயே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. எனினும், குறிப்பிட்ட சில வங்கிகள் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை கிரமமான நிதியிடல் மூலமாகப் பயன்படுத்தி வருகின்றன. மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியிலிருந்து கிரமமாகக் கடன்படுவதன் காரணமாக ஏற்படும் மோசமான தாக்கத்தினை மத்திய வங்கி கடந்த ஆறு மாதங்களாக வங்கிகளுக்கு தனிப்பட்ட ரீதியிலும் கூட்டாகவும் விளக்கியிருப்பதுடன் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் மீது கிரமமான முறையில் தங்கியிராமல் மாற்று நிதியிடல் மூலங்களை ஒழுங்கு செய்து கொள்ளுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

வர்த்தக வங்கித்தொழில் முறையில் மிகையான திரவத்தன்மை காணப்படும் வேளையில், ஏதாவதொரு வர்த்தக வங்கி பற்றாக்குறையான திரவத் தன்மையினைக் கொண்டிருக்குமிடத்து அத்தகைய பற்றாக் குறையினை வங்கி முறையிலுள்ள திரண்ட மிகையின் மூலம் ஈடுசெய்து கொள்ள முடியுமாகையால் மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியை நாடவேண்டிய அவசியம் ஏற்படாது.

எனவே, 2007 சனவரி 1ஆம் நாள் தொடக்கம் மத்திய வங்கியின் மதிப்பீடுகளின் படி வர்த்தக வங்கித்தொழில் முறையில் மிகையான திரவத்தன்மை காணப்படும் நாட்களில் மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி கிடைக்காது. அத்தகைய பின்னணியில் நேர்மாற்று மீள்கொள்வனவு கிடைக்காதிருக்கின்ற நாட்கள் உடனடி பணச்சந்தை தகவல்முறை/ இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டுமுறை என்பனவற்றினூடாக அந்நாளன்று மு.ப. 0930 மணியளவில் அறிவிக்கப்படும்.

ஒப்பம்

**பதில் பணிப்பாளர்**

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்

**தொடர்பு எண்: 06/07/01/2006**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு-1

2006 பெப்புருவரி 01

*அதிகாரம் பெற்ற வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா,

**சரக்குகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மற்றும் உள்நாட்டு வான் வழிக்கட்டணம்/ உள்நாட்டு தரையிறங்கும் கட்டணங்கள்/ பொருள் கப்பலேற்றுபவர்களின் பற்றுச் சீட்டுக்களை வழங்குதல்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 1991.07.12ஆம் நாளிடப்பட்ட எண் ஈசி/48/91 (ஜி) மற்றும் 1997.03.04ஆம் நாளிடப்பட்ட ஈசி/04/97 (ஜி) கொண்ட எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக 25.08.2005 முன்னர் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் கொடுக்கப்பட்டுள்ள சரக்கு அனுப்புவோரின் பட்டியலில் 25.08.2005 இலிருந்து இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் சரக்கு அனுப்புவோரை/ அவர்களது உள்நாட்டு வான் வழிக்கட்டணங்களை உள்நாட்டு வான் தரையிறங்கும் கட்டணங்களை/ பெற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக உள்ளடக்கும் படியும் ஏற்றுமதிச் சரக்குகள் தொடர்பில் கொடுக்கல் வாங்கல்களுக்காக கப்பற் சரக்கு பற்றுச்சீட்டுக்களை ஏற்றுக்கொள்ளும் படியும் அதிகாரம் பெற்ற வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**கப்பற் சரக்கு அனுப்புவோரின் பெயர்கள்**

| | |
|---|---|
| 01. சீ றேட் சேர்விஸ்சஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0132 |
| 02. பி அன்ட் ஓ நெட்லொயிட் கீல்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0133 |
| 03. சிஎல் சிநேர்ஜி (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0134 |
| 04. ஆர்.பி.சி. லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0135 |
| 05. வோட்ரவேஸ் ஸிப்பிங் கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0136 |
| 06. மிராக்கிழ் பிறேயிட் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0137 |
| 07. மறிட்ராயிம் லொஜிஸ்ரிக்ஸ் கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0138 |
| 08. கேஸ் லொஜிஸ்ரிக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0139 |
| 09. மெகா ரிறன்ட் இன்ரநஷனல் கம்பனி லிமிடெட் | 06/07/009/0140 |
| 10. குளோபல் ஸிப்பங் அன்ட் றேடிங் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0141 |
| 11. மல்ரிமொடல் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0142 |
| 12. மக்கினோன்ஸ், மக்கன்சி அன்ட் கம்பனி (ஸிப்பிங்) லிமிடெட் | 06/07/009/0143 |
| 13. ஓசன் எயார் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0144 |
| 14. பிறேயிட் லயின் இன்ரநஷனல் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0145 |
| 15. மரிட்ராயிம் ஸிப்பிங் அன்ட் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0146 |
| 16. சென்சரி மரிட்ராயிம் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0147 |
| 17. ரான்ஸ்கார்கோ (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0148 |

| | |
|---|---|
| 18. மெற்றோ இன்ரநஷனல் ஏசியா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0149 |
| 19. புறூடன்ஜெல் ஸிப்பிங் லயின்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0150 |
| 20. கிறீன் ஈஸ்ட் மரிட்ராயிம் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0151 |
| 21. மாஸ்ர கொன்ரேயினர் லயின்ஸ் கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0152 |
| 22. விங்க்ஸ் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0153 |
| 23. மெயின்பிறேயிட் கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0154 |
| 24. பாஸ்ட் ரான்ஸிட் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0155 |
| 25. சி அன்ட் எயார் கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0156 |
| 26. நியோன் மரிட்ராயிம் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0157 |
| 27. நிப்போன் மறுஸி லங்கா ஸிப்பிங் லயின்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0158 |
| 28. நியு ஏசியா லயின்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0159 |
| 29. பராமவுண்ட் ஸிப்பிங் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0160 |
| 30. மவுண்ட் ஸிப்பிங் ஏஜன்சீஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0161 |
| 31. அம்கொ லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0162 |
| 32. நெற்வேர்க் கார்கோ சேர்விசஸ் (சிலோன்ட) (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0163 |
| 33. மறிட்ராயிம் ஏஜன்சீஸ் லிமிடெட் | 06/07/009/0164 |
| 34. எம்பசி லொஜிஸ்ரிக்ஸ் கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0165 |
| 35. எம்.ஏ. றசாக் பிறேயிட் வோர்வாடிங் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0166 |
| 36. சி ஸிப்பிங் கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0167 |
| 37. கேசியா ஸிப்பிங் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0168 |
| 38. எமரல்ட் ஸிப்பிங் லயின் கம்பனி (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0169 |
| 39. சினப் லங்கா ஏஜன்சீஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0170 |
| 40. கிளார்க் செபன்ஸ் அன்ட் கம்பனி லிமிடெட் | 06/07/009/0171 |
| 41. யுனைடட் ஸிப்பிங் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0172 |
| 42. சி எயார் அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0173 |
| 43. சவுத்போர்ட் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0174 |
| 44. கப் லயின் ஏஜன்சீஸ் (லங்கா) லிமிடெட் | 06/07/009/0175 |
| 45. டயமன்ட் ஸிப்பிங் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0176 |
| 46. எஸ்.டபிள்யு.எல். லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0177 |
| 47. கல்ப் இன்ரநஷனல் மறிட்ராயிம் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0178 |
| 48. ஓசன்ஸ் ஸிப்பிங் கொன்ரேயினர் லயின் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0179 |
| 49. ஸிப்பிங் ஏஜன்சி சேர்விசஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0180 |
| 50. இன்டியா லங்கா எக்ஸ்பிறஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0181 |
| 51. எம்பயர் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0182 |

உங்கள் உண்மையுள்ள

**பதில் செலாவணிக் கட்டுப்பாளர்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண்: 06/07/02/2006**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

த.பெ. 590

கொழும்பு-1

2006 யூன் 19

*அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும்*

**வெளிநாட்டுச் செலாவணியினை விற்றலும் கொள்வனவு செய்தலும்**
**படிவம் 1 மற்றும் படிவம் 2 இனை சமர்ப்பித்தல்**

1998 திசெம்பர் 24ஆம் நாளிடப்பட்ட தொடர்பு எண்: ஈசி/07/98 இனைக் கொண்ட எனத் தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் பால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. சில அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் படிவம் 1 மற்றும் படிவம் 2இனை கிரமமான அடிப்படையில் அனுப்பி வைப்பதில்லை என்பதனையும் பூரணப்படுத்தப்படாத படிவங்களை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் கையொப்பம் மற்றும் பதவி மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் முத்திரை இல்லாமல் கூட சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதனையும் நாம் அவதானித்திருக்கிறோம். ஆகவே அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் படிவம் 1 மற்றும் படிவம் 2இனைச் சமர்ப்பிப்பது தொடர்பான மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு கடுமையாக இணங்கி ஒழுகுமாறும் படிவங்களில் தெரிவிக்கப்படுகின்ற தகவல்கள் பூரணமாக இருக்கவேண்டும் என்பதும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் இத்தால் நினைவூட்டப்படுகிறது.

படிவம் 1 மற்றும் படிவம் 2இனை இத்திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு புறம்பாக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், **கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியினைக் கருத்திற் கொள்ளாது அனைத்து வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் (படிவம் 1) மற்றும் கொள்வனவுகள் (படிவம் 2) என்பன தொடர்பான தகவல்களை** அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் தலைமை அலுவலகத்தினை இணைக்கின்ற பரந்த வலையமைப்பினைப் பயன்படுத்தி இத்திணைக்களத்திற்கு உடனடி கணனி இலத்திரனியல் முறையில் அனுப்பி வைக்கப்படவேண்டும் என அறிவிக்கப்படுகின்றார்கள். இது தொடர்பாக, அவசியமான மென்பொருட்கள் அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் ஏற்கனவே கிடைக்கச் செய்யப்பட்டிருப்பதுடன் தகவல்களை விரைவாக அனுப்பி வைப்பதற்காக அனைத்துக் கிளைகளிலும் இவ்வசதியினை நிறுவுவதற்கு அவர்கள் ஒழுங்குகளை மேற்கொள்ளல் வேண்டும். தரவுகளை மின்னஞ்சல் மூலம் அனுப்புவதாயின் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் எமது மின்னஞ்சல் முகவரியான form12@cbsl.lk இனைப் பயன்படுத்த முடியும்.

ஏதும் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டுமாயின், நீங்கள் மூத்த உதவி செலாவணிக் கட்டுப்பாட்டாளர் திரு.எச்.ஈ. தயாரத்னவை 2477658 என்ற இலக்கத்தில் அல்லது உதவி செலாவணிக் கட்டுப்பாட்டாளர் திரு.சி.பீ.பி. பர்னாந்துவை 2477243 என்ற இலக்கத்திலும் தொடர்பு கொள்ளலாம்.

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

படி: ஆளுநர்

ப.ஆ. (இடபிள்யு)

ப.ஆ. (ஜே)

து. ஆ. (சி)

பொ.ஆ.ப.

வ.மே.ப.

ப.தொ.ப

மு.க.

**தொடர்பு எண்: 06/07/03/2006**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு-1

2006 யூலை 19

*அதிகாரம் பெற்ற வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா,

**சரக்குகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல் மற்றும் உள்நாட்டு வான் வழிக்கட்டணம்/ உள்நாட்டு தரையிறங்கும் கட்டணங்கள்/ பொருள் கப்பலேற்றுபவர்களின் பற்றுச் சீட்டுக்களை வழங்குதல்**

01.02.2006 இலிருந்து இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்துள்ள பின்வரும் சரக்கு அனுப்புவோரை அவர்களது உள்நாட்டு வான் வழிக்கட்டணங்கள்/ உள்நாட்டு வான் தரையிறங்கும் கட்டணங்களை ஏற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக சரக்கு அனுப்புவோரின் பட்டியலில் உள்ளடக்குமாறும் ஏற்றுமதிச்சரக்குகள் தொடர்பில் கொடுக்கல் வாங்கல்களுக்காக கப்பற்சரக்கு பற்றுச் சீட்டுக்களை ஏற்றுக் கொள்ளும்படியும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**கப்பற் சரக்கு அனுப்புவோரின் பெயர்கள்**

| | |
|---|---|
| 01. எயார் சி அன்ட் கார்கோ மறிட்ராயிம் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0183 |
| 02. ஏடிசி லொஜிஸ்ரிக்ஸ் கொழும்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0184 |
| 03. கிறீன்வே லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0185 |
| 04. குவாங் செங் ரான்ஸ்போர்ட் சேர்விசஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0186 |
| 05. சற்றேன் ஸிப் ஏஜன்சீஸ் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0187 |
| 06. ஓஷன் எச்டி துறு ரான்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0188 |
| 07. ஹெக் லொஜிஸ்ரிக்ஸ் லிமிடெட் | 06/07/009/0189 |
| 08. குளோபல் எக்ஸ்பிறஸ் பிறேயிட் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0190 |
| 09. சிஎம்ஏ சிஜிஎம் லொஜிஸ்ரிக்ஸ் லங்கா லிமிடெட் | 06/07/009/0191 |
| 10. டெல்மன் ஸிப்பிங் அன்ட் லொஜிஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0192 |
| 11. ஐஜசி கொன்ரேயினர் லயின் கழம்பு (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0193 |
| 12. ரோரல் லொஜிஸ்ரிக்ஸ் சொலுஜன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0194 |
| 13. ரிறயிக்கோ கஸ்ரம்ஸ் புறோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 06/07/009/0195 |

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு: 06/07/04/2006**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 1.
2006 ஓகத்து 1

*அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா,

**பயன்படுத்தப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழ்**

1. 1969ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச்சட்டம் மற்றும் 21.07.2006ஆம் நாளின் அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1454/20இல் வெளியிடப்பட்ட (பிரதி இணைக்கப்பட்டுள்ளது) நியதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின்படி, இணங்குவிப்பு குறியீடுகள் 87.02, 87.03, 87.04 மற்றும் 87.05இன் கீழ் பயன்படுத்தப்பட்ட உந்து ஊர்திகளை இலங்கைக்குள் இறக்குமதி செய்வது 2006 ஓகத்து 1ஆம் நாளிலிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரம் பெற்ற பரிசோதனையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு உட்பட்டதாக இருக்கும்.

| | |
|---|---|
| (i) யப்பான் ஆட்டோ அப்பிறைசல் நிறுவனம் | யப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உந்து ஊர்திகளுக்காக |
| (ii) பீறூ வெரித்தாஸ் | மற்றைய அனைத்து நாளுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட உந்து ஊர்திகளுக்காக |
| (iii) நிதியமைச்சின் செயலாளரினால் ஏற்றுக் கொள்ளத்தக்க பரிசோதனை அதிகாரசபை | பீறூ வெரித்தாஸ் இல்லாத நாடுகள் அல்லது வேறு ஏதாவது காரணங்களுக்காக |

2. ஆகவே, மேலே குறிப்பிடப்பட்ட இணங்குவிப்பு குறியீட்டின் கீழ், உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக நாணயக்கடிதத்தினை நிறுவும் பொழுது ஆவணக் கொடுகடன் விண்ணப்பத்தில் தேவைப்படுகின்ற ஆவணங்களில் ஒன்றாக ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழினை குறிப்பிடுமாறு கீழேயுள்ளவாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

☐ **ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழ் யாரிடமிருந்து பெறப்பட்டது:**

☐ **யப்பான் ஆட்டோ அப்பிறைசல் நிறுவனம்**

☐ **பீறு வெரித்தாஸ்**

☐ **நிதியமைச்சின் செயலாளரினால் ஏற்றுக் கொள்ளத்தக்க பரிசோதனை அதிகாரசபை**

3. மேலே குறிப்பிடப்பட்ட இணங்குவிப்பு குறியீடுகளின் கீழ் உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக நாணயக்கடிதங்களை நிறுவுகின்ற நேரத்தில் பின்வருவனவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(i) இறக்குமதியாளர்கள் குறிப்பாக ஊர்தியினைத் தயாரித்த நாடு, மாதிரி, பயன்பாட்டுக்காலம் மற்றும் அதன் அடிச்சட்ட இலக்கம் என்பனவற்றை குறிப்பிடுதல் வேண்டும்.

(ii) கப்பற்படுத்தல் ஆவணங்கள், நாணயக்கடிதத்திலுள்ள திகதியை அல்லது அதற்கு ஏதாவது திருத்தங்கள் செய்யப்பட்டிருக்குமாயின் அதன் பின்னரானதொரு திகதியை கொண்டிருத்தல் வேண்டும்.

4. உந்து ஊர்திகள் 2006 ஓகத்து 1ஆம் நாளன்று கப்பற்படுத்தல் படாதிருக்குமிடத்து நாணயக்கடிதங்கள் மேலேயுள்ள 2 மற்றும் 3இன் படி திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றன என்பதனை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**செலவாணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு: 06/07/05/2006**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 883
கொழும்பு 1.
2006 ஓகத்து 8

*அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா,

**பயன்படுத்தப்பட்ட உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கான ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழ்**

2006 ஓகத்து 01ஆம் நாளிடப்பட்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் எண் 06/07/04/2006 தொடர்பானது.

சொல்லப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இணங்குவிப்பு குறியீடுகள் 87.02, 87.03, 87.04 மற்றும் 87.05 என்பனவற்றின் கீழ் 2006 ஓகத்து 1ஆம் நாள் அன்று அல்லது அதற்குப் பின்னர் கப்பற்படுத்தப்பட்டிருக்கும் பயன்படுத்தப்பட்ட உந்து ஊர்திகளுக்கு செல்லுபடியாகும் என்பது தங்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு: 06/07/06/2006**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 1.
2006 ஓகத்து 11

*அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா,

**பயன்படுத்தப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான ஏற்றுமதிப் பரிசோதனைச் சான்றிதழ்**

மேலேயுள்ள விடயம் பற்றிய 2006 ஓகத்து 1ஆம் நாளிடப்பட்ட எண் 06/07/04/2006 மற்றும் 2006 ஓகத்து 8ஆம் நாளிடப்பட்ட எண் 06/07/05/2006 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தொடர்பானது.

2006 ஓகத்து 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வர இருந்த 2006 யூலை 21 ஆம் நாளிடப்பட்ட எண் 1454/30 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள் 2006.12.31 வரை பிற்போடப்பட்டுள்ளது என இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் எமக்கு அறிவித்திருக்கின்றார். இதன்படி, பயன்படுத்தப்பட்ட ஊர்திகளுக்கான ஏற்றுமதி பரீட்சிப்புச் சான்றிதழ் தேவைப்பாடு இப்பொழுது 2006.12.31 வரை பிற்போடப்பட்டுள்ளது.

மேலேயுள்ள சூழ்நிலையின் காரணமாக, மேலே குறிப்பிடப்பட்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் விதிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை மறுஅறிவித்தல் வரை நிறுத்தி வைத்துக் கொள்ளவும்

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை**

**அதி விசேஷமானது**

**இல.1469/25 புதன் கிழமை, நவெம்பர் 01, 2006**

**பகுதி I: தொகுதி (I) - பொது**

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

இலங்கை மத்திய வங்கி

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7, 10, 11 மற்றும் 15ஆம் பிரிவுகள் தொடர்பிலான அனுமதி**

1. **அனுமதி**:- இலங்கை செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் தொடர்பில் ஏற்புடையதாயிருக்கின்ற 7ஆம், 10ஆம், 11ஆம் மற்றும் 15ஆம் பிரிவுகளின் நோக்கங்களின் பொருட்டு, இதனகத்துப்பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய இலங்கை பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நிதியங்கள், பிரதேச நிதியங்கள் அல்லது ஒத்துழைப்பு நிதியங்களுக்கும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களுக்கும் அத்துடன் வெளிநாட்டுப் பிரசைகளுக்கும் இலங்கை ரூபாவினால் குறித்துரைக்கப்பட்டுள்ள திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்தல், உரிமை மாற்றம் செய்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் சார்பில் கொடுப்பனவு செய்யும் பொருட்டு இத்தால் அனுமதியளிக்கப்படுகின்றது.

2. **நிபந்தனைகள்**:- (அ) மேற்படி வெளிநாட்டு முதலீட்டாளர்களால் தற்போது நடைமுறையிலுள்ள அரச கடன் முறையைப் பயன்படுத்தி முதனிலைச் சந்தை மற்றும் இரண்டாம்தரச் சந்தைகளிலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற திறைசேரி முறிகள், கொள்வனவு செய்யப்படுகின்ற தினத்திலிருந்து முதிர்ச்சியடைவதற்கு ஆகக் குறைந்தது இரண்டு வருட காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். வெளிநாட்டு முதலீட்டாளரால் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி முறிகளை, அத்தகைய முறிகள் கொள்வனவு செய்யப்பட்ட தினத்திலிருந்து ஆகக் குறைந்தது ஒரு வருட காலம் வைத்திருக்கப்பட்டதன் பின்னரே இலங்கையில் வதிபவர் ஒருவருக்கு விற்பனை செய்வதற்கு அல்லது உரிமை மாற்றம் செய்வதற்கு முடியுமாயிருக்கும். எவ்வாறாயினும் அத்தகைய திறைசேரி முறிகளை ஏனைய தகுதி வாய்ந்த வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவருக்கு விற்பனை செய்கின்றபோது அல்லது உரிமை மாற்றம் செய்கின்றபோது மேற்படி வைத்திருக்கும் காலகட்டம் ஏற்புடையதாகாது.

(ஆ) இதன் கீழ் அனுமதியளிக்கப்பட்டுள்ள, இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற திறைசேரி முறிகள் தொடர்பிலான ஏதேனும் வெளியிடுதல் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவானது, வெளிநாட்டு முதலீட்டாளரின் பெயரில் இலங்கையின் வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்படுகின்ற "திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிவாரி ரூபாய்க் கணக்கு" அல்லது அக்கணக்கிலிருந்து மாத்தரமே நடைபெறுதல் வேண்டும்.

(இ) இதன் கீழ் அனுமதியளிக்கப்படுகின்ற ஏதேனுமொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான முறிகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற மூலதனத்தொகையை மற்றும் முறிகள் தொடர்பிலான வட்டித் தொகையைச் செலுத்துதல் தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கி அல்லது உரிமம் பெற்ற முதனிலை வணிகர் அல்லது தரகர் அல்லது வேறு ஆள் எவரும் மேற்படி துணைப்பந்தி (ஆ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிவாரி ரூபாய்க் கணக்குக்கு (திமுவெரூக) அல்லது அக்கணக்கலிருந்து மாத்திரமே கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும்.

(ஈ) கணக்கு உரிமையாளரால் செய்யப்படவேண்டியுள்ள உள்நாட்டுக் கொடுப்பனவுகள் ஏதேனும் இருப்பின், அக்கொடுப்பனவுகளைச் செய்ததன் பின்னர் திமுவெரூக கணக்கிலுள்ள நிதியங்களைக் தடையின்ற அனுப்பீடு செய்யலாம்.

**வரைவிலக்கணம்** - மேற்படி பொது அனுமதியின் நோக்கத்தின் பொருட்டு -

"வெளிநாட்டு முதலீட்டாளர்" என்பது பின்வரும்

(அ) இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தன ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நிதியங்கள், பிரதேச நிதியங்கள் அல்லது ஒத்துழைப்பு நிதியங்கள்

(ஆ) இலங்கைக்கு வெளியெ கூட்டிணைக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனங்கள் மற்றும்

(இ) வெளிநாட்டுப் பிரசைகள்

**டீ.வசந்த.**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

கொழும்பு,

2006 நவெம்பர் 01

**தொடர்பு: 06/04/07/2006**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 1.
2006 நவெம்பர் 01

*அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா,

**வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் செய்யப்படும் முதலீடு**

1. இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாடுகளின் நிதிகள், பிராந்திய நிதிகள் அல்லது இருவாயினொத்த நிதியங்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச்சபைகள், மற்றும் வெளிநாடுகளின் பிரசைகள் ஆகியோர் ரூபா நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளை குறிப்பிட்ட எந்த ஒரு நேரத்திலும் வெளிநிற்கும் திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 5% இனை விஞ்சாத விதத்தில் கொள்வனவு செய்யவும் வைத்திருக்கவும் அனுமதிப்பதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. ஆகவே, வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கொண்ட மேலேயுள்ள வகையினர், கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து குறைந்தது இரண்டாண்டு முதிர்ச்சிக் காலத்துடன் தற்போதுள்ள பொதுப்படுகடன் கணனி முறையினைப் பயன்படுத்தி முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைகளூடாக திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யவும், வைத்திருக்கவும் மாற்றல் செய்யவும் அனுமதிக்கப்பட்டனர்.

2. இத் தீர்மானத்திற்கு வலுவளிக்கும் பொருட்டு 01.11.06ஆம் நாளிடப்பட்ட எண் 1469/25 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றில் என்னால் பொது அனுமதியொன்று வழங்கப்பட்டிருக்கிறது. (தயவு செய்து இணைப்பு 1இனைப் பார்க்கவும்).

3. இதன்படி, திறைசேரி முறிகளில் அவர்களது முதலீடுகளை வசதிப்படுத்தும் நோக்கத்திற்காக பின்வரும் வழிகாட்டல்களுக்கு உட்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பின்வரும் வகைகளின் பெயர்களில் திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளை திறக்கவும் தொழிற்படுத்தவும் இத்தால் அனுமதியளிக்கப்படுகிறது.

(அ) இலங்கை பிணையங்கள் பரிவர்த்தன ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாடுகளினது நிதியங்கள், பிராந்திய நிதியம் அல்லது இருவாயினொத்த நிதிங்கள்

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச்சபைகள் அத்துடன்

(இ) வெளிநாட்டு பிரசைகள்

I) கணக்குகளுக்கான வரவுகளும் பற்றுக்களும் பின்வருவனவற்றிற்கு கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

**வரவுகள்:**

i) வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உள்வரும் பணவனுப்பல்கள் அத்துடன்/ அல்லது பங்குகளில் முதலீடு செய்வதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் திறக்கப்பட்ட பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளிலிருந்தான மாற்றல்கள்.

ii) முதிர்ச்சி நாளன்று பெறப்பட்ட திறைசேரி முறிகளின் விற்பனைப் பெறுகைகளும் முதல் தொகையும்.

iii) கணக்கு வைத்திருப்பவர் வசமுள்ள திறைசேரி முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவு.

**பற்றுக்கள்**

i) திறைசேரி முறிகளில் முதலீடு செய்வதற்கான கொடுப்பனவுகள்.

ii) வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளுக்கான மாற்றல்கள்.

iii) முதனிலை வணிகர்கள் மற்றும் வங்கிக் கட்டணங்களுக்கான கொடுப்பனவுகள்.

iv) வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உள்ளூர் செலவினங்கள்.

v) திறைசேரி முறிகளின் விற்பனைப் பெறுகைகளை வெளிநாட்டிற்கு அனுப்புதல்.

vi) திறைசேரி முறிகளின் மீது ஈட்டப்பட்ட வட்டியினை வெளிநாட்டிற்கு அனுப்புதல்.

II) **அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

i) பற்றுக்கள் மற்றும் வரவுகளின் விபரங்களை எடுத்துக் காட்டுகின்ற ஒவ்வொரு மாதத்திற்குமான திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கின் கூற்றுக்களை செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு (சி மற்றும் எவ் கிளை) அடுத்து வரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ii) நாளொன்றின் முடிவில் ஒவ்வொரு திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளுக்கும் செய்யப்பட்ட வரவுகள் மற்றும் பற்றுக்களின் விபரங்களை/ பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளூடாக பங்குகளில் செய்யப்பட்ட முதலீடுகளை அறிவிப்பதற்காக ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள உடனடிக் கணனி முறையினைப் பயன்படுத்தி உடனடி கணனி முறையூடாக சமர்ப்பிக்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

படி: ஆளுநர்

ப.ஆ. (இடபிள்யூ)

ப.ஆ. (ஜே)

உ.ஆ. (சி)

## வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் செய்யப்படும் முதலீடுகள் தொடர்பாக 2006.11.01ஆம் நாளிடப்பட்ட எண் 06/04/07/2006 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான வழிகாட்டல்கள்

(அ) திறைசேரி முறிகளில் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டாளர்கள்

(அ) இலங்கை பிணையங்கள் பரிவர்த்தன ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாடுகளினது நிதியங்கள், பிராந்திய நிதியம் அல்லது இருவாயினொத்த நிதியங்கள்

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச்சபைகள் அத்துடன்

(இ) வெளிநாட்டு பிரசைகள்.

(ஆ) திறைசேரி முறிகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட கணக்கு

மேலேயுள்ள வெளிநாட்டு முதலீட்டாளர் வகையினரின் பெயரில் எந்த ஒரு வர்த்தக வங்கியிலும் திறக்கப்பட்ட "திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு" என்ற சிறப்பு ரூபாக் கணக்கிலிருந்து அல்லது கணக்கிற்கு மட்டுமே திறைசேரி முறிகளுக்கான முதலீடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

(இ) திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களை உடனடி கணனி முறையில் அறிக்கையிடல்

i) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கினை ஏற்கனவே வைத்திருக்கின்றார்கள்.

பங்குகளின் முதலீட்டினை அறிக்கையிடுவதற்கான தற்போதைய உடனடி கணனி முறையில் "புதிய கணக்குகளை கூட்டுதல்" என்ற கோவையை செயற்படுத்தி அதன் பின் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கினை கூட்டுவதன் வாயிலாக கணக்கு இலக்கத்தினை பதிவு செய்வதன் மூலம் திறைசேரி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கொன்றினைத் திறக்கவும். இரண்டு கணக்குகளும் கணக்கு வைத்திருப்பவரின் பெயரை ஒரே மாதிரியாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

ii) பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு இல்லாத வெளிநாட்டு முதலீட்டாளர்

பங்குகளின் முதலீட்டினை அறிக்கையிடுவதற்கான தற்போதைய உடனடிக் கணனி முறையினைப் பயன்படுத்தி திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கினை உட்புகுத்துவதன் மூலம் புதிய கணக்கு இலக்கத்தினை பதிவதன் மூலம் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு என்ற பெயரைக் கொண்ட கணக்கு திறக்கப்படுகிறது.

(ஈ) திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிற்கான வரவுகளும் பற்றுக்களும்

திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிற்கான வரவுகளும் பற்றுக்களும் கட்டாயமாக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையவே மேற்கொள்ளப்பட வேண்டும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், பங்கு முதலீடுகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளிலேயே பதியப்பட வேண்டும்.

**தொடர்பு: 06/04/08/2006**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு 1.
2006 நவெம்பர் 16

*அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

## தொழில்சார் நிபுணத்துவப் பணிகளை வழங்குபவர்களுக்கான வெளிநாட்டு நாணயக்கணக்கு

இலங்கைக்கு வெளியே வதிகின்றவர்களுக்கும் அத்துடன் அல்லது வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டுகின்ற உள்நாட்டு நிறுவனங்கள் அல்லது கம்பனிகளுக்கும் பணிகளை வழங்குகின்ற இலங்கையில் வதியும் தனிப்பட்டவர்கள், நிறுவனங்கள் அல்லது கம்பனிகளுக்காக "தொழிசார் நிபுணத்துவ பணிகளை வழங்குவர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு" என்ற தலைப்பில் செலாவணிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தினை தொடர்பு கொள்ளாமல் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்கொன்றினைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை பற்றி அவர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. **கணக்குகளைத் திறத்தல்**

(அ) இத்திட்டத்தின் கீழான கணக்குகள் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் மட்டுமே திறக்கப்பட வேண்டும். அத்துடன் நடைமுறைக்கணக்கு, ரூபாக்கணக்கு அல்லது நிலையான வைப்புக்கணக்கு ஆகிய வடிவங்களில் இருத்தல் வேண்டும்.

(ஆ) தனிப்பட்டவர்கள்/ நிறுவனம்/ கம்பனியானது ஏற்கனவே தொழிசார் நிபுணத்துவ பணிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது என்பதனையும் அத்தகைய பணிகளுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மட்டுமே கணக்கில் வரவு வைக்கப்படுமென்பதனையும் உறுதிப்படுத்தும் விதத்தில் தனிப்பட்டவர்கள், அனைத்துப் பங்காளர்கள் மற்றும் பணிப்பாளர் தனிப்பட்டவர்கள், அனைத்து பங்காளர்கள் மற்றும் பணிப்பாளர் சபையிடமிருந்து உறுதிமொழியொன்றினைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

3. **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

இக்கணக்குகளுக்கான வரவுகள் பின்வருவனவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(அ) இலங்கைக்கு வெளியே வதிகின்றவர்களுக்கு தொழில்சார் நிபுணத்துவப் பணிகளை வழங்கியமைக்காக அதிகாரமளிக்கப்பட்ட பணிகளூடாக மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட உள்வரும் பணவனுப்பல்கள்.

(ஆ) வெளிநாட்டு நாணயத்தில் வருமானத்தினை ஈட்டுகின்ற நிறுவனங்கள்/ கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட தொழில்சார் நிபுணத்துவ பணிகளுக்காக வங்கி வரைவுகள் அல்லது வங்கி மாற்றல்கள் வடிவில் வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட கொடுப்பனவுகள்.

4. **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

கணக்குகளுக்கான பற்றுக்கள் பின்வருவனவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(அ) தனிப்பட்டவர்கள் நிறுவனங்கள்/ கம்பனிகளின் நடைமுறைக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களின் பேரில் இலங்கைக்கு வெளியே வதிவோருக்கான வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவு

(ஆ) இலங்கை ரூபாவிலான பகிர்ந்தளிப்புக்கள் கட்டுப்பாடின்றி அனுமதிக்கப்படும். எனினும், இலங்கை ரூபாவிலான அத்தகைய மீளப்பெறல்கள் வெளிநாட்டு நாணயத்தில் மாற்றப்படுவதற்கும் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கும் உரித்துடையனவாக இருக்கமாட்டா.

(இ) வழங்கப்பட்ட தொழில்சார் நிபுணத்துவ பணிகளின் பேரில் இன்னொரு தொழில்சார் நிபுணத்துவ பணிகளை வழங்குவோருக்கான வெளிநாட்டு நாணயக்கணக்கிற்கான கொடுப்பனவு

5. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இத்திட்டத்தின் கீழ் திறக்கப்பட்ட நடைமுறைக் கணக்குகள் மேலதிக பற்றுக்களை கொண்டிருக்கக்கூடாது.

6. **அறிக்கையிடும் தேவைப்பாடு**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒவ்வொரு தொழில்சார் நிபுணத்துவ பணிகள் வழங்குவோருக்கான வெளிநாட்டு நாணயக்கணக்கினதும் மாச்சு, யூன், செத்தெம்பர் மற்றும் திசெம்பரில் முடிவடைகின்ற காலாண்டுக் கூற்றுக்கள் தொடர்ந்து வரும் காலாண்டில் 15 நாட்களுக்கிடையில் செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 'டி' கிளைக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் நோக்கத்திற்காக "தொழில்சார் நிபுணத்துவப் பணிகள்" இன் பட்டியலொன்று **இணைப்பில்** தரப்பட்டுள்ளது.

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இணைப்பு**

**எண் 06/04/08/2006 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நோக்கத்திற்கான தொழில்சார் நிபுணத்துவ பணிகள்**

1. சட்டப்பணிகள்
2. கணக்கீடு, கணக்காய்வு மற்றும் கணக்குப் பதிவுப் பணிகள்
3. வரிவிதிப்புப் பணிகள்
4. கட்டிடக்கலைப் பணிகள்
5. பொறியியற் பணிகள்
6. மருத்துவ, பல் தொடர்பான பணிகள்
7. மிருக வைத்தியப் பணிகள்
8. இயன் மருத்துவர் மற்றும் துணை மருத்துவ ஆளணியினரால் வழங்கப்படும் பணிகள்
9. மென்பொருள் அபிவிருத்திப் பணிகள்
10. தரவு செய்முறைப்படுத்தல் பணிகள்
11. தரவுத்தள அபிவிருத்திப் பணிகள்
12. இயற்கை அறிவியல், சமூக அறிவியல் மற்றும் மனிதாபிமானப் பணிகள் மீதான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள்
13. விளம்பரப்படுத்தல் பணிகள்
14. முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள்
15. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைப் பணிகள்
16. புகைப்படக்கலைப் பணிகள்
17. பொதியிடல் பணிகள்
18. அச்சிடல் மற்றும் வெளியிடல் பணிகள்
19. மாநாட்டுப் பணிகள்
20. சுற்றுலாச்சபையுடன் பதிவு செய்யப்பட்ட சுற்றுலா விடுதிகள்
21. பொழுதுபோக்குப் பணிகள் (திரை அரங்குகள், நேரடி இசைக்குழுக்கள்)
22. புதிய நாகரீக ஆடை வடிவமைப்பாளர், ஆடை, தொப்பி போன்றவற்றின் உருவமைப்பாளர் ஆகியோரின் பணிகள்
23. மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வேறு ஏதாவது தொழில்சார் நிபுணத்துவ பணிகள்

தொடர்பு: 06/04/10/2006

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

த.பெ. 590

கொழும்பு 1.

2006 திசெம்பர் 05

*அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

**உள்ளீடுகளின் நிரம்பலர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு**

செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினைத் தொடர்பு கொள்ளாமலேயே முதலீட்டுச்சபைக் கம்பனிகள் உட்பட வெளிநாட்டுச் செலாவணியினை ஈட்டுகின்ற எந்த ஒரு கம்பனிக்காகவும் "மூலப்பொருள் உள்ளீட்டு நிரம்பலர்களுக்கான வெளிநாட்டு நாணய கணக்கு" என்ற பெயரில் வெளிநாட்டு நாணயக் கணக்கினைத் திறப்பதற்கும் அதனைப் பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளமை பற்றி இத்தால் அவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

2. **கணக்குகளைத் திறத்தல்**

(அ) இத்திட்டத்தின் கீழான கணக்குகள் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் மட்டுமே திறக்கப்பட வேண்டும். அத்துடன் நடைமுறைக்கணக்கு, ரூபாக்கணக்கு அல்லது நிலையான வைப்புக்கணக்கு ஆகிய வடிவங்களில் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வெளிநாட்டு செலாவணியினை ஈட்டுகின்ற கம்பனியொன்றிற்கு உள்ளீட்டு மூலப் பொருட்களை வழங்குவதில் இக்கம்பனி ஏற்கனவே ஈடுபட்டுள்ளது என்பதனையும் அத்தகைய பணிகளுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மட்டுமே கணக்கில் வரவு வைத்திருக்கப்படுமென்பதனையும் உறுதிப்படுத்தும் விதத்தில் கம்பனியின் பணிப்பாளர் சபையிடமிருந்து உறுதிமொழியொன்றினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

3. **அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

இக்கணக்குகளுக்கான வரவுகள் பின்வருவனவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்:

எந்த ஒரு கம்பனிக்கும் உள்ளீட்டு மூலப் பொருட்களை வழங்கியமைக்காக வங்கி வரைவுகள் அல்லது வங்கி மாற்றல்கள் வடிவில் வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட கொடுப்பனவுகள்.

4. **அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

கணக்கிற்கான பற்றுக்கள் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(அ) கம்பனியின் நடைமுறைக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களின் பேரில் இலங்கைக்கு வெளியே வதிவோருக்கான வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவு

(ஆ) கம்பனிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உள்ளீட்டு மூலப் பொருட்களின் செலவிற்காக செய்யப்படும் வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவு

(இ) இலங்கை ரூபாவிலான பகிர்ந்தளிப்புக்கள் கட்டுப்பாடின்றி அனுமதிக்கப்படும். எனினும், இலங்கை ரூபாவிலான அத்தகைய மீளப்பெறல்கள் வெளிநாட்டு நாணயத்தில் மாற்றப்படுவதற்கும் கணக்கில் மீளவரவு வைக்கப்படுவதற்கும் உரித்துடையனவாக இருக்கமாட்டா.

5. **அறிக்கையிடும் தேவைப்பாடு**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், உள்ளீடுகளின் நிரம்பலர்கள் ஒவ்வொருவருக்குமான காலாண்டுக் கூற்றினை மாச்சு, யூன், செத்தெம்பர் மற்றும் திசெம்பரில் முடிவடைகின்ற காலாண்டுகளைத் தொடர்ந்து வரும் 15 நாட்களுக்கிடையில் செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 'டி' கிளைக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

## தொடர்பு எண்: 06/07/11/2006

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு-1

2006 திசெம்பர் 22

அதிகாரம் பெற்ற வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா,

### பயன்படுத்தப்பட்ட ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கான ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழ்

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2006 ஓகத்து 1ஆம் நாளிடப்பட்ட எண் 06/07/04/2006 மற்றும் 2006 ஓகத்து 8ஆம் நாளிடப்பட்ட எண் 06/07/05/2006 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பயன்படுத்தப்பட்ட ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கான ஏற்றுமதிப் பரிசோதனைச் சான்றிதழ் தேவைப்பாட்டினை 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைப்படுத்துவதென தற்பொழுது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, மேலேயுள்ள தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையும் 2007 சனவரி 1ஆம் நாளிலிருந்து பின்பற்றும் படியும், 2007 ஓகத்து 1ஆம் நாளிடப்பட்ட எண் 06/07/04/2006 கொண்ட எனது சுற்றறிக்கையின் விடயம் 4 பின்வரும் விடயத்தின் மூலம் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இத்தால் நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

> **"4. 2007 சனவரி 1ஆம் நாளன்று கப்பற்படுத்தப்படாதிருக்கும் உந்து ஊர்திகளைப் பொறுத்த வரை, அத்தகைய நாணயக் கடிதங்கள் மேலே விடயம் 2 மற்றும் 3இல் தேவைப்படுத்தப்பட்டவாறு திருத்தப்பட்டுள்ளன என்பதனை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்."**

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 33/03/0011/0035/001**

பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்

2006 நவெம்பர் 28

**அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும்**

## இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வம் மீதான வர்த்தக வங்கிகளுக்கான பணிப்புரைகள்

அதிகாரமளிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களாக செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும், உள்நாட்டு கம்பனி வாடிக்கையாளர்களுக்கும் ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட குறுக்கு நாணய விருப்பார்வங்களை வழங்குவது பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டே அனுமதிக்கப்படவேண்டும் என்பது பற்றி இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வினை நடைமுறையிலுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் அனுமதிக்கப்பட்ட தற்போதைய தன்மைகளைக் கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மட்டுமே பயன்படுத்த முடியும்.

2. பெறுதிச் சந்தையினை உருவாக்கும் வணிகத்திலீடுபட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள வணிகர்கள் மட்டுமே திறந்த வெளிப்படுத்துகைகளை பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் அத்தகைய வெளிப்படுத்துகைகள் இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்துகை நிலமை தொடர்பான வரையறைக்குட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். இப்பணிப்புரையின் 4.1இன் கீழ் தகுதி பெற்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் இலங்கை ரூபாவை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வில் ஈடுபட விருப்பமுள்ளவர்களும் அத்தகைய கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட அவர்கள் ஆர்வம் கொண்டுள்ளமை பற்றி இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு, வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வில் ஈடுபடுவதிலுள்ள உள்ளக இடர்நேர்வு முகாமைத்துவ முறையின் போதுமாந் தன்மையின் மீதான முகாமைத்துவ வங்கிகள் உத்தரவாதத்தினையும் சேர்த்து எழுத்து மூலமாக அறிவிப்பதன் மூலம் அதன் சம்மதத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும். இக்கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வைக்கும் நுண்ணாய்விற்கும் உட்பட்டிருக்கும்.

3. **கொடுக்கல் வாங்கல் வகைகள்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஈடுபட்டுள்ள விருப்பார்வக் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை பின்வரும் முக்கிய வடிவங்களில் காணப்படுகின்றன.

(அ) பரவச் செய்யும் நோக்குடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் அவர்களின் வாடிக்கையாளர்களுடன் நிறைவேற்றுகின்ற கொடுக்கல் வாங்கல்கள். இக்கொடுக்கல் வாங்கல்களில் வர்த்தக வங்கிகள் அவற்றின் சொந்தக் கணக்கின் மீது எந்த ஒரு சந்தை இடர்நேர்வினையும் எடுக்காததுடன் ஒன்றுக்கொன்று துணையான அடிப்படையில் அதே நாளன்று நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்குகிறது. இக்கொடுக்கல் வாங்கல்கள் சந்தையல்லா வணிகமென அழைக்கப்படுகிறது.

(ஆ) வாடிக்கையாளர்களுடன் தேவையான நிதியியல் நிறுவனங்களுடனும் பெறுதிகளின் வர்த்தகப்படுத்தல் பணிகளுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் ஏனைய வாடிக்கையாளர் நிறுவனங்களுக்கு விலைகளைக் குறிப்பீடு செய்கின்ற வேளையில் சந்தை இடர்நேர்வுகள் வங்கிகளின் சொந்தக் கணக்குகளில் மேற்கொள்ளப்படுகின்றது. அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் பெறுதிச்சந்தை உருவாக்க வணிகம் என அறியப்படுகின்றது.

4. **தகைமையும் அனுமதிக்கத்தக்க நடவடிக்கையும்**

4.1 11% சதவீதத்திற்குக் கூடுதலான மூலதனப் போதுமை விகிதத்தினைக் கொண்டுள்ள வர்த்தக வங்கிகள் மாத்திரமே இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வில் ஈடுபட அனுமதிக்கப் பட்டிருக்கின்றன. இம் மூலதனப் போதுமை விகிதம் இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வ நிலைமைகளையும் உள்ளடக்குகிறது. மூலதனப் போதுமை விகிதத்தினை நிர்ணயிப்பதில் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனம் மீதான வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் பணிப்புரைகள் பின்பற்றப்பட வேண்டும்.

4.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணியின் விருப்பார்வம் ஒவ்வொன்றும் வர்த்தகம் மீதான பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவு

மற்றும் பெறுகைகள் போன்ற முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களுக்கு வழமையாகத் தகுதி பெறுகின்ற, அனுமதிக்கப்பட்ட முக்கியமான நடைமுறை மாற்றல்களிலிருந்து தோன்றிய இடர்நேர்வு அல்லது வெளிப்படுத்துகை தொடர்பாக மாத்திரமே மேற்கொள்ளப்படுகிறது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

4.3 எந்த ஒரு சூழ்நிலையின் கீழும், இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்படும் நாணய வைப்புக்கள்/ ஏற்றுமதி வருவாய்களிலிருந்து தோன்றுகின்ற எந்த ஒரு வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகைகள் அல்லது இடர்நேர்வுகள் தொடர்பாக இலங்கை ரூபாவை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வத்தினை வெளிநாட்டு வங்கிகள் அல்லது வெளிநாட்டு தொடர்பு வங்கிகள் ஊடாக இலங்கையிலுள்ள அதன் வாடிக்கையாளர்களுக்கு அனுமதிக்கக்கூடாது.

4.4 இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வத்தின் கோட்பாட்டு ரீதியான முதல் தொகையானது வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகளின் வெளிநின்ற தொகையினை விஞ்சக்கூடாது.

4.5 முன்னோக்கிய வெளிநாட்டு செலாவணி ஒப்பந்தங்களுக்கு வழமையாக தகைமை பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மாத்திரம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் விருப்பார்வ ஒப்பந்தங்களை முன் வைக்கலாம்.

4.6 கொடுக்கல் வாங்கல்கள் தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டியதுடன் ஒரு நாணயவிருப்பார்வத்தினுள் பல வணிக குழுமங்கள் இருக்கக்கூடாது.

4.7 இதில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் பரஸ்பர உடன்படிக்கையின் மீது பகிரங்கமாகக் கிடைக்கின்ற எந்த ஒரு அடித்தள அளவுக் குறியீட்டு வீதத்தினையும் கட்டுப்பாடின்றி பயன்படுத்த முடியும்.

## 5. தகைமையுடைய வெளிநாட்டு நாணயங்கள்

இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வங்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் பின்வரும் நாணயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ஐ.அ.டொலர், பிரித்தானிய பவுண், யூரோ, யப்பானிய யென், கனடியன் டொலர், அவுத்திரேலியா டொலர், சுவிஸ் பிராங்கு

## 6. இடர்நேர்வு முகாமைத்துவம்

6.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பனவற்றினைத் தணிப்பதற்குப் போதுமான வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட வேண்டியதுடன், இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வங்களை அனுமதிக்கின்ற ஆகக் குறைந்த மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுமாறும் கேட்டுக் கொள்ளப்படவேண்டும். வங்கியின் முகாமைத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொருத்தமான கொள்கை வரையறைகள் நடைமுறைக்கிடப்பட வேண்டும். இக்கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற அனைத்து நிலைமைகளும் நாளாந்த சந்தைப் பெறுமதிப்படி குறிக்கப்பட வேண்டியதுடன் தொடர்பான பெறுமதிகள் இலாப நட்டக் கணக்குகளிலும் ஐந்தொகையிலும் காட்டப்படவும் வேண்டும்.

6.2 அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் எந்த ஒரு திறந்த வெளிப்படுத்துகைகளையும் கொண்டிருப்பதற்கு அனுமதிக்காத விதத்தில் அவர்கள் அதே நாளன்று ஒன்றுக்கொன்று துணையான அடிப்படையில் உள்ளடக்கப்பட வேண்டும் அல்லது அவை வங்கிக்கு அதிகரித்த சந்தை இடர்நேர்வுகளை தோற்றுவிக்கக்கூடும். எனினும், அதன் வெளிநாட்டுச் செலாவணி நிலைமையினை உள்ளடக்கும் விதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வத்தில் வர்த்தகம் செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றன.

6.3 அத்தகைய வெளிநாட்டு நாணய விருப்பார்வுகள் தேறிய வெளிநாட்டு செலாவணி வெளிப்படுத்துகை நிலைமை அறிக்கையிடலில் நிறையேற்றப்பட்ட தேறிய டெல்ரா அடிப்படையில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் வங்கிகளுக்காக குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைக்குள்ளும் இருத்தல் வேண்டும்.

6.4 வாடிக்கையாளர்கள் காப்பீடுகள் இனித் தேவையில்லை எனக் கருதுமிடத்து அத்தகைய காப்பீட்டினை அவர்கள் முடிவுறுத்தலாம் அல்லது மீண்டும் விற்றுவிடலாம். எனினும், செலவாணிச் சிக்கன இடர்நேர்வுக் குறைப்பு அமைப்பாக அல்லது பொதியாக அமைந்த ஒப்பந்தமாக வழங்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்பட்ட விருப்பார்வ ஒப்பந்தங்கள் வாடிக்கையாளர்களுக்கு வட்டங்களின் எந்த ஒரு தேறிய உட்பாய்ச்சலையோ அல்லது எந்த விதத்திலேனும் இடர்நேர்வுகளில் அதிகரிப்புக்களையோ ஏற்படுத்தாது.

6.5 தேர்வு ஒப்பந்தங்கள் எதிர்பாராக் காப்பீடுகளுக்கு அல்லது ஒன்றிலிருந்து உருவான வெளிப்படுத்துகைகளுக்கு பயன்படுத்த முடியாது.

6.6 எந்த ஒரு பெறுதிகளின் சந்தைப்படியான விலைப் பெறுமதிகளில் வெளிப்படுத்துகைகள் உள்ளனவா அல்லது இல்லையா

என்பதனைக் கருத்திற்கொள்ளாது வாடிக்கையாளர் ஒருவர் எந்த ஒரு பெறுதிகளின் சந்தைப்படியான விலைப் பெறுமதிகளுக்கான கணிப்பீட்டினையும் மேற்கொள்ளலாம்.

6.7 வாடிக்கையாளர்களிடமிருந்து காப்பீடுகளின் மொத்தப் பெறுமதியானது காப்பீடு செய்யப்பட்டிருக்கும் இடர்நேர்வுகளின் பெறுமதியினை விஞ்சக்கூடாது என்ற உறுதிப்பாட்டினை பெறுமதிகளின் சந்தைப்படியான பெறுதி பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

6.8 வங்கிகள், நாளாந்த அடிப்படையில் சொத்துப்பட்டியலின் சந்தைப்படியான பெறுதிகளுக்காக அவசியமான முறைமைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

6.9 இக்கொடுக்கல் வாங்கல்களில் எந்த ஒன்றினையும் மேற்கொள்வதற்கு முன்னர் வங்கிகள் தமது அலுவலர்களுக்கு போதுமான பயிற்சியளித்து இடர்முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் செயற்பாட்டு முறைகள் போன்ற அவசியமான இடங்களில் பணிக்கமர்த்த வேண்டும்.

## 7. காலம்

இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணித் தேர்வின் முதிர்ச்சிக்காலம் பத்தாண்டுகளை (10) அல்லது அடிப்படைக் கொடுக்கல் வாங்கல்களின் எஞ்சிய காலம் இதில் எது குறைந்ததோ அதனை விஞ்சக்கூடாது.

## 8. அறிக்கையிடல்

8.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒரு மாதத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை மாதாந்த அடிப்படையில் அடிப்படைக் கொடுக்கல் வாங்கல்கள்/ வெளிப்படுத்துகைகளின் தொகை, வீதங்கள், முதிர்ச்சிகள், நாணயம், இணைத்தரப்பினரின் விபரங்கள் மற்றும் விபரங்கள் போன்றவற்றைக் காட்டுகின்ற அறிக்கையொன்றினை இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

8.2 வங்கிகள், குறைந்தது இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் அல்லது பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களில் தேவைப்படுத்தப்பட்ட அளவிற்கு, மீளாய்விற்குரிய நிதியியல் ஆண்டுப் பகுதியில் அவை மேற்கொண்ட அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வு செய்யப்பட்ட அவற்றின் ஆண்டுக் கணக்குகளை போதுமானளவிற்கு வெளிப்படுத்துதல் வேண்டும்.

## 9. ஆவணப்படுத்தல்

வங்கிகள், சாத்தியமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் இரண்டு தரப்பினரினதும் நன்மைகளுக்காக இணைத்தரப்பினருடன் பன்னாட்டு ஒன்றுக்கொன்று பரிமாற்ற வணிகர்கள் சங்க உடன்படிக்கையினைப் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## 10. பல்வகைத் தேவைப்பாடுகள்

10.1 இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வத்தினைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்ற வாடிக்கையாளர்களிடமிருந்து அவர்கள் தெளிவாக விளங்கிக் கொண்டுள்ள சாதனங்களின் தன்மை மற்றும் அவற்றுடன் இயல்பாகவே பிணைந்துள்ள இடர்நேர்வுகள் பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உத்தரவாதமொன்றினைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

10.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கொடுக்கல் வாங்கல் மீதான தகவல்களை, குறிப்பாக சாதனங்களினால் நிர்ணயிக்கப்பட்ட அடித்தள அளவுக்குறியீடாகக் கொள்ளப்பட்ட வட்டி வீதம், திீர் விலைகள், வட்டம் மற்றும் அவர்களின் வாடிக்கையாளர்களுடன் தொடர்புபட்டுள்ள இடர்நேர்வுகள் என்பனவற்றுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் மற்றும் கிளை வாசகங்கள் தொடர்பான போதுமான தகவல்களை வழங்க வேண்டியதுடன் உயர்ந்தமட்ட வெளிப்படுத்துகைகளையும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இப்பணிப்புரைகள் 2006 திசெம்பர் 1ஆம் நாளன்று நடைமுறைக்கு வரும்.

**திருமதி. பி. லியனகே**
பன்னாட்டு தொழிற்பாடுகள் பணிப்பாளர்

**டி. வசந்த**
செலவாணிக் கட்டுப்பாட்டாளர்

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/01/2006**

2006 சனவரி 2

*லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

## லங்கா செட்டில் முறைக்கு புதிய பங்கேற்பாளரை நியமித்தல்

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் வரையறுக்கப்பட்ட மத்திய வைப்பகமுறை (தனியார்)

1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் ஏற்பாட்டு நியதிகளின் கீழ் நேரடி பங்கேற்பாளராக நியமிக்கப்பட்டிருந்த 04-01, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம், எக்சலன் சதுக்கம், கொழும்பு 1இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட மத்திய வைப்பகமுறை (தனியார்) நிறுவனமானது லங்கா செட்டில் முறையின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை, பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பகம் என்பனவற்றின் பங்கேற்கும் நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் தங்களுக்கு அறிவித்துக் கொள்கிறோம்.

இதன் சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறை தீர்ப்பனவுக் கணக்கு இலக்கமும் ஏனைய தொடர்பு இலக்கங்களும் கீழே தரப்படுகிறது.

| | |
|---|---|
| சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு | : CDSPLKLCXXX |
| அதேநேர மொத்த தீர்ப்பனவுக் கணக்கு இல. | : CDSPLKLCXXX010004562 |
| தொடர்பு விபரங்கள்: | |
| முதன்மை நிறைவேற்று அலுவலர் | : திரு. ஹிரான் மென்டிஸ் |
| தொலைபேசி | : 2325686 |
| தொலைநகல் | : 2445279, 2448925 |
| மின்னஞ்சல் | : hiran@cse.lk |

வரையறுக்கப்பட்ட மத்திய வைப்பகமுறை (தனியார்) யானது 2006 சனவரி 23ஆம் நாள் தொடக்கம் லங்கா செட்டில் முறையில் பங்கேற்கும். இதன் தீர்ப்பனவுக் கணக்கு CDSPLKLCXXX010004562 அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையில் 2006 சனவரி 20ஆம் நாளன்று "இடை நிறுத்தப்பட்டது" என்ற அந்தஸ்தில் காணப்படுவதுடன் 2006 சனவரி 23ஆம் நாளிலிருந்து "இடை நிறுத்தப்படவில்லை" என்ற அந்தஸ்துடன் காணப்படும். லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களும் அதன் நடைமுறைப்படுத்தல் பற்றி சுவிப்ற் செய்தியைப் பெற்றுக் கொள்வர்.

**சி. பிரேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**கே.ஆர்.எம். சிறிவர்த்தன**
பணிப்பாளர்/கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

**தொடர்பு: 34/07/029/0001/001**

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/03/2006**

2006 சனவரி 9

*லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**லங்கா செட்டில் முறைக்கு ஒரு பங்கேற்பாளராக வரையறுக்கப்பட்ட ஐசிஐசிஐ வங்கியை நியமித்தல்**

நாணயச்சபையானது 58, தர்மபால மாவத்தை, கொழும்பு 7இல் அமைந்துள்ள ஐசிஐசிஐ வங்கி லிமிட்டெட்டிற்கு வர்த்தக வங்கித்தொழில் உரிமத்தினை வழங்குவதற்கு ஒப்புதலளிப்பதுடன், ஐசிஐசிஐ வங்கி லிமிடெட்டானது லங்கா செட்டில் முறையின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை, பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பகத்தின் பங்கேற்பாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றது.

ஐசிஐசிஐ வங்கி லிமிடெட்டானது லங்கா செட்டில் முறையில் நேரடிப் பங்கேற்பாளராக/ வணிகர் நேரடிப் பங்கேற்பாளராக மாறும். இதன் சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு, அதேநேர மொத்த தீர்ப்பனவுக் கணக்கு இலக்கம் மற்றும் ஏனைய தொடர்பு விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு | : ICICLKLXXXX |
| அதேநேர மொத்த தீர்ப்பனவுக் கணக்கு இல. | : ICICLKLXXXX010004426 |
| தொடர்பு விபரங்கள்: | |
| முதன்மை நிறைவேற்று அலுவலர் | : திரு. நவீன் கே. அகர்வால் |
| தொலைபேசி | : 4242424 |
| தொலைநகல் | : 4719611 |
| மின்னஞ்சல் | : naveen.agarwal@icicibank.com |

ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் 2006 சனவரி 12ஆம் நாள் தொடக்கம் லங்கா செட்டில் முறையில் பங்கேற்கும். அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையில் 2006 சனவரி 10ஆம் நாளன்று இதன் தீர்ப்பனவுக் கணக்கு ICICLKLCXXXX010004426 இல் "இடை நிறுத்தப்பட்டது" என்ற அந்தஸ்துடனும் காணப்படுவதுடன் 2006 சனவரி 12ஆம் நாள் தொடக்கம் "இடை நிறுத்தப்படவில்லை" என்ற அந்தஸ்துடன் காணப்படும். லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களும் இவ்விடயங்கள் பற்றிய சுவிப்ற் செய்தியினைப் பெற்றுக் கொள்வர்.

**சி. பிரேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**கே.ஆர்.எம். சிறிவர்த்தன**
பணிப்பாளர்/கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

**பீசிபி வழிகாட்டல்கள் எண்: 01/2006**

2006 மாச்சு 29

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்,*
*முதனிலை வணிகர்கள் மத்திய வைப்பக முறை (பிறைவேட்) லிமிடெட்*
*மற்றும் லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட் என்பனவற்றின்*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

## தடங்கலற்ற வியாபாரத்தினை திட்டமிடுவது பற்றிய வழிகாட்டல்கள்

**அறிமுகம்**

1. நிதியியல்துறை என்பது. நிதியியல் நிறுவனங்கள், சந்தைகள் மற்றும் முறைகள் என்பனவற்றின் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளதொரு வலையமைப்பாகும். முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பங்கள், நிதியியல் சாதனங்கள் மற்றும் முறைகளின் நுணுக்கமான தன்மைகள் என்பன உள்ளக செய்முறைகள் போதுமானளவில் காணப்படாமை அல்லது முறிவடைதல் இயற்கை அனர்த்தம் உட்பட வெளிநிகழ்வுகள் என்பனவற்றின் காரணமாக ஏற்படும் தொழிற்பாட்டு இழப்புக்களினால் நிதியியல் நிறுவனங்கள் [அ]பாதிப்படையச் செய்கின்றன. ஆகவே, தொழிற்பாட்டு இழப்புக்களை கட்டுப்படுத்த தவறுவது நிதியியல் நிறுவனங்களை குறிப்பிடத்தக்க இழப்புக்களுக்கு ஆளாக்கும். ஒழுங்கு முறைப்படுத்தல் சபைகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிடையே தடங்கலற்ற வியாபார திட்டமிடலை வலுப்படுத்துவதற்கான ஆர்வம் பன்னாட்டு ரீதியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. பாசல் II கட்டமைப்பானது வங்கிகளின் நாளாந்த தொழிற்பாடுகளில் காணப்படும் வங்கிகளின் தொழிற்பாட்டு இழப்பினை தெளிவானதொரு இடர்நேர்வு வகையாக (கொடுகடன் இடர்நேர்வு, வட்டிவீத இடர்நேர்வு மற்றும் எதிர்பார்க்கப்படும் கைமாறாக நிதியியல் நிறுவனங்களினால் கருதப்படும் திரவ இடர்நேர்வு என்பனவற்றிற்குப் புறம்பாக) அடையாளம் கண்டிருக்கிறது. ஆகவே, கொடுப்பனவு மற்றும் பிணையங்களின் தீர்ப்பனவு முறைகளிலுள்ள தொழிற்பாட்டு இடர்நேர்வுகளின் விளைவுகளை காத்திரமான முறையில் கட்டுப்படுத்துவதற்காக அபிவிருத்தியடைந்த பல நாடுகளில் உள்ள மேற்பார்வை அதிகார சபைகளும் பன்னாட்டு தீர்ப்பனவிற்கான பங்களிப்பும் - கொடுப்பனவும் மற்றும் தீர்ப்பனவு மீதான குழு - முறையில் சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்த கொடுப்பனவு முறைகளுக்காக (தத்துவக் கோட்பாடு vii - பாதுகாப்பு நம்பகத்தன்மை மற்றும் தடங்கலற்ற தன்மை) 10 மையத் தத்துவக் கோட்பாடுகளையும் பன்னாட்டு தீர்ப்பனவிற்கான வங்கி/ பிணையங்கள் ஆணைக்குழுவின் பன்னாட்டு அமைப்பு பிணையங்கள் தீர்ப்பனவிற்கான விதந்துரைப்புக்களையும் (விதந்துரைப்புக்கள் 11 - தொழிற்பாட்டு நம்பகத்தன்மை) மத்திய இணைத்தரப்பினருக்கான விதந்துரைப்புக்களையும் (விதந்துரைப்பு 7 - தொழிற்பாட்டு இடர்நேர்வு) விதந்துரைத்துள்ளன.

2. முறைசார்ந்த முக்கியத்துவம் மிக்க கொடுப்பனவ மற்றும் தீர்ப்பனவு முறையான லங்கா செட்டில் முறையின் பங்கேற்பு நிறுவனங்களின் தொழிற்பாடுகளுக்கான தடங்கல்களினால் ஏற்படக்கூடிய முறையியல் சார்ந்த இடர்நேர்வுகளின் விளைவுகளைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கி, லங்கா செட்டில் முறையின் மீட்சியில் நிலையான ஒரு மட்டத்தினை பேணும் பொருட்டு, பொருத்தமான தடங்கலற்ற வியாபார திட்டங்களை கொண்டிருக்குமாறு பங்கேற்கும் நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கியது. இதன்படி, இலங்கை மத்திய வங்கி, பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் தடங்கலற்ற வியாபார திட்டமிடலை 2005 மாச்சு இறுதியளவில் இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டது. பங்கேற்கும் நிறுவனங்களினால் அனுப்பி வைக்கப்பட்ட பெரும்பாலான தடங்கலற்ற வியாபார திட்டமிடல்கள் பூரணமற்றனவாக அல்லது அவர்களாகவே ஏராளமான நியமங்களை குறிப்பிட்டு இருந்ததனால் தடங்கலற்ற வியாபார திட்டமிடலுக்கு தேவையான நியமங்களை அவர்களுக்கு விளங்கப்படுத்துவதற்காக 2005 யூலை - ஓகத்து காலப்பகுதியில் ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனங்களுடனும் மத்திய வங்கி தனித்தனியாக கூட்டங்களை நடத்தியதுடன் திருத்தப்பட்ட தடங்கலற்ற வியாபார திட்டங்களை 2005 ஓகத்து இறுதிக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். பங்கேற்கும் நிறுவனங்கள் பல தடங்கலற்ற வியாபார திட்டமிடல் தொடர்பாக எழுத்து மூலமான வழிகாட்டல்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்ததினாலும், இலங்கை மத்திய வங்கியும் தடங்கலற்ற வியாபார திட்டமிடலுக்காக நிலையான கட்டமைப்பொன்றினை விருத்தி செய்ய விரும்பியதனாலும் இலங்கை மத்திய வங்கி வழிகாட்டல் தொகுதியொன்றினை உருவாக்கியுள்ளது.

3. இத்தகைய அறிவுறுத்தல்களின் பிரதான நோக்கம், தடங்கலற்ற வியாபார திட்டமிடல் பற்றிய இலங்கை மத்திய வங்கியினுடைய மேற்பார்வை மற்றும் மேற்பார்வை அணுகுமுறை தொடர்பில் விளக்கமளிப்பதும் மத்திய வங்கி ஊக்குவிக்க விரும்பும் ஆற்றல் வாய்ந்த செயற்பாடுகள் பற்றி வழிகாட்டிகளை வழங்குதலும் ஆகும். இதனை நிதிநிறுவனங்கள் பின்பற்றப்படுவதை இலங்கை மத்திய வங்கி ஊக்குவிக்கிறது.

---

அ இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவு பணிகளை வழங்குவோர் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

- முறைமையில் உள்ள ஒன்று அல்லது மேற்பட்ட வியாபாரம் அல்லது பாகங்கள் தோல்வியுறுகின்ற சந்தர்ப்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட சேவை மட்டங்களை அடைவதனை உறுதிப்படுத்துவதற்கு முறைமையில் முக்கியத்துவம் உடையதும் அத்துடன் முறைமைசார் முக்கியத்துவம் உடைய கொடுப்பனவு மற்றும் பிணையங்களின் தீர்ப்பனவு முறைகளை உள்ளடக்கிய மைய வங்கித்தொழில்/ அதிமுக்கியத்துவமுடைய வியாபாரங்களுக்காக செயற்படுத்தப்படும் தன்மை மற்றும் ஆற்றல் தன்மை வாய்ந்த தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களை வைத்திருத்தல். மேலும் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலானது நீண்டதும் பரந்தளவான தடங்கல் காணப்படும் சந்தர்ப்பத்திலும் கூட ஏற்றுக் கொண்ட பணிகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

- அத்தகைய இடையூறுகளில் இருந்து எழுகின்ற நிதியியல், சட்டம் மற்றும் ஏனைய இடர்நேர்வுகளை குறைந்த பட்சமாக்குதல்.

- இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை செய்யப்படும்/ மேல் நோக்கல் செய்யப்படும் நிதிநிறுவனங்களின் தடங்கலற்ற வியாபார திட்டங்களுக்கான ஒரு நிலையான கட்டுக்கோப்பினை உருவாக்குதல்.

**தடங்கலற்ற வியாபார திட்டத்தினுடைய வரைவிலக்கணம்**

4. தடங்கலற்ற வியாபார திட்டம் எனப்படுவது ஒரு இடையூறு அல்லது அனர்த்தத்தின் காரணத்தால் எழக்கூடிய இடர்நேர்வுகள் மற்றும் நட்டங்களினுடைய தாக்கத்தை இனங் காண்பதற்கும், சாத்தியமான மீள்எழுகை தந்திரோபாயங்களை கட்டமைப்பதற்கும், அமுல்படுத்துவதற்கும், திட்டங்கள் மற்றும் ஆயுதங்களை முன்கூட்டியே செயற்படுத்தல், அத்துடன் குறிப்பாக மைய வங்கித்தொழில்/ முக்கியத்துவமுடைய வியாபாரங்கள், கொடுப்பனவுகள், தீர்த்தல்கள் மற்றும் பிணையங்களின் தீர்ப்பனவுகள் என்பவற்றின் விடயப் பரப்புக்களில் தடங்கலற்ற நிறுவன சேவைகளினை உறுதிப்படுத்துவதற்கு திட்டமிடல் அத்துடன் பரீட்சித்தல் மற்றும் பேணுதல்களை நிருவகித்தலும் ஆகும். ஒரு தடங்கலற்ற வியாபாரத்திட்டம் எனப்படுவது மைய வங்கித்தொழில், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு என்பவற்றை உள்ளடக்கியதான முக்கிய வியாபார செயற்பாடுகளுக்கான ஒரு செய்முறைகளுடைய தொகுதி, செயல்முறைகள், தகவல்கள் மற்றும் அளவீடுகளை அவசரகால மற்றும் அனர்த்தம் காரணமாக முக்கியத்துவமுடைய அல்லது அனைத்து வியாபார செயற்பாடுகளையும் நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதற்காக தயார் செய்தல். தடங்கலற்ற வியாபார திட்டத்துக்கு மாறாக, ஒரு எதிர்பாராத திட்டம் எனப்படுவது ஒரு இடையூறின் போது மிகவும் முக்கிய வியாபார செயற்பாடுகள் செயற்படும் இயலுமை பற்றிய அளவிடுதலை குறிக்கிறது. ஆகவே தடங்கலற்ற வியாபார திட்டக் கோட்பாடானது எதிர்பாராத திட்டத்தை விட அதிகம் விரிவான ஒன்றாகும்.

5. தடங்கலற்ற வியாபாரத்திட்டமிடலானது அலுவலர்களின் அனைத்து மட்டங்களிலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய கலாச்சாரமொன்றாக இருப்பதுடன் நாளாந்த தொழிற்பாடுகளுடன் நன்கு ஒருங்கிணைக்கப்பட வேண்டிய செயல்முறை அவசியத்தினையும் தேவைப்படுத்துகிறது. ஒவ்வொரு நிதியியல் நிறுவனத்தினதும் சபையும் மூத்த முகாமைத்துவமும் தடங்கலற்ற வியாபார திட்டமிடலில் இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பொன்றினை பின்பற்றுதல் வேண்டும். இடர்நேர்வு முகாமைத்துவத்தில் விட்டுக் கொடுப்புகளெதனையும் செய்யாமல் குறைந்த செலவில் அனைத்தையுமுள்ளடக்கிய தடங்கலற்ற வியாபாரத்திட்டமிடலை நிறுவுவதென்பது சவால் மிக்கதொரு பணியாகும். நிதியியல் நிறுவனங்களின் பிரதான அலுவலகங்கள் அமைந்துள்ள இடங்களின் கட்டடங்களும் உட்கட்டமைப்பு வசதிகளும் முழுமையாகச் சிதைந்து, அவர்களது பிரதான அலுவலர்களையும் இழந்து, பரந்தளவிலானதும் நீடித்ததுமான தடங்கல்களுக்குட்பட்டு அவர்களது முதன்மையான அமைவிடத்தினை முழுமையாகவே சென்றடைய முடியாததினால் நீண்ட காலத்திற்கு அந்த நிதியியல் நிறுவனம் வேறிடத்தில் சேமிக்கப்பட்ட தரவு வசதிகளைப் பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்படுகின்ற ஒரு நிகழ்வினை எண்ணிப் பார்க்கும் பொழுது எல்லா நிதியியல் நிறுவனங்களும் தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலைக் கொண்டிருக்க வேண்டும் என்பது உணர்வு பூர்வமானதாகத் தோன்றும். தடங்கலற்ற வியாபார திட்டமிடலுக்கு ஆயத்தமாக இருப்பதற்கு பணிப்பாளர்சபை (சபை) பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

6. நிதியியல் நிறுவனங்கள் இரு அடுக்கு திட்டங்களை வைத்திருக்க தீர்மானிக்கலாம். ஒன்று (இவை உடனடியான செயல்முறைக்குட்படுத்தக்கூடியவாறு போதுமானளவு மூலவளங்களுடன் முழுமையாக உருவாக்கப்பட்டிருப்பது.) குறுகிய காலப் பிரச்சனைகளை கையாள்வதற்கும் மற்றது (நடுத்தரகால/ நீண்டகால திட்டங்களுக்காக இருக்கலாம்) நீண்டகால விடயங்களைக் கையாள்வதற்கும்.

7. இந்த வழிகாட்டல்கள் எவ்வாறு நிதியியல் நிறுவனங்களானது தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தின் செய்முறைகளை நடைமுறைப்படுத்தலாம் என்ற படிமுறை ரீதியான வழிகாட்டலை விபரிப்பதை நோக்கமாக கொண்டிருக்கவில்லை, அத்துடன் இதை ஒரு குறைந்த அளவுகோலாக கருதமுடியும். பின்வரும் இந்த அறிவுறுத்தல்கள் தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களை அமுல்படுத்தும் போது நிதியியல் நிறுவனங்களுக்கு ஒரு நிலையில் செயற்பாட்டு மட்டத்தினை உருவாக்குவதற்கு பங்களிப்பினை வழங்கும். அத்துடன் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளினது மீள் எழுச்சித் தன்மையினை மேற்பார்வையாளர்களும் பார்வையாளர்களும் மதிப்பிடுவதற்கு உதவுகிறது.

**வழிகாட்டல்களின் பிரயோகம்**

இலங்கை மத்திய வங்கியினுடைய மேற்பார்வை/ கண்காணிப்பு குறிக்கோள்களில் ஒன்றானது நிதி நிறுவனங்கள் குறிப்பாக, மைய வங்கித்தொழில், கொடுப்பனவு, தீர்த்தல்கள் மற்றும் தீர்ப்பனவுகள் என்பவற்றில் இடையூறுகள் ஏற்படுகின்ற போது முக்கிய செயற்பாடுகளின் தொடர்ச்சி தன்மைக்காக உயர் தயார்படுத்தல் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தினை வைத்திருக்க வேண்டும் என்பதாகும். நிதியியல் நிறுவனங்களுடனான தலப் பரீட்சிப்புகள், தலத்திற்கு வெளியேயான மேற்பார்வை மற்றும் முன்மதியுடைய விடயங்கள் தொடர்பிலான கூட்டங்களில், இலங்கை மத்திய வங்கியானது இந்த அறிவுறுத்தல்களில் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தின் அமுல்படுத்தல்கள் குறிப்பாக;

- நிதி நிறுவனங்கள் அவதானித்த வழிகாட்டல்களின் அளவு, மற்றும்
- நிதியியல் நிறுவனத்தின் இடர்நேர்வு தோற்றப்பாடும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதில் அதன் பங்கும்

என்பனபற்றி மீளாய்வு செய்து கொள்ளும்.

**வழிகாட்டி 1: ஒவ்வொரு நிதி நிறுவனங்களுடைய பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவத்துக்கு தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலுக்கான முக்கியமான பொறுப்புக்களை அளித்தல்**

8. ஒவ்வொரு நிதி நிறுவனங்களுடைய சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவமானது நிறுவனத்தினுடைய தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல் மற்றும் அதனுடைய செயற்பாடுகளின் அளவு மற்றும் தன்மையுடன் தொடர்புடைய காத்திரமான தன்மைக்கு பொறுப்பேற்க வேண்டும். சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவமானது தடங்கலற்ற வியாபார முகாமைத்துவத்துடன் ஈடுபடுவதுடன் நிதி நிறுவனங்களுடைய வியாபார தொடர்ச்சி தன்மை, இடர்நேர்வுகள் மற்றும் அதனுடைய அனைத்து இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினுடைய பகுதியாக அமைந்த கணிக்கின்ற அளவீடுகளை கவனத்தில் எடுத்தல் வேண்டும். சபையானது தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல் தொடர்பில் தெளிவான வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகளையும் வழங்குதல் வேண்டும்; தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல் பற்றிய கொள்கைகளை அனுமதித்தல் வேண்டும், வியாபார செயற்பாடுகளுடன் தொடர்புடைய முக்கியத்துவமுடைய மைய வங்கித்தொழில்/ தொழிற்பாடுகள் அத்துடன் கொடுப்பனவு முறைமைக்கு முன்னுரிமையளித்தல், போதுமான மூலவளங்கல்களை ஒதுக்கீடு செய்தல், தடங்கலற்ற வியாபார திட்ட பரீட்சிப்பு முடிவுகளை மீளாய்வு செய்தல் மற்றும் தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தின் காலத்துக்குக் காலம் பதிவு செய்தல் மற்றும் பேணுதல் என்பவற்றை கொண்டிருத்தல் வேண்டும்.

9. மூத்த முகாமைத்துவமானது தடங்கலற்ற வியாபார திட்டமிடலுக்காக பொருத்தமான கொள்கைகள், நியமங்கள், தந்திரோபாயங்கள் மற்றும் செய்முறைகளை உருவாக்குதல், பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலை பெற்றுக் கொள்ளுதல், அனைத்து ஆளணியினருடைய பற்றுறுதியினை பெற்றுக் கொள்ளல் மற்றும் ஏதாயினும் எதிர்பாராத நிகழ்ச்சி நிகழும் சந்தர்ப்பத்தில் அத்தகை தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலை செய்து முடித்தல் என்பனவற்றுக்கு பொறுப்பாக்கப்பட வேண்டும். மூத்த முகாமைத்துவமானது அனைத்து வியாபார நோக்கங்கள், இடர்நேர்வு முகாமைத்துவ தந்திரோபாயம் அத்துடன் நிதியியல் மற்றும் ஏனைய வளங்களுடன், ஒவ்வொரு முறைமையினுடைய தடங்கலற்ற தந்திரோபாயத் திட்டங்கள் இணைவாக உள்ளதை உறுதிப்படுத்துவதற்கு அனுமதிக்க வேண்டும். மூத்த முகாமைத்துவமானது ஒவ்வொரு முறைமைக்குமான எதிர்பாராத திட்டமிடலின் போதுமை மற்றும் அதனுடைய அலுவலரினால்/ முக்கிய செயற்பாடுகள் வெளி வழங்குகைக்கு உட்படுத்தப்படும் போது சேவை வழங்குனர்கள் காலாந்தர அடிப்படையில் பரீட்சிக்கப்படுவதனையும் உறுதிப்படுத்தல் அவசியம். நெகிழ்ச்சித்தன்மை மற்றும் மீள் உருவாக்குகை அளவீடுகள் வியாபார செயற்பாடுகளின் நிலை, இடர்நேர்வுகளின் தாங்கும் தன்மை மற்றும் நிதியியல் முறைமையின் முறைசார் உறுதித்தன்மையினை பாதுகாப்பதில் அதனுடைய பங்கு என்பவற்றை போதுமான அளவிற்கு உள்வாங்கியிருத்தல் வேண்டும். அத்தகைய அளவீடுகள் தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் கிரமமான முறையில் மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். மூத்த முகாமைத்துவமானது தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தின் ஒவ்வொரு முறைமையினுடைய குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை அடைவதனை மற்றும் ஆகக் குறைந்தது ஆண்டுக்கொருமுறை பின்வருவனவற்றை தெளிவாக உள்ளடக்கி ஒரு அறிக்கையினை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு பொறுப்புடையதாகும்.

- ஒவ்வொரு முறைமையினுடைய குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடையப்படுவதற்கு நிறுவனம் தயாராக இருக்கும் தன்மை
- இந்த அறிவுறுத்தல்களினுடனான கருத்தொருமைப்பாட்டின் அளவு

அத்தகைய அறிக்கைகள் கிரமமாக மீளாய்வு செய்யப்பட்டு பூரணப்படுத்தப்பட வேண்டும். தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலானது ஆகக் குறைந்தது ஆண்டுக்கொருமுறையாவது நிதி நிறுவனங்களுடைய உள்ளகக் கணக்காய்வாளர்/ வெளிவாரி நிபுணரால் மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

**வழிகாட்டி 2: தடங்கலற்ற வியாபார திட்டமிடலில் ஆற்றல் வாய்ந்த நடைமுறைகளை உள்ளடக்குதல்.**

10. ஒவ்வொரு நிதி நிறுவனங்களும் பின்வரும் முன்மொழியப்பட்ட செய்முறைகளை தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலுக்காக கவனத்தில் கொள்வதற்கு ஊக்குவிக்கப்படுகிறது.

- தெளிவானதும் நன்றாக வரையறை செய்யப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல் கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்தல்.
- தடங்கலற்ற வியாபாரத் திட்ட அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தை மேற்பார்வை செய்வதற்கு தெளிவான பங்கினையும் பொறுப்புக்களையும் உருவாக்குதல். இவை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தி இணைப்பதற்கு ஓர் முறைசார் தடங்கலற்ற வியாபார முகாமைத்துவ பங்களிப்பினை அதிகாரம் மற்றும் பொறுப்புக்களுடன் உருவாக்குவதனை தேவைப்படுத்தும்.
- ஒவ்வொரு முறைமையின் கீழ் உள்ள முக்கியமான செயற்பாடுகள் தெளிவாக இனங்காணப்பட வேண்டும். அத்துடன் இத்தகைய செயற்பாடுகளிடையேயான தொழிற்பாடுகள் அவற்றின் முக்கியத்துவத்துக்கேற்ப வகைப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய வகைப்படுத்தல்களுக்கு பின்னால் உள்ள எடுகோள்கள் ஆவணப்படுத்தப்படல் வேண்டும். அத்துடன் இவை கிரமமான முறையில் மூத்த - முகாமைத்துவத்தால் மீளாய்வுக்குட்படுத்த வேண்டும்.

- அனைத்து (சொந்தமான, பங்கான மற்றும் வெளியக) முக்கிய மைய வங்கித்தொழில்/ வியாபாரம், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் பற்றிய சாத்தியமான இடையூறு நிகழ்வுகளின் தாக்கங்கள் மற்றும் நிகழ்தகவுகளை அளவிடுவதற்கு ஒரு வியாபார தாக்க ஆய்வுகளை நடைமுறைப்படுத்தல்; வளங்கள் மற்றும் உட்கட்டமைப்புக்கள் மற்றும் குறிக்கோள்கள் மீட்சியடையும் நேரத்தினை வடிவமைத்தல் மற்றும் முக்கிய செயற்பாடுகளுடைய மீள் உருவாக்கல்.

- ஒவ்வொரு முக்கிய வியாபாரம்/ துணைச் சேவைகள் அதனுடைய, குறிக்கோள் மீட்சியடையும் நேரத்தினை வடிவமைத்தல் எவ்வாறு அடைவது அத்துடன் வியாபார தாக்க ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட முக்கிய சேவைகளுடைய ஆகக் குறைந்த மட்டத்தினை விநியோகிப்பது பற்றி சொந்த மீட்சியடைதல் தந்திரோபாயத்தை கட்டமைத்துக் கொள்ள வேண்டும். கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை தொடர்பில் தடங்கலற்ற வியாபார ஒழுங்குபடுத்தலினால் அதிசிறந்த நடைமுறையானது ஒரு இடையூறு ஏற்பட்டு இரண்டு மணித்தியாலங்களுக்கு பிந்தாமல் முறைமைசார் முக்கியத்துவமுடைய கொடுப்பனவு முறைகளுடைய முக்கிய செயற்பாடுகளுடைய மீட்சியடைதல் மற்றும் மீள் உருவாக்கத்தை நோக்கமாகக் கொண்டது. முறைமைசார் முக்கியதுவமுடைய கொடுப்பனவு மற்றும் குறிப்பிடப்பட்ட/ ஒரே தீர்ப்பனவு திகதிக்குள்ளான தீர்ப்பனவு முறைமை; மற்றும் முக்கியத்துவமுடைய சிறிய எண்ணிக்கையிலான கொடுப்பனவுகளை (சந்தை திரவத்தன்மை அல்லது நடைமுறைக் கொள்கை தொடர்பிலான கொடுப்பனவு தீர்ப்பனவு) குறித்த நேரத்தில் நிறைவேற்றுதல்.

- ஒவ்வொரு தோன்றக்கூடிய இடையூறுகளுக்குமான முக்கியமான மற்றும் உறுதியான எடுகோள்களை நடைமுறைப்படுத்தல்; சாத்தியமான அச்சுறுத்தல்களை (உள்ளக மற்றும் வெளியக) அதனுடைய தாக்கம் மற்றும் நிகழ்வுத் தன்மையை அளவிடுதல் மற்றும் இடையூறுகளுடைய (முறைமையினுடைய ஒவ்வொரு தொகுதியினதும்) தாக்கங்களை எதிர்கொள்வதற்கு போதுமானளவு கூடிய கட்டமைப்பினை உறுதிப்படுத்தல். இது ஒரு அனர்த்த மீளமைப்புப் பகுதியை உருவாக்குதலில் ஈடுபடுகிறது. (ஆகக் குறைந்தது இலங்கையின் ஒரு பாகத்தில் முக்கியமான உட்கட்டமைப்பு தொகுதிகளுடன், தேவைப்படுத்தப்படும் எண்ணிக்கையுடைய ஆளணிகள், வேலை தளம், மென்பொருள் பிரயோகம், தொழில்நுட்ப தேவைப்பாடுகள், தொடர்புடைய சுவிப்ற் தொடர்பு மற்றும் முக்கிய தரவுகள்/ தகவல் என்பன தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட மீளமைப்பு நோக்கங்களுடன் ஒத்திருத்தல். முதன்மைத் தலத்திற்கும் அனர்த்த மீட்சித் தலத்துக்கும் இடையில் புவியியல் ரீதியான வேறுபாடு இருத்தலினை உறுதிப்படுத்திக் கொள்வது முக்கியமானதாகும்.

- மீளமைப்பு தந்திரோபாயங்களை வரையறுத்துக் கொள்ளல் மற்றும் வியாபாரத் தாக்க ஆய்வில் முக்கியமான சேவைகளுக்கும் நேரக்கட்டமைப்பு அளவீடுகளுக்குமிடையில் ஒன்றை ஒன்று தங்கியிருக்கும் தன்மையினை வழங்கப்படும் ஒவ்வொரு சேவைகள் தொடர்பிலும் கவனத்தில் எடுத்தல்.

- முக்கியமான வியாபாரங்களுடைய நியதிகளுக்காக ஆகக் குறைந்த பட்சம் ஆகக் குறைந்த பட்ச தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல் தேவைப்பாடுகளை உருவாக்குதல். இத்தகைய தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல் தேவைப்பாடுகள் அவற்றின் உருவாக்க செய்முறைக்கு முன்னர் மூத்த முகாமைத்துவத்தால் அனுமதியளிக்கப்பட வேண்டும். மேலும் தடங்கலற்ற வியாபாரத் தேவைப்பாடுகள் ஒரு புதிய வியாபார பணிகள்/ உற்பத்திகளுடைய திட்டமிடல்/ உருவாக்கக் கட்டத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

- அனர்த்த முகாமைத்துவ அணியினை உருவாக்குதல் ஒரு சிறந்த நடவடிக்கை ஆகும். இவ்வனர்த்த முகாமைத்துவ அணி மூத்த முகாமைத்துவ குழுவை உள்ளடக்கியதாகவிருக்கலாம் (உதாரணமாக வங்கித்தொழில் தொழிற்பாடு தகவல்தொழில்நுட்பம், தகவல் சேமிப்பு அலுவலகம், கட்டடம்/ தாபனங்கள், மனித வளங்கள் மற்றும் தொடர்பூட்டல்கள் என்பவற்றின் திணைக்களத் தலைவர்கள்) அவர்கள் மீட்சி செயற்பாடுகளுக்கு வழிகாட்ட முடியும்.

- நிதி நிறுவனங்கள் ஒரு தடங்கலற்ற வியாபாரத்திட்ட ஆவணத்தினை உருவாக்குதல், மற்றும் பேணுதல் கட்டாயமாகும். இவை இடர் முகாமைத்துவ செயல்முறைகள் மற்றும் தகவல்கள் தொடர்பாக வழிகாட்டல்களை வழங்குகிறது. இவை நிதி நிறுவனங்களினுடைய சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு, எதிர்பாராத நிகழ்வுகளில் நிதி நிறுவனங்களின் வியாபாரங்கள் மீது பரவக்கூடிய தாக்கங்களை தவிர்க்கும் பொருட்டு இடையூறுகளை எதிர்கொள்வதற்கும் அத்துடன் முக்கிய வியாபாரங்களை மீளமைத்துக் கொள்வதனையும் சாத்தியமாக்குகிறது.

- ஒரு இடையூறின் பரிமாணமானது, நிகழ்வுகளின் தொடர்ச்சியை இனங்காண்பதில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய மற்றுமொரு முக்கியமான விடயமாகும். அகன்ற பரப்பை உள்ளடக்கியதான அனர்த்தங்கள், போக்குவரத்துகள், தொலைத் தொடர்பாடல்கள் முக்கிய ஆளணியினால், கொடுப்பனவு முறைமை மற்றும் ஏனைய முக்கிய உட்கட்டமைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய அனைத்து சாத்தியமான நெருக்கடி நிகழ்வுகளின் தொடர்ச்சியை இனங் காண்பதற்கு மற்றும் நெருக்கடி முகாமைத்துவ செய்முறை மற்றும் செயல்முறைகளை உருவாக்குதல் மூத்த முகாமைத்துவத்திற்கானதாக உள்ளது. வழமையான வியாபார தாக்கங்களின் ஆய்வுகளில் மாற்றங்களை ஏற்படுத்தத் தேவைப்படுத்தப்படும் போது நிகழ்வுகளின் தொடர்ச்சி கட்டாயமாக ஆவணப்படுத்தப்பட வேண்டும். நெருக்கடி முகாமைத்துவ செய்முறைகள் ஆகக் குறைந்த பட்சம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்;

  — அவசரகால/ எதிர்பாரத நிகழ்வுகளை முன்கூட்டியே தவிர்ப்பதனை உறுதிப்படுத்துதல் மற்றும் அந்நிகழ்வு பற்றி அனர்த்த முகாமைத்துவ அணிக்கு அறிவிப்பதற்கான செயற்முறைகள்;

— அனர்த்த முகாமைத்துவ அணியானது குறித்த நிறுவனம் பற்றிய ஒட்டு மொத்த தாக்கங்களை அளவிடுதல் மற்றும் பொருத்தமான செயற்பாடுகள் பற்றி விரைவான தீர்மானம் எடுப்பதற்கான செய்முறை;

— தடங்கலற்ற வியாபார திட்டம் மற்றும்/ அல்லது மாற்று தளத்தின் உயிரூட்டலுக்கான தெளிவான வரைமுறைகள்;

— மீட்சி செய்முறையினுடைய நிலை பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான தெளிவான செய்முறை

— நேரத்துடனான உள்ளக மற்றும் வெளியக தொடர்பாடலுக்கான செய்முறை;

— பாதிப்புக்குள்ளான பணிகள்/ வசதிகளுடைய மீட்சி மற்றும் பழைய நிலைக்குத் திரும்பும் முயற்சிகளை மேற்பார்வை செய்வதற்கான செய்முறைகள்.

- வியாபார மீள் உருவாக்கல் செய்முறையை செயற்படுத்துவதற்கு ஒவ்வொரு வியாபார/ துணை பணிகளுக்காகவும் ஒரு வியாபார மீட்சி அணியினை (இவை உப அணிகளை கொண்டிருக்கலாம்) உருவாக்குதல் ஒரு சிறந்த நடைமுறையாகும். நிதி நிறுவனங்கள், அத்தகைய ஒவ்வொரு அணிக்கும் தேவைப்படுத்தப்பட்ட அறிவுத்திறன்/ தொழில்நுட்பத் திறனுடன், மீட்சி ஆளணியினரை (மாற்று ஆளணியினரையும்) ஒதுக்கீடு செய்தல் அவசியம்.

- வியாபார மீள் உருவாக்கல் செய்முறை பொதுவாக மூன்று கட்டங்களை கொண்டுள்ளது.

  – ஒன்று திரட்டல் கட்டம் - இந்த நிலை தேவைப்படுத்தப்பட்ட பணிகளை பெற்றுக் கொள்வதற்கு வியாபார மீட்சி ஆளணியினருக்கும் மற்றும் வழங்குனருக்கும் அறிவுறுத்தல்கள் மற்றும் தடங்கலற்ற வியாபார திட்டத்தில் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட தொடர்ச்சியை (தேவைப்படுமிடத்து மீள் தொடர்ச்சியை) பின்பற்றுதல் என்பவற்றை உள்ளடக்குகிறது;

  – மாற்று செய்முறைகளின் கட்டம் - இந்நிலையானது அனர்த்த மீளமைப்பு சேவைகளில் அல்லது குறித்துரைக்கப்பட்ட செய்முறைகளை விட வேறு வழிகளில் வியாபாரம்/ சேவைகளுடைய மீள் உருவாக்கத்தினை உள்ளடக்குகிறது. இவை மீள் நிர்மாணம் மற்றம் சான்றுபடுத்துதல், புதிய கட்டுப்பாடுகளினுடைய உருவாக்கம், கையாளல் செய்யப்படல், மாற்றுச் செய்முறைகள் மற்றும் வாடிக்கையாளர்கள்/ தொடர்புடைய ஏனைய தரப்பினருடன் கையாள்வதற்கான மாற்று வழிகள் என்பவற்றை பதிவு செய்ய தேவைப்படுத்தலாம்;

  – முழுமையான மீட்சிக் கட்டம் - இந்த நிலையானது அனர்த்த/ எதிர்பாராத நிகழ்வின் பின்னர் மீண்டும் முதன்மைத் தலத்திற்கு திரும்பிச் செல்வதற்கான செய்முறைகளை உள்ளடக்குகிறது.

- தடங்கலற்ற வியாபாரத் திட்டமானது வியாபார மீள் உருவாக்குகை செய்முறையினுடைய ஒவ்வொரு நிலையின் கீழ் தேவைப்படுத்தப்பட வேண்டிய செய்முறைகளை இனங் காணுதல் மற்றும் திட்டமிடல்; தெளிவான பொறுப்புக்கூறல்களை உருவாக்குதல் மற்றும் மீள் உருவாக்கல் இலக்குகளையடைய சரிபார்த்தல் பத்திரத்தை உருவாக்கலும் உள்ளடக்குதலும் கட்டாயமாக காணப்படுகிறது.

- நிதி நிறுவனங்கள் வியாபாரத்துக்கு ஒரு தவிர்க்க முடியாத இடையூறின் போது தடங்கலற்ற வியாபார திட்டத்தினை மீள்எழுச்சியூட்டி வைத்திருக்கும் நிகழ்தகு தன்மையை குறைக்கும் பொருட்டு முக்கியமான தொழில்நுட்ப உபகரணங்கள்/ வசதிகளுடைய நெகிழ்ச்சித் தன்மைய உறுதிப்படுத்துவதற்கு விசேட கவனத்தைச் செலுத்த வேண்டும். ஒவ்வொரு வியாபார/ துணைச் செயற்பாடுகளுடைய மீளமைப்பதற்கான தொழில்நுட்ப தேவைப்பாடுகளானது ஒவ்வொரு செயற்பாடுகளுக்குமாக மீளமைப்பு தந்திரோபாயத்தில் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும். அத்துடன் நிதி நிறுவனங்கள் தொழில்நுட்ப தவறுகளை மீட்சியடையச் செய்யப் பொருத்தமான ஆளணியினரை/ மாற்று ஆளணியினருடன் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

- நிதி நிறுவனங்கள், அவர்களுடைய வியாபார சூழலில் இடர்நேர்வு மதிப்பீடுகள் மற்றும் அவர்களுடைய சுய செயற்பாடுகளின் சிறப்பியல்கள் என்பவற்றின் அடிப்படையில் நீண்ட இடர்களை கையாள்வதற்கு பொருத்தமான வியாபார திட்ட மாதிரியை பயன்படுத்தலாம்.

- ஒவ்வொரு தடங்கலற்ற வியாபாரத் திட்டமானது, எதிர்பாராத சம்பவம்/ அனர்த்தனத்தின் போது முக்கியமான முறைமை ஒவ்வொன்றினுடையதற்குமான தரவு இழப்புக்களுக்காக மீள் உருவாக்குகை புள்ளியின் நோக்கங்கள் மற்றும் முக்கிய வியாபார/ துணை சேவைகளினுடைய மீட்சிக்கு முக்கியமாகக் காணப்படும் தகவல்கள் மற்றும் அத்தகைய தரவு இழப்புக்களை கையாள்வதற்கான தந்திரோபாயங்களை தெளிவாக இனங்காணல் அவசியமாகும். பாதுகாப்பு வழிமுறைகளில் சில:

  – அவசரகாலத்தில் சீர் செய்வதற்காக வேறிடத்தில் சேமிக்கப்பட்ட முக்கியமான பதிவேடுகளை பெறக்கூடியதாக இருத்தல் அவசியம்.

  – வியாபார மீள உருவாக்கத்தினுடைய பயன்பாட்டுக்காக, அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு வேறிடத்தில் சேமிக்கப்பட்ட முக்கியமான பதிவேடுகளைப் பெறுவதில் போதுமான கட்டுப்பாட்டை கொண்டிருத்தல் வேண்டும்.

- முக்கியமான ஆவணங்கள் அவை இழக்கப்படும்/ சேதமாக்கப்படும்/ அழிக்கப்படும் போது எப்படி மற்றும் எத்தகைய முன்னுரிமையில் ஈடுசெய்யப்பட/ உருவாக்கப்பட வேண்டும் எனத் தெளிவான செய்முறைகளை குறிப்பிடுதல்.
- நிறுவனமானது எதிர்பாராத நிகழ்வில் பூரணப்படுத்தப்பட்ட நிலையான தகவல்களைப் பரப்புதலை உறுதிப்படுத்துவதற்கு, முக்கிய வெளித்தரப்பினருடன் (ஒழுங்குமுறைப்படுத்துனர்கள், முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள், இணைததரப்பினர், பணி வழங்குனர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் ஏனைய அக்கறையுடைய தரப்பினர்) உள்ளக மற்றும் வெளியக தொடர்பாடலுக்காக ஒரு முறைசார் தந்திரோபாயத்தை கட்டமைக்க வேண்டும்.

**வழிகாட்டி 3: தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தினுடைய ஒவ்வொரு விடயங்களையும் ஒழுங்கானதாக முழுமையானதாக மற்றும் அனர்த்தமுள்ளதாக பரீட்சித்தல்**

11. தடங்கலற்ற வியாபாரத் திட்டமானது அதனுடைய நடைமுறைச் சாத்திய தன்மை மற்றும் செயற்றிறன் வாய்ந்த தன்மை என்பவற்றை அளவிட்டுக் கொள்ளும் பொருட்டு தரம் மற்றும் கணிய விடயங்களை கவனத்தில் கொண்டு ஒழுங்கு முறைமையில் முழுமையாக மற்றும் அர்த்தமுள்ளதாக பரீட்சித்தல் அவசியம், மற்றும் ஒரு இடையூறில் மீட்சி நடைமுறைகள் அமைவிடத்துடன் ஆளணியினரை பழக்கப்படுத்துதல், இவை பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

- அனர்த்த மீட்சி பணிகளின் இணைப்புத்தன்மை, செயற்தன்மைகள் மற்றும் உட்கட்டமைப்பின் கொள்வனவு என்பவற்றை உள்ளடக்கியதான வியாபார செயற்பாடுகளுடைய அனைத்து பகுதிகளையும் அர்த்தமுள்ள வகையில் பரீட்சித்தல்.
- குறிப்பாக வியாபார நோக்கத்தினுடைய மாற்றங்களின் பிரயோகத்தன்மையை மதிப்பீடு செய்வதற்கு தந்திரோபாயத் திட்டமிடல்களின் எடுகோள்களுடைய பிரயோகத்தன்மையைப் பரீட்சித்தல்
- ஆளணியினருடைய விழிப்புணர்வு மற்றும் தயார் நிலைமை அத்துடன் வெளித்தரப்பினருடனான இணைப்புத்தன்மையை அளவிடல்
- சிறப்பாக வெளியாருடனான ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் தன்மையை பரீட்சித்தல். இவை அலுவலகங்கள் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள சேவை வழங்குனர்களாக இருக்க முடியும்.
- முகாமைத்துவமானது பரீட்சிப்புக்களில் பங்குபற்றுதல் மற்றும் ஒரு எதிர்பாராத சம்பவ நிகழ்வுகளில் அவர்களுடைய பங்குகள் மற்றும் பொறுப்புக்களுடன் பழக்கப்படுத்தியிருத்தல் அவசியம்.
- தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு பின்வருவனவற்றை கிரமமான முறையில் பரீட்சித்தல் முக்கியமுடையதாகிறது.
  - முழுமையான முறைமை
  - மர அமைப்பிலான வலையமைப்பு
  - வேறிடத்தில் சேமிக்கப்பட தகவல்களை இன்னொரு சேமிப்பு இடத்திற்கு மாற்றுதல்
  - பகிரப்படும் பணிகள்
  - சேமிக்கப்பட்ட தகவல் நாடாவை மீளப் பெற்றுக்கொள்ளல்; அத்துடன்
  - முக்கியமான பதிவேடுகளை மீளமைப்பு
- ஒரு தடங்கலற்ற வியாபாரத் திட்டம் ஆகக் குறைந்தது ஆண்டுக்கொருமுறையாவது பரீட்சித்துப் பார்க்கப்பட வேண்டும்.
- பின்பற்றுவதற்காக, பெறப்பட்ட பரீட்சிப்பு முடிவுகள், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் இடர்நேர்வுகளைத் தயாரிக்கும் வழிமுறைகள் என்பவற்றை உள்ளடக்கி ஓர் ஆவணம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அவை மூத்த முகாமைத்துவத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**வழிகாட்டி 4: மீட்சி உபாயங்களை வடிவமைத்தல் மற்றும் அதிமுக்கிய தொழிற்பாடுகளுக்கான குறிக்கோள்கள் மீட்சியடையும் நேரத்தினை நிறுவுதல்**

12. செயற்றிறன் வாய்ந்த மீட்சி தந்திரோபாயங்களானது நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் தடங்கலற்ற வியாபார திட்டங்களை, திட்டமிட்டபடி குறைந்த பட்ச இடையூறுகள் மற்றும் நிதியியல் இழப்புக்களுடன் ஓர் ஒழுங்கான விதத்தில் அமுல்படுத்த உதவுகிறது. நிதி நிறுவனங்களானது எதிர்பாராத சம்பவ வேளையில் அவற்றினுடைய முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்கள் மற்றும் எதிர்பார்க்கக்கூடிய நிதியியல் மற்றும் நாணயம் சாராத இழப்புக்கள் இனங் காணுதல் அவசியமாகும். இந்த செய்முறையானது நிதி நிறுவனங்களுக்கு வியாபார தாக்க ஆய்வுகளின் அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்த வியாபார செயற்பாடுகளுக்கான முக்கிய செயற்பாடுகளை

முதன்மைப்படுத்தல் மற்றும் மீட்சி தந்திரோபாயங்களை வரையறுத்தல் மற்றும் குறிக்கோள் மீட்சியடையும் நேரம் என்பவற்றுக்கு உதவுகிறது. நிதி நிறுவனங்களுக்கிடையில் முக்கியத்துவமான வியாபார செயற்பாடுகள் வேறுபடுகின்றன. ஆனால் மைய வங்கித்தொழில் மற்றும் அதி பெறுமதி வாய்ந்த கொடுப்பனவுகளுடைய தீர்ப்பனவு அறிவுறுத்தல்கள், கொடுப்பனவு சாதனங்களினுடைய தீர்த்தல்கள், நிதிகள்/ பிணையங்களின் தீர்ப்பனவு பற்றிய கடமைப்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர்கள்/ முதலீட்டாளர்கள்/ மக்களின் நம்பிக்கைகளை பேணுதல் போன்றவற்றை உள்ளக்கிய செயற்பாடுகள் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகும். குறிக்கோள் மீட்சியடையும் நேரம் என்பது வியாபார செயற்பாடுகள் போதாதன் காரணமாக அது வியாபார அமைப்பினை கடுமையாக தாக்குவதற்கு முன்னர் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய அதிகூடிய கழியும் நேரத்தினுடைய அளவு ஆகும். இது எதிர்பாராத நிகழ்வு பிரகடனப்படுத்த முன்னரான நேரம் மற்றும் வியாபாரம் மீளத் தொடங்கும் புள்ளியில் நோக்கத்தை செயற்படுத்துவதற்கான நேரம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியுள்ளது.

**வழிகாட்டி 5: ஒன்றில் ஒன்று தங்கியுள்ள இடர்நேர்வுகளை முகாமை செய்தல்**

13. நிதி நிறுவனங்களில் இடர்நேர்வுகளை மீள பங்கீடு செய்தல் மற்றம் உள்ளூர், பிராந்தியளவில் அல்லது உலகளாவிய அளவிலான செய்முறைகளில் அதிகரித்த ஈடுபாடுகள் காணப்படுகின்றன. இதன் விளைவாக உள்ளக மற்றும் வெளியக தரப்பினருடன் (தீர்த்தல் நிறுவனங்கள், நிதியியல் செயற்பாட்டு சேவை வழங்குனர்கள், விற்பனை செய்பவர் மற்றும் உட்கட்டமைப்பு வழங்குனர்கள்) அதிகளவில் தங்கியிருக்க வேண்டி ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் முக்கியத்துவமுடைய வியாபார செயற்பாடுகளின் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் இடர்நேர்வுகளை பொருத்தமான அளவில் குறைத்தல் மற்றும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் இடர்நேர்வுகளை முகாமை செய்வதில் ஏற்படும் ஏதாவது தோல்விகள் செயற்றிறனான அல்லது முறைமைசார் வினைத்திறனற்ற அல்லது நிறுவனங்களுடைய தோல்விகளுக்கான காரண எதிர்வு கூறல்களை கொண்டுள்ளது. இத்தகைய ஒன்றில் ஒன்று தங்கியிருத்தலானது, தடங்கலற்ற வியாபாரத்திட்டத்தை தயாரிக்கும் போது கவனத்தில் எடுத்தல் வேண்டும். அத்துடன் இலங்கையில் ஒரு அனர்த்த மீட்சி முறைமையினை சுவிப்ற் உடன் மற்றும் ஏனைய தேவைப்படுத்தப்பட்ட தொடர்பாடல் தொடர்புகள் மற்றும் முறைமைகள்) நிறுவுதல் மற்றும் இடர்நேர்வுகளை குறைத்துக் கொள்வதற்கு மீளமைப்பு தந்திரோபயங்கள் மற்றும் மீளமைப்பு நேர நோக்கங்கள் என்பவற்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதி நிறுவனங்களின் தடங்கலற்ற வியாபார ஒருங்கமைப்பானது முறைமைசார் முக்கியத்துவமுடைய அல்லது முறைமை விசால முக்கியத்துவமான கொடுப்பனவு, தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவு முறைமைக்கு அதனுடைய செயற்பாட்டாளர்களுக்கு அல்லது பங்குபற்றுனருக்கு ஏதாயினும் இடர்நேர்வுகளை அறிமுகப்படுத்தக் கூடாது. அத்துடன் ஒவ்வொரு நிதி நிறுவனங்களும் அத்தகைய முறைமையினுடைய மற்றைய பங்குபற்றுனரைப் பற்றி நம்பியிருக்காது அதனுடைய உட்கட்டமைப்பு மற்றும் முக்கியத்துவமுடைய சேவைகளுக்கு பரந்து விரிந்த மற்றும் நீடித்து செல்லக்கூடிய இடையூறுகளுக்காக தனிப்பட்ட தடங்கலற்ற வியாபார திட்டத்தினை கொண்டிருத்தல் அவசியம். ஏதாவது முக்கிய செயற்பாடுகளுக்காக வெளிமூலங்களின் ஒழுங்குகளில் தங்கியிருப்பின், மூன்றாம் தரப்பினரால் வழங்கப்படும் பணிகளின் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான விதிகளை கொண்டிருத்தல் அவசியம்.

**வழிகாட்டி 6: பரந்த அளவிலான மற்றும் நீடித்த இடையூறுகளுக்கான திட்டமிடல்**

14. நிதி நிறுவனங்களானது, பரந்த விரிந்த அல்லது நீடித்து செல்லக்கூடிய இடையூறுகள் ஏற்படும் போது ஏற்படக்கூடிய முக்கியத்துமுடைய நட்டங்கள் அல்லது சுவிப்ற் மற்றும் தொலைத் தொடர்பாடல் உள்ளடங்கலாக முக்கியமான உட்கட்டமைப்புக்களை அணுக முடியாத தன்மைகள் தொடர்பிலான பின்னணிகளுக்கு ஏற்ற வழிமுறைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

**வழிகாட்டி 7: செறிந்த இடர்நேர்வுகளை குறைப்பதற்கான வேறாக்கக் கொள்கையினைப் பின்பற்றுதல்**

15. நிதி நிறுவனங்கள் செறிந்த இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு தனியார் கொள்கைகளை கடைப்பிடித்தல் வேண்டும். முக்கியமான ஆளணி, தகவல்கள் மற்றும் தேவைப்படுத்தப்பட்ட தொடர்பாடல் தொடர்புகள் மற்றும் சுவிப்ற் போன்ற கொடுப்பனவு உட்கட்டமைப்பு என்பவற்றின் கிடைக்கப்பெறாத தன்மை இடையூறுக்கு காரணமாக அமையலாம். நிதி நிறுவனங்களானது வியாபார செயற்பாடுகள் மற்றும் ஆளணி என்பவற்றினுடைய மையப்படுத்தலிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் வினைத்திறனின் பயன்களை இழக்காத அதே நேரம் இடர்நேர்வு செறிவுபடுத்தலை சமப்படுத்துவதுடன் பொருத்தமான விதத்தில் குறைத்தல் அவசியம். இதன் பிரகாரம் நிதி நிறுவனங்களானது தனியான வியாபார செயற்பாடுகளுக்கு பின்வருவன மூலம் நடவடிக்கைகளை எடுக்கலாம்.

- முதன்மை தலம் மற்றும் அனர்த்த மீளமைப்பு தலம் என்பவற்றை வேறுபட்ட வலயங்களில் நிறுவுதல். ஒரு அனர்த்த மீட்சி தலம் சுவிப்ற் உடனும் மற்றையது ஏனைய தேவைப்படுத்தப்பட்ட தொடர்பாடல் தொடர்புகளுடன் இலங்கையிலும் அமைந்திருத்தல் அவசியம்;
- முக்கிய செயற்பாடுகளை மற்றும் அதனுடைய துணை தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளுடன் வேறுபடுத்தல்; அத்துடன்
- ஆளணியினருடைய வேறுபடுத்தல்/ ஆளணியினருடைய குறுக்கான பயிற்சிகளை வேறுபடுத்தல்.

16. நிதி நிறுவனங்களானது பொருத்தமான அனுமதியுடன் கூடிய மாற்றங்கள் தொடர்பில் அவர்களுடைய தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களை தற்போது வரை சீர்செய்வதற்கு முகாமைத்துவ செயல் முறைகளில் மாற்றத்தை பூரணப்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் ஆவணப்படுத்தல் மற்றும் தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களின் பிரதிகளை அதன் முக்கிய தலத்திலிருந்து வேறான தலத்தில் பேணி வைத்தலுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதி நிறுவனங்களானது வாடிக்கையாளர்கள் உள்ளடங்கலாக தொடர்புடைய தரப்பினருக்கு, அவர்கள் நிறுவனத்தினுடன் செய்த ஒப்பந்தத்துக்கு அமைவாக செயற்படுவதனை அறியத்தரும் பொருட்டு தடங்கலற்ற வியாபாரத் திட்டத்தின் ஏதாவது பகுதியை வெளியிடலாம். தடங்கலற்ற வியாபாரத்திட்டத்தின் பகுதியானது இரகசியத் தன்மை வாய்ந்த ஏதாவது விடயங்களை உள்ளடக்காமல் நிறுவனத்தினுடைய பொதுவான தயார் தன்மை தொடர்பான தகவல்களை உள்ளடக்கியதாக பொதுமக்களின் பார்வைக்காக கிடைக்கச் செய்யலாம்.

17. நிதி நிறுவனங்கள் அனர்த்த நிகழ்வொன்றில் ஏற்படக்கூடிய இடர்நேர்வுகள் மற்றும் நிதியியல் வெளிப்படுத்துகை மிதமாக்கும் தந்திரோபாயமாக காப்புறுதி காப்பீடு ஒன்றினை பெற்றுக் கொள்ளலலாம். ஆனால் காப்புறுதியின் தன்மை மற்றும் கொடுப்பனவினுடைய உறுதித்தன்மை தொடர்பாக அக்கறையுடன் செயற்படுவது தேவைப்படுத்தப்படுகிறது.

18. ஒவ்வொரு நிதி நிறுவனமானது அதனுடைய தடங்கலற்ற வியாபார திட்டங்கள் விடுபடுமிடத்து உடனடியாக இலங்கை மத்திய வங்கியினுடைய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். நிதி நிறுவனங்களானது நெருக்கடிகளை தீர்க்கும் வரையில் அவை காலத்துக்குக் காலம் செயற்பாட்டு அறிக்கைகளை கொடுப்பனவு தீர்ப்பனவ பணிப்பாளருக்கு அனுப்பு வேண்டும்.

19. ஒவ்வொரு நிதி நிறுவனமும் பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு 8ஆம் மாடி 1ஆவது கோபுரம், இலங்கை மத்திய வங்கி, கொழும்பு 01க்கு பின்வரும் ஆவணங்களை அனுப்பும்படி தேவைப்படுத்தப்படுகிறது.

(i) இத்தகைய அறிவுறுத்தல்களை பின்பற்றியதும் பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்டதுமான மீளாய்வு செய்யப்பட்ட தடங்கலற்ற வியாபார திட்டத்தின் படி ஒன்றினை இலங்கை மத்தி வங்கியின் பார்வைக்கு செத்தெம்பர் 29, 2006 அன்றோ அல்லது அதற்கு முன்போ;

(ii) ஆண்டுக்கான இடர்நேர்வு முகாமைத்துவ அறிக்கையானது முக்கியமான முறைமைகள், ஒவ்வொரு முறைமைகளினுடைய குறிக்கோள்கள் மீட்சியடையும் நேரம் மற்றும் அவற்றை அடைவதற்கன திட்டங்கள் மற்றும் தந்திரோபாயங்களை குறிப்பிட்டு ஒவ்வொரு ஆண்டும் சனவரி 15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ; அத்துடன்

(iii) ஓர் காலாண்டு அறிக்கையானது தொடர்புடைய காலாண்டு முடிவடைந்து இரண்டு வார காலப்பகுதிக்குள் அத்தகைய காலப்பகுதியில் எழுந்த மைய வங்கித்தொழில்/ வியாபாரம் மற்றும் கொடுப்பனவு, தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவு ஆகியவற்றுக்கான எதிர்பாராத சம்பவங்கள் (திகதி, நேரம் மற்றும் பிரச்சனைகளினுடைய தன்மை) அவற்றைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் சீர்செய்யப்பட்ட நேரம் மற்றும் எதிர்காலத்தில் அத்தகைய இழப்புக்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை அறிக்கையிடல்

**டாக்டர் ராணி ஜெயமகா**
பிரதி ஆளுநர்

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/08/2006**

2006 மே 15

*லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**லங்கா செட்டில் முறை ஒழுங்கு விதிகளுக்கான திருத்தம் - 2003 ஒகத்து (திருத்தப்பட்டவாறு)**

**லங்கா செட்டில் முறையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை**

அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைக்கு தீர்ப்பனவு இசைவுகளின் மீது பல்புடைத் தேறிய தீர்ப்பனவு தொகுதியினை சமர்ப்பிப்பதற்கான குறித்துரைக்கப்பட்ட நேரத்தினை மாற்றுவதற்கு லங்கா கிளியர் 2006 மே 10ஆம் நாளன்று மத்திய வங்கி கோரியது. **இவ்வவசரத் தேவைப்பாட்டினைக் கையாள்வதற்காக நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை தொடர்பான லங்கா செட்டில் முறை ஒழுங்கு விதிகளின் (திருத்தப்பட்டவாறு) தொகுதி 4 இன் கிளைவாசகம் 1.2 இலுள்ள அட்டவணையினைத் திருத்துவதற்கு** மத்திய வங்கி தீர்மானித்திருக்கிறது.

2. **நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை தொடர்பான லங்கா செட்டில் முறை ஒழுங்கு விதிகளின் (திருத்தப்பட்டவாறு) தொகுதி 4இன் கிளைவாசகம் 1.2 இலுள்ள அட்டவணை 2006 மே 15ஆம் நாள் தொடக்கம் பின்வருமாறு வாசிக்கப்படும் விதத்தில் திருத்தப்படுகிறது** என்பதனை தங்களுக்கு இத்தால் அறியத்தருகிறோம்.

| நேரம் | நிகழ்வு | நடவடிக்கைகள்/ கொடுக்கல் வாங்கல்கள் |
|---|---|---|
| மு.ப. 6.30 | முறை ஆரம்பமாகிறது | அ.நே.மொ.தீ.முறை/ ப.பி. முறைப் பிரயோகம் |
| மு.ப. 7.30 இலிருந்து மு.ப. 8.00 மணி வரை | நாளாந்த செய்முறைகள் ஆரம்பமாதல் | பிணையங்களின் அலுவல்சார் விலைகளை பூரணப்படுத்தல் மற்றும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியைக் குறிப்பிடல் |
| மு.ப. 8.00 | லங்கா செட்டில் முறை வியாபாரத்திற்காக திறக்கப்படுதல் | கணனி முறையானது கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ள திறக்கப்படுகிறது |
| மு.ப. 8.00 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி/ மீள் கொள்வனவு தன்னியக்கமாக நேர்மாற்றுதல் | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியை வழங்குதல் மற்றும் தி.ச.தொழிற்பாட்டின் மீள்கொள்வனவின் இரண்டாம் பிரிவினை தீர்த்தல் |
| மு.ப. 8.15 | முதிர்ச்சி வட்டிக் கொடுப்பனவுகள் நாளின் கோவையைத் தொடங்குதல் | முதிர்ச்சிப் பெறுகைகளை தீர்ப்பனவு செய்தல்/ பிணையங்களின் நறுக்குக் கொடுப்பனவுகள், லங்கா செட்டிலின் கட்டணங்கள்/ தண்டப்பணத்தினை மேற்கொள்ளுதல் |
| மு.ப. 8.30 | லங்கா கிளியரிலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | சிலிப்ஸ்/ பிரதான இசைவுகள் |
| மு.ப. 8.30 | உடனடி விற்பனை/ கொள்வனவுகள் | தி.ச. தொழிற்பாட்டின் உடனடி விற்பனை மற்றும் கொள்வனவுகளை தீர்த்தல் |
| மு.ப. 11.00 | நேர்மாற்று மீள்கொள்வனவினை நேர்மாற்றுதல் | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவின் இரண்டாம் பிரிவினை தீர்ப்பனவு செய்தல் |
| மு.ப. 11.45 | நேர்மாற்று மீள் கொள்வனவு (ஏலம்) | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவின் முதலாம் பிரிவினை தீர்ப்பனவு செய்தல் |
| பி.ப. 12.45 | மீள்கொள்வனவு ஏலம் | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான மீள்கொள்வனவின் முதலாம் பிரிவினை தீர்ப்பனவு செய்தல் |
| பி.ப.1.00 | முதலாந்தர ஏலத் தீர்ப்பனவினை மூடுதல் | முதலாந்தர ஏலங்களின் கீழ் பிணையங்களை தீர்ப்பனவு செய்தல் |
| பி.ப. 2.15 | லங்கா கிளியலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | ரூபா வரைவுத் தீர்ப்பனவு |

| நேரம் | நிகழ்வு | நடவடிக்கைகள்/ கொடுக்கல் வாங்கல்கள் |
|---|---|---|
| பி.ப. 2.45 | லங்கா கிளியலிருந்தான பல்புடை தேறிய தீர்ப்பனவுத் தொகுதி | தீர்ப்பனவு இசைவு மற்றும் சீராக்க இசைவு |
| பி.ப.3.00 | மூன்றாந்தரப்பு கொடுக்கல் வாங்கல்களுக்கான பிரதான நேரக் குறைப்பு | வங்கியிலிருந்து வங்கிக்கானவை நீங்கலாக மூன்றாந்தரப்பினா் சாா்பாக புதிய கொடுக்கல் வாங்கல்களை (T+0 இற்காக) மூடுதல் (MT2XX தொடர்கள்) |
| பி.ப.4.00 | மீள்கொள்வனவு (துணை நில்) | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான மீள்கொள்வனவின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப.4.15 | நேர்மாற்று மீள்கொள்வனவு துணை நில் | தி.ச. தொழிற்பாடுகளின் கீழான நேர்மாற்று மீள்கொள்வனவின் முதலாவது பிரிவின் தீர்ப்பனவு |
| பி.ப.4.15 | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மீள்கொடுப்பனவு | ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மீள்கொடுப்பனவு |
| பி.ப.4.30 | வியாபாரத்திற்கான மூடும் நேரத்தினை இறுதியாகக் குறைத்தல் | மேலதிக உள்ளீடுகள் எதுவும ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. வியாபாரத்திற்கு முறை மூடப்பட்டதுடன் ஒழுங்கு/ தீர்ப்பனவு செயற்பாடுகள் நிறுத்தப்படுவதுடன் இன்னமும் ஒழுங்கலிலிருந்த எந்த ஒரு கொடுக்கல் வாங்கலும் நிராகரிக்கப்படும். |
| பி.ப.4.30 இலிருந்து பி.ப. 5.15. வரை | நாளின் முடிவிலுள்ள செய்முறை | நாளின் முடிவிலுள்ள செய்முறைகள் அதாவது அறிக்கை/ பொதுப் பேரேட்டு ஏற்றுமதிக் கோவை, பட்டியலிடல் கூற்றுக்களை அச்சடிக்கும் நோக்கங்களுக்காக தரவுத் தளத்தினைப் பேணுதல் |
| பி.ப. 5.15 | கணனி முறையை மூடிவிடுதல் | அ.நே.மொ.தீ.முறை/ ப.பி முறையின் மென்கலப் பிரயோகங்களை மூடிவிட ஆரம்பித்தல், வேறிடத்தில் சேமிப்பதற்கான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் |

3. இதன்படி 2006 மே 15ஆம் நாளிலிருந்து இலங்கை மத்திய வங்கி அதன் அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை ஆகிய பிரதேச அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த பிரதேச காசோலை தீர்வினை நிறுத்திக் கொண்டது.

**சி. பிரேமரத்ன**

பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**கே.ஆர்.எம். சிறிவர்த்தன**

பணிப்பாளர்/கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/10/2006**

2006 திசெம்பர் 12

*லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**லங்கா செட்டில் முறையில் பங்கேற்பாளர்களிடையேயான கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிற்கான நியம நேரங்கள்**

தேசிய கொடுப்பனவுச் சபையினால் லங்கா செட்டில் முறை, காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறை மற்றும் இலங்கை வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறை என்பனவற்றின் பங்கேற்பாளர்களது நடத்தைக்காக விதிகளையும் நியமங்களையும் முன்மொழிவதற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர் சங்கம் (உத்தரவாதம்) முதனிலை வணிகர் சங்கம், லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட் இலங்கை மத்திய வங்கி என்பனவற்றிலிருந்தான பிரதிநிதிகள் உள்ளடக்கிய தொழில்நுட்பக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

தொழில்நுட்பக்குழுவினால் செய்யப்பட்ட முன்மொழிவுகள் தேசிய கொடுப்பனவுச் சபையினால் 2006 ஒத்தோபர் 20ஆம் நாள் நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஆராயப்பட்டதுடன், லங்கா செட்டில் பங்கேற்பாளர்கள், பங்கேற்பாளர்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிற்காக பின்வரும் நடைமுறைகளை நடைமுறைப்படுத்த இணங்கினர்.

**அ) முன்போக்கிய பெறுமதிக் கொடுக்கல் வாங்கல்கள்**

எதிர்கால' பெறுமதி திகதிகளுக்காக பங்கேற்பாளர்களிடையே மேற்கொள்ளப்பட்ட பணச்சந்தை மற்றும் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் (ரூபாய் பிரிவு) குறிப்பிட்ட பெறுமதி திகதிக்கு முன்னதாக லங்கா செட்டில் முறையில் செய்யப்பட வேண்டும். இதன்படி, கொடுப்பனவு பங்கேற்பாளர் அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவினை பெறுமதி நாளன்று மு.ப. 10.00 மணியளவில் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

**ஆ) அதேநாள் பெறுமதிக் கொடுக்கல் வாங்கல்கள்**

கொடுப்பனவு பங்கேற்பாளர்கள், பணச்சந்தை மற்றும் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் (ரூபாய் பிரிவு) களுக்கான அதேநாள் பெறுமதிக் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவு அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டு இரண்டு மணித்தியாலங்களுக்கிடையில் தீர்க்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இதன்படி, 2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறை விதிகளின் தொகுதி 2 ஆனது (கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு) இணைக்கப்பட்ட பிரிவினை, பிரிவு 9ஆக - பங்கேற்பாளர்களுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட லங்கா செட்டில் முறை விதிகளின் தொகுதி 2இன் இறுதியில் 2006 திசெம்பர் 15ஆம் நாளிலிருந்து உட்புகுத்துவதன் மூலம் திருத்தப்படுமென்பதனை தங்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| **கே.ஆர்.எம். சிறிவர்த்தன** | **சி. பிரேமரத்ன** |
| பணிப்பாளர்/கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு | பொதுப்படுகடன் கண்காணிப்பாளர் |

இணைப்பு

**லங்கா செட்டில் முறை விதிகளின் தொகுதி 2இற்கான (கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்) திருத்தம்**

**"9 பங்கேற்பாளர்களிடையேயான கொடுக்கல் வாங்கல்கள்**

**9.1 முன்னோக்கிய பெறுமதிக் கொடுக்கல் வாங்கல்கள்**

எதிர்காலப் பெறுமதி திகதிகளுக்காக பங்கேற்பாளர்களிடையே மேற்கொள்ளப்பட்ட பணச்சந்தை மற்றும் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் லங்கா செட்டில் முறையில் பெறுமதி நாளிற்கு முன்னதாக தீர்ப்பனவு செய்யப்படுதல் வேண்டும். இதன்படி, கொடுப்பனவு பங்கேற்பாளர்கள் அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவினை பெறுமதி நாளன்று மு.ப. 10.00 மணியளவில் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

**9.2 அதேநாள் பெறுமதிக் கொடுக்கல் வாங்கல்கள்**

கொடுப்பனவு பங்கேற்பாளர்கள், பணச்சந்தை மற்றும் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களுக்கான (ரூபாய் பிரிவு) அதேநாள் பெறுமதிக் கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவு அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படும் இரண்டு மணித்தியாலங்கிடையில் தீர்க்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்."

**தொடர்பு: 34/07/029/0001/001**

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/11/2006**

2006 திசெம்பர் 29

*லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**லங்கா செட்டில் முறையின் பங்கேற்பாளராக ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி (பாகித்தான்) லிமிடெட்டினை நியமித்தல்**

பாகித்தான் ஸ்டேட் வங்கியின் ஒப்புதலின் கீழ் ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி (பாகித்தான்) லிமிடெட்டிற்கும் யூனியன் வங்கி லிமிடெட் (பாகித்தானில் கூட்டிணைக்கப்பட்டது) டிற்குமிடையில் பாகித்தானில் மேற்கொள்ளப்படவிருக்கும் ஒருங்கிணைப்புத் திட்டத்தினை கருத்திற் கொண்டு நாணயச்சபையானது ஸ்டான்டர்ட் சார்டட் (பாகித்தான்) லிமிடெட்டிற்கு வர்த்தக வங்கித்தொழில் உரிமத்தினை வழங்குவதற்கு ஒப்புதலளித்திருக்கிறது. ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி (பாகித்தான்) லிமிடெட், அத்தகைய ஒருங்கிணைப்பு, 2006 திசெம்பர் 30ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் என அறிவித்திருக்கின்றது. இதன்படி, 2007 சனவரி 01ஆம் நாள் தொடக்கம் லங்கா செட்டில் முறையின் மீதான ஒழுங்குகள் பின்வருமாறு இருக்கும்.

ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி (பாகித்தான் லிமிடெட், லங்கா செட்டில் முறையின் வணிகர் நேரடிக் பங்கேற்பாளராக மாறவுள்ளதுடன் யூனியன் வங்கி லிமிடெட் (பாகித்தானில்) கூட்டிணைக்கப்பட்டது) வசம் தற்பொழுதுள்ள வாடிக்கையாளர் கணக்கு ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி (பாகித்தான்) லிமிடெட்டினால் வைத்திருக்கப்படும். சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை தீர்ப்பனவுக் கணக்கு இலக்கமும் மாற்றமின்றி கீழேயுள்ளவாறு இருக்கும்.

| | |
|---|---|
| சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக் குறியீடு | : UNBLLKLC |
| அதேநேர மொத்த தீர்ப்பனவுக் கணக்கு இல. | : UNBLLKLCXXX010004413 |

ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி (பாகித்தான்) லிமிடெட்டினன் தொடர்பு விபரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| முதன்மை நிறைவேற்று அலுவலர்/ நாட்டிற்கான முகாமையாளர் | : திரு. கோகாறுலாயன் அவ்சால் |
| தொலைபேசி | : 2675046 |
| தொலைநகல் | : 5331848 |
| மின்னஞ்சல் | : goharulayn_afzal@ubipk.com |

யூனியன் வங்கி லிமிடெட்டின் (பாகித்தானில் கூட்டிணைக்கப்பட்டது). வியாபாரம் 2006 திசெம்பரில் மூடப்படுவதனால் லங்கா செட்டில் முறையில் பங்கேற்பாளராக தொழிற்படுவது நிறுவத்தப்படும்.

லங்கா செட்டில் முறையின் நிலையான தளம் கீழே காட்டப்பட்டவாறு மாற்றமடையும்.

(i) லங்கா செட்டில் முறையிலுள்ள பங்கேற்கும் நிறுவனமான யூனியன் வங்கி லிமிடெட் பாகித்தானின் பெயர் ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி லிமிடெட் பாகித்தான் என மாற்றமடையும்; அத்துடன்

(ii) லங்கா செட்டில் முறையிலுள்ள கணக்குப் பெயரான யூனியன் வங்கி லிமிடெட் பாகித்தானின் தீர்ப்பனவுக் கணக்கு ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி பாகித்தான் செட்டில் கணக்கு என மாற்றமடையும்.

**சி. பிரேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**கே.ஆர்.எம். சிறிவர்த்தன**
பணிப்பாளர்/கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

**சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/01/2006**

2006 பெப்புருவரி 28

*லங்கா செட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**மத்திய வைப்பக முறையில் பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல்**

லங்கா செட்டிலினது முறை ஒழுங்கு விதிகளின் கட்டுக்காப்பு பொறுப்புக்களின் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு, பிணையத்தின் சட்ட ரீதியான சொத்து உரிமையினை சரியாகவும் துல்லியமாகவும் பதிவு செய்வது மத்திய வைப்பக முறையிலுள்ள பணிகள் நேரடி பங்கேற்பாளர்களின் தனிப்பொறுப்பாகும். கொடுக்கல் வாங்கல்களின் வேறுபட்ட வகைகளைப் பதிவு செய்வதற்கு முறையில் வேறுபட்ட வகைக் கணக்குகள் காணப்படுகின்றன. எனினும், பெரும்பாலான பங்கேற்பாளர்கள் பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களை குறிப்பாக மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளை இலங்கை மத்திய வங்கியின் மத்திய வைப்பக முறையிலுள்ள பிழையான கணக்குகளில் பதிவு செய்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

பங்கேற்பாளர்களின் நோக்கில், முறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கணக்குகளின் நான்கு வகைகளினது கருத்துக்களை பின்வருவன சுட்டிக் காட்டுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | வர்த்தகப்படுத்தத்தக்க மீள்கொள்வனவுக் கணக்குகள் | சிஆர்ஈ |
| 2. | வர்த்தகப்படுத்த முடியாத மீள்கொள்வனவுக் கணக்குகள் | சிஆர்ஆர் |
| 3. | வர்த்தகப்படுத்தத்தக்க நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்குகள் | சிஆர்பி |
| 4. | வர்த்தகப்படுத்த முடியாத நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்குகள் | ஆர்ஈபி |

பங்கேற்பாளர்கள் தமது மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் விதத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

(அ) வாடிக்கையாளர் பிணையங்களுடன் பங்கேற்பாளர்களினால் செய்யப்படும் மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் வாடிக்கையாளர்களுக்கு சட்ட ரீதியான சொத்துரிமையை வழங்குகின்ற பங்கேற்பாளர்களின் சிஆர்ஈ அல்லது சிஆர்ஆர் கணக்கில் வைத்திருக்கப்பட வேண்டும்.

(ஆ) இன்னொரு பங்கேற்பாளருடன் அல்லது வாடிக்கையாளர் கடன்பாட்டு தரப்பினருடன் பங்கேற்பாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் பிணையங்கள் கடன் வழங்கல் தரப்பினரின் (நேர்மாற்று மீள்கொள்வனவு தரப்பினர்) சிஆர்பி இற்கு அல்லது ஆர்ஈபி கணக்கிற்கு மாற்றல் செய்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டனவற்றிற்கு புறம்பாக, பங்கேற்பாளர்களினால் வாடிக்கையாளர்களுக்கு செய்யப்படும் பிணையங்களின் உடனடி விற்பனைகள் சிஎஸ்எல் வகைக் கணக்கில் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் மற்றைய பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்கள் இக் கணக்கில் பதிவு செய்யப்படக்கூடாது. லங்கா சிகுயரில் கிடைக்கத்தக்கதாகவுள்ள கணக்கு வகைகளின் விபரங்கள் இணைப்பு 1இல் தரப்பட்டுள்ளன.

இதன்படி, அனைத்து பங்கேற்பாளர்களும் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட லங்கா செட்டிலின் முறை ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப மேலேயுள்ள பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்களை சரியான கணக்கில் பதிவு செய்யுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்

**சி. பிரேமரத்ன**

பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

## லங்கா செகுயரில் கிடைக்கத்தக்கதாகவுள்ள கணக்கு வகைகள்

இணைப்பு 1

லங்கா செகுயரில் பின்வரும் கணக்கு வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. மத்திய வங்கியானது அதன் தற்றுணிபின்படி பங்கேற்பாளருக்கும் அல்லது பங்கேற்பாளர் வகைக்கும் அதேபோன்று ஒவ்வொரு கணக்கு வகைக்கும் ஏற்புடைத்தாகக்கூடிய கொடுக்கல் வாங்கல் வகைகளையும் கட்டுப்படுத்தலாம்.

| கணக்கு வகை | குறியீடு | நோக்கம் |
|---|---|---|
| பங்கேற்பாளருக்கு/ மத்திய வங்கிக்கு சொந்தமான கணக்கு | ஓடபிள்யூஎன் | பங்கேற்பாளர்/ மத்திய வங்கிக்கு சொந்தமான பிணையங்களை வைத்திருப்பதற்கு |
| ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி கணக்கு | ஐஎல்எவ் | பங்கேற்பாளர்களைப் பொறுத்தவரையில் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக்கான பிணையங்களாக மத்திய வங்கிக்கு மாற்றல் செய்யப்படவுள்ள மற்றும், மத்திய வங்கியைப் பொறுத்தவரை பங்கேற்பாளர்களினால் மத்திய வங்கிக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக்கான பிணையமாக மாற்றல் செய்யப்படும் பிணையங்களை வைத்திருப்பதற்கு. |
| பிணைக்கணக்கு | பிஎல்ஜீ | பங்கேற்பாளர்களுக்கு (ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் முகவர் ஒருவரைப் பொறுத்தவரை) அல்லது பங்கேற்பாளர் யாருக்காக தொழிற்படுகின்றார்களோ அந்த முயற்சிக்கு பிணையிடப்பட்டிருக்கிற பிணையங்களை வைத்திருப்பதற்காக பிணையாளரின் பெயர் சொந்தக்காரரின் இடத்தில் பதிவு செய்யப்படுகிறது. ஏற்புடைத்தான ஒழுங்கு விதிகளுக்கு இணங்கவன்றி இக்கணக்குகளிலுள்ள பிணையங்களை விற்பனை செய்ய முடியாது. |
| வாடிக்கையாளர் கணக்கு (வதிவோர்) | சிஎஸ்எல் | பிணைய உடமைகள் பங்கேற்பாளர்களின் வாடிக்கையாளரான "இலங்கையில் வதியும் ஆட்களுக்கு" சொந்தமான பிணையங்களை வைத்திருப்பதற்கு கணக்கானது பிணையக் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள குறித்துரைக்கப்பட்ட வதியும் சொந்தக்காரரினால் உருவாக்கப்பட்டதாக இக்கணக்கு வகை வணிகர் நேரடி பங்கு பற்றுநர்களுக்கு மட்டுமே கிடைக்கத்தக்கதாகவுள்ளது. |
| வாடிக்கையாளர் கணக்கு (வதிவற்றோர்) | சிஎஸ்எவ் | "இலங்கைக்க வெளியே வதியம் ஆட்களுக்கு" சொந்தமான பிணையங்களை வைத்திருப்பதற்காக கணக்கானது பிணையக் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள குறித்துரைக்கப்படட வதிவற்ற சொந்தக்காரரினால் உருவாக்கப்பட்டதாகும். இக்கணக்கு வகை வணிகர் நேரடிப்பங்கு பற்றுநர்களுக்கு மட்டுமே கிடைக்கத்தக்கதாகவுள்ளது. |
| வர்த்தகப்படுத்தத்தக்க மீள்கொள்வனவுக் கணக்கு | சிஆர்பி | நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் பங்கேற்பாளர்களினால் அல்லது வாடிக்கையாளர்களினால் வாடிக்கையாளர்களுக்கு மாற்றல் செய்யப்படுகின்ற பிணை உடமைகள். இவை அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் எதிர்கால திகதியொன்றினால் மாற்றப்படும். இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கனவாகும். |
| வர்த்தகப்படுத்த முடியாத மீள்கொள்வனவுக் கணக்கு | ஆர்ஈபி | நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் பங்கேற்பாளர்களினால் அல்லது வாடிக்கையாளர்களினால் வாடிக்கையாளர்களுக்கு மாற்றல் செய்யப்படுகின்ற பிணை உடமைகள். இவை அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் எதிர்கால திகதியொன்றினால் மாற்றப்படும். இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகம் செய்ய முடியாதனவாகும். |
| வர்த்தகப்படுத்தத்தக்க வாடிக்கையாளர் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்கு | சிஆர்ஈ | நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் பங்கேற்பாளர்களினால் அல்லது வாடிக்கையாளர்களினால் மாற்றம் செய்யப்பட்ட அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் எதிர்கால திகதி ஒன்றிற்கு மாற்றல் செய்வதற்காக வைத்திருக்கப்படும் பிணையங்கள். இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கனவாகும். |
| வர்த்தகப்படுத்த முடியாத வாடிக்கையாளர் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்கு | சிஆர்ஆர் | நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் பங்கேற்பாளர்களினால் அல்லது வாடிக்கையாளர்களினால் மாற்றல் செய்யப்பட்ட அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின் கீழ் எதிர்கால திகதி ஒன்றிற்கு மாற்றல் செய்வதற்காக வைத்திருக்கப்படும் பிணையங்கள். இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்த முடியாதவையாகும். |
| நியதி முதலீட்டுக் கணக்கு | எஸ்ரிஐ | பங்கேற்பாளர்களினால் விதிக்கப்பட்ட நியதி ஒதுக்கு தேவைப்பாட்டினை ஈடுசெய்தற்காக பங்கேற்பாளர்களினால் வைத்திருக்கப்படும் பிணையங்கள். |
| முதலாந்தர ஏலக் கொள்வனவுக் கணக்கு | பிஏபி | முதலாந்தர ஏலங்களில் கொள்வனவு செய்யப்பட்ட பிணை உடமைகள் (முதனிலை வணிகர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட வணிகரல்லா விலைக்கோருநரின் பயன்பாட்டிற்கு மாத்திரம்). |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கு | டிஓபி | மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் மத்திய வங்கியினால் பங்கேற்பாளர்களுக்கு மாற்றல் செய்யப்பட்ட எதிர்கால திகதியொன்றில் மத்திய வங்கிக்கு திருப்பி அனுப்பப்படவுள்ள பிணை உடமைகள். இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கனவல்ல. |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்கு | டிஆர்பி | மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் மத்திய வங்கிக்கு பங்கேற்பாளர்களால் மாற்றல் செய்யப்பட்ட பிணை உடமைகள் எதிர்காலத் திகதியொன்றில் பங்கேற்பாளர்களுக்கு திருப்பி அனுப்பப்படும். |

**தொடர்பு எண்: 08/24/002/0005/006**

பொதுப்படுகடன் திணைக்களம்

2006 யூன் 22

*முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

**முதனிலை வணிகர்களுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமைக் கட்டமைப்பின் மீதான பணிப்புரை**

உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் 2002 பெப்புருவரி 1ஆம் நாள் நிதியமைச்சரினால் விடுக்கப்பட்ட 2002ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஒழுங்கு விதிகளின் 12ஆம் பிரிவின் நியதிகளில் கீழ் இப்பணிப்புரை விடுக்கப்படுகிறது.

1. **முதனிலை வணிகர்கள் 2006 யூலை 01ஆம் நாளிலிருந்து பின்வருவனவற்றைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்:**

அ. ரூ.300 மில்லியனுக்கும் கூடுதலான (ஆகக் குறைந்த மூலதனம்) அல்லது வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் வட்டி வீத மாறும் தன்மை நேர்மாற்று மீள்கொள்வனவு மற்றும் அனுமதிக்கப்படாத படிகள் மீதான இடர்நேர்வு (மூலதனக் கட்டணங்கள்) மற்றும் இணைத்தரப்பினரின் கொடுகடன் இடர்நேர்வு என்பனவற்றை ஈடுசெய்யப் போதுமானதான தேவைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த மூலதனத்தினை;

ஆ. தேறிய மூலதனம் [மூலதனம் (அடுக்கு 1 மற்றும் அடுக்கு 2) கழிக்குக இணைத்தரப்பு இடர்நேர்வுகளுக்கான மூலதனம்], இது மூலதனக் கட்டணத்திற்கு சமமானதாக அல்லது உயர்வாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

இ. 8% கொண்ட ஆகக் குறைந்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதமொன்றினை

நீண்ட, குறுங்கால நிலைமைகளுக்கான (மூலதனக் கட்டணம்) இடர்நேர்வு வெளிப்படுத்துகையுடன் சேர்ந்த விளைவுகளில் எடுகோள் கொள்ளப்பட்ட மாற்றத்திற்கு முதனிலை வணிகர்களின் சொத்துப்பட்டியல் மாற்றமடைவதனை கணிக்கின்ற முறையிலும் இணைத்தரப்பு கொடுகடன் இடர்நேர்வு தேவைப்பாடும் அட்டவணை 1 மற்றும் 2இல் தரப்பட்டுள்ளன.

2. **முதனிலை வணிகர்கள் மூலதனப் போதுமையினை அறிக்கையிடுவது தொடர்பாக பின்வரும் தேவைப்பாடுகளுக்கு 2006 யூலை 01ஆம் நாளிலிருந்து இணங்கி நடக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.**

அனைத்து முதனிலை வணிகர்களும் அட்டவணை 3இல் இலத்திரனியல் வடிவமைப்பில் (மின்னஞ்சல்/ மென்பொருள்படி) தரப்பட்டுள்ள குறிக்கப்பட்ட படிவத்தில் அவர்களது மூலதனப் போதுமை நிலைமையினை மாதாந்த அடிப்படையில் அறிக்கையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தொடர்பான மாதத்திற்குரிய அறிக்கையிடும் படிவங்கள் ஒவ்வொரு முதனிலை வணிகர்களினாலும் பூர்த்தி செய்யப்பட்டு அடுத்து வரும் மாதத்தின் 15ஆம் நாளுக்கு முன் பொதுப்படுகடன் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்வறிக்கையிடுகின்ற படிவம் மற்றையவற்றுடன்

(அ) ஆகக் குறைந்த முழுமையான மூலதனத் தேவைப்பாடு திருப்திகரமானதாகவுள்ளதா; அத்துடன்

(ஆ) மூலதனப் போதுமை விகிதம் அதன் தேவைப்படுத்தப்பட ஆகக் குறைந்த மூலதனப் போதுமை விகிதத்தினை விட உயர்வானதாக அல்லது குறைவானதா என்பனவற்றை

உள்ளடக்குதல் வேண்டும்.

அனைத்து முதனிலை வணிகர்களும் நாளாந்த அடிப்படையில், மேலே குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த மூலதன மற்றும் மூலதனப் போதுமை விகிதத் தேவைப்பாடுகளை பேண வேண்டும் எனவும் அத்தகைய தேவைப்பாடுகள் கண்காணிக்கக்கூடிய பொருத்தமான பொறிமுறைகளை கொண்டிருக்க வேண்டுமெனவும் கேட்கப்படுகின்றனர்.

3. **மூலதன நிதியம், தேறிய மூலதனம், ஆகக் குறைந்த மூலதனம் கேட்டுக் கொள்ளப்பட்ட ஆகக் குறைந்த மூலதனம், மூலதனப் போதுமை விகிதம் மற்றும் ஆகக் குறைந்த மூலதனப் போதுமை விகிதம் என்பவற்றின் வரைவிலக்கணம்.**

3.1 **மூலதன நிதியம்**

**மூலதன நிதியம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:**

**அடுக்கு - I மூலதனம்**

(அ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்.

(ஆ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட திரளாத முன்னுரிமைப் பங்குகள் (மீட்புச் செய்யப்பட முடியாத அல்லது வழங்குநரின் விருப்பத்துடன் மீட்புச் செய்யப்படத்தக்கது)

(இ) பங்கு வட்டக் கணக்கு

(ஈ) வைத்திருக்கும் வருவாய்கள் அல்லது மற்றைய மிகைகளின் ஒதுக்குகள் மூலம் ஒதுக்கீடுகளை உருவாக்குவது அல்லது அதிகரிப்பது, உதாரணம் வைத்திருக்கப்படும் இலாபங்களும் ஏனைய ஒதுக்குகளும் (நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு

ஒதுக்குகளும் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களின் மீதான வைத்திருக்கப்பட்ட இலாபமும் நீங்கலாக. கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்கள் மீதான வைத்திருக்கப்படும் இலாபத்தினை நியதிக்கணக்காய்வாளரின் சான்றிதழை வழங்குமிடத்து உள்ளடக்கமுடியும்)

**கழிக்குக:**

நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள், ஒன்று சேர்ந்த இழப்புக்கள்

**அடுக்கு II மூலதனம்**

அடுக்கு II மூலதனம் பின்வருவனவற்றை உள்ளடக்குவதுடன் அடுக்கு I மூலதனத்தில் 50% இற்கு மட்டுப்படுத்தப்படும்.

(அ) நடுத்தரகால துணைப்படுகடன் (3 ஆண்டுகளுக்கும் கூடுதலான முதிர்ச்சிக்காலம்)

(ஆ) நீண்டகால துணைப்படுகடன் (5 ஆண்டுகளுக்கும் கூடுதலான முதிர்ச்சிக் காலம்)

(இ) திரண்ட முன்னுரிமைப் பங்குகள்

(ஈ) நிலையான துணைப்படுகடன்

அடுக்கு II மூலதனத்தில் உள்ளடக்கப்படுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, சாதனமானது முழுமையாக செலுத்தப்பட்டதாக, பிணையிடப்படாததாக, ஏனைய கடன்வழங்கியோரின் கோரல்களுக்கு துணையானதாக, கட்டுப்படுத்தப்பட்ட கிளை வாசகங்களற்றதாக இருக்க வேண்டியதுடன் உடமையாளர்களின் முயற்சிகளில் அல்லது இலங்கை மத்திய வங்கியின் சம்மதமின்றி மீட்கப்பட முடியாததாகவும் இருத்தல் வேண்டும். இச்சாதனம் அடுக்கு II மூலதனத்தில் உள்ளடக்கப்படுவதற்கு நிலையான முதிர்ச்சியை கொண்டிருக்க வேண்டியதுடன், இது முதிர்ச்சியை அணுகக் கூடியதாகவும் இது படிப்படியான கழிவிற்கும் உட்பட்டிருத்தலும் வேண்டும். சாதனங்களின் ஆரம்ப முதிர்ச்சிக்காலம் 3 ஆண்டுகளுக்கு சமமானதாக அல்லது குறைவானதாக இருக்குமிடத்து அடுக்கு II மூலதனத்தின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படக்கூடாது. அடுக்கு II மூலதனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள துணைப்படுகடன் சாதனங்கள் கீழே காட்டப்பட்டுள்ள வீதங்களில் மீள்கழிவிடலுக்கு உட்பட்டிருக்கும்:

**3.2 தேறிய மூலதனம்**

தேறிய மூலதனமானது இணைத்தரப்பு இடர்நேர்வு மூலதனத் தேவைப்பாடுகள் கழித்த, அடுக்கு I மற்றும் அடுக்கு II மூலதனங்களை உள்ளடக்குகிறது.

**3.3 ஆகக் குறைந்த மூலதனம்**

ஆகக் குறைந்த மூலதனம் ரூ.300 மில்லியன், இது மத்திய வங்கியினால் விதிக்கப்பட்டிருப்பதுடன் முதனிலை வணிகர்களினால் இது பேணப்பட வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

**3.4 கேட்டுக் கொள்ளப்பட்ட ஆகக் குறைந்த மூலதனம்**

கேட்டுக் கொள்ளப்பட்ட ஆகக் குறைந்த மூலதனம் என்பது ரூ.300 மில்லியனுக்குக் கூடுதலான (ஆகக் குறைந்த மூலதனம்)

| சாதனங்களின் எஞ்சிய முதிர்ச்சிக் காலம் | கழிவிடல் வீதம் % |
|---|---|
| ஓராண்டிற்கும் குறைவானது | 40.00 |
| ஓராண்டும் அதற்குக் கூடுதலானதும் ஆனால் இரண்டாண்டிற்குக் குறைவானதும் | 20.00 |
| ஈராண்டும் அதற்குக் கூடுதலானதும் ஆனால் மூன்றாண்டுகளுக்குக் குறைவானது | 0 |
| மூன்றாண்டும் அதற்குக் கூடுதலானதும் | 0 |

அல்லது வர்த்தகப்படுத்துகின்ற சொத்துப்பட்டியலின் வட்டிவீத மாறும் தன்மை, அத்துடன் நேர்மாற்று மீள்கொள்வனவு, அனுமதிக்கப்படாத படிகளுக்கான மூலதனம் (மூலதனக் கட்டணம்) மற்றும் இணைத்தரப்பு கொடுகடன் இடர்நேர்வு என்பனவற்றை ஈடுசெய்வதற்கு போதுமான மூலதனம் என்பதாகும்.

**3.5 மூலதனப் போதுமை விகிதம்**

மூலதனப் போதுமை விகிதமென்பது கிடைக்கத்தக்க மூலதனத்தினை இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களினால் வகுப்பதன் மூலம் கணிக்கப்படுகின்ற வீதமாகும்.

**3.6 ஆகக் குறைந்த மூலதனப் போதுமை விகிதம்**

ஆகக் குறைந்த மூலதன போதுமை விகிதமென்பது ஆகக் குறைந்த தேவைப்பாட்டு மூலதனத்தினை இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களினால் வகுப்பதன் மூலம் கணிக்கப்படுகிறது.

**சி. பிரேமரத்ன**

பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**அட்டவணை 1**

## சந்தை இடர்நேர்வுகளை அளவிடுதல் (மூலதனக் கட்டணம்)

**அ. நிலையான வருமான சாதனங்கள்**

**மூலதனக் கட்டணங்களைக் கணிப்பதற்கு பின்வரும் முறைமையின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட காலப்பகுதியை அடிப்படையாகக் கொள்ளுமாறு முதனிலை வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.**

(i) கீழே தரப்பட்டுள்ள அட்டவணை 1இன்படி சாதனங்களின் காலப்பகுதியினைப் பொறுத்து 3.00 இற்கும் 1.8 சதவீதப்புள்ளிக்குமிடையிலான வட்டி வீதங்களில் (சீராக்கம் செய்யப்பட்ட பாசல் வீதங்கள்) ஏற்படும் மாற்றங்களின் நியதிகளில் அனைத்து சானங்களினதும் விலை உயர்ந்த மாற்றங்களை முதலில் கணிக்கவும். (நேர்மாற்று மீள்கொள்வனவு சொத்துப்பட்டியலைப் பொறுத்தவரை பிணைய முதிர்ச்சிக்குப் பதிலாக நேர்மாற்று மீள்கொள்வனவு முதிர்ச்சியை கணக்கில் கொள்ளவும்.)

(ii) அட்டவணை 1இல் காட்டப்பட்டுள்ள பதின்மூன்று தர-பிரிவுகளுடன் காலங்களை அடிப்படையாகக் கொண்ட படிநிலை அதிகரிப்பிற்குள் உருவாகின்ற மாற்றமடைகின்ற வழிமுறைகளை இணைத்தல்;

(iii) வர்த்தகப்படுத்துகின்ற மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு என்பனவற்றை கூட்டிய தொகைக்கு பின்வருமாறு மூலதனக் கட்டணங்களைக் கணித்தல்;
தனிப்பட்ட பிணையங்களின் சந்தைப் பெறுமதி மூமாற்றியமைக்கப்பட்ட காலம்மூ விளைவில் எடுகோள் கொள்ளப்படும் மாற்றும். (தயவு செய்து வர்த்தகப்படுத்தல் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவற்றிற்கான மாற்றியமைக்கப்பட்ட காலப்பகுதியினைக் கணிப்பதற்காக அட்டவணை 3 பக்கம் 12 இனைப் பார்க்கவும்)

(iv) அடிப்படை இடர்நேர்வுகளை வலுப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட நிலைக்குத்தான அனுமதிக்கப்படாத படிகளை நோக்கிய மூலதனக் கட்டணத்தில், ஒவ்வொரு கால பிரிவிலுமுள்ள நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய நிலைமைகளின் ஆகக் குறைந்தது 5% என்ற நிபந்தனைக்குட்பட்டு (தயவு செய்து அட்டவணை 3 இனைப் பார்க்கவும்.)

(v) அட்டவணை 2இல் காட்டப்பட்டுள்ள அனுமதிக்கப்படாத படிகளுக்கு உட்பட்டு வலயங்கள் முழுவதையும் கிடையாக எதிரீடு செய்வதற்கான ஒவ்வொரு காலப்பிரிவிலும் தேறிய நிலைமைகளை முன் கொண்டு செல்லுதல் (அட்டவணை 3 இனைப் பார்க்கவும்)

**அட்டவணை 1**

**ஒவ்வொரு முதிர்ச்சி வகையிலும் எடுகோள் கொள்ளப்பட்ட விளைவு மாற்றங்கள்**

| வலயம் | காலம் | விளைவில் எடுகோள் கொள்ளப்பட்ட மாற்றம் | நிறை |
|---|---|---|---|
| 1 | 1 மாதம் (அல்லது குறைவாக) | 3.00 | 0 |
| | 1 - 3 மாதங்கள் | 3.00 | 0.20 |
| | 3 - 6 மாதங்கள் | 3.00 | 0.40 |
| | 6 - 12 மாதங்கள் | 3.00 | 0.70 |
| 2 | 1 - 2 ஆண்டுகள் | 2.70 | 1.25 |
| | 2 - 3 ஆண்டுகள் | 2.40 | 1.75 |
| | 3 - 4 ஆண்டுகள் | 2.25 | 2.25 |
| 3 | 4 - 5 ஆண்டுகள் | 2.25 | 2.75 |
| | 5 - 7 ஆண்டுகள் | 2.10 | 3.25 |
| | 7 - 10 ஆண்டுகள் | 1.95 | 3.75 |
| | 10 - 15 ஆண்டுகள் | 1.80 | 4.50 |
| | 15 - 20 ஆண்டுகள் | 1.80 | 5.25 |
| | 20 ஆண்டுகளுக்கு மேல் | 1.80 | 6.00 |

மூலம்: முப்பிரிவு பாசல் விளைவு மாற்றங்களுடன் பாசல் நியமப் பிரிவுகள்

பாசல் முறையியலுடன் இசைந்து செல்லும் விதத்தில், அதே காலப்பிரிவிற்குள் உள்ள நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய நிலைமைகள் ஒன்றிற்கெதிராக மற்றொன்று 95% இனை எதிரீடு செய்ய முடியும் காலப்பிரிவிற்கிடையிலுள்ள நேர்க்கணிய

அல்லது எதிர்க்கணிய நிலைமையின் 5% அடிப்படை ஒதுக்காக தேவைப்படுத்தப்படுகிறது. எஞ்சிய நிலைமையானது (அதாவது எதிரீடு செய்யப்பட்ட பின்னரான எச்சம்) கீழேயுள்ள அட்டவணை 2 இன் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது. இது

**அட்டவணை 2**

**வலையப் பின்னலான அனுமதியற்றபடி அட்டவணை**

| வலயங்கள் | வலயங்களுக்குள் | அடுத்தடுத்துள்ள வலயங்களிடையே | 1 மற்றும் 3 வலயங்களிடையே |
|---|---|---|---|
| வலயம் 1 | 40% | | |
| | | 40% | |
| வலயம் 2 | 30% | | 100% |
| | | 40% | |
| வலயம் 3 | 30% | | |

மூலம்: பாசல் நியமம்

வலயங்களுக்குள்ளேயுள்ள அடுத்தடுத்துள்ள வலயங்களுக்கிடையேயான மற்றும் இறுதியாக வலயங்கள் 1 மற்றும் 3 இற்கிடையேயுள்ள வேறுபட்ட காலப்பிரிவுகளுக்கிடையேயான அனுமதியற்ற படிகளைத் தருகின்றது.

விலை உணர்வு மாற்றங்களை இரு வேறுபட்ட வழிகளில் கணிக்க முடியும்:

1. மாற்றியமைக்கப்பட்ட காலப்பகுதி *விளைவில் மாற்றம்; அல்லது

2. விலைமாற்றத்தின் தெளிவான கணிப்பானது கீழே காட்டப்பட்டுள்ள சூத்திரத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை கணிப்புக்களுக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

இரண்டு அணுகுமுறைகளும் விளைவுகளில் சிறிய மாற்றங்களைக் கொண்ட (உ-ம்: 1 இலிருந்து 50 அடிப்படைப்புள்ளிகள்) அதே பெறுபேறுகளையே தரும். எனினும், வீதங்களில் பெரும் மாற்றங்கள் ஏற்படும் என்ற எடுகோள்களைப் பொறுத்தவரை புறங்குவிந்த தாக்கத்தின் காரணமாக பின்னைய அணுகுமுறை கூடியளவிற்கு துல்லியமானதாக இருக்கும். (விளைவு மட்டத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப காலப்பகுதி அதுவாகவே மாற்றமுறும் உணர்வுத் தன்மையினை இது அளவிடுகிறது.)

எந்த ஒரு சாதனத்தினதும் விலைக்கேற்ப மாற்றமுறும் உணர்வினை கீழே தரப்பட்டுள்ள சூத்திரத்தினைப் பயன்படுத்தி மதிப்பிட முடியும். பயன்படுத்தப்படவுள்ள கழிவிடல் வீதம் சந்தைக்கான குறித்துரைக்கப்பட்ட பிணையங்களைக் குறைப்பதற்கு பயன்படுகின்ற பெறுமதியிடல் வீதமாகும்.

$$\text{விலை உணர்வுத்தன்மை} = \frac{NPV - \Sigma_{ia}\left[(C_i)\left[\frac{1}{1+S_i}\right]^{(T_i)}\right]}{NPV}$$

இதில் $$NPV = \Sigma_i\left[(C_i)\left[\frac{1}{1+R_i}\right]^{(T_i)}\right]$$

$\Sigma_i$ = மொத்தக் காசுப்பாய்ச்சல் தொகை

$C_i$ = t நேரத்தில் காசுப்பாய்ச்சல் தொகை

$R_i$ = பொதுப்படுகடன் திணைக்களத்தின் குறிப்பீட்டு வீதங்களிலிருந்து (இடைச் சேர்க்கை மற்றும் தேவையான விடத்து வீச்சினைக் காட்டுதல்) பெறப்பட்டவாறு மதிப்பீட்டுவீதம்

$S_i$ = மேலே வரைவிலக்கணம் செய்யப்பட்ட வாறான மதிப்பீட்டு வீதம் + விளைவில் எடுகோள் கொள்ளப்பட்ட மாற்றம் (கீழே அட்டவணை 2 இனைப் பார்க்கவும்)

$t_i$ = காசுப்பாய்ச்சலின் பெறுமதித் திகதி (இப்பொழுதிலிருந்து நாட்களில் குறிப்பிடப்படுகிறது)

$t_o$ = பிணையங்களின் தீர்ப்பனவுத் திகதி (இப்பொழுதிலிருந்து நாட்களில் குறிப்பிடப்படுகிறது)

$T_i$ = காலம், ஆண்டுகாலம், $t_o$ இலிருந்து $t_i$ இற்கு உண்மையான ஒன்றின்/ உண்மையான அடிப்படையில் கணிக்கப்பட்டது.

### ஆ. வட்டிவீத பெறுதிகள்

அளவிடல் நடைமுறைகள் விளைவு வீதங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு எதிர்ச் செயலாற்றங்களைப் புரிகின்ற அனைத்து வட்டிவீத பெறுதிகளையும் வர்த்தகப்படுத்தல் ஏட்டிலுள்ள ஐந்தொகைக்கு வெளியேயான சாதனங்களையும் (முன்னோக்கிய வீத உடன்படிக்கைகள், ஏனைய முன்னோக்கிய உடன்படிக்கைகள் வட்டிவீத பரிமாற்றங்கள் போன்றன) உள்ளடக்குதல் வேண்டும். அத்தகைய நடவடிக்கை காணப்படும் சந்தர்ப்பத்தில் பின்வரும் நடைமுறைகள் பொதுவான மதிப்பீட்டு நடைமுறைகளை மேலோட்டமாகக் குறிப்பிடுகின்றன. பெறுதிகள் தொடர்பான குறிப்பிட்ட சாதனங்களின் நிலைமைகளுக்கு மாற்றப்பட வேண்டியதுடன் அட்டவணை 1இல் விபரிக்கப்பட்டவாறு சந்தை இடர்நேர்வுக் கட்டணங்களுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.

**i. முன்னோக்கிய வீத உடன்படிக்கைகள் உட்பட முன்னோக்கிய உடன்படிக்கைகள்**

இச்சாதனங்கள் நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய நிலைகளின் கூட்டமைப்பாகக் கருதப்படுகின்றன. முன்னோக்கிய வீத உடன்படிக்கையின் முதிர்ச்சி என்பது இது வழங்கப்படுகின்ற அல்லது உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படுகின்ற, அத்துடன் பொருத்தமானவிடத்து - குறிப்பிட்ட சாதனத்தின் ஆயுள் காலம் வரையானதாக இருக்கும். எடுத்துக்காட்டாக ஏப்பிறலில் மேற்கொள்ளப்பட்ட எதிர்கால மூன்றுமாத வட்டி வீதம் யூன் மாதத்தில் காணப்பட்ட நேர்க்கணிய நிலைமையானது ஏப்பிறலில் செய்யப்பட்ட எதிர்கால மூன்றுமாத வட்டி வீதங்கள் ஐந்துமாத முதிர்ச்சியுடன் கூடிய அரச பிணையங்களில் நேர்க்கணிய நிலைமையைக் கொண்டதாகவும் இரண்டுமாத முதிர்ச்சிகளுடன் கூடிய அரச பிணையங்கள் எதிர்க்கணிய நிலைமையினைக் கொண்டனவாகவும் அறிக்கையிடப்படல் வேண்டும்.

**ii. பரிமாற்றங்கள்**

அரச பிணையங்களில் பரிமாற்றங்கள் தொடர்பான முதிர்ச்சிகளுடன் கூடிய இரு கோட்பாட்டு நிலைமைகளாகக் கருதப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, வட்டிவீத பரிமாற்றமொன்றின் கீழ் பொதுப்படுகடன் மிதக்கின்ற வீத வட்டியைப் பெறுவதுடன் நிலையான கொடுப்பனவுகள் மிதக்கின்ற வீத சாதனங்களில் நீண்ட நிலைமையினைக் கொண்டனவாகவும் நிலையான வீத சாதனங்களில் குறுகிய நிலைமையைக் கொண்டனவாகவும் கருதப்படும். மிதக்கும் வீத சாதனங்களின் காலம் அடுத்த வட்டி நிர்ணயிப்பு வரையான காலப்பகுதிக்கு சமமானதாகக் கருதப்படுகின்ற வேளையில் நிலையான வீத சாதனங்களின் காலம் பரிமாற்றத்தின் எஞ்சிய ஆயுள் காலத்திற்கு சமமானதாகக் கருதுதல் வேண்டும்.

நேரடி மூலங்கள் கிடைக்கத்தக்கதாக இருக்கும் வரை, வீச்சிற்குப் பொருத்தமான கூட்டங்களுடன் பரிமாற்றக் கொடுக்கல் வாங்கல்களை மதிப்பிடுவதற்கு பொதுப்படுகடன் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட விலைக்குறிப்பீடு/ வெளிவிலைகளிலிருந்து கழிவிடல் வீதங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், அட்டவணை 1இல் விபரிக்கப்பட்டுள்ள முறிவிலையிடல் முறையியலுக்கும் இம்முறை பிரயோகிக்கப்பட்டது. பெரும்பாலான விடயங்களில், பரிமாற்ற மதிப்பீட்டிற்கு துல்லியமான வளைகோட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக அரச பிணையங்கள் விளைவு வளைகோட்டிற்குப் பொருத்தமான இலாபமொன்றினைக் கூட்ட வேண்டியிருந்தது.

தேவையேற்படும் பொழுது கூடுதலான சிக்கல் வாய்ந்த நிதியியல் சந்தைச் சாதனங்களுக்காக பொருத்தமான மதிப்பிட்ட தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்ய வேண்டியிருக்கும்.

## வட்டிவீதத்துடன் தொடர்புபட்ட சாதனங்களுக்கான பொதுவான சந்தை இடர்நேர்வுகளைக் கணித்தல்

**(உதாரணங்கள் சந்தை இடர்நேர்வுகளை கூட்டிணைப்பதற்கான மூலதன உடன்படிக்கைக்கான திருத்தம் வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழு, 1996 சனவரி பக்கம் 51 மற்றும் 52 இலிருந்து எடுக்கப்பட்டவை.)**

1. வங்கியொன்று பின்வரும் நிலைமைகளைக் கொண்டிருக்கக்கூடும்.

- தகைமையுடைய முறிகள், 13.33 மில்லியன் டொலர் சந்தைப் பெறுமதி எஞ்சிய முதிர்ச்சி 8 ஆண்டுகள், நறுக்கு 8%
- அரச முறிகள், 75 மில்லியன் டொலர் சந்தைப் பெறுமதி எஞ்சிய முதிர்ச்சி 2 மாதங்கள் நறுக்கு 7%
- வட்டி வீத பரிமாற்றம் 150 மில்லியன் டொலர்[1] வங்கி மிதக்கும் வீதத்தினைப் பெறுவதுடன் நிலையான வீதத்தினைச் செலுத்துகிறது. அடுத்த வட்டி நிர்ணயிப்பு 6 மாதங்களின் பின்னர் பரிமாற்றத்தின் எஞ்சிய ஆயுள்காலம் 8 ஆண்டுகள்
- எதிர்கால வட்டி வீதத்தில் நேர்க்கணிய நிலைமை, 50 மில்லியன் டொலர்[1], வழங்கல் திகதி 6 மாதங்களின் பின், குறிப்பிட்ட அரச பிணையத்தின் ஆயுட்காலம் 3.5 ஆண்டுகள்

2. அட்டவணை 3 இந் நிலைமைகள் எவ்வாறு காலப்பிரிவுகளுக்குப் பொருத்தப்படுகின்றன என்பதனையும் அ.1. இன் அட்டவணை [1]இல் தரப்பட்டுள்ள நிறைகளுக்கு ஏற்ப நிறையேற்றப்படுகின்றன என்பதனையும் காட்டுகின்றன. நிலைமைகளை நிறுத்ததன் பின்னர் கணிப்பில் செய்யப்படும் அடுத்த சட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு இருக்கும்.

(அ) காலப்பிரிவு 7 - 10 ஆண்டுகளிலுள்ள நிலக்குத்தான அனுமதிக்கப்படாத படியினை பின்வரும் விதத்தில் கணித்தல் வேண்டும். இக்காலப்பிரிவில் பொருத்தப்பாடு செய்யப்பட்ட நிலைமை 0.5 ஆகும். [அதே காலப்பிரிவிலுள்ள நேர்க்கணிய மற்றும் (நிறையேற்றப்பட்ட) எதிர்க்கணிய நிலைமைகளுக்குக் கூட்டப்பட்ட (நிறையேற்றப்பட்ட) முழுமையான பெறுமதிகளில் குறைவானது.] இது 0.5இல் 5% = 0.05 = டொலர் 25,000 கொண்ட மூலதனக் கட்டணத்திற்கு வழிவகுத்தது. எஞ்சிய தேறிய (குறுகிய) நிலைமை -5.125 ஆக இருந்தது.

(ஆ) வலயங்களுக்குள்ளேயுள்ள கிடையான அனுமதிக்கப்படாத படியினை பின்வரும் விதத்தில் கணித்தல் வேண்டும். வலயம் 1இல் மாத்திரம் ஒன்றிற்கு மேற்பட்ட கூடுதலான நிலைமை காணப்படுவதனால், கிடையான அனுமதிக்கப்படாதபடியினை இந்த வலயத்தில் மட்டும் கணிக்க முடியும். இதனை மேற்கொள்கையில், பொருத்தம் செய்யப்பட்ட நிலைமை 0.2 ஆகக் கணிக்கப்படுகிறது. (இதே வலயத்திலுள்ள கூட்டப்பட்ட நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய நிலைமைகளின் முழுமையான பெறுமதியில் குறைவானது) வலயம் 1இற்குள் கிடையான அனுமதியற்ற படிகளுக்கான மூலதனக்கட்டணமானது 0.2இன் 40% = 0.08 = டொலர் 80,000. வலயம் 1இல் உள்ள எஞ்சிய தேறிய (நீண்ட) நிலைமை + 1.00 ஆகும்.

(இ) அடுத்தடுத்துள்ள வலயங்களுக்கிடையேயான கிடையான அனுமதிக்கப்படாத படிகளை பின்வருமாறு கணித்தல் வேண்டும். வலயம் 1 இற்குள் தேறிய நிலைமையினைக் கணிப்புச் செய்த பின்னர் பின்வரும் நிலைமைகள் எஞ்சியிருக்கும்: வலயம் 1 + 1.00 வலயம் 2 + 1.125 வலயம் 3 - 5.125. வலயம் 2 மற்றும் 4 இற்கிடையிலான பொருத்தம் செய்யப்பட்ட நிலைமையானது 1.125 ஆகும். (அடுத்தடுத்துள்ள வலயங்களுக்கிடையேயான நீண்ட மற்றும் குறுகிய நிலைமைகளின் முழுமையான பெறுமதியில் குறைவானது) இவ்விடயத்தில் மூலதனக் கட்டணமானது 1.125இன் 40% ஆகும் = 0.45 = டொலர் 450,000.

(ஈ) வலயம் 1 மற்றும் 3 இற்கிடையிலான கிடையான அனுமதியற்ற படியினை பின்வருமாறு கணித்தல் வேண்டும்: வலயம் 1இல் எஞ்சியுள்ள தேறிய (நீண்ட) நிலைமையானது + 1.00, வலயம் 3இல் தேறிய (குறுகிய) நிலைமையானது - 4.00 ஆகும். வலயம் 1 இற்கும் 3 இற்குமிடையில் எதிரீடு செய்தல் இல்லாதவிடத்து அனுமதிக்கப்பட்ட மூலதனக்கட்டணம் 5.00 = 5,000,000 டொலர்களாக இருக்கும். எனினும், தூர வலயங்களுக்கிடையிலான கிடையான அனுமதிக்கப்படாதபடி பொருத்தப்பாடு செய்யப்பட்ட நிலைமையில் 100% இருக்கிறது. இது 1.00 இன் 100% = 1.00 = 1,000,000 டொலர் கொண்ட மூலதனக் கட்டணத்திற்கு வழிவகுக்கிறது.

(உ) பொதுவான தேறிய நிலைமை 3.00 ஆக அமைந்து 3,000,000 டொலர் கொண்ட மூலதனக் கட்டணத்திற்கு வழிவகுக்கிறது.

---

[1] நிலைமையானது குறிப்பிட்ட கருதுகோளின் சந்தைப்பெறுமதியாக அறிவிக்கப்பட வேண்டும். நடைமுறை வட்டி வீதங்களைப் பொறுத்து பரிமாற்றத்தின் ஒவ்வொரு பிரிவினதும் சந்தைப் பெறுமதி (அதாவது 8 ஆண்டு முறி மற்றும் 9 மாதங்கள் மிதப்பு வீதம்) கருதுகோள் தொகையினைவிட ஒன்றில் உயர்வானதாக அல்லது தாழ்வானதாக இருக்க முடியும். இலகுபடுத்தலுக்காக, உதாரணம் நடைமுறை வட்டி வீதமானது பரிமாற்றம் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஒன்றினை ஒத்ததாகும் என்று கொள்ளப்படுகின்றது.

## அட்டவணை 10

**(டொ. மில்லியன்)**

| | வலயம் 1 | | | | வலயம் 2 | | | வலயம் 3 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலப்பிரிவு | 0-1 | 1-3 | 3-6 | 6-12 | 1-2 | 2-3 | 3-4 | 4-5 | 5-7 | 7-10 | 10-15 | 15-20 | 20 மேல் |
| | மாதங்கள் | | | | ஆண்டுகள் | | | | | | | | |
| நிலைமை | | + 75 அரசு | - 50 எதிர். | + 150 பரிமாற்றம் | | | + 50 எதிர். | | | - 150 பரிமாற்றம் - 13.33 தகைமை | | | |
| நிறை (%) | 0.00 | 0.20 | 0.40 | 0.70 | 1.25 | 1.75 | 2.25 | 2.75 | 3.25 | 3.75 | 4.50 | 5.25 | 6.00 |
| நிலைமை x நிறை | | + 0.15 | - 0.20 | + 1.05 | | | + 1.125 | | | -5.625 + 0.5 | | | |
| நிலக்குத்து அனுமதிக்கப்படாத | | | | | | | | | | 0.5 x 10% = 0.05 | | | |
| கிடை அனுமதிக்கப்படாத 1 | 0.20 x 40% = 0.08 | | | | | | | | | | | | |
| கிடை அனுமதிக்கப்படாத 2 | | | | | 1.125 x 40% = 0.45 | | | | | | | | |
| கிடை அனுமதிக்கப்படாத 3 | 1.0 x 100% = 1.0 | | | | | | | | | | | | |

3. இவ்வுதாரணத்தில் மொத்த மூலதனக்கட்டணமானது

| | | |
|---|---|---|
| - நிலக்குத்தான அனுமதிக்கப்படாத படிக்காக | $ | 50,000 |
| - வலயம் 1இல் கிடையான அனுமதிக்கப்படாத படிக்காக | $ | 80,000 |
| - அடுத்தடுத்த வலயங்களுக்கிடையிலான கிடையான அனுமதிக்கப்படாத படிக்காக | $ | 450,000 |
| - வலயம் 1 மற்றும் 3 இற்கிடையிலான கிடையான அனுமதிக்கப்படாத படிக்காக | $ | 1,000,000 |
| - மொத்தத் தேறிய திறந்த நிலைமைக்காக | $ | 3,000,000 |
| | $ | 4,580,000 |

குறிப்பு - பிரிவு 2 (அ) இன் கீழான நிலக்குத்தான அனுமதிக்கப்படாதபடி 5% இதன்படி அட்டவணை 3இல் உள்ள கிடையான அனுமதிக்கப்படாத படியும் மேலே பிரிவு 3இல் உள்ள மூலதனக்கட்டணமும் சீராக்கப்படவுள்ளன.

அட்டவணை 2

## இணைத்தரப்பு கொடுகடன் இடர்நேர்விற்கான மூலதனப் போதுமை

இணைத்தரப்பினர் மீதான வெளிப்படுத்துகையினை மதிப்பிடுகின்ற நோக்கத்திற்காக பொதுப்படுகடன் திணைக்களம் கொடுகடனுக்குச் சமமான தொகையினைக் கண்டறியுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்நோக்கத்திற்காக, முதலீட்டின் தேறிய வெளிப்படுத்துகையைக் கண்டறிவதற்கு மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு என்பன தொடர்பான சந்தைப் பெறுமதியினை முதனிலை வணிகர்கள் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

**கட்டம் 1**

பின்வரும் சூத்திரத்தினைப் பயன்படுத்தி மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுகளின் தேறிய வெளிப்படுத்துகையினைக் கண்டறிதல்.

மீள்கொள்வனவு = (சந்தைப் பெறுமதி - பிரிவு 1)

நேர்மாற்று மீள்கொள்வனவு = (பிரிவு 1 - சந்தைப் பெறுமதி)

**கட்டம் 2**

இவ்வாறு பெறப்பட்ட தேறிய வெளிப்படுத்துகையினை கீழே குறிக்கப்பட்டவாறு தொடர்பான இணைத்தரப்பினருக்கு ஒதுக்கப்பட்ட இடர்நேர்வு நிறையினால் பெருக்கப்பட வேண்டும்.

1. அரசாங்கம்/ அரசாங்கத்தினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவை - 0
2. வங்கிகள்/ முதனிலை வணிகர்கள், ஊ.சே.நிதியம், ஊ.நம்பி. நிதியம் - 20%
3. காப்புறுதிக் கம்பனிகள், சேம நிதியங்கள் - 50%
4. கம்பனிகள் - 75%
5. ஏனையவை - 100%

**கட்டம் 3**

பின்வரும் சூத்திரத்தினைப் பயன்படுத்தி இணைத்தரப்பினரின் மூலதனப் பயன்பாடு பெறப்படுகின்றது. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட அதே பிணையம் கணிப்பதற்காக ஒரு வழி வெளிப்படுத்துகையினை மட்டுமே கொண்டிருக்கும் என்பது தெளிவாகும்.

மீள்கொள்வனவு = (சந்தைப் பெறுமதி - பிரிவு 1) * இடர்நேர்வு நிறை 8%

நேர்மாற்று மீள்கொள்வனவு = (பிரிவு 1 - சந்தைப் பெறுமதி) * இடர்நேர்வு நிறை 8%

**அட்டவணை 3**

## இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை - கணிப்பீடு

மூலதனக்கட்டணம் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் = அட்டவணை 1, மாற்றியமைக்கப்பட்ட காலம், *விளைவு வீதங்களில் % எடுகோள் கொள்ளப்படும் மாற்றங்கள்* சந்தைப்பெறுமதி

நேர்மாற்று மீள்கொள்வனவு = அட்டவணை 1, மாற்றியமைக்கப்பட்ட காலம், *விளைவு வீதங்களில் % எடுகோள் கொள்ளப்படும் மாற்றங்கள்* சந்தைப்பெறுமதி

அனுமதிக்கப்படாத படிகள் = அட்டவணை 3இல் காட்டப்பட்டவாறு

வர்த்தகப்படுத்தப்படும் சொத்துப்பட்டியல் → மாற்றியமைக்கப்பட்ட காலப்பகுதியினைக் கணிப்பதற்கு, ஒரே மாதிரியான பிணை முதிர்ச்சி பரிசீலக்கப்பட்டது.

நேர்மாற்றுக் மீள்கொள்வனவு → மாற்றியமைக்கப்பட்ட காலப்பகுதியினைக் கணிப்பதற்கு, நேர்மாற்று மீள்கொள்வனவு முதிர்ச்சி பரிசீலிக்கப்பட்டது.

இணைத்தரப்பு கொடுகடனின் மூலதனப்பயன்பாடு

நேர்மாற்று மீள் கொள்வனவு = அட்டவணை 4 (பிரிவு 1 - சந்தைப் பெறுமதி) * இடர்நிறை % *8%

மீள்கொள்வனவு = அட்டவணை 5 (சந்தைப் பெறுமதி - பிரிவு 1) * இடர்நிறை % *8%

## விளைவு வீதங்களும் கணிப்புக்களுக்காக பயன்படுத்தப்படும் இணைத்தரப்பு இடர்நேர்வு நிறைகளும்

**1. மூலதனக் கட்டணங்களுக்காக**

| விளைவில் எடுகோள் கொள்ளப்பட்ட மாற்றம் (பாசல்) | காலம் |
|---|---|
| 3.00 % | 1 மாதம் (அல்லது குறைவாக) |
| 3.00 % | 1 தொடக்கம் 3 மாதங்கள் வரை |
| 3.00 % | 3 தொடக்கம் 6 மாதங்கள் வரை |
| 3.00 % | 6 தொடக்கம் 12 மாதங்கள் வரை |
| 2.70 % | 1 தொடக்கம் 2 ஆண்டுகள் வரை |
| 2.40 % | 2 தொடக்கம் 3 ஆண்டுகள் வரை |
| 2.25 % | 3 தொடக்கம் 4 ஆண்டுகள் வரை |
| 2.25 % | 4 தொடக்கம் 5 ஆண்டுகள் வரை |
| 2.10 % | 5 தொடக்கம் 7 ஆண்டுகள் வரை |
| 1.95 % | 7 தொடக்கம் 10 ஆண்டுகள் வரை |
| 1.80 % | 10 தொடக்கம் 15 ஆண்டுகள் வரை |
| 1.80 % | 15 தொடக்கம் 20 ஆண்டுகள் வரை |
| 1.80 % | 20 ஆண்டுகளுக்கு மேல் |
| 1.80 % | |

**2. இணைத்தரப்பு இடர்நேர்வு**

| இணைத்தரப்பு | இடர்நேர்வு நிறை |
|---|---|
| அரசாங்கம் மற்றும் அரச உத்தரவாதமளிக்கப்பட்டது | 0% |
| வங்கிகள்/முதனிலை வணிகர்கள் ஊ.சே.நிதியம், ஊ.நம்பி. நிதியம் | 20% |
| காப்புறுதிக்கம்பனிகள் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட சேம நிதியங்கள் | 50% |
| கம்பனிகள் | 75% |
| ஏனையவை | 100% |

## பொதுப்படுகடனின் பெயர்

### .............................. அன்று உள்ளவாறு மூலதனப் போதுமை அறிக்கை

தொகை ரூ. மில்லியனில்

| | | * இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் |
|---|---|---|
| 1. கிடைக்கத்தக்க மூலதனம் | 0.0 | |
| 2. கழிக்குக: இணைத்தரப்பு கொடுகடனின் மூலதனப் பயன்பாடு | 0.0 | |
| 3. தேறிய மூலதனம் (1 +2) | 0.0 | |
| 4. வர்த்தகப்படுத்தல் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவிற்கான மூலதனக்கட்டணம் | 0.0 | |
| 5. அனுமதிக்கப்படாதபடிகளுக்கான மூலதனக்கட்டணம் | 0.0 | |
| 6. மொத்த மூலதனக் கட்டணம் (4 +5) | 0.0 | 0.0 |
| 7. ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த மூலதனம் | 300 | |
| 8. பயன்படுத்தப்படாத மூலதனம் (3 - 6) 3 > ஆனால் = 6 | 0.0 | |
| 9. தேவைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த மூலதனம் (ரூ.300 மில்லியனுக்கும் கூடுதலானது அல்லது மூலதனக் கட்டணம் மற்றும் இணைக்கிணைத்தரப்பு இடர்நேர்வு தொகை) | 300 | |
| 10. மொத்த மூலதனம் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாட்டினை விஞ்சியுள்ளதா | 0.0 | |
| 11. சொத்துப்பட்டியலின் எண்ணிக்கை (வர்த்தகப்படுத்தல் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு | 0.0 | |
| 12. மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனம் (மூலதனக் கட்டணம் + இணைத்தரப்பு இடர்நேர்வு + அனுமதிக்கப்படாதபடிகளுக்கான மூலதனம் | 0.0 | |
| 13. இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மற்றைய சொத்துக்கள் (வர்த்தகப்படுத்தல் அனைத்துப் பட்டியல் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு இல்லாமல் ஐந்தொகையில் நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் | | 0.0 |
| 14. மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் (2 + 6 + 13) | | 0.0 |
| 15. இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் (குறைந்தது 8%) 1/14 | | 0.0% |

* இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்

தொகை ரூ. மில்லியனில்

| | | |
|---|---|---|
| 1. வர்த்தகப்படுத்தல் நேர்மாற்று மீள்கொள்வனவிற்கான மூலதனக்கட்டணம் | | - |
| 2. அனுமதிக்கப்படாத படிகளுக்கான மூலதனக்கட்டணம் | | - |
| 3. மொத்த மூலதனக் கட்டணத்திற்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்து | (1 +2)8% | - |
| 4. இணைத்தரப்பினருக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்து | | - |
| 5. இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட ஏனைய சொத்துக்கள் (வர்த்தகப்படுத்தப்படும் சொத்துப் பட்டியல் நேர்மாற்று மீள்கொள்வனவு இல்லாமல் ஐந்தொகையில் நிறையேற்றப்பட்ட சொத்து) | | - |
| 6. மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்து | 3+4+5 | - |
| 7. கிடைக்கத்தக்க மூலதனம் | | - |
| 8. இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் (ஆகக்குறைந்தது 8%) | 7/6 | 0.0% |

## மூலதனக் கட்டணம்

தீர்ப்பனவுத் திகதி

வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல்

### அட்டவணை 1

தொகை ரூ. மில்லியனில்

| சந்தைப் பெறுமதி | பிணை முதிர்ச்சி நாள் | நறுக்கு வீதம் | விளைவு வீதம் | முதிர்ச்சிக் காலம் | எஞ்சிய முதிர்ச்சி நாட்கள் (முதிர்ச்சி திகதி தீர்ப்பனவுகள் திகதி) | விளைவில் எடுகோள் கொள்ளப்பட்ட மாற்றம் | மூலதனக்கட்டணம் (சந்தைப் பெறுமதி * மாற்றியமைக்கப்பட்ட காலம் விளைவில் எடுகோள் கொள்ளப்பட்ட மாற்றம்) |
|---|---|---|---|---|---|---|---|
| வர்த்தகப்படுத்தல் முறிகள் | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | மொத்தம் | |
| வர்த்தகப்படுத்தல் உண்டியல் | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | மொத்தம் | |
| முன்னோக்கிய கொள்வனவுகள் | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | மொத்தம் | |
| இல்லாதவற்றினை விற்றல் | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | மொத்தம் | |
| மொத்த தே.நி. பெறுமதி (வர்த்தகப்படுத்தல் முறிகள் + வர்த்தகப்படுத்தல் உண்டியல் + முன்னோக்கிய கொள்வனவுகள் - இல்லாதவற்றை விற்றல்) | | | | | | | |
| வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலுக்கான மொத்த மூலதனக் கட்டணம் (வர்த்தகப்படுத்தல் முறிகள் + வர்த்தகப்படுத்தல் உண்டியல் + முன்னோக்கிய கொள்வனவுகள் - இல்லாதவற்றை விற்றல்) | | | | | | | - |

### அட்டவணை 2

நேர்மாற்று மீள்கொள்வனவு

தொகை ரூ. மில்லியனில்

| சந்தைப் பெறுமதி | நேர்மாற்று மீள் கொள்வனவு முதிர்ச்சி திகதி | பிணை முதிர்ச்சி நாள் | நறுக்கு வீதம் | விளைவு வீதம் | முதிர்ச்சிக் காலம் | எஞ்சிய முதிர்ச்சி நாட்கள் (முதிர்ச்சி திகதி தீர்ப்பனவுகள் திகதி) | விளைவில் எடுகோள் கொள்ளப்பட்ட மாற்றம் | மூலதனக்கட்டணம் (சந்தைப் பெறுமதி * மாற்றியமைக்கப்பட்ட காலம் விளைவில் எடுகோள் கொள்ளப்பட்ட மாற்றம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| - | | | | | | | | - |

வர்த்தகப்படுத்தல் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவின் தேறிய நிரந்தரப் பெறுமதி -

வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியல் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவிற்கான மொத்த மூலதனக்கட்டணம் -

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களின்*
*அனைத்து முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

பங்கேற்கும் முகவர்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்

## வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி முறிகள்

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளின் விற்பனை, கொள்வனவு மற்றும் மாற்றல் என்பனவற்றிற்கு ஏற்புடைத்தான வழிகாட்டல்களும் நடைமுறைகளும் கீழே காட்டப்படுகின்றன. இத்தொழிற்பாடுகளின் எந்த ஒரு விடயத்திற்கும் எந்த ஒரு குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களும் இல்லாதவிடத்து உள்ளூர் முதலீட்டாளர்களுக்கான திறைசேரி முறி வழங்கலில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்பொழுது ஏற்புடைத்தான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், நடைமுறைகள், முறை ஒழுங்கு விதிகள், ஒழுங்கு முறைப்படுத்தல் ஏற்பாடுகள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும். அத்தகைய ஏற்புடைத்தான விதிகள் போன்றன எதுவுமில்லையாயின் பங்கேற்கும் முகவர்கள் இது தொடர்பாக கீழே கையொப்பமிட்டுள்ளவர்களிடமிருந்து தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### 1. பொது

#### 1.1 தகைமையுடைய வெளிநாட்டு முதலீட்டாளர்கள்

பின்வரும் முதலீட்டாளர் வகையினர் மாத்திரமே இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி முறிகளில் முதலீடு செய்ய தகைமையுடையவர்களாவர்.

1.1.1 வெளிநாட்டு நிதியங்கள் இலங்கை பிணையங்கள் பரிமாற்ற ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட சமவாய நிதியம் பிரதேச நிதியம்;

1.1.2 இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்; மற்றும்

1.1.3 வெளிநாட்டுப் பிரசைகள்

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கோரிக்கையினை நிறைவேற்றும் பொழுது அனைத்து பங்கேற்கும் முகவர்களும் "உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்ற நியம சரிபார்ப்பு நடைமுறைகளைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

#### 1.2 திறைசேரி முறிகளின் காலம்

1.2.1 குறைந்தது இரண்டாண்டு கால முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்;

1.2.2 வெளிநாட்டு முதலீட்டாளர் அத்தகைய திறைசேரி முறிகளை இரண்டாந்தரச் சந்தையில் இலங்கையில் வதியும் ஒருவருக்கு விற்பனை செய்ய விரும்பின் அத்தகைய விற்பனைகள் அல்லது மாற்றல்கள் ஆரம்ப கொள்வனவுத் திகதியிலிருந்து குறைந்தது ஓராண்டு காலப்பகுதிக்கு வைத்திருந்ததன் பின்னர் மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டும்;

1.2.3 எனினும், மேலேயுள்ள கிளைவாசகம் 1.1 இன் நியதிகளில் வெளிநாட்டு முதலீட்டாளர் இன்னொரு தகைமை பெற்ற முதலீட்டாளருக்கு திறைசேரி முறிகளை விற்பதாயின் வைத்திருக்கும் காலம் ஏற்புடைத்தாகமாட்டாது.

#### 1.3 திறைசேரி முறிகள் முதலீட்டின் மீதான வரையறை

திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த முதலீடு எந்த ஒரு நேரத்திலும் வெளிநிற்கும் திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 5% இனை விஞ்சக்கூடாது. (இது தொடர்பான தேவைப்பாட்டிற்கு கீழேயுள்ள 2.3 இனை தயவு செய்து பார்க்கவும்)

### 2. விற்பனை நடைமுறைகள்

2.1 மேலேயுள்ள கிளைவாசகம் 1.1இன் கீழ் தகைமை பெற்ற வெளிநாட்டு முதலீட்டாளர்கள்;

2.1.1 இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி முறிகளை இரண்டாந்தரச் சந்தையிலிருந்து பங்கேற்கும் முகவர்களினூடாக அதாவது உரிமை பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களூடாக அல்லது

2.1.2 முதனிலை வணிகர்களூடாக திறைசேரி முறிகளின் முதலாந்தர ஏலங்களில் விலைக்குறிப்பீடு செய்வதன் மூலமும்

திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க, கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் பொருட்டு பங்கேற்கும் முகவர்கள் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் சட்டத் தேவைப்பாடுகளுக்கிணங்கவும் முறையின் ஒழுங்குகளை மீறவில்லை என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2.2 திறைசேரி முறிகளை கொள்வனவு செய்வதற்காக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியும் திறைசேரி முறிகளின் விற்பனை/ மாற்றல்/ முதிர்ச்சி என்பன மூலம் அடையப்பட்ட பெறுகைகள் அல்லது வட்டி/ மூலதன இலாபம் என்பன மூலம் பெறப்பட்ட ஏதும் வருமானம் என்பன உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் பங்கேற்கும் முகவர்களினால் முதலீட்டாளர்களின் பெயரில் திறக்கப்பட்ட **"திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு"** என்றழைக்கப்படும் சிறப்பு ரூபாக் கணக்கினூடாகவே வழிப்படுத்தப்பட வேண்டும். எனவே, இக்குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காக வாடிக்கையாளரின் சார்பில் சிறப்புக் கணக்கொன்றைத் திறப்பது பங்கேற்கும் முகவர்களின் கடமையாகும். 2006 நவெம்பர் 1ஆம் நாளன்று செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இவற்றிற்கு ஏற்புடைத்தனவாக இருக்கும்.

2.3 விற்பனையினை உறுதிப்படுத்துவதற்கு முன்னர், திறைசேரி முறிகளில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளின் வரையறையில் (வெளிநிற்கும் திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 5%) கிடைக்கத்தக்கதாகவுள்ள தன்மை பற்றி இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்திலிருந்து விசாரித்துக் கொள்வது பங்கேற்பு முகவர்களின் பொறுப்பாகும். விற்பனை உறுதிப்படுத்தப்பட்டதும் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு தொலைநகல்/ மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

2.4 பங்கேற்கும் முகவர்கள், திறைசேரி முறிகளின் காலம் தொடர்பாக கிளை வாசகம் 1.2 இல் தரப்பட்டுள்ள நிபந்தனைகள் எல்லா நேரங்களிலும் முழுமையாகப் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

2.5 பங்கேற்கும் முகவர்கள் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பேணப்படும் மத்திய வைப்பக முறையில் தமது வெளிநாட்டு முதலீட்டளார்களுக்காக வாடிக்கையாளர்களுக்குச் சொந்தமான முதலீட்டாளர் கணக்குகளை உரிய முறையில் திறப்பதற்கு பொறுப்பாக இருப்பர்.

2.6 இத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி முறிகளை பிணையங்களாகப் பயன்படுத்தி இலங்கையில் மீள்கொள்வனவு நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## 3. நிதிய மாற்றல்கள்

வெளிநாட்டு முதலீட்டாளரொருவர் இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி முறிகளைக் கொள்வனவு விற்பனை செய்யும் பொழுது திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டுக் கணக்கினைப் பேணுகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் (கட்டுக்காப்பு வங்கி) முதலீட்டாளரின் சார்பில் தொடர்பான தரப்பினருக்குக் குறிப்பிட்ட ரூபாத் தொகையினை மாற்றல் செய்யலாம். முதலாந்தரச் சந்தையில் விலைக் குறிப்பீடுகள் மூலம் அவர்கள் அத்தகைய முறிகளை வாங்கியிருப்பின், தொடர்பான முதனிலை வணிகர்கள் முறிகளின் பெறுகைத் தொகையினை மத்திய வங்கியின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைக் கணக்கிற்கு அனுப்புதல் வேண்டும். எனினும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், இத்திட்டத்தின் கீழ், வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியினைப் பயன்படுத்தி திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## 4. திறைசேரி முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள்

குறிப்பிட்ட திறைசேரி முறித் தொடர்களின் தொடர்பான கொடுப்பனவு நாளன்று வட்டிகள் ரூபாவில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தொடர்பான பங்கேற்கும் நிறுவனங்களுக்கு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினூடாக ஆண்டிற்கு இரு தடவைகள் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் செலுத்தப்படும். பங்கேற்கும் நிறுவனங்கள் அத்தகைய பெறுகைகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு அதே நாளன்று உள்ள நன்மைப் பெறுமதியுடன் மாற்றல் செய்தவற்கு பொறுப்புடையனவாகும்.

ஏதாவது வட்டிக் கொடுப்பனவுகள் இலங்கையில் வங்கி அலுவல்கள் இடம்பெறாத நாளொன்றில் வருமாயின் அத்தகைய கொடுப்பனவுகள் அடுத்த வேலை நாளன்று மேற்கொள்ளப்படும்.

## 5. முதல் தொகையின் மீள்கொடுப்பனவு

திறைசேரி முறிகள் மீதான முதல் தொகையின் மீள்கொடுப்பனவானது ரூபாவில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினூடாக தொடர்பான பங்கேற்பு முகவர்களுக்கு குறிப்பிட்ட முதிர்ச்சி நாளன்று செலுத்தப்படும். தொடர்பான கொடுப்பனவுகளை வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிற்கு அதே நாளன்று பெறுமதிகள் சேரும் விதத்தில் மாற்றல் செய்வதற்கு பங்கேற்கின்ற முகவர்கள் பொறுப்பாவர்.

முதிர்ச்சி நாள் இலங்கையில் வங்கித்தொழில் நடைபெறாத நாளன்று வருமாயின் முதல் தொகையின் மீள்கொடுப்பனவு அடுத்த வேலை நாளன்று மேற்கொள்ளப்படும்.

**6. கூட்டு உடமைகள்**

இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படும் மத்திய வைப்பக முறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வசதிகளுடன் (தற்பொழுது இரண்டு மட்டும்) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திறைசேரி முறிகளை கூட்டாக வைத்திருக்கலாம். முதல் தொகையினை மீளச் செலுத்துதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் கட்டுக்காப்பு வங்கி மற்றும் இணைந்த உடமையாளர்களுக்கிடையேயான உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

**7. வரிச் சலுகை**

திறைசேரி முறிச் சந்தையில் முதலீடு செய்யத் தகைமையுடைய வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அத்தகைய முறிகள் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட போது விதிக்கப்பட்ட 10% பிடித்து வைத்தல் வரி நீங்கலாக, அத்தகைய முறிகள் மீதான வருவாய்களின் மீது மேலதிக வரி எதுவும் செலுத்தத் தேவையில்லை.

**8. மத்திய வைப்பக முறையின் முதலீட்டாளர்களுக்கான கூற்று**

மத்திய வைப்பகமுறை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பின்வரும் கூற்றுக்களை வழங்கும்.

8.1 மாத காலத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துகின்ற மாதாந்தக் கூற்று

8.2 ஒவ்வொரு முதலீட்டாளர் வசமிருந்த வெளிநின்ற நிலுவைகளை உறுதிப்படுத்துகின்ற ஆண்டிற்கு இரு முறை வழங்கப்படும் கூற்று.

8.3 முதிர்ச்சிப் பெறுகைகளையும் அத்துடன் அல்லது வட்டிக் கொடுப்பனவுகளையும் அத்தகைய கொடுப்பனவுகள் செய்யப்படுகின்ற நாட்களையும் எடுத்துக் காட்டுகின்ற கூற்று.

இக்கூற்றுக்கள் மத்திய வைப்பக முறையில் பதிவு செய்யப்பட்டவாறு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பெயர் மற்றும் முகவரிக்கு நேரடியாக வழங்கப்படும்.

**9. ஏனையவை**

9.1 வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இத்திறைசேரி முறிகளை மற்றைய வெளிநாட்டுத்தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களுக்கு பிணையாகப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டனர்.

9.2 பரிமாற்றத்தை அல்லது ஏனைய இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெறுதிகளின் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். இத் திறைசேரி முறிகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களம், செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் என்பன கண்காணித்து மேற்பார்வை செய்யும்.

இது தொடர்பாக தேவையைப் பொறுத்து காலத்திற்குக் காலம் செலாவணிக்கட்டுப்பாட்டாளரினால் அல்லது பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் மேலதிக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் விடுக்கப்படும்.

இவ் வழிகாட்டல்கள் தொடர்பான எந்த ஒரு தெளிவுபடுத்தல்களையும் பின்வரும் தொலைபேசி, தொலைநகல் மற்றும் மின் மின்னஞ்சல்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி : 94 11 2477274/ 94 11 2477212/ 94 11 2477276/ 94 11 2477278

தொலைநகல் : 94 11 2477718/19 அல்லது 94 11 2477759

மின்னஞ்சல் : pddrbw@cbsl.lk, siriwardena@cbsl.lk, dharmawansa@cbsl.lk

**சந்திரா பிரேமரத்ன**

பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

2006 நவெம்பர் 01

இலங்கை மத்திய வங்கி

கொழும்பு

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களின்
அனைத்து முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

**வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்**

## வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி முறிகள்

1. **தகைமையுடைய முதலீட்டாளர்கள்**

பின்வரும் வெளிநாட்டு முதலீட்டாளர் வகையினர் மாத்திரமே இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி முறிகளில் முதலீடு செய்ய தகைமையுடையவர்களாவர்.

(அ) வெளிநாட்டு நிதியங்கள், இலங்கை பிணையங்கள் பரிமாற்ற ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட பரஸ்பர நிதியம் அல்லது பிரதேச நிதியம்;

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்; மற்றும்

(இ) வெளிநாட்டுப் பிரசைகள்

2. **முதலீடு**

மேலேயுள்ள கிளைவாசகம் 1இன் கீழ் தகைமையுடைய முதலீட்டாளர்கள் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளை பங்கேற்கும் முகவர்களினூடாக அதாவது இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்து கொண்டுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் அரச பிணையங்களின் வர்த்தகத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்களினூடாக இரண்டாந்தரச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்ய அனுமதிக்கப்பட்டனர். மேலும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திறைசேரி முறிகளின் முதலாந்தர ஏலங்களில் முதனிலை வணிகர்களூடாக விலைக்குறிப்பீடுகளைச் செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டனர். இந்நிறுவனங்களை தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

3. **பதிவுகள்**

இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பேணப்படும் மத்திய வைப்பகத்தில் பங்கேற்கும் முகவர்கள் (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள்) தமது வெளிநாட்டு முதலீட்டாளர்களின் விபரங்களைப் பதிவு செய்வதற்குப் பொறுப்புடையவராவர். மத்திய வைப்பக முறை வெளிநாட்டு கணக்கு வைத்திருப்போருக்கு பின்வருவனவற்றை உள்ளடக்கிய கூற்றுக்களை வழங்கும்.

(அ) மாத காலப்பகுதியில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துகின்ற மாதாந்தக் கூற்றொன்று.

(ஆ) ஒவ்வொரு முதலீட்டாளர் வசமுள்ள வெளிநின்ற நிலுவையினை உறுதிப்படுத்துகின்ற அரையாண்டுக் கூற்றொன்று.

(இ) முதிர்ச்சிப் பெறுகைகள் அத்துடன்/ அல்லது வட்டிக் கொடுப்பனவுகள் எப்பொழுது கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமோ அவற்றை எடுத்துக் காட்டுகின்ற கூற்றொன்று.

இக்கூற்றுக்கள், மத்திய வைப்பக முறையில் பதிவு செய்யப்பட்டவாறு முதலீட்டாளரின் பெயர் முகவரிக்கு நேரடியாக வழங்கப்படும்.

4. **தகுநிலை**

திறைசேரி முறிகளின் முதல் மற்றும் அதன் மீது வரவேண்டிய வட்டி என்பன இலங்கை அரசாங்கத்தின் நேரடியான, நிபந்தனையற்ற, பொதுவான, பிணையிடப்படாத கடப்பாடுகளாக இருப்பதுடன் தற்பொழுதும் எதிர்காலத்திலும் அவர்களிடையேயான நிலை மற்றும் நிலைக்கு இணையானவையும் அவற்றிற்கிடையே எந்தவிதமான முன்னுரிமைகளுமின்றி இலங்கை அரசாங்கத்தின் அனைத்து வெளிநிற்கும் பிணையிடப்படாத மற்றும் கீழ் நிலைப்படாத கடப்பாடுகளையும் கொண்டிருக்கும்.

5. **காலம்**

(அ) வெளிநாட்டு முதலீட்டாளர்கள் குறைந்தது இரண்டாண்டு எஞ்சிய முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்ட திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்பட்டனர். எனினும், வெளிநாட்டு முதலீட்டாளர் இன்னொரு வெளிநாட்டு முதலீட்டாளரிடமிருந்து கொள்வனவு செய்யின் 2 ஆண்டுகளைக் கொண்ட ஆகக் குறைந்த முதிர்ச்சிக் காலம் ஏற்புடைத்தாகாது.

(ஆ) வெளிநாட்டு முதலீட்டாளரொருவர் இரண்டாந்தரச் சந்தையில் இலங்கையில் வதியுமொருவருக்கு திறைசேரி முறிகளை விற்க அல்லது மாற்றல் செய்ய விரும்புவாராயின் அத்தகைய விற்பனை அல்லது மாற்றல் குறைந்தது ஓராண்டு காலத்திற்கு அவர் வைத்திருந்ததன் பின்பு மட்டுமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(இ) எனினும், வெளிநாட்டு முதலீட்டாளர் மேலேயுள்ள கிளைவாசகம் 1இன் நியதிகளில் தகைமை பெற்ற இன்னொரு முதலீட்டாளரான வெளிநாட்டுப் பிரசைக்கு திறைசேரி முறிகளை விற்பனை செய்வாராயின் இவ் வைத்திருக்கும் காலம் ஏற்புடைத்தாகமாட்டாது.

**6. திறைசேரி முறிகளுக்கான கொடுப்பனவுகள்**

மேலேயுள்ள கிளைவாசகம் 1இன் கீழ் தகைமையுடைய முதலீட்டாளர்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் (கட்டுக்காப்பு வங்கி) "திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு" என்றழைக்கப்படும் சிறப்பு ரூபாக் கணக்கொன்றினைத் திறந்து அக்கணக்கிற்கு ரூபாவில் வரவு வைப்பதன் மூலம் திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகளைச் செய்யலாம். கட்டுக்காப்பு வங்கி, தொடர்பான ரூபாத் தொகையினை தொடர்பான தரப்பினருக்கு மாற்றல் செய்வதற்கு அவசியமான ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். எனினும், வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதிகளை திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிற்கு மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

**7. திறைசேரி முறிகளை வெளியிடல் மற்றும் வழங்கல்**

கிளை வாசகம் 6 இல் குறித்துரைக்கப்பட்டவாறு முறையாகக் கொடுப்பனவுகளைச் செய்த, கிளை வாசகம் 3இல் குறித்துரைக்கப்பட்டவாறு மத்திய வைப்பக முறையில் பதிவினை மேற்கொண்ட வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு திறைசேரி முறிகளை பத்திரங்களற்ற வடிவத்தில் வழங்குதல் வேண்டும்.

**8. திறைசேரிமுறிகள் மீதான வட்டி**

**(i) வட்டிக் கொடுப்பனவுகள்**

வட்டியானது ரூபாவில் ஆண்டிற்கு இரு தடவைகள், குறிப்பிட்ட திறைசேரி முறிகளின் தொடர்பான கொடுப்பனவுத் திகதியன்று இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தினால் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினூடாக தொடர்பான பங்கேற்கும் நிறுவனங்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். அத்தகைய பங்கேற்கும் முகவர்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிற்கு அத்தகைய தொகையினை அதே நாளன்று உள்ள பெறுமதிக்கு மாற்றல் செய்வதற்கு பொறுப்புடையனவாகும். வட்டிக் கொடுப்பனவுத் திகதி எதுவும் இலங்கையில் வங்கி அலுவல்கள் இடம்பெறாத நாளன்று வருமாயின் கொடுப்பனவுகள் அடுத்த வேலை நாளன்று செய்யப்படும்.

**(ii) வட்டிக்காலம்**

"வட்டிக்காலம்" என்பது வழங்கப்பட்ட நாள் உட்பட அதிலிருந்து ஆனால் முதலாவது வட்டிக் கொடுப்பனவு நாள் நீங்கலான காலத்தையும் தொடர்ந்து வரும் ஒவ்வொரு காலப்பகுதியும் வட்டிக் கொடுப்பனவு நாளை உள்ளடக்கி ஆனால் அடுத்துவரும் வட்டிக் கொடுப்பனவு நாளை உள்ளடக்காத காலப்பகுதியொன்றாகும்.

**(iii) வட்டி வீதம்**

திறைசேரி முறிகள் மீது கொடுப்பனவு செய்யத்தக்க வட்டி வீதம் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறித் தொடர்களின் கூப்பன் வீதமாக இருக்கும்.

**9. முதல் தொகையை மீளச் செலுத்துதல்**

(அ) திறைசேரி முறிகள் மீது மீளச் செலுத்தத்தக்க முதல் தொகையானது ரூபாவில் தொடர்பான பங்கேற்கும் முகவரிக்கு இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் மீளச் செலுத்தப்பட வேண்டியதுடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கிற்கு தொடர்பான கொடுப்பனவுகளை அதே நாளன்று கிடைக்கத்தக்க விதத்தில் மாற்றல் செய்வது அத்தகைய பங்கேற்கும் முகவர்களின் பொறுப்பாகும்.

(ஆ) திறைசேரி முறிகளின் முதல் தொகையானது முதிர்ச்சி நாளன்று மீளச் செலுத்தப்படத்தக்கதாகும். முதிர்ச்சி நாள் இலங்கையில் வங்கி அலுவல்கள் நடைபெறாத நாளொன்றில் வருமாயின் முதல் தொகையின் மீள்கொடுப்பனவு அடுத்து வரும் வேலை நாளன்று மேற்கொள்ளப்படும்.

**10. பணத்தினை வெளிநாட்டிற்கு அனுப்புதல்**

திறைசேரி முறிகளின் விற்பனை அல்லது மாற்றல் அல்லது முதிர்ச்சியடைவதன் மூலம் பெறப்படும் அனைத்து பெறுகைகளும் திறைசேரி முறிகளின் வட்டி வருமானமும் முழுமையாக வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கப்படலாம். எனினும், அத்தகைய வெளிநாட்டு பணவனுப்பல்கள் திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கினைப் பேணுகின்ற கட்டுக்காப்பு வங்கியூடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும்.

**11. கூட்டு உடமைகள்**

திறைசேரி முறிகளை உடமையாளர்கள் கூட்டாகவும் (தற்பொழுது இருவர் மாத்திரம்) வைத்திருக்கலாம். முதல் தொகையின் மீள்கொடுப்பனவும் வட்டிக் கொடுப்பனவும் கட்டுக்காப்பு வங்கிக்கும் கூட்டு உடமையாளர்களுக்குமிடையிலான உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

**12. வரிச் சலுகை**

திறைசேரி முறிச்சந்தையில் முதலீடு செய்த தகைமையுடைய வெளிநாட்டு முதலீட்டாளர்கள், அத்தகைய முறிகள் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட போது விதிக்கப்பட்ட 10% பிடித்து வைத்தல் வரி நீங்கலாக அத்தகைய முறிகள் மீதான வருவாய்களின் மீது மேலதிக வரி எதுவும் செலுத்தத் தேவையில்லை.

**13. முத்திரைத் தீர்வை**

திறைசேரி முறிகளின் வழங்கல், மாற்றல் அல்லது மீட்பு மீது வழங்கப்பட்ட அனைத்து ஆவணங்களும் முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.

**14. நியாயாதிக்கம்**

இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகள் தொடர்பான அனைத்து விடயங்களைப் பொறுத்தவரையிலும் இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் பிரத்தியேகமான நியாயாதிக்கத்தினைக் கொண்டிருக்கும்.

**15. ஆளுகைச் சட்டம்**

திறைசேரி முறிகளின் நியதிகளும் நிபந்தனைகளும் இலங்கையின் சட்டங்களினாலும் அவற்றின் பொருள் கோடல்களினாலும் ஆளப்படும்.

இது தொடர்பான மேலதிக அறிவுறுத்தல்கள் விடயத்தினைப் பொறுத்து செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அல்லது பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் வழங்கப்படும்.

இவ்வழிகாட்டல்கள் தொடர்பான எந்த ஒரு தெளிவுபடுத்தலையும் பின்வரும் தொடர்புகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி : 94 11 2477274/ 94 11 2477212/ 94 11 2477276/ 94 11 2477278

தொலைநகல் : 94 11 2477718/19 அல்லது 94 11 2477759

மின்னஞ்சல் : pddrbw@cbsl.lk, siriwardena@cbsl.lk, dharmawansa@cbsl.lk

**சந்திரா பிரேமரத்ன**

பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

இலங்கை மத்திய வங்கி

2006 நவெம்பர் 01

இலங்கை மத்திய வங்கி

கொழும்பு

| நிறுவனங்களின் பெயர் | தொடர்பு இலக்கம் | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|
| **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்** | | |
| இலங்கை வங்கி - பொதுப்படுகடன் பிரிவு | 91-11-2348878 | gm@boc.lk |
| கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் லிமிடெட் | 94-11-2477516 | alg@combank.net |
| சிற்றி வங்கி என்ஏ | 94-11-2326086 | Kapila.jayawardena@citigroup.com |
| டொயிஷ் வங்கி ஏஜி | 94-11-2448581 | stefan.mahrdt@db.com |
| டீஎவ்சீசீ வர்தன வங்கி லிமிடெட் | 94-112371450 | Elgee.Perera@dfccvardhanabank.com |
| ஹபீப் வங்கி லிமிடெட் | 94-11-2389355 | sherwani@sltnet.lk |
| ஹட்டன் நசனல் வங்கி லிமிடெட் | 94-11-2661303 | theaga@hnb.lk |
| த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் | 94-11-2477536 | ceosrilanka@hsbc.om.lk |
| ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் | 94-11-4242424 | Naveen.agarwal@icicibank.com |
| இந்தியன் வங்கி | 94-11-2446122 | ibcol@sltnet.lk |
| இந்தியன் ஓவசீஸ் வங்கி | 94-11-2320515 | iobch@lgo.lk |
| எம்சிபி வங்கி லிமிடெட் | 94-11-2440569 | gmoffice@mcb.lk |
| நெசனல் டெவலப்மென்ற் வங்கி லிமிடெட் | 94-11-2448889 | Nihal.welikala@ndbbank.com |
| நேசன்ஸ் ரஸ்ட் வங்கி லிமிடெட் | 94-11-4313101 | zulfigar.zavahir@nationtrust.com |
| பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் | 94-11-2565556 | nadarajah@pabcbank.com |
| பப்ளிக் வங்கி பெர்காட் | 94-11-2576288 | lks@publicbank.slt.lk |
| மக்கள் வங்கி | 94-11-2334041 | asoka@peoplesbank.lk |
| சம்பத் வங்கி லிமிடெட் | 94-11-2300152 | anil@sampath.lk |
| செலான் வங்கி லிமிடெட் | 94-11-2456777 | gm@seylan.lk |
| ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா | 94-11-2447166 | ceosbilk@sltnet.lk |
| ஸ்ரான்டட் சார்ட்டட் வங்கி | 94-11-2480012 | clive.haswell@lk.standardchartered.com |
| யூனியன் வங்கி ஒவ் கொழும்பு லிமிடெட் | 94-11-2370690 | mahenfdo@unionb.com |
| யூனியன் வங்கி லிமிடெட் (பாகிஸ்தான்) | 94-11-2675046 | goharulaynafzal@ubipk.com |
| **முதனிலை வணிகர்கள்** | | |
| இலங்கை வங்கி - பொதுப்படுகடன் பிரிவு | 94-11-2448830 | pdu@boc.lanka.net |
| கப்பிட்டல் அலைன்ஸ் லிமிடெட் | 94-11-2317777 | general@capitalalliance.lk |
| கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் லிமிடெட் | 94-11-2449516 | Dula@combank.net |
| சிலிங்கோ ஷிறிறாம் செக்குரிற்றிஸ் லிமிடெட் | 94-11-2564935/6 | hiran@ceyshri.com.lk |
| பெஸ்ற் கப்பிட்டல் ரேசறீஸ் லிமிடெட் | 94-11-2308852/3 | fclgroup@fclgroup.com |
| எச்என்பீ செக்குரிற்றிஸ் லிமிடெட் | 94-11-2661199 | hnbsl@hnb.lk |
| என்எஸ்பி பன்ட் மனேச்மன்ட் கொம்பனி லிமிடெட் | 94-11-2564706 | nsbfmc@sltnet.lk |
| நற் வெல்த் செக்குரிற்றிஸ் லிமிடெட் | 94-11-4703000 | chandra@natwealth.com |
| மக்கள் வங்கி | 94-11-2308762 | pd@peoplesbank.lk |
| செலான் வங்கி அசற் மனேச்மன்ட் லிமிடெட் | 94-11-2456341/2 | ajantha@seylan.lk |
| சம்பத் சுறக்கிறம் லிமிடெட் | 94-11-2305841 | surakum@sampath.lk |

## 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1991 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் வழங்கப்பட்ட பணிப்பு.

**சுனில் மெண்டிஸ்**
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2006 சனவரி 30

## 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (ஆகக் குறைந்த மைய மூலதனம்) பணிப்புரை

1. இப்பணிப்பு 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் (ஆகக் குறைந்த மைய மூலதனம்) பணிப்பு என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடையதாதலும் 2006 பெப்புருவரி 1 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இது தொடர்பான பந்தி 3 இன் நிபந்தனைக்குட்பட்டு ஒவ்வொரு நிதிக்கம்பனியும் எல்லா நேரங்களிலும் ரூ.200 மில்லியனுக்குக் குறையாத மைய மூலதனமொன்றினைப் பேணுதல் வேண்டும்.

3. 2006 பெப்புருவரி 1 ஆம் நாளன்று ஆகக் குறைந்த மைய மூலதனத் தேவைப்பாடான ரூ. 200 மில்லியனைப் பேணாத நிதிக்கம்பனிகள் எழுத்து மூலமான கோரிக்கையினை விடுக்குமிடத்து அவற்றின் மைய மூலதனத்தினை உயர்த்துவதற்காக பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு 30 மாதங்களைக் கொண்ட கால நீடிப்பொன்றினை பணிப்பாளர் வழங்கலாம்:

(i) ரூ.100 மில்லியனுக்கும் குறைவான மைய மூலதனத்தினைக் கொண்டுள்ள நிதிக்கம்பனியொன்று -

(அ) பணிப்புரை நடைமுறைக்கு வந்ததிலிருந்து முதல் பன்னிரண்டு மாதங்களுக்குள் அதன் மைய மூலதனத்தினைக் குறைந்தது ரூ.100 மில்லியனுக்கு உயர்த்திக் கொள்ளுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) மைய மூலதனத் தேவைப்பாடான ரூ.200 மில்லியனை நிறைவு செய்யும் விதத்தில் மீதி ரூ.100 மில்லியனை அல்லது பற்றாக்குறையாகவுள்ள தொகையனை மேலே (i) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள 12 மாத காலப்பகுதியின் பின்னரான 18 மாதங்களுக்கிடையில் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

(ii) ரூ.100 மில்லியனுக்கும் ரூ.200 மில்லியனுக்குமிடையிலான மைய மூலதனத்தினைக் கொண்டுள்ள நிதிக்கம்பனியொன்று -

(அ) ரூ.200 மில்லியனுக்குக் குறைவாகவுள்ள தொகையில் குறைந்தது 50 சதவீதத்தினை பணிப்புரை தொடங்கம் நாளிலிருந்து முதல் 12 மாதங்களுக்கிடையிலும் அத்துடன்

(ஆ) ரூ.200 மில்லியன் கொண்ட மைய மூலதனத் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்கு பற்றாக்குறையாகவுள்ள தொகையினை மேலே 3 (ii) (அ) இல் குறிப்பிடப்பட்ட 12 மாத காலப்பகுதியின் பின்னரான 18 மாதங்களுக்கிடையிலும் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும்.

4. இப்பணிப்பில்

"பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிப்பதாகும்.

"மைய மூலதனம்" என்பது 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரையில் தரப்பட்டுள்ள அதே வரைவிலக்கணத்தினைக் கொண்டிருக்கும்.

## 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1991 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் வழங்கப்பட்ட பணிப்பு.

**சுனில் மெண்டிஸ்**
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2006 சனவரி 30

## 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (இடைநேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதப்) பணிப்புரை

1. இப்பணிப்பு 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் (இடைநேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதப்) பணிப்பு என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடையதாதலும் 2006 பெப்புருவரி 1 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. நிதிக்கம்பனிகளின் மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணிக்கும் நோக்கத்திற்காக மூலதன அமைப்பு பின்வருமாறு பிரிக்கப்படும்:-

(i) அடுக்கு 1 - மைய மூலதனம்: இது நிரந்தர பங்குடமையாளர்களின் பங்குகளையும் (செலுத்தப்பட்ட பங்குகள்.'. பொதுவான இருப்புக்கள்) பொருத்தமான வைத்திருக்கப்பட்ட வருவாய்கள் அல்லது மற்றைய மிகைகளின் மூலம் உருவாக்கப்பட்ட அல்லது அதிகரிக்கப்பட்ட ஒதுக்குகளையும் அதாவது பங்கு வட்டங்கள் நிறுத்தி வைத்திருக்கப்படும் இலாபங்கள் மற்றும் ஏனைய ஒதுக்கங்களையும் கொண்டிருக்கின்றது அத்துடன்

(ii) அடுக்கு 2 - துணை நிரப்பு மூலதனம்: மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் பொது ஒதுக்குகள் மற்றும் மூலதனக் கருவிகள் மற்றும் மீட்புச் செய்யப்படாத துணைப்படுகடன் போன்ற குறிப்பிட்ட பண்புகளைக் கொண்ட பங்குகள் மற்றம் படுகடன்கள் என்பனவற்றை ஒன்று சேர்ந்த ஏனைய மூலதனக் கருவிகள் என்பனவற்றைக் கொண்டிருக்கிறது.

3. 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் பணிப்புரையின் (ஆகக் குறைந்த மைய மூலதனம்) ஏற்பாடுகளுக்குட்பட்டு அவற்றின் இடர்நேர்வு நிறைவேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பான பணிப்பாளர் பணிப்புரைகளுக்கேற்ப கணிக்கப்பட்ட 5 சதவீதத்திற்குக் குறையாத பங்கைக் கொண்ட மைய மூலதன விகிதத்துடன் குறைந்தது 10 சதவீதம் கொண்ட மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினை எல்லா நேரங்களிலும் (பணிப்பாளரினால் குறித்துரைக்கப்பட்ட விடயங்களுக்கேற்ப சீராக்கப்பட்ட விதத்தில்) பேண வேண்டும்.

4. ஒவ்வொரு நிதிக்கம்பனியும் பணிப்பாளருக்கு பின்வருவனவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்:

(i) ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்த முப்பது நாட்களுக்கிடையில் பந்தி 3 இன் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களில்தரப்பட்டுள்ள படிவத்தில் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலுமுள்ளவாறான கூற்று ஒன்றை

(ii) ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கிடையில் மேலே துணைப் பந்தி 4 (a) இல் குறித்துரைக்கப்பட்டுள்ள காலாண்டுக் கூற்றிற்காகத் தரப்பட்டுள்ள அதே படிவத்தில் தொடர்பான அறிவுறுத்தல்களை படிவங்களை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையை அடிப்படையாகக் கொண்ட கூற்றொன்றை.

5. இப்பணிப்பில் -

"பணிப்பாளர்" என்பதன் கருத்து இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிப்பதாகும்.

6. 2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (இடைநேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரை இத்தால் புறக்கீடு செய்யப்படுகிறது.

## 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2006 திசெம்பர் 29

## 2006 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (அறவிடமுடியா, ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டு) பணிப்புரை

1. இப்பணிப்பரையானது 2006 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (அறவிடமுடியா, ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டு) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளில் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும் 2007 ஏப்பிறல் 02 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஒவ்வொரு நிதிக்கம்பனியும் பின்வரும் பண்புகளைக் கொண்ட கடன் வசதிகளை செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தலாம்.

   (i) செலுத்தப்பட வேண்டிய தவணைப்பணக் கொடுப்பனவு அல்லது வரவேண்டிய வங்கிக் கொடுப்பனவு 6 மாதங்கள் அல்லது அதற்கும் கூடுதலாக நிலுவையில் இருக்குமிடத்து;

   (ii) மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடன் வசதிகளைப் பொறுத்த வரையில், மீள் அட்டவணைப்படுத்தலுக்கு முன்பும் (ஏதாவது இருப்பின்) மீள் அட்டவணைப்படுத்தலுக்கு பின்பும் கணக்கில் நிலுவையில் உள்ள ஒன்று சேர்ந்த காலம் 6 மாதங்கள் அல்லது அதற்கும் கூடுதலாக உள்ளவிடத்து; அத்துடன்

   (iii) கடன் வசதியைப் பொறுத்தவரை குத்தகைக்கு விடல்/ தவணைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் அவை மீள உடமைப்படுத்தப்பட்டு நிதிக்கம்பனியினால் விற்கப்பட்டிருக்குமிடத்து அல்லது சொத்துக்கள் பிணையாகக் கொள்ளப்பட்டிருக்குமிடத்து

3. (i) ஒவ்வொரு நிதிக்கம்பனியும் செயற்படாக்கடன்கள் என வகைப்படுத்தப்பட்ட கடன் வழங்கல்களுக்காக ஒதுக்கங்களை மேற்கொள்ளலாம். அத்தகைய ஒதுக்கங்களின் தொகை குறைந்தது பின்வருவனவற்றின் கூட்டுத்தொகையாக இருத்தல் வேண்டும்.

   (அ) 6 மாதங்கள் அல்லது அதற்கும் கூடுதலாக ஆனால் 12 மாதங்களை விஞ்சாத காலப்பகுதிக்கு நிலுவையில் உள்ள அனைத்து கடன் வழங்கல்களில் 50 சதவீதம்;

   (ஆ) 12 மாதங்களுக்கு மேலாக நிலுவையிலுள்ள அனைத்துக் கடன்களினதும் 100 சதவீதம்;

   (இ) பிணையாக அல்லது குத்தகை தவணைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் நிதியீட்டமாகப் பெறப்பட்ட சொத்துக்கள் மீள உடமையாக்கப்பட்டு நிதிக்கம்பனியினால் விற்கப்பட்டிருக்குமிடத்து கடன்தொகையின் மீளளிக்கப்படாத தொகையின் பங்கைப் பொறுத்தவரையில் 100 சதவீதம்.

   (ii) மேலே பந்தி 3 (i) இனால் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்கத் தொகையினைப் பெற்றுக்கொள்வதற்கு நிதிக்கம்பனியொன்று குறிப்பிட்ட கடன் வழங்கல் தொடர்பாக பிணையாக வைத்திருக்கும் பின்வரும் பிணையங்களின் பெறுமதியினைக் கழித்துக் கொள்ளலாம்.

   (அ) எந்த ஒரு பாத்தியதையும் அல்லது விதிப்பும் இல்லாமல் இலங்கை அரசின் பிணையங்கள்;

   (ஆ) எந்த ஒரு பாத்தியதையும் அல்லது விதிப்புமில்லாத, இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள்;

   (இ) எந்த ஒரு பாத்தியதையும் அல்லது விதிப்புமில்லாத, உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றில் அல்லது பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனியொன்றில் உள்ள தவணை வைப்புக்கள்;

   (ஈ) எதிரீடு செய்யும் வசதிகளின் கிடைப்பனவைக் கொண்ட கடன்வழங்கலுக்கான பிணையாக எடுக்கப்பட்ட கம்பனியுடனான தவணை வைப்பு அல்லது கம்பனியின் சேமிப்பு கணக்கிலுள்ள நிலுவை;

   (உ) வங்கி உத்தரவாதங்கள்;

   (ஊ) நிதிக்கம்பனியினால் மீள் உடமையாக்கப்பட்ட ஊர்திகள் மற்றும் பொறிகளைப் பொறுத்தவரையில், பணிப்பாளரினால் ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீட்டாளரிமிருந்து முற்போந்த ஆறு மாத காலப்பகுதியில் பெறப்பட்ட மதிப்பீட்டில் 80 சதவீதம்; அத்துடன்

   (எ) ஈடு வைக்கப்பட்டு குறிப்பிட்ட கடன்வழங்கலுக்கான பிணையாக வைத்திருக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களைப் பொறுத்தவரையில், கடன் வழங்கப்படும் வேளையில் தொழில்கள் மதிப்பீட்டாளர் ஒருவரினால் பின்வரும் அடிப்படையில் தீர்மானிக்கபட்ட பெறுமதி -

   (அஅ) 36 மாதங்கள் வரை நிலுவையிலுள்ள கடன் வழங்கலைப் பொறுத்த வரை, 100 சதவீதம்;

(ஆஆ) 36 மாதங்கள் அல்லது அதற்கும் கூடுதலாக ஆனால் 60 மாதங்களை விஞ்சாத நிலுவையிலுள்ள கடன்களைப் பொறுத்த வரை, 80 சதவீதம்;

(இஇ) 60 மாதங்கள் அல்லது அதற்கும் கூடுதலாக ஆனால் 120 மாதங்களை விஞ்சாத நிலுவையிலுள்ள கடன்களைப் பொறுத்தவரை, 50 சதவீதம்;

(ஈஈ) 120 மாதங்களுக்கு மேலாக நிலுவையிலுள்ள கடன்களைப் பொறுத்த வரையில், எத்தொகையும் கழிக்கப்பட மாட்டாது.

வரவேண்டிய மீளப் பெறுதலுக்காக விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் ஆட்களெவரும் வதியாத நிலையில் கையளிக்கப்பட வேண்டும் என்ற உடன்படிக்கை எதுவுமின்றி ஆட்கள் வதியும், வதிவிடச் சொத்தொன்று பிணையாக எடுத்துக் கொள்ளப்படுமிடத்து அத்தகைய சொத்தின் பெறுமதி தேவையான ஒதுக்கங்களைக் கணிப்பதற்காக குறைக்கப்படக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டிருக்கும்.

4. இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது எந்த ஒரு நிதிக்கம்பனியினையும், அத்தகைய நிதிக்கம்பனியினால் ஏற்கனவே செய்யப்பட்ட ஒதுக்கங்களுக்கு புறம்பாக, செயற்படாக்கடன் வசதிகளுக்காக மேலும் குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கங்களைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளலாம்.

5. (i) ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்த ஒரு மாதத்திற்குள்ளாக அனைத்து நிதிக்கம்பனிகளும் பணிப்பாளருக்கு கடன்களின் விபரங்களை, பணிப்பாளரினால் தரப்பட்ட படிவத்தில் *தொடர்பான காலாண்டின் இறுதியிலுள்ளவாறு 3 மாதங்கள் அல்லது கூடுதலான காலப்பகுதிக்கு நிலுவையில் இருந்த தவணைப்பணம்/ நிதிக் குத்தகை கொடுப்பனவு விபரங்களை பின்வருமாறு சமர்ப்பித்தல் வேண்டும்-

(அ) நிலையான தவணைமுறைக் கொடுப்பனவுகள்/ நிதிக் குத்தகை கொடுப்பனவுகளில் திருப்பிச் செலுத்தப்பட்ட கடன் வசதிகள்;

(ஆ) நிலையான தவணைமுறைக் கொடுப்பனவுகள்/ நிதிக் குத்தகை கொடுப்பனவுகளில் திருப்பிச் செலுத்தப்படாத கடன் வசதிகள்;

(இ) செயற்பாட்டு நிதிக் குத்தகைகள்.

(ii) ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு நிதிக் கம்பனியும் பணிப்பாளருக்கு சமர்ப்பித்த படிவத்தில் பின்வருவனவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்-

(அ) மீளப்பெறப்பட்ட சொத்துக்களின் விபரங்களடங்கிய கூற்று; அத்துடன்

(ஆ) 3 மாதங்கள் அல்லது அதற்கு மேல் நிலுவையிலுள்ள கடன்வசதிகள் பற்றிய விபரங்கள்.

(iii) ஒவ்வொரு நிதிக் கம்பனியும் ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்த ஒரு மாத காலத்திற்குள் 6 மாதங்கள் அல்லது அதற்கு மேல் நிலுவையிலுள்ள கடன் வசதிகள் அல்லது முற்போந்த காலாண்டு முடிவடைந்த பின் நிலுவையிலுள்ள கடன் வசதிகளை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விபரங்களை பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

6. இப் பணிப்புரையின் நோக்கங்களுக்காக -

(i) "கடன் வசதி" என்பதன் பொருளானது கடன்கள், வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகை உடன்படிக்கையின் கீழ் வழங்கப்படும் வசதிகள்; முறிகள், தொகுதிக்கடன்கள், கடன் பிணைகளாகவுள்ள சொத்துக்கள், வர்த்தகப்பத்திரங்கள் வாக்குறுதிச் சான்றிதழ்கள் போன்ற படுகடன் பிணையங்களுடான நிதிய ஏற்பாடுகள் அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்ட ஏனைய நிதியியல் வசதி என்பதாகும்.

(ii) "தகைமைபெற்ற தொழில்சார் மதிப்பீட்டாளர்" என்பதன் கருத்து

(அ) ஒரு பட்டயம் பெற்ற மதிப்பீட்டு அளவையாளர்;

(ஆ) மதிப்பிடலில் ஒரு பட்டதாரியாக அல்லது டிப்ளோமா பெற்றவராகவும் மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் இலங்கை உறுப்பினிடமிருந்ததுடன் 15 வருட கால வேலை அனுபவம்;

(இ) 18 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வேலை அனுபத்துடன் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் ஒரு பட்டதாரி உறுப்பினராக இருத்தல் வேண்டும்;

(ஈ) 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வேலை அனுபவத்துடன் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் இணை உறுப்பினராக இருத்தல் வேண்டும்; அல்லது

(உ) 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வேலை அனுபவத்துடன் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் இடைநிலை தேர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

7. 1991 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடுகள்) பணிப்புரையும் 1991 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடுகள்) பணிப்புரையும் 2007 ஏப்பிறல் 01 ஆம் நாளிலிருந்து தொழிற்படுவதிலிருந்து நிறுத்தப்படும்.

* தொடர்பான படிவங்களை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2006 திசெம்பர் 29

## 2006 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (தனியொரு கடன்பட்டாளர் வரையறை) பணிப்புரை

1. இப்பணிப்பரையானது 2006 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 2 இன் நியதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடைத்துமாவதுடன் உடனடியாக தொழிற்பாட்டிற்கு வருதலும் வேண்டும்.

2. 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்புரையின் 2 ஆம் பந்தியின் கீழ் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்குட்பட்டு நிதிக்கம்பனியினால் வழங்கப்பட்ட ஆகக்கூடிய தனியொரு கடன் அல்லது மொத்தக் கடன் வசதிகள் மற்றும் தனிப்பட்ட கடன்பாட்டாளரிடமிருந்து எந்த ஒரு நேரத்திலும் வெளிநின்ற தொகையானது அத்தகைய நிதிக்கம்பனியின் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்ட மூலதன நிதியத்தில் 15 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

3. நிதிக்கம்பனியொன்றினால் வழங்கப்பட்ட தனியொரு கடன் வசதி அல்லது கூட்டுக்கடன் வசதிகளின் ஆகக்கூடிய உச்சத்தொகையும் எந்த ஒரு கடன்பாட்டாளர் குழு அல்லது அத்தகைய நிதிக்கம்பனியின் துணை அல்லது இணைக்கம்பனிகளின் வெளிநின்ற தொகையானது அத்தகைய நிதிக்கம்பனியின் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறாக மூலதன நிதியத்தில் 20 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

4. பந்திகள் 2 மற்றும் 3 இல் குறிப்பிடப்பட்ட கடன்பாட்டாளர் வகையினருக்கு வழங்கப்பட்டு வெளி நிற்கும் தனியொரு கடன் வசதிகளில் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு அத்தகைய கம்பனியின் மூலதன நிதியத்தில் 10 சதவீதத்தினை விஞ்சும் ஒவ்வொரு கடன் வசதியும் வழங்கப்பட்ட தனியொரு கடன் வசதி அத்தகைய அனைத்துக் கடன் வசதிகளும் கூட்டப்படும் பொழுது அத்தகைய நிதிக்கம்பனியின் மொத்தக்கடன் வசதியில் 50 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

5. நிதிக்கம்பனியொன்றினால் வழங்கப்பட்டு எந்த ஒரு நேரத்திலும் தனியொரு கடன்பாட்டாளரிடமிருந்து வெளிநிற்கின்ற தனியொரு பிணையிடப்படாத கடன்வசதியும் அல்லது பிணையிடப்படாத கூட்டு மொத்தக்கடன் வசதியினதும் உச்ச அளவு அத்தகைய நிதிக்கம்பனியின் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்ட மைய மூலதனத்தில் 1 சதவீதத்தினை விஞ்சக்கூடாது. வழங்கப்பட்ட பிணையிடப்படாத கடன்களின் கூட்டுத்தொகையும் எந்த ஒரு நேரத்திலும் வெளிநின்ற தொகையும் அத்தகைய நிதிக்கம்பனியின் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்ட மூலதன நிதியத்தில் 5 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

   இப்பந்தியின் நோக்கத்திற்காக, ''பிணையிடப்படாத கடன் வசதி'' என்பதன் பொருள் பிணைகளின்றி செய்யப்பட்ட கடன் வசதி அல்லது கடன் வசதியில் குறைந்தது 75 சதவீதத்தினையேனும் உள்ளடக்குவதற்குப் போதாத சந்தைப் பெறுமதியினைக் கொண்ட சொத்துக்களைக் கொண்ட எந்த ஒரு கடன் வசதியினையும் குறிக்கும்.

   2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்பாளர் பிரிவு 2 (v) இன் ஏற்பாடுகளுக்கு அமைய இப்பந்தியின் நோக்கத்திற்காக ''பிணைகள்'' என்பது மூன்றாம் தரப்பினரின் உத்தரவாதங்களை உள்ளடக்கும்.

   இப்பந்தியின் நோக்கத்திற்காக, உந்து ஊர்திகள் மற்றும் பொறித்தொகுதி தொடர்பிலான சந்தைப் பெறுமதி பணிப்பாளரினால் ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீட்டாளரிடமிருந்து அடுத்து வரும் 6 மாதங்களுக்குள் மதிப்பீட்டினை பெறப்பட்டிருக்க வேண்டியதுடன், நிலம் மற்றும் கட்டடம் தொடர்பான மதிப்பீடு தேர்ச்சி பெற்ற தொழில்சார் மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

6. இப்பணிப்பின் பந்தி 2, 3 மற்றும் 4 இன் நோக்கங்களுக்காக, கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களைக் கொண்ட பிணையத்திற்கெதிராக கடன் வசதிகள் வழங்கப்பட்டிருக்குமாயின், அத்தகைய பிணையத்தின் பெறுமதி அத்தகைய தொடர்பான கடன் வசதிகளிலிருந்து கழிக்கப்படலாம்:-

   (i) எந்த ஒரு பாத்தியதையும் அல்லது விதிப்பும் இல்லாத திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் உட்பட இலங்கை அரசின் பிணைங்கள்;

   (ii) எந்த ஒரு பாத்தியதையும் அல்லது விதிப்பும் இல்லாத இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள்;

   (iii) எந்த ஒரு பாத்தியதையும் அல்லது விதிப்புமில்லாத, உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றில் அல்லது பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனியொன்றில் உள்ள தவணை வைப்புக்கள்;

(iv) கம்பனி ஒன்றுடனான தவணை வைப்புக்கள் அல்லது எதிரீடு செய்வதற்கான உரிமை கிடைக்கத்தக்கதாகவுள்ள கடன்வசதிக்கான பிணையாக கம்பனியினால் பொறுப்பேற்கப்பட்ட சேமிப்பு கணக்கிலுள்ள நிலுவை; அல்லது

(v) வங்கி உத்தரவாதங்கள்

7. இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காக

(i) "கடன் வசதி" என்பதன் பொருளானது கடன்கள்; வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகை உடன்படிக்கையின் கீழ் வழங்கப்படும் வசதிகள், முறிகள், தொகுதிக்கடன்கள் கடன் பிணையாகவுள்ள சொத்துக்கள் வர்த்தகப் பத்திரங்கள்/ வாக்குறுதிச் சான்றிதழ்கள் போன்ற படுகடன் பிணையங்களுடனான நிதிய ஏற்பாடுகள் அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்ட ஏனைய நிதியியல் வசதி என்பதாகும்.

(ii) "துணைக்கம்பனி" என்பது 20 சதவீதத்திற்குச் சமமான பங்குகளை அல்லது அதற்கும் கூடுதலான ஆனால் கம்பனி ஒன்றின் வழங்கப்பட்டதும் செலுத்தப்பட்டதுமான 50 சதவீதத்திற்கும் குறைவான சாதாரண பங்குகளை மற்றைய கம்பனியொன்றின் வசமிருக்கும் பொழுது முதலாவது கம்பனி மற்றைய கம்பனியின் துணைக்கம்பனியாகக் கருதப்படும்.

(iii) "மூலதன நிதியங்கள்" என்பது 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவிலுள்ள வரைவிலக்கணம் கொண்டுள்ள அதே பொருளினைக் கொண்டிருக்கும்.

(iv) மைய மூலதனம் என்பது 2006 ஆம் ஆண்டின் நிதிக்கம்பனிகள் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரை இல. 2 இல் தரப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(v) "கடன்பட்டாளர் குழுமம்" என்பதன் பொருள்

(அ) (i) தனிப்பட்டவர் மற்றும் அவரது உறவினர்கள்;

(ii) தனிப்பட்டவர் மற்றும் கம்பனியொன்று இதில் அத்தகைய தனிப்பட்டவர் வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்குகளை வைத்திருத்தல்; அல்லது

(iii) தனிப்பட்ட ஒருவர் அல்லது கம்பனியொன்று இதில் அவரது உறவினர்கள் வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்குகளை வைத்திருத்தல்

(ஆ) கம்பனியொன்றும் பின்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கும் கூடுதலானதும்

(i) இதன் துணைக்கம்பனி

(ii)இதன் இணைக்கம்பனி

(iii) இதன் உடமைக் கம்பனி; அல்லது

(iv) துணைக்கம்பனியிலிருந்து அல்லது இதன் உடமைக் கம்பனியின் இணைக்கம்பனி

(vi) "தனிப்பட்ட கடன்பாட்டாளர்" என்பதன் பொருள் தனிப்பட்ட கம்பனி, அரச கூட்டுத்தாபனம், நிறுவனம், ஆட்களின் சங்கம் அல்லது தனிப்பட்ட ஒருவர் என்பதாகும்.

(vii) தகைமை பெற்ற தொழில்சார் மதிப்பீட்டாளர் என்பதன் கருத்து-

(அ) பட்டய மதிப்பீட்டு அளவையாளர்

(ஆ) மதிப்பீட்டில் பட்டம் அல்லது தகைமைச் சான்றிதழுடன் கூடிய மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் உறுப்பினராகவும் 15 ஆண்டுகள் தொழில் அனுபவம் கொண்டதாகவும்

(இ) மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (இலங்கை) பட்டதாரி உறுப்பினராவதுடன் 18 ஆண்டிற்கு மேலான தொழில் அனுபவம் பெற்றுள்ளவராகவும்

(ஈ) மதிப்பீட்டாளர் கழகத்தின் உறுப்பினராவதுடன் 20 ஆண்டிற்கு மேற்பட்ட தொழில் அனுபவம் கொண்டவராகவும்; அல்லது

(உ) மதிப்பீட்டாளர் நிறுவனத்தில் இசைவுரிமை பெற்றுள்ளதுடன் 25 ஆண்டிற்கு மேற்பட்ட தொழில் அனுபவம் கொண்டுள்ளவராகவும் விளங்குதல்

(viii) "உறவினர்" என்பதன் பொருள் தனிப்பட்ட கடன்பாட்டாளரின் வாழ்க்கைத்துணை அத்துடன் அல்லது தங்கியிருக்கும் குழந்தை

(ix) "துணைக்கம்பனி" என்பதன் பொருள் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவு கொண்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

(x) "பணிப்பாளர்" என்பது, இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தினைக் குறிக்கும்.

8. 1992 ஆம் ஆண்டின் நிதிக்கம்பனிகள் (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரை இல. 1 இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

## 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2006 திசெம்பர் 29

## 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்புரை

1. இப்பணிப்பரையானது 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 2 இன் நியதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. நிதிக்கம்பனி எதுவும்;

   (i) அதன் பணிப்பாளர்களுக்கு அல்லது பணிப்பாளரின் உறவினர்களுக்கு;

   (ii) அதன் உடமைக் கம்பனிக்கு;

   (iii) அதன் சொந்தப்பங்குகளின் பிணையங்கள் அல்லது வேறு எந்த ஒரு அதன் துணைக்கம்பனிகளின் பங்குகளின் பிணையங்களின் மீதும்;

   (iv) அதன் சொந்த பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக; அல்லது

   (v) கம்பனிப் பணிப்பாளரின், அவரது உறவினரின் அல்லது நிதிக்கம்பனியின் எந்த ஒரு அலுவலரினதும் உத்தரவாதம் அல்லது நட்டோத்தரவாதத்தின் மீதும் எந்த ஒரு கடன் வசதியையும் வழங்கக்கூடாது.

3. நிதிக்கம்பனியொன்று 2006 ஆம் ஆண்டின் நிதிக்கம்பனிகள் (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) 4 ஆம் இலக்க பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட பணிப்புரைகளுக்கு உட்பட்ட விதத்தில் அதன் துணைக்கம்பனிகளுக்கோ அல்லது இணைக்கம்பனிகளுக்கோ கடன் வசதிகளை வழங்கலாம் அவ்வாறு துணைக்கம்பனியொன்றிற்கு அல்லது இணைக்கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்ட அத்தகைய கடன் வசதி நிதிக்கம்பனியின் மற்றைய எந்த ஒரு கடன்பாட்டாளருக்கும் ஏற்புடைத்தான நியதிகளிலேயே வழங்கப்பட வேண்டியதுடன் அத்தகைய கடன் வசதி தொடர்பான கடன்பாட்டாளரின் பெயர், கடன் வசதி வழங்கப்பட்ட திகதி, வழங்கப்பட்ட தொகை, மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம், பிணை மற்றும் வட்டி வீதம் என்பனவற்றை உள்ளடக்கிய விபரங்களை அத்தகைய கடன் வசதிகளை வழங்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

4. நிதிக்கம்பனி எதுவும் அதன் கடன் வசதியின் மீது வட்டி தவிர்ந்த வேறு எந்த விபரணத்தினதுமான கட்டணங்களையும் முற்பணமளிக்கப்பட்ட அல்லது நிதி வசதியளிக்கப்பட்ட முதல் தொகையின் 5 சதவீதத்தினை விஞ்சும் விதத்தில் அறவிடல் ஆகாது.

5. ஒவ்வொரு நிதிக்கம்பனியும் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட படிவத்தில் ஆண்டு இறுதியிலும் அனைத்து வெளிநின்ற கடன் வசதிகளின் விபரங்களை ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் 3 மாதங்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காக

   (i) கடன் வசதி என்பதன் கடன்கள்; வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகைக்கு விடல் உடன்படிக்கைகளின் கீழான வசதிகள்; முறிகள், தொகுதிக்கடன்கள், பிணையங்களிடப்பட்ட சொத்துக்கள், வர்த்தகப்பத்திரங்கள்/ வாக்குறுதிச்சான்றிதழ்கள் போன்ற படுகடன் பிணையங்களின் மூலமான நிதிய ஏற்பாடுகள்; அல்லது பணிப்பாளரினால் மற்றைய நிதியியல் வசதிகள் எனப் பொருள்படும்.

   (ii) ''இணைக்கம்பனி'' என்பது நிதிக்கம்பனியொன்று 20 சதவீதத்திற்கு சமனான அல்லது அதற்கும் கூடுதலான ஆனால் முதலீடு செய்யப்பட்ட கம்பனியின் வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தில் 50 சதவீதத்திற்கும் குறைவான பங்குகளைக் கொண்டுள்ள கம்பனியினைக் குறிக்கும்.

   (iii) ''உறவினர்'' என்பதன் பொருள் வாழ்க்கைத் துணைவர் அத்துடன்/ அல்லது தனிப்பட்டவரின் தங்கியிருக்கும் குழந்தை என்பதாகும்.

   (iv) ''துணைக்கம்பனி'' என்பது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 150 இன் அதே பொருளைக் கொண்டிருக்கும்.

   (v) ''பணிப்பாளர்'' என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

7. 1991 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்புரையும் 2001 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (கடன் வழங்கல்) (திருத்தம்) பணிப்புரையும் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

## 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9 பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2006 திசெம்பர் 29

## 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுடனான வியாபார கொடுக்கல் வாங்கல்கள்) பணிப்புரை

1. இப்பணிப்பு 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுடனான வியாபார கொடுக்கல் வாங்கல்கள்) பணிப்பு என எடுத்துக்காட்டப்படலாம். இது 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. கீழே பந்தி 3 இல் உள்ளவற்றிற்கு மேலாக, நிதிக்கம்பனி எதுவும், கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறமதி மாதமொன்றுக்கு ஐம்பதினாயிரம் (ரூ.50,000/-) ரூபாவிற்கு மேற்படவோ அல்லது கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி நிதியாண்டொன்றிற்கு ஐநூறு ஆயிரம் (ரூ.500,000/-) ரூபாவிற்கு மேற்படவோ இருக்குமிடத்து அவ்வியாபாரக் கொடுக்கல் வாங்கல் எதனையும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் முன்னங்கீகாரமின்றி ஒரு பணிப்பாளருடனோ அதன் பணிப்பாளர்களுள் எவரதும் உறவினருடனோ செய்து கொள்ளுதல் ஆகாது.

3. 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்புரைக்கு அமைவாக கம்பனியின் பணிப்பாளரிடமிருந்தோ அல்லது பணிப்பாளரின் உளவினரிடமிருந்தோ சேமிப்பு, நிலையான வைப்புக்களை ஏற்றுக்கொண்டு 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்புரைக்கு அமைவாக நிதிக்கம்பனியானது ஏனைய வைப்பாளர்களுக்கு வழங்குவது போன்று இந்த வைப்புகளிற்கும் வட்டியினை வழங்குவதானது மேலேயுள்ள பந்தி இரண்டில் குறிப்பிடப்பட்டவற்றிற்கு உட்பட்டதாகாதாகும்.

4. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக, "உறவினர்" என்றும் சொல் மனைவி அத்துடன் அல்லது தங்கியிருக்கும் குழந்தை என்றும் பொருளைக் கொண்டிருக்கும்.

5. 1991 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (உறவினர்களுடனான வியாபார கொடுக்கல் வாங்கல்) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

## 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9 பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2006 திசெம்பர் 29

## 2006 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (முதலீடுகள்) பணிப்புரை

1. இப்பணிப்பு 2006 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (முதலீடுகள்) பணிப்பு என எடுத்துக்காட்டப்படலாம். இது 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 3 ஆம், 4 ஆம் பந்திகளிற்கு மேலதிகமாக, நிதிக்கம்பனிகள் எதுவும், எக்கம்பனியின் பங்குகளில் அது முதலீடு செய்தலானது,

   (i) கடைசி கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறான நிதிக்கம்பனியினது மூலதன நிதியின் ஐந்து (5) சதவீத வீதத்தை எந்நேரத்திலும் விஞ்சுதலாகாது.

   (ii) அத்தகைய முதலீடுகள், அத்தகைய கம்பனியின் வழங்கப்பட்டவையும், செலுத்தப்பட்டவையுமான பங்கு மூலதனத்தின் நாற்பது (40) சதவீதத்திலான விஞ்சுதலாகாது; அத்துடன்

   (iii) கம்பனி பங்குகளில் முதலீடு செய்ய வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தின் ஒத்துக்கொள்ளப்பட்ட தொகையானது, இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையின்படி நிதிக்கம்பனியினது மூலதன நிதியில் 25 சதவீதத்தினை விஞ்சுதலாகாது.

3. நிதிக்கம்பனியொன்று அதன் இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையின்படி மூலதன நிதியினை இரு நூறு (ரூ.200) மில்லியன் ரூபாவிற்கும் மேலதிகமாக கொண்டிருக்குமாயின் அக்கம்பனியால் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் முன் அனுமதியினைப் பெற்று அதன் துணைக்கம்பனியின் பங்குகளில் வழங்கி இறுத்த மூலதனத்தின் 50 சதவீதத்திற்கு மேலதிகமாக கொண்டிருக்கமுடியும் என்பதுடன் மேலே இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் துணைக்கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு பிரயோகிக்கப்பட முடியாதவையாகும்.

4. நிதிக்கம்பனியொன்றிற்கு வரவேண்டிய எந்தவொரு படுகடனும் திருப்திகரமான முறையில் பெறப்பட்டதன் காரணமாக கையேற்கப்பட்ட அல்லது பங்கு வழங்கலின் போது விற்கப்படாத பங்குகளைக் கொள்வனவு செய்ததன் விளைவாக கிடைத்த அத்தகைய, பங்குகளின் கையேற்பு மேலே 2 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட சதவீத வரையறையும் நிதிக்கம்பனியின் பங்குடமைகள் விஞ்சுவதற்கு வழிவக்குமாயின் அத்தகைய நிதிக்கம்பனி, அத்தகைய மிகையான பங்குகளை அவை கையேற்கப்பட்ட நாளிலிருந்து 2 ஆண்டகளுக்குள் அல்லது இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற அத்தகைய நீண்ட காலமொன்றிற்குள் விஞ்சிய தொகையை அத்தகைய கம்பனி அகற்றுமிடத்து அவற்றிற்கு மேலேயுள்ள பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தல்ல.

5. இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காக

   (i) "மூலதன நிதி" என்னும் சொல் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கும் அதே பொருளைக் கொண்டிருக்கும்.

   (ii) "இணைந்த மூலதனம்" என்னும் சொல் 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகளின் பணிப்புரையில் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட போதுமை வீதம்) கொடுக்கப்பட்டிருக்கும் அதே பொருளைக் கொண்டிருக்கும்.

   (iii) "துணைக்கம்பனி" என்னும் சொல் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவினுள் கொடுக்கப்பட்டிருக்கும் அதே பொருளைக் கொண்டிருக்கும்.

6. 1991 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (முதலீடுகள்) பணிப்புரை மற்றும் 2001 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (முதலீடுகள்) (திருத்தம்) பணிப்புரையும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

## 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 33 ஆம் பிரிவு 2 (இ) யின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் ஆக்கப்பட்ட விதி.

**நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்**
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2006 திசெம்பர் 29

## 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (விளம்பரப்படுத்தல்) விதி

1. இவ்விதி 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (விளம்பரப்படுத்தல்) விதி என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும் உடனடியாக தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

2. (i) நிதிக்கம்பனியொன்றினால் (தொழில் முயற்சிக்கான கொடுகடன் தரமிடலைப் பெறுவதற்குத் தேவையான காலப்பகுதிவரை தொழிற்படாத கம்பனிகள் நீங்கலாக) பொது மக்களிடமிருந்து வைப்புக்களைத் திரட்டுவதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அச்சு ஊடகங்களூடாக (விளம்பரப்பலகைகள், விளம்பர அட்டைகள் மற்றும் பதாதைகள் நீங்கலாக) வெளியிடப்படுகின்ற ஒவ்வொரு விளம்பரமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) அக்கம்பனி 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் பதிவு செய்யப்பட்டுள்ளமை;

(ஆ) கம்பனியின் கூட்டிணைக்கப்பட்ட திகதி;

(இ) இலங்கை மத்திய வங்கியினால் பெற்றுக் கொள்ளத்தக்க கொடுகடன் தரமிடல் முகவரொன்றினால் கம்பனி வழங்கப்பட்ட கொடுகடன் தரமிடல்;

(ஈ) வட்டி மாதாந்தமா அல்லது முதிர்ச்சியிலா செலுத்தப்படுமென்பது பற்றியும் அனைத்து முதிர்ச்சிகள் தொடர்பான வட்டி வீதங்களின் வருடாந்த பயன்பாட்டு வீதங்கள்; அத்துடன்

(உ) அத்தகைய நிதிக்கம்பனியினால் வைப்புக்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்ற நிபந்தனைகள்.

(ii) ஒவ்வொரு நிதிக்கம்பனியும் பணிப்பாளருக்கு, பந்தி 2 (i) இன் கீழ் வழங்கப்படும் ஏதாவது விளம்பரத்தின் பிரதியையும் அத்தகைய விளம்பரம் வழங்கப்படுவதற்கு குறைந்தது 2 வேலை நாட்களுக்கு முன்னராகவேனும் சமர்ப்பித்தல் வேண்டும்

3. (i) கொடுகடன் தரமிடலைப் பெறுவதற்குத் தேவையான காலப்பகுதி வரை தொழிற்பட்டிருக்காத நிதிக்கம்பனியொன்றினால் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களைப் பெறுவதற்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அச்சு ஊடகமூடாக (விளம்பரப்பலகைகள், விளம்பர அட்டைகள் மற்றும் பதாதைகள் நீங்கலாக) வெளியிடப்படுகின்ற ஒவ்வொரு விளம்பரமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் பதிவு செய்யப்பட்ட அத்தகைய கம்பனிகள்

(ஆ) கம்பனி கூட்டிணைக்கப்பட்ட திகதி

(இ) அதன் பணிப்பாளர்களது பெயர்கள்

(ஈ) கம்பனியின் வெளிக்கணக்காய்வாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட அதன் நிதியியல் கூற்றுக்களிலுள்ளவாறு பங்குடமையாளர்களின் நிதி, வைப்புப் பொறுப்புக்கள், கடன்பாடுகள் மற்றும் இலாபம்/ (நட்டம்)

(உ) வட்டி மாதாந்தமா அல்லது முதிர்ச்சியிலா செலுத்தப்படும் என்பது பற்றியும் அனைத்து முதிர்ச்சிகள் தொடர்பாகவும் ஆண்டில் கிடைக்கக்கூடிய பயன்தரு வட்டி பற்றியும்; அத்துடன்

(ஊ) அத்தகைய நிதிக்கம்பனிகளினால் பெற்றுக் கொள்ளப்படும் வைப்புக்களுக்கான நிபந்தனைகள்

(ii) மேலே பற்றி 3 (i) இனால் வெளியிடப்படவுள்ள எந்த ஒரு விளம்பரத்தினையும் அதன் விளம்பரம் வெளியிடப்படுவதற்கு குறைந்தது மூன்று வேலை நாட்களுக்கு முன்னர் ஒப்புதலுக்காக அதன் பிரதியினை ஒவ்வொரு நிதிக்கம்பனியும் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

4. (i) பொது மக்களிடமிருந்து வைப்புக்களைத் திரட்டுவதற்காக செவிப்புல அல்லது கட்புல ஊடகங்களூடாக (இணையத்தளத்திற்கு அனுப்பப்படும் வெப்தளம் உட்பட) ஒலிபரப்பப்படுகின்ற அல்லது ஒளிபரப்பு செய்யப்படுகின்ற ஒவ்வொரு விளம்பரமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அ) அத்தகை கம்பனிகள் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் பதிவு செய்யப்பட்டிருப்பது

(ஆ) இலங்கை மத்திய வங்கியினால் பெற்றுக் கொள்ளத்தக்க கொடுகடன் தரமிடல் முகவரினால் கம்பனிக்கு வழங்கப்பட்ட கொடுகடனைத் தரமிடல்

(இ) வட்டி வீதங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் வட்டி விதித்தல் ஆண்டுப் பயன்பாட்டு வீதம்

(ii) மேலேயுள்ள பந்தி (4) இன் கீழ் பரப்புச் செய்யப்படவுள்ள எந்த ஒரு விளம்பரத்தினதும் பிரதியொன்றினை, அத்தகைய விளம்பரம் ஒளிபரப்பு அல்லது ஒலிபரப்பு செய்யப்படவுள்ள எந்த ஒரு விளம்பரத்தினதும் பிரதியினை இலத்திரனியல் கருவிகளினூடாக, அத்தகைய விளம்பரங்கள் முதல் தரம் ஒளிபரப்பப்பட அல்லது ஒலிபரப்புச் செய்யப்படவுள்ள தினத்திற்கு குறைந்தது மூன்று வேலை நாட்களுக்கு முன்னர் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

5. (i) பொது மக்களிடமிருந்து வைப்புக்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ திரட்டிக்கொள்வதற்காக விளம்பரப்பலகைகள், விளம்பர ஒட்டிகள் மற்றும் பதாதைகள் என்பன ஊடாக நிதிக்கம்பனியொன்றினால் காட்சிக்கு வைக்கப்படும் ஒவ்வொரு விளம்பரமும் அத்தகைய கம்பனியானது 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்ற உண்மையினைப் பொதுமக்களுக்கு தெரிவித்தல் வேண்டும்.

(ii) மேலேயுள்ள பந்தி 5 (i) இன் கீழ் விளம்பரப்பலகைகள், விளம்பர ஒட்டிகள் அல்லது பதாதைகள் மீது விளம்பரங்களை காட்சிக்கு காட்சிக்கு வைப்பதற்கு முன்னர் ஒவ்வொரு நிதிக்கம்பனியும் அத்தகைய விளம்பரம் உள்ளடக்கியுள்ள விடயங்களையும் அத்தகைய விளம்பரப்பலகைகள், விளம்பர பூட்டிகள் காட்சிக்கு வைக்கப்படவுள்ள இடங்களையும் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

6. மேலேயுள்ள பந்திகள் 2, 4 மற்றும் 5 இன் கீழ் வெளியிடப்பட்டுள்ள எந்த ஒரு விளம்பரமும் அப்பந்திகளின் ஏற்பாடுகளுக்கு இணக்கமாக இல்ல அல்லது அதிலுள்ள தகவல்கள் பொதுமக்களைப் பிழையாக வழி நடத்தக்கூடும் என பணிப்பாளர் அபிப்பிராயப்படுமிடத்து, பணிப்பாளரானவர் அத்தகைய விளம்பரத்தினை பணிப்பாளரினால் நியாயமான காலப்பகுதியொன்றிற்குள் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் திருத்தப்பட்ட வாசகங்களுடன் வெளியிடலாம்/ பரப்பீடு செய்யலாம்/ ஒலிபரப்பலாம்/ காட்சிக்கு வைக்கலாம்.

7. இவ்வொழுங்கு விதியில்

(i) "பயனுள்ள ஆண்டு வீதம்" என்பது கூட்டு வட்டியின் தாக்கத்தினைக் கணக்கில் கொண்ட பின்னர் வைப்புக் கணக்கொன்று குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் ஆண்டொன்றில் உழைக்கின்ற தொகை சதவீதத்தில் குறிப்பிடப்படுகின்ற தொகையொன்றாகும்.

(ii) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் பணிப்பாளர் எனப் பொருள்படும்

8. 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (பணிபரப்படுத்தல்) விதி இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56 இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை

**திருமதி. எல். கே. குணதிலக்க**

பணிப்பாளர்

வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2006 யூலை 28ஆம் நாளன்று

### 2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகை (ஆகக் குறைந்த மூலதனம்) பணிப்பு

1. இப்பணிப்பானது 2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்குத்தகை (ஆகக் குறைந்த மூலதனப்) பணிப்பு என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் ஆளுகை செய்யப்படும் உத்தரவு பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உத்தரவு பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஆளுகை செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் மற்றும் 2005ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நிதிக்குத்தகைகள் (திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான) 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகை சட்டத்தின் திருத்தப்பட்ட 2005ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கத்தின் 44 (அ) பிரிவின் விதிகளுக்கிணங்க பதிவு செய்யப்படும் எந்தவொரு நிறுவனமும் தவிர்ந்த ஏனைய பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்குத்தகை நிறுவனத்திற்கும் இது ஏற்புடையதாகும். இப்பணிப்பானது உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அமுலுக்கு வருகின்றது.

2. இந்தப் பணிப்புரையானது ஏற்புடைத்தாகும் ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகை நிறுவனமும் (இதன் பின்பு "தொடர்பான நிறுவனம்" எனக் குறிக்கப்படும்) 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகை சட்டத்தின் பிரிவு 3(இ)இன் விதிகளின் கீழ் அமைச்சரால் விதந்துரைக்கப்பட்ட மூலதனத்திற்குக் குறையாத தொகையான மைய மூலதனத்தினை வழங்கி செலுத்தப்பட்ட ஆகக் குறைந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பேணுதல் வேண்டும்.

3. இப்பணிப்பின் ஆரம்பத்தில் அமைச்சரால் விதந்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த வழங்கல் குறைந்த மைய மூலதனமாக செலுத்தப்பட்டு இறுத்த மூலதனத்திற்குக் குறைவான மைய மூலதனத்தைத் தொடர்பான நிறுவனம் 2006.01.02இல் கொண்டிருப்பின் இப்பணிப்புரையின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் வகையில் 2006.01.02ஆம் திகதியிலிருந்து ஒரு ஆண்டு கால அவகாசத்தினை பணிப்பாளர் வழங்கலாம்.

4. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக,

 (i) "மைய மூலதனம்" என்பது பின்வருவனவற்றின் கூட்டுத்தொகை எனப் பொருள்படும்;

 (அ) வழங்கியிறுத்த சாதாரண பங்கு மூலதனம்;

 (ஆ) வழங்கியிறுத்த மீட்கப்படமுடியாத, ஒன்று சேர்க்க முடியாத முன்னுரிமைப் பங்குகள்;

 (இ) பங்கு வட்டம்;

 (ஈ) 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக்குத்தகை (ஒதுக்கு நிதியம்) பணிப்பின் கீழ் பேணப்படும் ஒதுக்கு நிதியம்;

 (உ) எந்த ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகவும் நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது இலங்கை கணக்கீட்டு நியமத்தின் கீழ் குறிப்பிடப்படாததான ஒதுக்கங்கள்;

 (ஊ) நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்கள் அல்லது ஒன்று சேர்ந்த நட்டங்கள்;

 (எ) நடைமுறையாண்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள்; அத்துடன்

 (ஏ) வழங்கப்பட்ட அறவிட முடியாக்கடன் மற்றும் ஐயக்கடன்களிற்கான பொது ஒதுக்கமும் கணக்காய்வாளரின் உறுதிப்பாட்டிற்கு உட்பட்டுச் செயற்படும் சொத்துப் பட்டியலின் மீதான மேலதிக குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கமும்;

 (ii) "பணிப்பாளர்" என்பதன் கருத்து வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

5. 2005ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்குத்தகை (ஆகக் குறைந்த மூலதனம்) பணிப்பு இத்தால் மீளப் பெறப்படுகின்றது.

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56 இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை

**திருமதி. எல். கே. குணதிலக்க**

பணிப்பாளர்

வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2006 யூலை 28ஆம் நாளன்று

## 2006ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக்குத்தகை (அறவிடமுடியா, ஐயத்துக்கிடமான கடன்வசதிகளுக்கான ஒதுக்கம்) பணிப்பு

1. இப்பணிப்பானது 2006ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக்குத்தகை (அறவிடமுடியா, ஐயத்துக்கிடமான கடன்வசதிகளுக்கான ஒதுக்கம்) பணிப்பு என கருதப்படலாமென்பதுடன், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் ஆளுகை செய்யப்படும் உத்தரவு பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உத்தரவு பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஆளுகை செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் என்பன தவிர்ந்த ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகை நிறுவனங்களுக்கும் பொருந்தும் என்பதுடன் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இந்தப் பணிப்பானது ஏற்புடைத்தான ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகை நிறுவனமும் (இதன் பின்பு "தொடர்பான நிறுவனம்" என அழைக்கப்படும்) எந்த இலாப நட்டத்தினையும் பிரகடனப்படுத்த முன்பு செயற்படாக் கடன்களிற்கான ஒதுக்கினை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய ஏற்பாடுகளின் தொகை குறைந்தது பின்வருவனவற்றிற்குட்பட்டவையாக இருத்தல் வேண்டும்.
   (i) 6 முதல் 12 வரையான மாத காலப்பகுதிக்கு நிலுவையிலுள்ள எல்லா மொத்த கடன்வசதிகளின் 20 சதவீதத்தினையும்;
   (ii) 12 முதல் 18 வரையான மாத காலப்பகுதிக்கு நிலுவையிலுள்ள எல்லா மொத்த கடன்வசதிகளின் 50 சதவீதத்தினையும்;
   (iii) 18 மாதங்களிற்கு மேற்பட்ட நிலுவையிலுள்ள மொத்தக் கடன்வசதிகள் 100 சதவீதத்தினையும்;
   (iv) மாதாந்த தவணைக் கட்டணங்கள் அடிப்படையில் செலுத்தப்படாததும், கம்பனியானது மாதாந்த தவணைத் திகதிகளில் செலுத்தப்படமாட்டாதெனக் கருதும் கடன்கள் அனைத்தினதும் மீதிகளில் 100 சதவீதத்தினையும்;

3. எந்த குறிப்பிட்ட நிறுவனத்தையும் அந்நிறுவனத்தால் ஏற்கனவே செய்யப்பட்ட செயற்படாக் கடன்வசதிகளின் விசேட ஒதுக்கத்திற்கு மேலதிகமாக குறிப்பிட்ட ஒதுக்கத்தினை செய்யுமாறு பணிப்பாளரினால் வேண்டப்படலாம்.

4. ஒவ்வொரு பொருத்தமான நிறுவனமும், மேற்குறிப்பிட்ட 2(அ) இலிருந்து 2(ஈ) வரையான கடன் மீதிகளில் ஒதுக்கங்களை ஏற்படுத்தும் போது குறிப்பிட்டதுடன் வசதி தொடர்பாக பிணையாக வைத்திருக்கப்பட்ட விடயங்களின் பெறுமதியினைக் கழிக்கலாம்.
   (i) காசு அல்லது காசுக்கு சமமானவை (உத்தரவு பெற்ற வர்த்தக வங்கிகள், உத்தரவு பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளில் உள்ள வைப்புக்கள் மற்றும், எந்தவொரு பாத்தியதையும் அல்லது விதிப்புமில்லாத திறைசேரி உண்டியல்கள், திறைசேரிப் பிணைகள் போன்ற பிணையங்கள்;)
   (ii) வங்கி உத்தரவாதங்கள்;
   (iii) தொடர்பான நிறுவனத்தினால் மீளப்பெறப்பட்ட வாகனம் தொடர்பாக, பணிப்பாளரினால் அனுமதியளிக்கப்பட்ட ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டாளர் ஒருவரினால் ஆறு மாதங்களிற்குள் பெறப்பட்ட மதிப்பீட்டின் எண்பது (80%) சதவீதத்தினையும்;
   (iv) காணி கட்டிடங்களைப் பொறுத்தவரையில், முதன்மை ஈடாயின் முழுப்பெறுமதியினையும் கருத்தில் கொள்ளலாம். இப்பெறுமதியானது கடன்வசதி வழங்கப்பட்ட சமயத்தில் கொடுக்கப்பட்ட தொழில்கள் மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு பெறுமதியிலும் கூடுதலாக இருத்தலாகாது. எவ்வாறெனினும், நிலுவைகளை மீளப்பெறுவதற்காக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படாத, குடியிருக்கும் ஆதனங்கள் பிணையாக பெறப்பட்டிருப்பின் அவை தேவைப்பட்ட ஒதுக்கீடுகளின் போது கழிக்கப்படமாட்டது.

5. ஒவ்வொரு தொடர்பான நிறுவனமும், இடர்நேர்வு அடிப்படையிலான செயற்பாட்டுக் கடன்களின் அடிப்படையில் செயற்படா கடன் வசதிகளிற்கு மேலதிகமாக குறிப்பிட்ட தொகையை ஒதுக்கலாமென்பதுடன் அக்குறிப்பிட்ட தொகையானது மைய மூலதனத்தின் அல்லது மூலதனத்தின் அல்லது மூலதன ஒதுக்கத்தின் மேலதிக பொது ஒதுக்கமாக உள்ளடக்கப்படலாகாது.

6. ஒரு குறிப்பிட்ட கடன் வசதியானது செயற்படாக் கடன்களாக வேறுபடுத்துமுன் மறுசீரமைக்கப்பட்டிருப்பின், மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடனானது மறுசீரமைக்கப்பட முன் (ஏதாவது இருந்தால்) மற்றும் மறுசீரமைக்கப்பட்ட பின்னர் வருமதியாகவுள்ள மாதங்களின் கூட்டுத்தொகையானது ஆறு மாதங்களிற்கு அல்லது அதற்குக் கூடுதலாகவிருந்தால் அவை செயற்படாக் கடன்வசதிகளாக கருதப்பட வேண்டும்.

7. ஒரு குறிப்பிட்ட கடன் வசதியானது, செயற்படாக் கடன்வசதிகளாக வகைப்படுத்தப்பட்ட பின் மீள் அட்டவணைப்படுத்தப்பட்டிருப்பின் கடன் வசதியானது தொடர்ந்தும் செயற்படாக் கடன்வசதியாகவே பராமரிக்கப்படவேண்டும். அம்மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட

கடன்வசதிக்கான கொடுப்பனவானது, தொடர்ந்தும் ஆறு மாதங்களிற்கு செயற்பட்டிருந்ததாலேயே அக்கடன்வசதியானது செயற்படாக் கடன்வசதிப் பிரிவிலிருந்து மாற்றப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு தொடர்பான நிறுவனமும் ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் அது முடிவடைந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் காலாண்டு முடிவிலுள்ளவாறான மூன்று அல்லது அதற்கு மேலான மாதங்களில் தவணைப் பணகொடுப்பனவு/ குத்தகை தவணை கொடுப்பனவு நிலுவையாகவுள்ள கடன்வசதிகள் பற்றிய பின்வரும் விபரங்களை பணிப்பாளரிற்கு சமா்ப்பிக்க வேண்டும்.

   (i) மூன்று அல்லது அதற்கு மேலான மாதங்களிற்கு நிலுவையாகவுள்ள (நிலையான தவணை முறையில் வாடகையில் செலுத்தப்படும்) கடன்வசதிகள். இதன் படிவ இலக்கம் எஸ்என்பீஎவ்ஐ/எவ்எல்/02/01;*

   (ii) மூன்று அல்லது அதற்கு மேலான மாதங்களிற்கு நிலுவையாகவுள்ள (நிலையான தவணை வாடகை முறையில் செலுத்த தேவையில்லாதவை) கடன்வசதிகள். இதன் வடிவ இலக்கம் எஸ்என்பீஎவ்ஐ/எவ்எல்/02/02;*

   (iii) மூன்று அல்லது அதற்கு மேலான மாதங்களிற்கு நிலுவையாகவுள்ள தொழிற்பாட்டு குத்தகைகள். இதன் படிவ இலக்கம் எஸ்என்பீஎவ்ஐ/எவ்எல்/02/03;*

   (iv) மூன்று அல்லது அதற்கு மேலான மாதங்களிற்கு நிலுவையாகவுள்ள கடன்வசதிகளின் வருமதியாகவுள்ள தவணைகளின் எண்ணிக்கை பற்றிய பகுப்பாய்வு. இதன் படிவ இலக்கம் எஸ்என்பீஎவ்ஐ/எவ்எல்/02/04;*

   (v) மீளப்பெறப்பட்ட சொத்துக்களின் வகை பற்றிய கூற்று. இதன் படிவ இலக்கம் எஸ்என்பீஎவ்ஐ/எவ்எல்/02/05.*

9. ஒவ்வொரு தொடர்பான நிறுவனமும் ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் அது முடிவடைந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் காலாண்டு பகுதிக்குள் வழங்கப்பட்ட கடன் வசதிகள் பற்றியும் மற்றும் குறித்த காலாண்டின் இறுதியில் உள்ளவாறான கடன்வசதிகளின் தொகை பற்றிய விபரங்களை பணிப்பாளரிற்கு சமா்ப்பிக்க வேண்டும். இதன் வடிவ இலக்கம் எஸ்என்பீஎவ்ஐ/எவ்எல்/02/06.

10. இப்பணிப்பின் நோக்கத்திற்காக,

   (i) ''கடன்வசதிகள்'' என்பதன் பொருளானது கடன்கள், வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகை உடன்படிக்கைகளின் கீழ் வழங்கப்படும் வசதிகள், மீட்கப்படக் கூடிய திரண்ட முன்னுரிமைப் பங்குகள் மற்றும் கடன்பிணைகள் போன்ற பிணைகள், தொகுதிக்கடன்கள், கடன்பிணைகளாக உள்ள சொத்துக்கள், வணிகத்தாள்கள், உறுதிப்பத்திரங்கள் கம்பனிகளுக்கிடையேயான கடன்கள், திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் நிதி வழங்குவதற்கான ஒழுங்குகள், நிகழத்தக்க பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கான உறுதிப்பாடு அல்லது பணிப்பாளரினால் தீா்மானிக்கப்பட்ட வேறு ஏதேனுமொரு நிதிவசதி எனப் பொருள்படும்.

   (ii) ''கம்பனிக்கிடையேயான கடன்'' என்பது குறிப்பிட்ட நிறுவனமானது தனது பணிப்பாளர்களுக்கோ அல்லது தமது உறவினா்களுக்கோ மற்றும்/ அல்லது தமது இணைக்கம்பனிகளுக்கோ மற்றும்/ அல்லது தமது துணைக்கம்பனிகளுக்கோ மற்றும்/ அல்லது தமது தாய் கம்பனிக்கோ வழங்குகின்ற கடன்வசதிகளைக் குறிக்கும். இப்பணிப்பின் நோக்கத்திற்காக ''உறவினா்'' என்பது ஒரு தனிப்பட்ட நபரின் வாழ்க்கைத்துணை மற்றும்/ அல்லது தங்கியிருக்கும் பிள்ளையாகவோ இருக்கலாம். ஒரு கம்பனியானது பிறிதொரு கம்பனியின் முறையான ''இணைக்கம்பனியாக'' இருப்பதென்பது அக்கம்பனியின் வழங்கி இறுத்த பங்கு மூலதனத்தில் 20 சதவீதத்திற்கு சமமானதாக அல்லது அதற்கு மேலதிகமாக ஆனால் 50 சதவீதத்தினை விஞ்சாத வகையில் கொண்டிருத்தலாகும்.

   (iii) ''துணைக்கம்பனி'' மற்றும் ''தாய்க்கம்பனி'' என்பதன் பொருளானது 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள அதே அர்த்தத்தினைக் கொண்டதாகும்.

   (iv) ''செயற்படாக் கடன்கள்'' என்பதன் பொருள் ஆறு மாதங்களிற்கு மேலாக வருமதியாகவுள்ள தவணைக் கட்டணங்களைக் கொண்ட கடன்வசதிகளைக் குறிப்பதாகும்.

   (v) ''பணிப்பாளர்'' என்பதன் பொருள் இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப் பொருள்படும்.

   (vi) ''தகைமை பெற்ற தொழில்சார் மதிப்பீட்டாளா்'' என்பதன் பொருள்

      (அ) ஒரு பட்டயம் பெற்ற மதிப்பீட்டு அளவையாளா்; அல்லது

      (ஆ) மதிப்பீட்டாளா் நிறுவனத்தின் (இலங்கை) உறுப்பினராக இருப்பதுடன், ஒரு பட்டதாரியாகவோ அல்லது மதிப்பீட்டில் டிப்ளோமா பெற்றவராகவோ இருப்பதுடன் 15 வருட கால வேலை அனுபவத்தையும் கொண்டிருத்தல்; அல்லது

      (இ) மதிப்பீட்டாளா் நிறுவனத்தின் (இலங்கை) உறுப்பினராகவும் 18 வருட கால சேவையினையும் கொண்டிருத்தல்; அல்லது

      (ஈ) மதிப்பீட்டாளா் நிறுவனத்தின் (இலங்கை) இணை உறுப்பினராக இருப்பதுடன் 20 வருட கால சேவையினையும் கொண்டிருத்தல்; அல்லது

      (உ) மதிப்பீட்டாளா் நிறுவனத்தின் (இலங்கை) இடைநிலை தேர்வில் சித்தியடைந்திருக்க வேண்டியதுடன் 25 வருட சேவையினையும் கொண்டிருத்தல்.

11. 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடல் (அறவிடமுடியா ஐயப்படுகடன்களுக்கான ஒதுக்கம்) இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

* தொடர்பான படிவங்களை வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகைச் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை

**திருமதி. எல். கே. குணதிலக்க**

பணிப்பாளர்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2006 யூலை 28ஆம் நாளன்று

### 2006ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரை

1. இப்பணிப்புரையானது, 2006ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், இது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் ஆளப்படுகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தினால் கீழ் ஆளுகை செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் என்பன தவிர்ந்த பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகைக்கு விடுகின்ற அனைத்து நிறுவனங்களுக்கும் ஏற்புடையதாதலும் வேண்டும். இப்பணிப்புரை உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. இப்பணிப்புரை ஏற்புடைத்தான அனைத்து பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகைக்கு விடும் நிறுவனங்களும் இதனகத்துப் பின்னர் ''தொடர்பான நிறுவனங்கள்'' என குறிப்பிடப்படும்.

3. இங்கே கீழேயுள்ள 5ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளுக்குட்பட்ட விதத்தில், தனியொருவருக்காக வழங்கப்பட்ட கடன்வசதி அல்லது மொத்தக் கடன்வசதியின் ஆகக் கூடிய மட்டமும் அத்துடன் எந்த ஒரு தனிப்பட்ட கடன்பாட்டாளரிடமிருந்தும் எந்த ஒரு நேரத்திலும் வெளிநின்ற தொகையும் அத்தகைய நிதிக்கம்பனியின் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்ட மூலதன நிதியத்தில் 15 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

4. கீழேயுள்ள 5ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளுக்குட்பட்ட விதத்தில், எந்த ஒரு கடன்பாட்டாளர் குழுவுக்கும் வழங்கப்பட்டு எந்த ஒரு நேரத்திலும் வெளிநிற்கின்ற தனியொரு கடன்வசதி அல்லது மொத்தக் கடன்வசதியின் அளவு இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் 20 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

5. தொடர்பான நிறுவனத்தின் எந்த ஒரு பணிப்பாளருக்கும், தாய்க்கம்பனிக்கும் அல்லது துணைக்கம்பனிக்கும் வழங்கப்பட்டு எந்த ஒரு நேரத்திலும் வெளிநிற்கின்ற தனியொரு கடன்வசதி அல்லது மொத்தக் கடன்வசதி இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறான மூலதன நிதியத்தில் 15 சதவீதத்தினை விஞ்சக்கூடாது. அத்தகைய கடன்வசதி தொடர்பான நிறுவனத்தின் மற்றைய எந்த ஒரு கடன்பாட்டாளருக்கும் ஏற்புடைத்தான அத்தகைய நியதிகளில் வழங்கப்பட வேண்டியதுடன் கடன்பாட்டாளரின் பெயர், கடன்வசதி அல்லது கம்பனிக்கிடையிலான கடன்வசதி வழங்கப்பட்ட திகதி, வழங்கப்பட்ட தொகை, மீளச்செலுத்தும் நிகழ்ச்சித்திட்டம், பிணை, வட்டிவீதம் என்பனவற்றை உள்ளிட்ட அத்தகைய கடன்வசதியின் விபரங்களை படிவம் எண் எஸ்என்பீஎவ்ஐ/எவ்எல்/03/01 * இல் அத்தகைய கடன் வழங்கப்பட்டதிலிருந்து 14 நாட்களுக்கிடையில் பணிப்பாளருக்கு அறிக்கையிடல் வேண்டும்.

6. தனிப்பட்ட ஒருவருக்கு அல்லது குழுவொன்று வழங்கப்பட்டு வெளிநிற்கின்ற தனியொரு கடன்வசதி அல்லது மொத்தக் கடன்வசதியானது இப்பணிப்புரை தொடங்கப்பட்ட நேரத்தில் உள்ளவாறு மேலேயுள்ள பந்தி 3, 4 மற்றும் 5இல் குறித்துரைக்கப்பட்ட தொடர்பான வரையறைகளை விஞ்சியிருக்குமிடத்து பணிப்பாளர் இப்பணிப்புரையின் கீழான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுவதற்கு அத்தகைய தொடர்பான நிறுவனத்திற்கு 02.01.2006 இலிருந்து இரண்டாண்டு காலப்பகுதியினை வழங்கலாம்.

7. ஒவ்வொரு தொடர்பான நிறுவனமும், ஒவ்வொரு மாதமும் முடிவடைந்த ஒரு மாத காலத்திற்குள், அத்தகைய நிறுவனத்தின் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறான மூலதன நிதியத்தில் 10 சதவீதத்தினை விஞ்சிய தனிப்பட்ட கடன்பாட்டாளர் குழு ரீதியான கடன்பாட்டாளர், அதன் பணிப்பாளர்கள் அதன் உடமைக்கம்பனி, அல்லது அதன் துணைக்கம்பனிகளுக்கு வழங்கிய மற்றும் வெளிநிற்கின்ற தனியொரு கடன்வசதி அல்லது மொத்தக் கடன்வசதிகள் பற்றிய விபரங்களை படிவம் எண் எஸ்என்பீஎவ்ஐ/எவ்எல்/03/02 * இல் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக

(i) "தனிப்பட்ட கடன்பாட்டாளர்" என்பதன் கருத்து தனியொரு கம்பனி, அரச கூட்டுத்தாபனம், நிறுவனம் ஆட்களின் சங்கம் அல்லது தனிப்பட்ட ஒருவர் எனப் பொருள்படும்.

(ii) "கடன்பாட்டளர்" குழு என்பதன் கருத்து

(அ) தனிப்பட்ட ஒருவர், அவரின் உறவினர் மற்றும் ஒரு கம்பனியில் அத்தகைய தனிப்பட்ட ஒருவர் அல்லது அவரின் உறவினர் கம்பனியொன்றில் வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்குகளை வைத்திருத்தல்; அல்லது

(ஆ) கம்பனியொன்றும் அத்துடன் பின்வருவனவற்றில் ஒன்றும் அல்லது அதற்கு கூடுதலானவையும்

(i) அதன் துணைக்கம்பனிகள்;

(ii) அதன் தாய்க்கம்பனி; அல்லது

(iii) தாய்க்கம்பனியின் துணைக்கம்பனி

(iii) "மூலதன நிதியம்" என்பதன் கருத்து பின்வருவனவற்றின் கூட்டு மொத்தம் என்பதாகும்.

(அ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்

(ஆ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட மீளளிக்கப்படாத, ஒன்று திரளாத முன்னுரிமைப் பங்குகள்

(இ) பங்கு வட்டம்

(ஈ) 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிகுத்தகைக்கு விடுதல் (ஒதுக்கு நிதியம்) பணிப்புரையின் கீழ் பேணப்படும் ஒதுக்கு நிதியம்

(உ) எந்த ஒரு குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காகவும் எந்த ஒரு சட்டத்தின் கீழும் அல்லது இலங்கைக் கணக்கீட்டு நியமங்களினாலும் குறிக்கப்படாத ஒதுக்கங்கள்

(எ) அறவிடமுடியாத ஐயக்கடன்களுக்கான பொது ஒதுக்கம் செயற்படாக் கடன்களின் சொத்துப்பட்டியல் மீதான குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கம், செயற்படும் கடன்கள் மீதான மேலதிகமான குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கம் என்பனவற்றிற்கு மேலாக வழங்கப்பட்டதொரு தொகையாகும்.

(ஏ) பின்வருவனவற்றிற்கு இணங்க சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்குமிடத்து, பணிப்பாளரின் முன் அனுமதியுடன் மாத்திரம் மீள்மதிப்பீட்டுச் சொத்துக்கள் உள்ளடக்கப்படலாம்.

(i) மதிப்பீடுகள் பணிப்பாளரின் முன் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்பட்டிருப்பது;

(ii) முன்னைய மதிப்பீட்டு நாளிலிருந்து அல்லது கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து எது பிந்தியதோ அதிலிருந்து 7 ஆண்டுகளின் பின்பே சொத்துக்கள் மீள்மதிப்பீட்டிற்கு தகைமை பெறுகின்றன;

(iii) பின்வரும் தகைமையைக் கொண்ட மதிப்பீட்டாளரே சொத்துக்களை மதிப்பிட வேண்டும்.

(அ) பட்டயம் பெற்ற மதிப்பீட்டு அளவையாளர் ஒருவர்; அல்லது

(ஆ) மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (இலங்கை) உறுப்பினராக இருப்பதுடன் மதிப்பீட்டில் பட்டதாரியாகவோ அல்லது டிப்ளோமா பெற்றவராகவோ இருப்பதுடன் 15 வருட வேலை அனுபவத்தையும் கொண்டிருத்தல்; அல்லது

(இ) 18 வருட வேலை அனுபவத்துடன் மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (இலங்கை) ஒரு பட்டதாரி உறுப்பினராக இருத்தல் வேண்டும்; அல்லது

(ஈ) 20 வருட வேலை அனுபவத்துடன் மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (இலங்கை) இணை உறுப்பினராக இருத்தல் வேண்டும்; அல்லது

(உ) 25 வருட வேலை அனுபவத்துடன் மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (இலங்கை) இடைநிலை தேர்வில் சித்தி எய்தியவராயிருத்தல் வேண்டும்.

(iv) "கடன்வசதி" என்பதன் கருத்து கடன்கள்; தவணைக் கொள்வனவு அல்லது குத்தகைக்கு விடும் உடன்படிக்கையின் கீழ் வழங்கப்படும் வசதிகள்; மீட்கப்படக்கூடிய திரண்ட முன்னுரிமைப் பங்குகள் மற்றும் முறிகள், தொகுதிக்கடன்கள், கடன் பிணைகளாக உள்ள சொத்துக்கள், வர்த்தகப் பத்திரங்கள்/ வாக்குறுதிச் சான்றிதழ்கள்; கம்பனிக்கிடையேயான கடன்கள்; மீளச்செலுத்தும் அடிப்படையில் நிதி வழங்குவதற்கான ஏதாவது ஒழுங்குகள் எதிர்பாரா பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கான ஏதாதொரு கடப்பாடு; அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய வேறு ஏதேனுமொரு நிதிவசதி எனப் பொருள்படும்.

(i) "கம்பனிக்கிடையேயான கொடுகடன்" என்பதன் பொருள் குறிப்பிட்ட நிறுவனமானது தனது பணிப்பாளருக்கோ அல்லது மறு உறவினர்களுக்கோ அத்துடன்/ அல்லது துணைக் கம்பனிகளுக்கோ அத்துடன்/ அல்லது அதன் துணைக்கம்பனிகளுக்கோ அத்துடன்/ அல்லது அதன் தாய்க்கம்பனிக்கோ எந்த வடிவிலேனும் வழங்குகின்ற கடன்வசதியனைக் குறிக்கும். இப்பணிப்பின் நோக்கங்களுக்காக உறவினர் என்பதன் கருத்து தனியொருவரில் தங்கியுள்ள வாழ்க்கைத்துணை அத்துடன் அல்லது தனியார் ஒருவரில் தங்கியுள்ள குழந்தை எனப் பொருள்படும். 20 சதவீதத்திற்குச் சமமான பங்குகளை அல்லது 2 சதவீதமான வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்குகளில் கூடுதலான ஆனால் 50 சதவீதத்திற்கும் குறைவான பங்குகளை அக்கம்பனி கொண்டிருக்குமிடத்து கம்பனியொன்று இன்னொரு கம்பனியின் "இணைக்கம்பனியாக" இருக்கலாம்.

(ii) "துணைக்கம்பனிகள்" மற்றும் "தாய்க்கம்பனி" என்பன 1982 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150ஆம் பிரிவு கொண்டுள்ள அதே கருத்தினையே கொண்டிருக்கும்.

(iii) "பணிப்பாளர்" என்பதன் கருத்து இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

9. 2005ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடல் (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

* தொடர்பான படிவங்களை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகைச் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடும் சட்டத்தின் கீழ் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை

**திருமதி. எல். கே. குணதிலக்க**

பணிப்பாளர்

வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2006 யூலை 28ஆம் நாளன்று

## 2006ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (அதிகரிப்பு விகிதம்) பணிப்புரை

1. இப்பணிப்புரையானது, 2006ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (அதிகரிப்பு விகிதம்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் ஆளுகை செய்யப்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தினால் ஆளுகை செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் தவிர்ந்த அனைத்து பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகைக்கு விடும் நிறுவனங்களுக்கும் ஏற்புடைத்தாகும். இப்பணிப்புரைகள் உடனடியாக தொழிற்பாட்டிற்கு வருதலும் வேண்டும்.

2. இப்பணிப்புரைகளுக்கு ஏற்புடைத்தான பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகைக்கு விடும் நிறுவனங்களின் (இதனகத்துப் பின்னர் தொடர்பான நிறுவனம்) வெளிநின்ற ஆகக்கூடிய கடன்பாட்டுத்தொகை பின்வருவனவற்றை விஞ்சக்கூடாது.

   (i) இப்பணிப்புரையின் 3ஆம், 4ஆம் பந்திகளுக்குட்பட்டு, 2006.01.02ஆம் நாளிலிருந்து முதல் மூன்றாண்டு காலப்பகுதியில் எந்த ஒரு நேரத்திலும் தொடர்பான நிறுவனத்தின் மூலதன நிதியத்தில் பத்து (10) மடங்கினை;

   (ii) 2006.01.02ஆம் நாளிலிருந்து முதல் நான்காண்டு காலப்பகுதியின் தொடக்கத்திலிருந்து, எந்த ஒரு நேரத்திலும், தொடர்பான நிறுவனத்தின் ஏழு (7) மடங்கினை.

3. தொடர்பான நிறுவனத்தின் வெளிநின்ற கடன்பாட்டுத்தொகையானது 2006.01.02ஆம் நாளன்று மேலேயுள்ள பந்தி 2 (i)இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையறையினை விஞ்சுமிடத்து அத்தகைய நிறுவனத்திற்கு, மேலே பந்தி 2 (i)இல் உள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கிக் கொள்வதற்கு 2006.01.02ஆம் நாளிலிருந்து இரண்டாண்டு காலம் வழங்கப்படும்.

4. 2006.01.02ஆம் நாளன்று நிதிக்குத்தகைக்கு விடுகின்ற வியாபாரத்தில் ஓராண்டினை பூர்த்தி செய்திராத தொடர்பான ஒவ்வொரு நிறுவனமும், பின்வரும் விடயங்களுக்கு உட்பட்டு, 2006.01.02ஆம் நாளிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் இப்பணிப்புரையின் 2(ii)ஆம் பந்தியின் கீழான தேவைப்பாட்டிற்கு இணங்கி ஒழுகவேண்டும்.

   (i) 2006.01.02ஆம் நாளிலிருந்து முதல் மூன்றாண்டு காலப்பகுதியில், அத்தகைய தொடர்பான நிறுவனங்களின் வெளிநின்ற கடன்பாட்டுத்தொகை எந்த ஒரு நேரத்திலும், 2006.01.02இல் உள்ளவாறான அதன் அமைப்பு அகவிதியில் அனுமதிக்கப்பட்ட மட்டத்தினை விஞ்சக்கூடாது.

   (ii) மூன்றாம் ஆண்டு இறுதியில் மேலேயுள்ள பந்தி 2 (ii)இல் குறித்துரைக்கப்பட்ட வரையறையினை அத்தகைய தொடர்பான நிறுவனங்களினது வெளிநின்ற கடன்பாட்டுத்தொகை விஞ்சுமிடத்து 2006.01.02ஆம் நாளிலிருந்து நான்காம் ஆண்டு தொடங்குவதிலிருந்து அத்தகைய தொடர்பான நிறுவனங்கள் மேலேயுள்ள பந்தி 2(ii)இன் கீழான தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

5. தொடர்பான ஒவ்வொரு நிறுவனமும் ஒவ்வொரு மாதத்தினதும் முடிவில் உள்ளவாறு அதன் கடன்பாடுகளினது வெளிநின்ற தொகை தொடர்பான விபரங்களை உடனடுத்து வரும் மாதத்தின் 15ஆம் நாளுக்கு முன்னதாக படிவம் எண் எஸ்என்பீஎவ்ஐ/எவ்எல்/04/01இல் சமர்ப்பித்தல் வேண்டும். *

6. இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காக

(i) ''கடன்பாடுகள்'' என்பதன் கருத்து கடன்கள்/ மேலதிகப்பற்றுக்கள் அல்லது மீட்கத்தக்கதும் ஒன்று திரண்டதுமான முன்னுரிமைப் பங்குச் சான்றிதழ்கள், முறிகள், தொகுதிக்கடன்கள், வாக்குறுதிச் சான்றிதழ்கள்/ வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்ட வேறு ஏதேனும் வடிவிலான கடன்பாடுகள் மூலம் பெறப்படும் நிதியினைக் குறிப்பதாகும்.

(ii) ''மூலதன நிதியம்'' என்பதன் கருத்து பின்வருவனவற்றின் கூட்டு மொத்தமாகும்.

(அ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்;

(ஆ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட மீட்கப்படாத, ஒன்று திரளாத முன்னுரிமைப் பங்குகள்

(இ) பங்கு வட்டம்

(ஈ) 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (ஒதுக்கு நிதியம்) பணிப்புரையின் கீழ் பேணப்படும் ஒதுக்கு நிதியம்

(உ) எந்த ஒரு சட்டத்தினாலும் அல்லது இலங்கை கணக்கீட்டு நியமங்களினாலும் குறித்துரைக்கப்பட்ட எந்த ஒரு நோக்கத்திற்காகவும் குறித்துரைக்கப்படாத ஒதுக்கு

(ஊ) நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்கள் அல்லது ஒன்று சேர்ந்த நட்டங்கள்

(எ) அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான பொது ஒதுக்கு என்பது செயற்படாச் சொத்துப்பட்டியல் மீதான குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கு செயற்படுகின்ற சொத்துப்பட்டியல் மீதான மேலதிக குறித்துரைக்கப்பட்ட ஒதுக்கு என்பனவற்றிற்கு மேலாகவும் கூடுதலாகவும் வழங்கப்பட்டதொரு தொகையாகும்; அத்துடன்

(i) மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்களை பின்வருவனவற்றின் இணங்கப்பாட்டுடன் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்குமிடத்து பணிப்பாளரின் ஒப்புதலுடன் மட்டுமே உள்ளடக்கலாம்.

i மதிப்பீடுகள் பணிப்பாளரின் முன் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்பட்டிருப்பது

ii சொத்தானது மீள்மதிப்பீட்டிற்கு, முன்னைய மதிப்பீட்டு திகதியிலிருந்து அல்லது கொள்வனவு நாளிலிருந்து எது பிந்தியதோ அத்திகதியிலிருந்து 7 ஆண்டுகளின் பின்பே மீள் மதிப்பீட்டிற்கு தகுதி பெறும்.

iii சொத்துக்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்ட மதிப்பீட்டாளர் ஒருவரினால் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

(அ) பட்டயம் பெற்ற மதிப்பீட்டு அளவையாளர்; அல்லது

(ஆ) மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (இலங்கை) உறுப்பினராக இருப்பதுடன் ஒரு பட்டதாரியாகவோ அல்லது மதிப்பீட்டில் டிப்ளோமா பெற்றவராகவும் 15 வருட வேலை அனுபவத்தினைக் கொண்டவராகவும் இருத்தல்

(இ) மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (இலங்கை) ஒரு பட்டதாரி உறுப்பினராகவும் 18 வருட கால வேலை அனுபவத்தையும் கொண்டிருத்தல்

(ஈ) மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (இலங்கை) இணை உறுப்பினராக இருப்பதுடன் 20 வருட கால வேலை அனுபவத்தினையும் கொண்டிருத்தல்

(உ) மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (இலங்கை) இடைநிலைத் தேர்வில் சித்தியடைந்தராகவும் 25 வருட கால வேலை அனுபவத்தினையும் கொண்டிருத்தல்

(iii) ''பணிப்பாளர்'' என்பதன் பொருள் இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப் பொருள்படும்

7. 2005ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (அதிகரிப்பு விகிதம்) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

* தொடர்பான படிவத்தினை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடல் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை

திருமதி. எல். கே. குணதிலக்க

பணிப்பாளர்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2006 யூலை 28ஆம் நாளன்று

## 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடல் (ஒதுக்கு நிதியம்) பணிப்புரை

1. இப்பணிப்புரையானது, 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடல் (ஒதுக்கு நிதியம்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் ஆளுகை செய்யப்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அத்துடன் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தினால் ஆளுகை செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் தவிர்ந்த ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகைக்கு விடும் நிறுவனத்திற்கும் ஏற்புடைத்தாகும். இப்பணிப்புரையானது உடனடியாக நடைமுறைக்கு வரும்.

2. இப்பணிப்புரை ஏற்புடைத்தாகும் பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகைக்கு விடுகின்ற நிறுவனமொன்று (இதனகத்துப் பின்னர் ''தொடர்பான நிறுவனம்'' எனக் குறிப்பிடப்படும்) ஒதுக்கு நிதியமொன்றை பேண வேண்டியதுடன் (இதனகத்துப் பின்னர் ஒதுக்கு நிதியம் எனக் குறிப்பிடப்படும்) ஒவ்வொரு ஆண்டும் வரிக்கொடுப்பனவிற்கு பின்னர் ஆனால் ஏதாவது பங்கிலாபத்தினை பிரகடனப்படுத்துவதற்கு முன்னர் தேறிய இலாபத்திலிருந்து பின்வரும் விகிதத்தில் ஒதுக்கு நிதியத்திற்கு மாற்றல்களை மேற்கொள்ளும்.

   (i) தொடர்பான நிறுவனத்தின் வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரணபங்கு மூலதனத்தில் 50 சதவீதத்திற்குச் சமமான தொகையினை ஒதுக்கு நிதியம் அடையும் வரை அத்தகைய இலாபத்திலிருந்து 5 சதவீதத்திற்கு குறையாததொரு தொகைக்குச் சமமான அளவினை; அத்துடன்

   (ii) தொடர்பான நிறுவனத்தின் வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்திற்குச் சமமான அளவினை ஒதுக்கு நிதியம் அடையும் வரை அத்தகைய இலாபத்திலிருந்து 2 சதவீதத்திற்கு குறையாத தொகைக்குச் சமமான மேலுமொரு தொகையொன்றினை

3. நியதிச்சட்டத்தினால் அல்லது இலங்கை கணக்கீட்டு நியமங்களினால் எந்த ஒரு நோக்கத்திற்காகவும் குறிக்கப்பட்டிராத ஒதுக்கங்களையும் பிடித்து வைக்கப்பட்ட இலாபங்களையும் கொண்டுள்ள தொடர்பான நிறுவனங்கள் அத்தகைய ஒதுக்கங்களை ஒதுக்கு நிதியத்திற்கு மாற்றல் செய்யலாம். அவ்வாறு மாற்றல் செய்யப்பட்ட தொகை மேலேயுள்ள 2(i) மற்றும் 2(ii)இன் கீழான நிபந்தனைகள் திருப்திப்படுத்துமாயின் அத்தகைய நிறுவனமானது அதன் பின்னர் ஒதுக்கு நிதியத்திற்கு எந்த ஒரு தொகையினையும் மாற்றல் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும் அவ்வாறு மாற்றல் செய்யப்பட்ட தொகையானது மேலேயுள்ள 2(i) மற்றும் 2(ii)இன் கீழ் உள்ள நிபந்தனைகளை திருப்திப்படுத்தாத சந்தர்ப்பத்தில் அத்தகைய தொடர்பான நிறுவனங்கள் வரிக் கொடுப்பனவினை மேற்கொண்ட பின்னர் பங்கிலாபங்களை பிரகடனப்படுத்த முன்னர், ஒவ்வோராண்டும் தேறிய இலாபத்திலிருந்து மேலேயுள்ள பந்தி 2(i) மற்றும் 2(ii)இன் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு ஒதுக்கு நிதியத்திற்கு மாற்றல்களை தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டும்.

4. தொடர்பான நிறுவனத்தின் ஒதுக்கு நிதியம் குறைக்கப்படவோ பழுதுபடுத்தப்படவோ கூடாது. எனினும் பணிப்பாளர் குறிப்பிட்ட சூழ்நிலைகளின் போது ஒதுக்கு நிதியத்தினைக் குறைக்கலாம் என்பதுடன்•வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தினை அதிகரிக்கும் நோக்கத்திற்காக மாற்றல்களைச் செய்யும் வேளையில் குறைப்பினை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். பணிப்பாளர், வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் பழுதுறும் தன்மையினைத் தடுப்பதற்கு இது ஒன்றே வழியாக இருக்கும் வேளையில், ஒரு குறித்த காலப்பகுதியொன்றினுள் இக்குறைபாடுகள் சீர் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிப்பாளர் ஒதுக்கு நிதியம் பழுதுறுவதற்கு அனுமதியொன்றினை வழங்கலாம்.

5. இப்பணிப்புரையின் நோக்கங்களுக்காக, ''பணிப்பாளர்'' என்பதன் பொருள் இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

6. 2005இன் 6ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடல் (ஒதுக்கு நிதியம்) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடல் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை

திருமதி. எல். கே. குணதிலக்க

பணிப்பாளர்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2006 யூலை 28ஆம் நாளன்று

## 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (நிதியியல் கூற்றுக்கள்) பணிப்புரை

1. இப்பணிப்புரையானது, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (நிதியல் கூற்றுக்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் ஆளப்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தினால் ஆளப்படுகின்ற பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் தவிர்ந்த பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகைக்கு விடும் ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஏற்புடைத்தாதலும் வேண்டும். இப்பணிப்புரை உடனடியாகத் தொழிற்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

2. இப்பணிப்புரைக்கு ஏற்புடைத்தான ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகைக்கு விடும் நிறுவனமும் (இதனகத்துப் பின்னர் ''தொடர்பான நிறுவனம்'' எனக் குறிப்பிடப்படும்) பணிப்பாளருக்கு ஒவ்வொரு மாதமும் முடிவடைந்ததிலிருந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் பின்வருவனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

   (i) ஒவ்வொரு மாதத்துடன் தொடர்பான இலாப நட்டக்கணக்குகளை படிவம் எண் எஸ்என்பீஎவ்ஐ/எவ்எல்/06/01 சமர்ப்பித்தல் வேண்டும்; *

   (ii) ஒவ்வொரு மாதத்தினதும் இறுதியிலுள்ளவாறான ஐந்தொகையினை படிவம் எண் எஸ்என்பீஎவ்ஐ/எவ்எல்/06/02 சமர்ப்பித்தல்; அத்துடன் *

   (iii) ஒவ்வொரு மாதத்திற்குமென விபரமான நிதியியல் கூற்றுக்கள்

3. ஒவ்வொரு தொடர்பான நிறுவனமும் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த நாளிலிருந்து ஆறு மாதத்திற்குள் பணிப்பாளருக்கு பின்வருவனவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

   (i) அத்தகைய நிதியியல் ஆண்டுடன் தொடர்பான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள்; அத்துடன்

   (ii) கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு கணக்காய்வாளரினால் வழங்கப்பட்ட இரகசியக் கடிதத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்று

4. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக ''பணிப்பாளர்'' என்பதன் கருத்து இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிப்பதாகும்.

5. 2003இன் 1ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (அறிக்கையளித்தல் தேவைப்பாடுகள்) சட்டம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

* தொடர்பான படிவங்களை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடல் சட்டம்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை

**திருமதி. எல். கே. குணதிலக்க**

பணிப்பாளர்

வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2006 யூலை 28உடைஆம் நாளன்று

## 2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (கம்பனி மற்றும் தொழிற்பாட்டு தகவல்) பணிப்புரை

1. இப்பணிப்புரையானது, 2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க நிதிக்குத்தகைக்கு விடுதல் (கம்பனி மற்றும் தொழிற்பாட்டு தகவல்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் ஆளுகை செய்யப்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தினால் ஆளுகை செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் தவிர்ந்த ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகைக்கு விடும் நிறுவனமொன்றிற்கும் ஏற்புடைத்தாகும். இப்பணிப்புரையானது உடனடியாக தொழிற்பாட்டிற்கு வருதல் வேண்டும்.

2. இப்பணிப்புரை ஏற்புடைத்ததாக இருக்கும் ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகைக்கு விடும் நிறுவனமும் பின்வரும் விடயங்களை ஏழு நாட்களுக்குள் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

   (அ) பணிப்பாளர் சபையின் உள்ளமைப்பில் மாற்றம்;

   (ஆ) முதன்மை நிறைவேற்று அலுவலரின் மாற்றம்;

   (இ) கிளைகளின் அமைவிடத்தினை மாற்றுவது உட்பட பதிவு செய்யப்பட்ட வியாபார இடங்களின் மாற்றம்;

   (ஈ) கிளைகளைப் புதிதாகத் திறத்தல் மற்றும் கிளைகளை மூடிவிடுதல்.

3. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "பணிப்பாளர்" என்பதன் கருத்து இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரைக் குறிக்கும்.